வானநிதி

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத்

தமிழாசிரியர்

வா. மகாதேவ முதலியார்

எழுதியது

சென்னை

சந்திரா பிரஸாரால்

வெளியிடப்பெற்றது.

1920.

All rights reserved.

வானநிதி

அத்தியாயம் - 1

வண்ணமாநகரம்—வசந்தருது. மாடமாளிகை கூடகோபுரம் நிறைந்த வண்ணமாநகரம் செல்வம் மல்கியதொரு பட்டினம். பெரிய பெரிய வியாபார சாலைகள் ஒருசார், பெரிய பெரிய கைத்தொழிற் சாலைகள் ஒருபுடை, பெரிய பெரிய உத்தியோக சாலைகள் ஒருபுறம், பெரிய பெரிய நியாய சபைகள் ஒருபால், பெரியபெரிய வைத்தியசாலைகள் ஒரு சிறை, பெரிய பெரிய காட்சிச் சாலைகள் ஒருபக்கம் அதன்கண்மேவும். எங்கும் அன்னம் அறாத அறச்சாலைகள், எங்கும் தாபந் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தர்கள், எங்கெங்கும் வான்தொடு சோலைகள், எங்கெங்கும் வற்றாத பொய்கைகள் உள. புகைவண்டித் தொடர்கள் ஓயாது ஓடும், மின்சாரவண்டிகள் தொடர்ந்து தொடர்ந்து செல்லும், மோட்டார் வண்டிகள் இடைவிடாது பறக்கும். இரவிலும் முழுமதிபோலும் மின்சார விளக்குகள் அடிக்கொன்றாகப் பேரொளி செய்தலின், பகல்

போல ஜனவழக்கம் ஒழியாது. மாளிகைகளில் நடந்த விருந்து நடந்தபடியே இருக்கும். கூத்தும் பாட்டும் கேளிக்கையும் விளையாட்டும் களியாட்டும் ஒரு நாளும் நீங்கா. பற்பல நாடகங்களும், நூதனநூதனமான அத்யற்புதக் காட்சிகளும் ஆங்காங்கு நடைபெறும். இத்தகைய பட்டினத்தின் ஒரு கோடியில் பல நாட்டு மரங்களையுஞ் செடி கொடிகளையும் பக்குவஞ் செய்யப் பாங்காக வளர்ந்திருக்கும், மாங்குயில் கூவ வண்ண மயிலாடுஞ் சிங்காரவன மொன்றுண்டு. அதன் நடுவில் வெள்ளி மலையொத்து விளங்கும் அரண்மனை யொன்றுண்டு. அதன் நாற்புறமும் மின்சார விளக்குகள் எரிந்தன; பெரிய மரங்களில் பல நிறக் கண்ணாடியுள் சிறிய மின்சார விளக்குகள் அம்மரங்களிற் கனிந்த நவமணிக் கனிகள்போல விளங்கின. இந்திர பவனம் போன்ற அவ் வரண்மனையுள்ளும் பற்பல மின்சாரவிளக்குகளும் பலப்பல மின்சார விசிறிகளும் இருந்தன. சித்திர கூடத்தில் நிலைக்கண்ணாடிகளும், தங்கம் தந்தம் முதலியவற்றாற் செய்த பதுமைகளும், விசித்திரமான படங்களும் பார்ப்பவர் கண்களைப் பறித்தன. தங்கப் பூச்சும், பட்டு மெத்தையும் இட்ட நாற்காலிகள் கட்டில்கள் உள்ளிட்டவை தக்க இடங்களில் முறையாக வைக்கப்பட் டிருந்தன. இந்தச் சித்திர கூடத்திற் கடுத்ததோ ரறையுளது. அவ்வறையின் மேற்கட்டும், சுவரும், பாவகமும மின்சார விளக்கொளியில் நவரத்னமிழைத்தன போன்று தோன்றின. இவ்வறையில் இருவர் பட்டு மெத்தை தைத்த சாய்ப்புநாற்காலியிற் சாய்ந்திருந்தனர். அவர்களில் ஒருவர், விருத்தர்; மற்றொருவர் இடைப்பட்ட வயதினர். இருவரும் ஆழ்ந்த யோசனையி

யிருந்தனர். சிறிதுநேரம் அவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருந்து பின் மௌனம் சாதித்தனர்; இருவருக்கும் வாய்திறக்க மனமில்லை. வானத்தில் திடுமென ஒரு விளக்கேற்றியதுபோல ஒரு நக்ஷத்திரம் பலகணிவழியாய்த் தோன்றிற்று. அதைக் கண்டார் விருத்தர். உடனே எழுந்து உட்கார்ந்து அரை குறையாய் விட்ட சம்பாஷணைத்தை மறுபடி தொடங்குவார் போன்று அவ் விருத்தர் மெல்லிய குரலுடன் எடுத்த விஷயத்தைப் பேசி முடிக்குந் துணிவோடு வார்த்தையாட ஆரம்பித்தார்.

“வியவகாரம் முற்றும் அறிவித்தேன், ஒரு விஷயத்தையும் மறைத்தே னில்லை. யான் பைத்தியம் பிடித்தவனென்று நீர் நினைக்கிறீர். நன்று, யான் பைத்தியம் பிடித்தவன்தான். ஆயினும், யான் கூறியது உண்மையன்றென உம்மால் மறுக்கமுடியுமா?” என்றார் விருத்தர். மற்றவர் இது கேட்டதும், செவ்வையாய் எழுந்து உட்கார்ந்து “அஃது உண்மையே. அதற்குத் தடையில்லை. ஆனாலும், அந்த உண்மையை ஊன்றிப் பார்த்தலும் அடிக்கடி நினைத்துக் கொள்ளலும் கூடாது. நாம் எல்லாரும் விருத்த பருவ மடையவே வேண்டும்; ஒருநாள் இறக்கவே வேண்டும். ஆனாலும் அதை, அது வருமுன் எதிர்பார்த்து நிற்றல் கூடாது” என்றார்.

“ஆம, நீர் மரணசாசனம் எழுதியபடியே இருக்கிறீரே” என்று விருத்தர் சிறிது பரிகாசமாய்க் கூறினார்.

“உண்மை. அது செய்யவேண்டியதே. சிறுவ ராயினும் சொத்திருக்குமாயின் மரண சாசனம் எழுதியே வைக்கவேண்டும்; இல்லையானால், நெருங்கிய உறவினர்கள் ஒருவருக் கொருவர் அதற்கு வழக்கிட்டுப் போராடி

கிற்க நேரும். யான் கண்டவளவில், நெருங்கிய உறவினர்கள் காட்டுப் பூனையைப் பெருமபாலும் ஒத்திருக்கின்றனர். சொத்து வைப்பதாகச் சிறிது காட்டினாலும் கொட்டாவி விட்டு நிற்கின்றனர். யான் எத்தனையோ வருஷங்களாய் வியாயவாதியா யிருக்கிறேன். இறந்தவர்க்கே உள்ளபடி வருந்தும் நெருங்கிய உறவினன் ஒருவனையும இதுவரை யான் அறிந்தேனில்லை'' என்றார் மற்றவர்.

“அப்படி என்னவழிக்கு வாருங்கள். நான் விருத்தனாதற் கேனும் ஒருநாள் கூற்றுக் கிரையாவதற் கேனும வருந்தவில்லை. நான் இறந்தபின் எனது இடத்தில் யார் இருப்பார்களோ? என் ஆயுள் முழுவதும் உழைத்துத் தேடிய பொருளை என்னசெய்வார்களோ என்கிற ஏக்கமே எனக்குப் பெரிதா யிருக்கிறது'' என்றார் விருத்தர்.

“இப்படிப்பட்ட விஷயங்களைப பற்றித் தாங்கள் கவலை கொள்வதற்குத் தக்க காரணம எனக்கொன்றுந் தோன்றவில்லை. இதனல் வரக்கூடிய இலாபம் ஒன்றுமில்லை. இந்தப் பருவத்தில் இப்படி அரோக திடகாத்திரத்தோ டிருத்தல் விசேஷம். தங்களுக்கு இறுதி சமீபத்திலில்லை. தாங்களே வருத்தத்தை விலைக்கு வாங்கிக் கொள்கின்றீர். நம் இருவருக்கும் பல வருஷங்களாய்ப் பரிசயம உண்டு. ஆயினும், இன்றுவரை இப்படித் தங்களுக்குக் கவலை இருப்பதாக யான் கனவிலும் நினைக்கவில்லை. தங்கள் வாழ்க்கை, ஒன்றுலுங் குறைபடாத இன்ப வாழ்க்கையென்றே நினைத்தேன். பெருஞ்செல்வம் படைத்தவர்களில் தாங்கள் ஒருவர் என்பதில் ஐயமில்லை. முருகப்ப முதலியாரே! தங்களை யாவரும், ‘ராஜா முருகப்ப

முதலியா' ரென்றே சொல்லுவார்கள்" என்றார் நியாய வாதி.

முருகப்ப முதலியார் புன்னகை செய்து, "அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் இன்பம் என்ன கின்ளுக் கிரையோ? உமது லோகாநுபவத்தில் அந்த விஷயத்தைச் செவ்வையாய் அறிந்திருப்பீர். என்னளவில், எனது பிள்ளைமைப் பருவமுதல் யான் ஒருநாளும் இன்பமாயிருந்ததேயில்லை. என்ன? உமக்கு இஃது ஆச்சரியமாயிருக்கிறதோ? என தன்புள்ள அநந்தாசாரியரே! மிக நெருக்கமான நண்பர்களும் நமது உண்மையை அறிகின்றாரில்லை. தாங்கள் பிரசித்திபெற்ற பெரிய நியாயவாதியாயிருப்பினும் தங்கள் கட்சிக்காரருடைய இயற்கையை உற்றறிதல் ஒன்றாது. இன்னுமொரு முறையுஞ் சொல்லுகிறேன். எனது இளமையிலும் யான் இன்பங் கண்டிலன்."

அநந்தா:—இன்பம் என்பது இளமையிற் காண்பதென்கிறீர்களோ?

முருக:—தாங்கள் அப்படிக் கேட்பீர்களென்று எனக்குத் தெரியும். யாரும் அப்படித்தான் கேட்பார்கள். ஆனால், இளைஞர்கள் விருத்தரைவிட அதிக துக்கத்தை அநுபவிக்கிறார்கள். என் இளமையில் ஒருவித இன்பமுண்டெனினும் இளமையே அதற்குக் காரணமெனக் கொள்ளுதல் அடாது. அப் பருவத்தில் பின்னொருகாலும் காணாததொன்று என்னிடம் இருந்தது. தவிசேஷம் யான் வாய்விட்டுச்சொல்லவா? அன்றி, 'நன்மை கடைப்பிடி' முதலிய மேல்வரிச்சட்டங்களாம் ஒழுக்கங்களை உபதேசிக்க நினைக்கிறீர்களா? என்னை நாஸ்திகனென்று கொள்ளவேண்டாம். யான் நாஸ்திகனல்லன். அந்

கிடக்க. என்னை விட்டுச் சொல்லும்படி தெரிவித்தீர். என்னை மரணசாசனம் எழுதிவைக்கும்படி தாங்கள் நெடு நாளாய் நிர்ப்பந்தித்து வருகிறபடியால், யான் என் எண்ணத்தை விட்டுச்சொல்லவேண்டுவது முறை. தங்கள் சொற்கேளாது யான் தாமதித்து வருவது தப்பே. யான் தேடிய இப் பெருஞ்செல்வத்தை எனக்கு மனஸ்திருப்தி யுண்டாகும்படி கைக்கொள்ளுதற்குரியா ரொருவருமிலர். யான் விவாகஞ் செய்துகொண்டதும் என் மனைவி எனக்குச் சத்ருவாய் முடிந்ததும், அவளைவிட்டு யான் பிரிந்து வாழ நேர்ந்ததும், அவள் அகாலமரணமடைந்ததும் தங்களுக்குத் தெரியாதனவல்ல. அவள் கதிதான் அது வாயிற்றே யென்று, என் பிள்ளைகளுக்காக வேண்டிய பாடுபட்டு அவர்களுக்கே என் செல்வமுழுவதும் எழுதிவைத்தேன். அவர்களிருவரும் கெட்ட வழியிற் றிரும்பினார்கள். அவர்கள் செய்கைகளுக்கு ஒரு வரம்பில்லை. தலைகீழாக வீழ்ந்தார்கள். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினார்கள், விரைவில் முடிந்தார்கள். அதனால் இந்த எழுபதாவது வயதில் என்னையும் எனது காரியங்களையும் கவனிப்பாரின்றியும், என் செல்வத்திற்கு உரியாரின்றியும் தன்னந்தனியனாய் நிற்கின்றேன்.

அநந்தா:—அதனால் உமக்கு ஏதேனும் நன்மை விளையுமானால் விட்டுச் சொல்லுங்கள். உம்மைப்போன்ற மகைசுவரியவான் வீணிற் கற்பித்துக்கொள்ளும் துன்பங்களைக் கண்டு உம்முடன் யானும் மனங்கலங்கவேண்டுமென்று கூறவேண்டா.

முருக:—என்னுடன் பிறனொருவன் கலங்கவேண்டுமென்று நான் நினைத்ததில்லை. ஒருவன் இன்புறக்கண்டு

தான் இன்புறுதலும், துன்புறக்கண்டு துன்புறுதலும் இவ்வுலகிலில்லை என்பது திண்ணம. வாழ்க்கைத் துணையாகிய மனைவியும் அது செய்யாள். இளம்பிராயத்தில் எதையும் நம்பியதனுல் இன்புற்றிருந்தேன். அப்போது ஈசன்செயல் யாவும் நன்மைக்கே யென்றும, ஒவ்வோருயிரும் முடிவில் பேரின்பத்தையே பெறுமென்றும் முற்றும் நம்பினேன். நான் பிறந்தவூரில் இயற்கை வசதிகளெல்லாம் நிரம்பியிருந்தன. சண்பக சரளம் கோங்கு மந்தார முதலிய மரங்களின் பூமணத்தோடு விரவி வீசும் சுத்தமான புதுக்காற்றும் எங்குப் பார்க்கினும் பச்சைப்பசேரென்ற பயிர்க்காட்சியும் பிறவும் உயிரையும் ஊடுருவி நிற்ப, பெருங் காற்றில் இலவம் பஞ்சுபோல என் மனம் ஆசையி லகப்பட் டலைந்தது. அவ் வாசை நீங்குவதற்கு வழியொன்றுமில்லை. இத்தனை வருஷங்கள் வாழ்ந்து கிழப் பருவத்தை யடைந்தும் உயிர் வாழ்க்கையில் பெறக்கூடிய இன்பத்தை முற்றும் பெற விரும்புவார் செய்யும் காரியங்களை எல்லாம ஒன்றுவிடாது செய்தும் மனஸ்திருப்திக்கு மார்க்க மிருப்பதாகக் கொள்ளற் கொருசிறிதும் இடமில்லை. எனக்குத் திருப்தி பிறக்கவுமில்லை; பிறந்தது மில்லை.

அநந்தா:—உமக்கு இனிமேலும் பிறவாது. தேவேந்திரனுயினும் திருப்தியுறுதவர்களும் சிலருண்டு.

முருக:—தேவேந்திரனுல் என்? ஓயாத துன்பத்தில் இப்பிறவி முழுவதும மூழ்கிக் கிடந்து பின் அசுரர்களோடு அமராடி நிற்கும் சுரபதி யாவதில் என்ன மேன்மை? அப்படிச் சொல்வதற்கு அபிப்பிராய முண்டு. உள்ளுறை யறியவேண்டும். இக்காலத்து மடாதிபதி

களாகிய நமது குருமார் மகா சமர்த்தர்கள். அவர்கள் போதனையை நம்பி அதன்படி நடக்க எனக்குத் துணிவு பிறக்கவில்லை. ஒருகால் நான் மனங்கலங்கி நின்ற நிலையில் ஒரு பெரிய குருவைக் கண்டு "ஐயரே! ஒருபெரிய சீமானிருக்கின்றார். அவருக்குச் சந்ததியில்லை. அவருடைமையை யெல்லாம் என்ன செய்வதென்று சொல்லுங்கள்" என்றேன். அவர் அந்தச் சீமான் நானே என்றறிந்து "மடத்திற்கு எழுதிவைத்தால் பெரும் புண்ணியம். விசேஷ தெய்வ கடாக்ஷத்திற்குப் பாத்திரராகலாம்" என்று கூறி, அந்நாள் தொட்டு எனக்கு மடத்திலிருந்து பிரசாத முதலியவை வரவிடுவாராயினர். அவருக்கு உதவ எனக்கு எண்ணமில்லை. அவருக்கு மதப்பற்றுண்டு. எனக்கு அஃது இல்லை. இப்படி முடிந்தது என் குற்றமன்று; என் தலையெழுத்து. இந்த நிலையில் யான் என்ன மரண சாசனம் எழுதுவது?

அநந்தா:—மரணசாசனம் எழுதீராயின், உமது செல்வம் எல்லாம அரசனைச் சேருமே.

முருக:—ஆம், ஆனல் என்ன? அதுவே மேல். அரசன், செல்வத்தை நல்வழிப்படுத்துவன். என் அரிய வாழ்நாட்களை யெல்லாம் பொருளையீட்டுவதிலே வீணாய்க்கழித்தேன்; அந்த வழியில் என் உழைப்பெல்லாம் ஒரு பயனுமிலவாயின.

அநந்தா:—இனிதுவாழ்வதற்குக் கருவியாகிய பொருளைத் தேடுவதன்றி வேறு என்ன செய்வது?

முருக:—வறுமை நிலையுள்ள சிலர் சுகமாக வாழக் கண்டிருக்கிறேன். சுகமாக வாழ்தலாவது அடங்காத ஆசையும் மனக்கவலையுமின்றிப் பெற்றதுகொண்டு சிந்தை

நிறைதலே எனக் கொள்க. பொருள் தேடுதற்காக நெருக்குண்டு இடியுண்டு கற்ற வித்தை யெல்லாங் காட்டிச் சாமர்த்தியமாகப் பேசி விருப்பும் வெறுப்புங் கொண்டு அலைதல் இன்பவாழ்க்கையாகாது. பரம்பொருள் ஒன்றுண்டு, வாழ்தலும் சாதலும் அதனால் நேர்கின்றன, இவையாவும் உயிர்களுக்கு நன்மையாய் முடியுமென்று கொண்டு இவ்வாழ்க்கை யின்பத்தையே நோக்கிவாழ்தல் சிறப்புடைத்து. எனக்குக் கிழப்பருவம். அறிவு தெளிவாகவில்லை. நான் தங்களுக்கு என் வார்த்தையால் வெறுப்பை விளைக்கிறேன்.

அநந்தா:—இல்லை. உமது வார்த்தை எனக்கு இனியவே. யுக்திக்குப் பொருந்தாவழியாக அவை இருக்கின்றன.

முருக:—அப்படியானல், யுக்திக்கு விரோதமாகவா நான் பேசுகிறேன்?

அநந்தா:—ஒருவிதமாகப் பார்த்தால் அப்படித்தான் பேசுகின்றீர். உமக்கு ஆகாத மனைவி பிறந்த தேயமென்றன்றோ அமரகீய தேயத்தை எப்போதும் பழிக்கிறீர். நீர் அததேயத்திற்றனே உமது ஐசுவர்யத்தைத் தேடினீர். அத்தேயத்தின் வியாபார மோசங்கள் உமக்குக் கைகொடுக்க வில்லையா?

முருக:—அப்படி நினையாதீர். ஒருகாலத்தும் ஒன்றிற்கு நான்கு ஊதியம் கொள்ள நான் முயன்றதில்லை. நான் சத்தியம தவறுமல் சம்பாதித்தேன். ஒருவனைக் கெடுத்துப் பொருள் தேடினேனென்பது கிடையாது.

அநந்தா:—நீர் அவ் வமரகீய தேயத்திற் பிறக்கவில்லையா?

முருக:—ஆம், பிறந்தேன்! ஆனால்; நான் செய்த புண்ணியம், வடபாகத்திற் பிறவாது தென்பாகத்திற் பிறந்தேன். அமரகியனாக நான் வளர்க்கப்படவில்லை. அமரகிய தேயத்தாருடைய நடை நொடி பாவனைகளை நான் மேற்கொள்ளவில்லை. என்து தாய் தந்தையர் அயன்குல தேயத்தார். இளமையிலேயே அவர்களுக்கு மணம் முடிந்தது. அவர்கள் பொருள் தேடு நிமித்தமே இவ்வமரகியத்திற் குடியேறினார்கள். ஒரு பெரிய வியாபாரசாலையில் என் தந்தை தலைமைக் கணக்கப்பிள்ளையாயிருந்தார். அந்நாளில் அவர் செல்வரோடு உடன்வைத்தெண்ணப்பட்டாராயினும், இந்நாளிலிருப்பின் அவரை ஒருவரும் செல்வரென்று எண்ணார்கள். அவருக்கு இரண்டே பிள்ளைகள்: நானும் என் தங்கையும். என் தங்கை பதினாறுவது பிராயத்தில் மரணமடைந்தாள். நான் மாதாபிதாக்களை யிழந்து உலகவியாபாரங்களிற் றலையிட்டபோது எனக்கு இருபதாவது ஆண்டு நிறையவில்லை.

அநந்தா:—உலக வியாபாரங்களில் தலையிட்டு உந்நத பதவியடைந்தீர். நீர் விஷயங்களை ஒழுங்காகவும யுக்திக்குப் பொருத்தமாகவும் ஆராய்வீராயின், உமக்குக் குறையுளதாகக் கூறுதற் கிடமில்லை. உமது மணம் என்னவோ, நன்மணமாக முடியவில்லை!

முருக:—அதைப்பற்றிப் பேசவேண்டா. அது நடந்தேறின விஷயம். மனைவி மக்கள் என்னை விட்டொழிந்து நெடுநாளாகிறது. மனைவி மக்களோடு வாழ்ந்ததாகவே எனக்கு இப்போது ஞாபகமில்லை. வீடுபோ, காடுவாவென்றிருக்கிற இந்த நிலையில் நான் இறந்தகால நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கும்போது எனக்குக்

கேடிழைத்தவர் அல்லது வஞ்சனைபுரிந்தவர் ஒருவரை யேனும் காணவில்லை. அவர்கள் முற்றும மறைந்து போனார்கள். அவர்கள் முகங்களும் வடிவமும் மறதி யாயின. இப்போது புதிய வாழ்க்கை கூடுமாயின் பழைய சம்பவங்களை அடியோடு நினையாதிருக்கக்கூடும். பழைய சம்பவங்களை நினைத்துக் கொள்ளுதல் வயோதிகர்களுக்கு இயல்பு. எனக்கு அப்படியில்லை. நான் இளமையில் இரவில் மின்மினிப் பூச்சி பளிச்சுப் பளிச்சென்று ஒளி செய்யக் கண்டமையையும், எனது தங்கை தனக்குப பிரியமான பாடலை இனிய குரலெடுத்துப் பாடக் கேட்டமையையும் இப்போதுங் காண்கிறேன். நான் முதலிற் கூறியபடி அப் பருவத்தி லிருந்ததொன்று பின்னொரு போதும் இல்லையாயிற்று. அது யாதெனத் தாங்கள் அறிவீர்களா?

அநந்தாசாரியார் தாம் அறியவில்லை யென்று தலை யாட்டினார்.

"அதுதான் 'அன்பு' என்னும் அரும்பொருள்" என்றார் முருகப்ப முதலியார்.

உடனே அநந்தாசாரியார் எழுந்து செவ்வையாக உட்கார்ந்து, "அன்பா? அதனை உலகத்தில் மற்றெல்லாரையும் விட நீர் எளிதில் பெற்றிருக்கக்கூடுமென்று எண்ணுகிறேன்" என்றார்.

முருக:—என்ன ஐயா, அது? நான் மற்றவரை விட அதனை எளிதில் பெறுவதற்குக் காரணம் என்ன? நான் செல்வனு யிருப்பதுதானு அதற்குக் காரணம்? செல்வர் அப்பொருளை ஒருபோதும் பெறுதலில்லை. அவர்கள் பொருட்டே அவரிடம் அன்பு செய்வாரில்லை. அவர்கள் தரும் கையுறையின் பொருட்டே அவர்களிடம அன்பு

செய்வதாகப் பிறர் நடிக்கிறார்கள். நான் ஆதியில் இருந்தபடி ஏழையாகவே இருந்திடின், ஒருகால் உள்ளபடியே ஒரு நங்கையாவது, ஒரு நண்பனாவது என்னிடம் அன்பு வைத்திருக்கலாம். எனது இளமையில் எனக்கு விகாரமான உருவமுமில்லை; அருவருக்கத் தக்க குணமு மில்லை. அதிர்ஷ்டம் என் பக்கலி லிருந்தது. முப்பத்தைந்து பிராயத்திற் கெல்லாம் கோடீசுவரனானேன். அப்பொழுது எனக்கு உடம்பில் நல்ல பலம். மோகம் வேறு, அன்பு வேறு என அறியாது மய்ங்கி ஒருத்தியை மணந்தேன். மோசம் போயினேன். அவள் எனது பொன்னையே பொருட் படுத்தினள். 'அன்பு' என்பதை அடிநாளில் எனது தந்தை தாயர்களிடத்தும்,எனது தங்கை யிடத்தும் கண்டேன். பிறகு எங்கும் காணவில்லை. அஃது இனிமையிக் கிருந்தபடியால் நீடித் திருக்கவில்லை.

இது கூறியபோது அவருக்கு வார்த்தை நழுவிற்று. தலையை யெடுத்து வானத்தில் ஒளிசெய்த மீன்களை நோக்கிச் சிறிதுநேரம பொறுத்து, "என்ன, ஐயா, அநந்தாசாரியரே! மௌனம் சாதிக்கிறீர். ஒன்றுஞ் சொல்ல முடியவில்லையோ? இந்தக் கிழவன் அவலை நினைத்து உரலை இடிப்பதுபோல எதையோ மனத்தில் வைத்துக்கொண்டு என்ன என்னவோ வளைத்து வளைத்துச் சொல்லுகிறான் என்று தாங்கள் நினைக்கக் கூடும். வேறொன்று மில்லை. தாங்கள் ஆறுமாதமாய் மரணசாசனம் எழுதி வைக்கும்படி வற்புறுத்தி வருகிறீர்கள். யாருக்கு எழுதுவ தென்று எனக்குத் தோன்றவில்லை. என் சொத்தைப் பெற எனக்கு வேண்டியவர்கள் ஒருவரும் இவ்வுலகின்கண் இல்லை" என்றார்.

அநந்தா:—நான் முன்னமே குறித்தபடி என் ஒரு பிள்ளையை ஸ்வீகாரமசெய்து கொள்ளக் கூடாது? முன்னுக்கு வரக்கூடிய பிள்ளையை, அரோகதிடகாத்திரத்தோடு கூடிய பிள்ளையைத் தெரிந்து கல்விகற்பித்துப் பின் வியவகாரத்திற் கேற்றவனும்படி பழக்கிவிட்டால் என்ன?

முருக:—கூடவே கூடாது. தாய்தந்தையர் பிள்ளைகளை விற்பதைப் பற்றிக் கேள்வியுற் றிருக்கிறேன். அவர்கள் நற்குடிப் பிறப் புடையாரல்லர். வளர்க்கும் பாரத்தை யிறக்குவதற் கென்றே குடியானவர்களாகிய தாய் தந்தையர் தங்கள் பிள்ளையை விற்றார்கள். அதை நேரே கண்டேன். அந்தப் பிள்ளை பிறகு பெரும்புகழ் பெற்று விளங்கினான். அவன் பிறப்பைப் பற்றிப் பிறர் கூறியபோது அவர்கள் வார்த்தையை ஒரு பொருளாகக் கொண்டு தன் தாய் தந்தயரை அவன் அங்கீகரித்தானில்லை. லௌகிக வியவகாரங்களில் எனக்குற்ற அநுபவத்தினால் அப்படிப்பட்ட சந்தேகமான வியாபாரம் செய்ய எனக்கு மனமில்லை. நான் பெருஞ் செல்வனு யிருக்கிறபடியால் ஸ்வீகாரப் பிள்ளை எனக்குக் கீழ்ப்படிந்து தன் கடமைகளைச செய்வானே யன்றி, உள்ளபடியே அன்பால் அவை செய்யான். என்னை உள்ளபடி விரும்பும் ஒரு பிள்ளையை நான் காணுமளவும் ஸ்வீகாரம் செய்யேன்.

அநந்தா:—ஏற்ற பருவமில்லை. ஆனாலும் கெடுதியில்லை. நீர் இப்போது புநர் விவாகம செய்து கொள்ளலாம்.

முருக:—புநர் விவாகமா? யானு? எழுபது பிராயத்திலா! தாங்கள் எனக்குப் பழைய நண்பராதலின் யாதும் சொல்லத்துணிவீர். வேறொருவர் இவ் வார்த்தை என்னிடம் சொல்லியிருந்தால், எனக்குத் தீராக் கோபம்

பிறந்திருக்கும். நான் புநர் விவாகஞ் செய்து கொள்வதா யிருந்தால் என் மனைவி யிறந்த இரண்டொரு வருடத்திற் செய்துகொண்டிரேனா? என் கடைநாளிற் றானா எனக்குக் கல்யாணம்! நான் விவாகஞ் செய்து கொள்ள வேண்டினால், எத்தனையோ பெயர், நான் நான் என்று இன்னும் வெளிவருவார்கள். அவர்களுக்கு எனது வருவாயின்னதெனத் தெரிந்திருக்கிறது. அது வியாபார மென்றறிந்தும், நான் அப்படிச் செய்வேனா? இதுவரையும் நான் ஒருத்திக்கும் கெடுதி செய்ததில்லை. இனிமேலா செய்யப் போகிறேன்?

அநந்தா:—அப்படிச் சொல்லாதீர். இக்காலத்தில் வாழ்க்கை நிலை வேறுபட்டிருக்கிறது. எத்தனையோ பேர் எழுபது பிராயத்திற்கு மேல் விவாகஞ் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற்றிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

முருக:—அவையெல்லாம் கட்டுக்கதைகள். நம்பாதீர். நாம் உள்ளே போகலாம். இன்று பேசி ஒன்றுந் தீரவில்லை. நான் பிரயாணம்போய் வந்தபின் மறுபடி இந்த விஷயத்தை யெடுத்துப் பேசுவோம்.

அநந்தா:—இந்த வாரம் நீர் பிரயாணமோ?

முருக:—ஆம்.

அநந்தா:—நெடுந்தூரம் போகிறீர்களோ?

முருக:—போகலா மென்று தான் நினைக்கிறேன்.

அநந்தா:—பிரயாணத்திற்குமுன் ஒரு விசேஷம் இருக்கவில்லையா? நாளை இரவு விருந்தன்றோ?

முருக:—ஆம். நாளை, குமுதவல்லி பிறந்தநாள்.

அநந்தா:—அந்தப் பெண்ணிற்கு என்ன வயது?

முருக:—இருபத் தொன்றாகிறது.

அநந்தா:—அவள்மேல் உமக்கு மிக்க ஆசையன்றா?

முருக:—எனது செல்வத்தை அவளுக்கு ஏன் வைக்கலாகா தென்று கேட்கப் போகிறீர். அவள் ஒரு பெண். ஒரு மூடனை விவாகஞ்செய்து கொள்ள நேரினும் நேரும். அதுவுமன்றி, அவளைப் பத்துவயது முதல் நான் நன்றாயறிவேன். அவள் தாய்தந்தையரையேனும் மற்றைச் சுற்றத் தாரையேனும் நான் விரும்பவில்லை. ஒருநாள் அந்தப் பெண் வீதியில் விளையாடிக்கொண் டிருக்கும்போது கண்டேன். அப்பெண் அழகா யிருந்தபடியால் அது முதல் நான் அவள்மேல் பக்ஷமா யிருந்தேன். அதற்காகத் துணிமணி வாங்கித் தருவேன். நகை நட்டு செய்து கொடுப்பேன். அதற்குமேல் ஒன்றுஞ் செய்வதாக எனக்கு எண்ணமில்லை.

அநந்தா:—குமுதவல்லிக்கு இந்த விஷயந் தெரிந்தால் மிக்க துன்ப முறுவள். நீர் கல்யாணஞ் செய்துகொள்வீரென்று அவள் நம்பி யிருக்கிறாளென்று நினைக்கிறேன்.

முருக:—அவள் தகப்பன் யோக்கியனல்லன். சூதாடித் திரிவதே அவனுக்குப் பெருமுயற்சி. வேறொருவேலைக்கும் அவன் உதவான். பெண் என்னவோ அவனுக்குப் பிறக்கும் பெண் அல்லள். சிறுமியாயிருக்கும்போது விசேஷமாகச் செய்தேன். இப்போது பருவம் வந்துவிட்டது. நான் என்ன செய்யக்கூடும்? அவளே தனக்கு ஒரு வரனைத் தேடிக் கொள்ள வேண்டியது.

அநந்தாசாரியார் மிக்க யோசனையோடு, "நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். மணி ஒன்றாகிறது. பிரயாணத்திற்குமுன் உம்மைப் பார்க்கிறேன்" என்றார்.

முருக:—தாங்கள் பார்க்கவில்லையானால், எனது கடிதம் வரும்.

அநந்தா:—ஆனால், நான் கூறிய விஷயங்களைப்பற்றி மறுபடி ஆலோசிக்கமாட்டீரோ?

முருக:—மாட்டேன். அந்த விஷயத்தில் பிடித்த பிடியொன்றே. நான் திடீரென இறந்துபோனால், எனது செல்வம் அரசனைச் சேரும். இல்லையானால், எனது அபிப்பிராயத்தை எழுதுவேன்.

அநந்தா:—ஐயா,முதலியாரே! நீர் உலகத்தி லில்லாத மனிதர். அப்படியிருந்தும் எனக்கு உம்மிடம் வெறுப்பில்லை. நீர் இவ்வளவு கருநாடகமாயில்லாதிருந்தீரானால், நன்றாயிருக்கும்.

முருக:—கருநாடகமா? முன்னொருகால் அப்படியிருந்தேனாயினும்,இப்போது நான் அப்படி யிருக்கவில்லை.

அநந்தா:—அப்படியே தான் இருக்கிறீர் இந்தப் பிராயத்தில் உமது குண நலங்களை விரும்பி அதற்காக உம்மை நேசிக்கும் ஒரு வனிதையைப்பெற நினைக்கிறீரே? இஃது என்ன யோசனை? அப்படிப் பார்த்தால் உமக்கு விவாகமாகப்போகிறதில்லை. உலகமிருக்கிற நிலைமை உமக்குத் தெரியவில்லை. நான்போய் வருகிறேன்.

முருக:—அப்படியே செய்யுங்கள். ஞாபகமிருக்க வேண்டும்.

அநந்தாசாரியர் படிக்கட்டிறங்கிப் பணியாள் ஒருவன் வழிகாட்ட அரண்மனைக்கு வெளியே வந்துவிட்டார். அந்நேரமாகியும் முதலியாருக்கு உறக்கம் வரவில்லை. மற்றையாவரும் உறங்கியும்,இவர் ஓர் அறையில் நாற்காலியிலிட்கார்ந்து பலகடிதங்கள் எழுதினார். எழுதி முடிந்ததும்

தலையைத் தூக்கிப் பலகணி வழியாக வானத்தை நோக்கினார். வெள்ளி முளைத்திருக்கக் கண்டு, "ஓ, ஓ வெள்ளி முளைத்தது" என்றார்.

அத்தியாயம் - 2

மறுநாள் இரவு சீமான்களும் சீமாட்டிகளும வைர அணிகள் பூண்டு வகைவகையான வண்டிகளில பெருங் கூட்டமாக வந்து முருகப்பமுதலியார் மாளிகையில் இறங்கினார்கள். அந்த மாளிகை மிக்க விமரிசையாக அலங்கரிக்கப பெற்றிருந்தமையால் இந்திர பவனமும் நிகரில்லையென விளங்கிற்று. விருந்திற்கு முயற்சிகள் நடைபெற்றன. ஒரளவினவாகிய அகன்ற தலைவாழை யிலைகளை விரித்தார்கள்; வெள்ளிச் செம்புகளில் வெந்நீரும வைத்தார்கள். ஐம்பது பரிசாரகர்கள் பம்பரம் போலச் சுழன்றுவந்து கறிவகைகளும் கனிவருக்கங்களும், லட்டுவம் முதலிய இனிப்புப் பண்டங்களும் பண்ணிகாரங்களும் இலைகள் நிறையப் பரிமாறினார்கள் ஒரே காலத்தில் வந்து கூடிய சீமான்களும் சீமாட்டிகளும இரண்டு பந்திகளாக உட்காந்தார்கள். வாய்ருசி காணும் வயிறு பருத்த பிரபுக்கள் இலை 10 ரூபாய் பெறும் 15 ரூபாய் பெறும் என்று பறபறப்புடன் பாய்ந் துண்ண ஆரம்பித்தார்கள். பலவகைப் பானீயங்கள் அவ ரவர் பிரியப்படி வெள்ளி வட்டில்களில் வேண்டியமட்டும் விடப்பட்டன. யாவரும் உண்டு தெவிட்டித் தொந்தி தட-

க்கொண்டு தட்டித்தட்டித் தாம்பூலம் போட உட்காந்தார்கள். வாசனைப் பாக்கும் வண்ணச் சுண்ணமும் வெற்றிலைப் பழுப்பும் கொண்டுவரப்பட்டன. தாம்பூல முயற்சியில் யாவரும் தலைப்பட்டு நிற்கும்போதே கோலாட்டக் கச்சேரி, ஆட்டக்கச்சேரி, பாட்டுக்கச்சேரி, வீணைக்கச்சேரி, புல்லாங்குழற் கச்சேரி, ஹரிகதா காலக்ஷேபம், நாடகம், மின்சார விநோதக்காட்சி முதலியவை வெவ்வேறிடங்களில் ஏற்பாடாயின அவரவர்கள் தத்தமக்குப் பிரியமான இடங்களுக்குச் சென்றார்கள்.

முருகப்ப முதலியார் ஒரு சாய்ப்பு நாற்சாலியிற் சாய்ந்து அன்று அவ் வேடிக்கை காண வந்த ஒரு கிழவனாகத் தம்மை நினைத்தார். தமக்கும் அங்குக் கூடிய மற்றவர்களுக்கும் ஒருவித சம்பந்தமு மில்லை. இதை உன்ன உன்ன அவருக்கு ஊக்கம் குறைந்தது செல்வத்தின் பயனின்மையைக் குறித்து எண்ணி எண்ணிச் சோர்வடைந்தார். அப்போது குமுதவல்லியின் தாயாகிய ஜீவரத்நம் அவரை அணுகி, "அண்ணு! என்ன ஆயாசமாயிருக்கிறீர். சிறிது நேரம் கட்டிலிற் படுத்துறங்கினால், ஆயாசம் நீங்குமே. குமுதம் தாங்கள் செய்த நன்மைகளை நினைந்து நினைத்து மனமகிழ்கின்றாள் காதலனெவனுயினும் ஒரு பெண்ணிற்காக இதைவிட என்ன செய்யக்கூடும்? தாங்கள் நெடுநாள் சுகமாக இருக்கவேண்டும். தங்களைப் பன்முறை காண்பதும் தங்களோடு பன்முறை வார்த்தை பாடுவதுமே எங்களுக்குப் பரமானந்தம்" என்றாள்.

முருக:—நான் சிறிதும் ஆயாசமாகவில்லை அதைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். நான் சுகமாக இருக்கிறேன்.

ஜீவ:—அப்படியா? எங்களைப்போன்ற வயதுசென்றவர்கள் சிறிது ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் என்னவேண்டுமானாலுஞ் செய்யலாம.

முருக:—நீங்கள் வயது சென்றவர்களென்று சொல்லலாகாது. உங்களுக்கு இது நல்ல பிராயந்தானே.

ஜீவ:—இல்லை; எனக்குக் கல்யாணமாகும்போது நமது குமுதத்தைப் பார்க்கிலும் ஒரு வருஷஞ் சிறியவள். இருபத்தொராவது வயதில் தலைப்பிள்ளை பெற்றேன்.

முருக:—குமுதம் எங்கே?

ஜீவ:—பாட்டுக்கச்சேரி நடக்கிற இடத்தில் இருக்கிருள். அவள் அழகைக் காண்பதற்கென்றே ஆண்பிள்ளைகளெல்லாம் அந்த இடத்தில் நெருங்குகிருர்கள். அந்த இடத்தில் எள்ளிடினும் இறங்காது. இன்று அவ்ள் இரதி போலத் தோன்றுகிருள். இல்லையா?

முருக:—யான் இரதியைக் கண்டதில்லை. ஆதலால் ஒப்பிட முடியாது. ஆயினும், குமுதம் இன்று இரத்தின தீபம் போல விளங்குகிருள். இன்று அவள் உடுத்திருக்கும் மத்தாப்புச் சேலை அவளுக்கு ஏற்றதே. அவளுக்குத் தக்க வரன் அகப்படவேண்டும்.

ஜீவ:—அதுதான் பெருங்கஷ்டம். இக்காலத்தில் ஆண்பிள்ளைகள் பணத்தைப் பார்க்கிறார்கள். நமது நாளில் அன்பே பிரதானமா யிருந்தது.

முருக:—நமது நாளிற்முன் என்ன அன்பு! என் கல்யாணம் எப்படி முடிந்தது! தெரியாதா?

இப்படிக் கூறியபோது இன்னும் ஏதாவது அசந்தர்ப்பமாகச் சொல்லிவிடுவாரோ என்று வேடிக்கை பார்ப்பது போலத் திரும்பினுள். அப்பொழுது பாட்டுக்

கச்சேரி முடிவடைந்த படியால், குமுதம் அந்த விடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

ஜீவ:—அம்மா, குமுதம்! உனக்கு உறக்கம் வருகிறதா? நெடுநேரம் ஆகிறது. எட்டுமணிக் கெல்லாம் உறங்கி விடுவாயே.

குமுதம்:— எனக்கு ஒரு நாளைக்குக் கண்விழிக்க முடியாதா? பாட்டுக் கேட்பதில் எனக்கு ஆசையன்றோ? விடிய விடியப் பாடினாலும் இமை கொட்டாது கேட்பேன்.

முருக:—குமுதம்! நானும் சிறுவனாயிருந்தால், எனக்குப் பாட்டுக் கேட்பதிற் பிரியமில்லை யானாலும் உன்னைத் திருப்தி செய்வதற்காகவேனும உன்னோடு இருப்பேன்.

குமுதம்—அதனால் என்ன? எனக்குத் தங்களிடத்தில் என்னவோ ஒருவிதமான பற்றுண்டு. பிறரிடத்தில் அப்படிப்பட்ட பற்று ஒரு சிறிதுமில்லை.

முருக:—குழந்தைப்பருவத்திலிருந்து என்னோடு பழகினது பற்றி அப்படி யிருக்கலாம். பதினொரு வருடத்திற்கு முன் உன்னை யான் கண்டபோது நீ சிறுகுழந்தையாயிருந்தாய். பிறைபோல வேகமாய் வளர்ந்து விட்டாய். முதல்முதல் நமக்குப் பரிசய முண்டான தெப்படியென்று ஞாபக மிருக்கிறதா?

குமுதம்:—ஒருநாள் எனது வீட்டுப் புறந்திண்ணையில் விளையாடிக்கொண் டிருந்தேன். ஒரு பையல் வந்து ஒரு பதுமையை யெடுத்துக்கொண்டு ஓடினான். நடுத்தெருவில் நின்று நான் ஓவென்று கதறி யழுதேன். அப்பொழுது தாங்கள் அந்தப் பையலைப் பிடித்து வரச் சிலரை ஏவி எனக்கு அப் பதுமையை வாங்கித் தந்து அழுகையை ஒழித்துப் பிரிய வசனங் கூறினீர்.

முருக:— உள்ளது. நெய்த்து இருண்டு சுருண்ட கூந்தல் பிடரியில் அலைய அழுகையோடு நின்ற நிலையில் உன்னைப் பார்த்தபோது உனக்கீடான சுந்தரி உலகி லில்லை யென்று நினைத்தேன். இப்பொழுதும் அப்படியே நினைக்கிறேன்.

குமுத:—நல்லது, ஐயா! மேல்மாடிக்குப் போகலாம. வருகிறீர்களா? அங்கு இன்னும் குளிர்ந்த காற்று வீசும்.

முருக:—ஆம், வருகிறேன்.

இருவரும் உடனே எழுந்து படிக்கட்டேறிச் செல்லும்போது விருந்திற்கு வந்திருந்த ஆண்மக்கள் யாவரும் வாயைப் பிளந்துகொண்டு குமுதம் செல்வதை உற்று நோக்கி நின்றார்கள். அப்போது சோம்பேறிகளைக் கூட்டிக்கொண்டு சூதாட்டத்திற் காலங்கழித்துவந்த ஒரு பிரபுவின் மனைவி குமுதவல்லியின் தாயாரைச் சந்தித்தாள். அவள் சில பெண்களுடன் உட்கார்ந்து வீணுரையாடிக் கொண்டிருக்கக் கண்டாள். அருகில் வந்து அவள் தோளின்மேல் கைவைத்தாள்.

"உண்மையைச்சொல். நான் யாவுங் கேள்விப்பட்டேன்" என்றாள்.

"எனது பிரிய சகி, பத்மம்! நீ சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை; விளங்கும்படி சொல்" என்றாள் ஜீவரத்நம்.

பத்மம்:—உனக்கு விளங்கவில்லையா? நீ மறைக்கிறாய். குமுதம் அவருக்கு மனைவி ஆவாளா?

ஜீவ:—பத்மம்! நீ முடிவாகத்தான் கூறுகிறாய். அசர்ப்பத் தடையில்லை. நீ சொல்வது எனக்குப் புதுமை

யாயிருக்கிறது. அவர் குமுதத்தைத் தமது மகளாகப் பாவிக்கிறார்.

பத்மம் முப்பத்திரண்டு பற்களையும் காட்டிப் பரிகாசமாக நகைத்து, "அப்படிச்சொல். மகளாகப் பாவித்தல் எப்போது தெரியும்? நான்கு பணம் வருவதானால் தெரியும். கிழவருக்கும் சிறுமிகளுக்கும கல்யாணம் நடக்க எத்தனையோ முறை கண்டிருக்கிறேன். செல்வம் நிறைய விருந்தால், ஒருத்தி சுகமாக வாழ்வதற்கென்ன" என்றாள்.

ஜீவரத்நத்திற்கு இன்னது சொல்வதென்று தெரியவில்லை. கிழவனைக் கல்யாணம் செய்து கொள்வதற்காகக் குமுதம் முயற்சி செய்வதைப பத்மம் தூற்றுவாளென்றும் ஒருகால் கல்யாணம் நடககவில்லையானால் இவளே பரிகாசத்திற்கு முதன்மையாக நிற்பாளென்றும் நினைத்தாள்.

அது நிற்க, குமுதமும் முருகப்பமுதலியாரும் மேன்மாடி சேர்ந்தார்கள். அங்கு ஒருவருமில்லை. முதலியார் சிறிது ஆயாசமாக இருந்தார். குமுதமோ அழகிய உடையணிந்திருந்ததால், பெண்கள் இயற்கைக்கேற்ப இறுமாப்புடன் இராணிபோல உட்கார்ந்தாள்.

குமுத:—நீர் இன்று எனது பிறந்தநாளென்று செய்த களியாட்டுக்களுக்கெல்லாம் நான் என்ன வந்தனம் தங்களுக்கு அளிக்கப்போகிறேன். எப்படி வந்தனம் அளிப்பினும் அதற்கு எம்மாத்திரம்?

முருக:—அப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்க எனக்குப் பிரியமில்லை.

குமுத.—ஆயினும், நான் ஏதேனும் சொல்லியே தீரவேண்டும. தாங்கள் பெருந்தன்மையும் உயர் குடிப்பிறப்பும் உடையவராகையால் பிறர் புகழக் கேட்பது

அருவருப்பாகத் தோன்றும். தாங்கள் ஆதரிக்கவில்லை யானால் அநாதையாய் இருந்தவிடந் தெரியாது இருக்க வேண்டிய ஒரு சிறுமி இத்துணை மேன்மையும் பெற்றுத் தனது நன்றியறிவை வெளிப்படுத்தவில்லை யென்றால் அது விகாரமன்றோ? தாங்கள் இற்றைக்காலை எனக்குக் கையுறை பளித்தபோது என் கண்களை நான் நம்பக்கூட வில்லை. அஃது அப்படிப்பட்ட அட்டிகை. நன் முத்தங்க ளவ்வளவு சிறந்தவை. என்னை நீங்கள் பாழாக்குகின்றீர்கள். என்பொருட்டுத் தாங்கள் எடுத்துக்கொள்ளும் தொந்தரைக்கு நான் ஒரு சிறிதும் பாத்திரையல்லள்.

இப்படிச் சொன்னபோது அவள் கண்களினின்றும் நீர் ததும்பிற்று. அவள் உதடுகள் துடித்தன. முதலியார் இவற்றைக் கவனித்தார். எனினும், பொருட்படுத்தினா ரில்லை. இதைக் கண்டு ஏமாறி நின்றாள் குமுதம்.

முருக:—நான் தந்த அற்பக் கையுறைக்கு நீ மகிழ்ந்த தற்குச் சந்தோஷப்படுகிறேன். அது சர்வசாதாரணமான கையுறையே. முத்தங்களுக்கும் சிறுமிகளுக்கும் பொருத்தம் உண்டு. முத்தங்களுக் குரியார் அவர்களே. அவர்களுக் கேற்ற தன்மையைக் காட்டுவது முத்தங்களே. அவை வெண்மையும் தூய்மையும் கெடுதி செய்யாமையும் உடையன.

குமுத:—எப்போதும் இளம்பருவம் அப்படி இருக்கிறதென்று நினைக்கிறீர்களா?

முருக:—எப்போது மில்லை; ஆனாலும், அடிக்கடி அப்படி இருக்கக் காண்கிறேன்.

குமுதம் மௌனமாயிருந்தாள். அவள் முகத் தழகைக் கண்டவர் அகத்தழகையுங் கண்டறிய விரும்பினார்;

அவள் பிள்ளைமைப் பருவத்தில் அழகு மிக்கிருந்த தாக அவர் நினைத்தார். இளமையில் அழகன்றி வேறு சில அவள் உறுப்புக்களில் விளங்கின. இன்பொடு விரவிய அன்பும், மென்மையொடு விரவிய உண்மையும், உள்ளொ டொத்த புறமும் கண்டவர் மனத்தைக் கவர்ந்தன. இப் பருவத்தில் அவை நீங்கின. இவ்வெண்ணம் தம் மனத் துதித்ததற்காக அவர் வெட்கமடைந்தார்.

முருக:—குமுதம்! கச்சேரி எப்படியிருக்கிறது?

குமுத:—எனக்கொன்றும பிடிக்கவில்லை! சங்கடமா-கவே இருந்தது. (முதலியாருக்கு உள்ளுக்குள்ளே சிரிப்பு.)

முருக:—சங்கடமா? இந்தப் பருவத்திலா! இருபத்-தொரு பிராயத்திலா!

குமுத:—இக்காலத்தில் கிழவர்க்கும் இளைஞர்க்கும் சங்கடம் இருக்கிறது. இது சர்வ சாதாரணம். ஒரு மாது அழகான பட்டுச்சீலை யணிந்திருப்பின் மற்றை மாதர்கள் பொறாமைகொண்டு, கூடுமானல் அதன் முன்றானையைக் கிழித்துவிட முயல்கிறார்கள்.

முருக:—என்வரையில் நான் ஆடம்பரத்தையும் பகட்டையும் விரும்புவதில்லை.

குமுத:—தங்களுக்கு என்ன? கிரீடாதிபதிகளும் தங்க-ளுக்கு நிகராகார். தங்கள் செல்வத்திற்கு எல்லையில்லை. தாங்கள் நினைத்தவற்றை நினைத்தபடி அநுபவிக்கலாம். தங்களுக்கு என்ன முடியாது? ராஜாங்க சேவையா? தாங்கள் ஒருவரையுஞ் சேவிக்க வேண்டியதில்லை. ஆகவே, தாங்களே இவ்வுலகத்தில் சுகபுருஷர்.

இப்படிச் சொல்லிக்கொண்டு ஒரு ரோஜாப் பூவைக் கையிற் கசக்கினாள்.

முருக:—அதோ கசக்குகின்றாயே அந்த ரோஜாவை விட எனது நிலைமை ஒன்றும் மேலானதாயில்லை. எனக்குச் சுகமேது?

குமுத:—ஓ ரோஜாவே! எனக்கு மிக விசனமாயிருக்கிறது. இன்று ரோஜாப் பூக்களைக் கொள்ளைகொள்ளையாகப் பெற்றதனால் அருமை நினையாது கசக்கினேன். அது குற்றமென்று நினைக்கிறேன்.

முருக:—அஃது உன் குற்றமன்று. அத்தனை பூக்களை உனக்குத் தந்தவர்கள் குற்றமே. ஆனாலும உன்னிடம் ஒரு ரோஜா இருக்க வேண்டும என்பது எனது பிரார்த்தனை. அந்த ரோஜா இப் பூமண்டலத்திலுள்ள தோட்டங்களிற் பூப்பதொன்றன்று. அதைக் கண்டு உனது இதயத்தில் அணிந்துகொள்ள வேண்டும். யான் சாகுமுன், நீ அந்த ரோஜவைப் பெற்று வாழ என் கண்ணாரக் கண்டு களிக்க விரும்புகிறேன். அந்த ரோஜா காதல் என்பதே.

குமுத:—ஐயா, காதலொன்றுளதென நான் நினைக்கவில்லை.

முருக:—ஆ! என்ன சொன்னாய்! காதலுண்டென்று நீ நம்பவில்லையா? வேறு யாதுண்டென்று நீ நம்புகிறாய்?

குமுத:—சுகவாழ்க்கையுண்டென்று நான் நம்புகிறேன். ஆனால் சுகவாழ்க்கை வேறு காதல் வேறு. அவ்விரண்டிற்கும் ஒருவித சம்பந்தமு மில்லை. காதல் பெற்று வாழ்கிறோமென்று கூறும் எனது நண்பர்கள் யாவரும் துக்கத்திலாழ்ந்தே இருக்கிறார்கள். அக் காதல் நெடுக நிற்குமோ

றில்லாதோ வென்று அவர்கள் அறியார். எனது தந்தையும தாயும் ஒருவரையொருவர் காதலித்து மணந்ததாகச் சொல்வதுண்டு. ஆனால் அவர்கள் பூனையும் எலியும் போல வாழ்கிறார்கள். ஆகவே, காதலுண்டென்பதை விட நட்புண்டென்பேன்.

முருக:—அப்படியா! வீணான எண்ணங் கொண்டு நெஞ்சைப் புண்ணாக்கக் கூடாதென்பது உன் கொள்கை. அது நல்லது. உன் பிராயத்தில் நாங்கள் இவ்வளவு அறிவுடையவர்களாயின், பற்பல நன்மைகள் பெற்றிருப்போம். நீ மகா புத்திசாலினி. இந்த வயதில் இவ்வளவு அறிவு ஒருத்திக்கு இருக்கக் கூடுமென்று நான் நினைக்கவில்லை. நட்பென்பது காதலைவிட இனியதே. ஆனால் எப்போது? தன்னயம் பாராட்டல் சிறிது மில்லையாயின். இப்போது நட்பிலும காதலிலும் தன்னயம் பாராட்டாமை அரிதாயிருக்கின்றதே!

குமுத:—ஆம், ஆம், அரிதரிது.

முருக:—இப்போதில்லை யாயினும் ஒரு நாள் உனது விவாகத்தைப்பற்றி நீ நினைக்க நேரும். உனது வரன் உன்னிடம நட்பொன்றுமே வைத்தால் நீ திருப்தி யடைவாயோ?

குமுத:—திருப்தி யடைவேனென்றே நினைக்கிறேன். எனக்கு வேறுவிதமான மனோவிகாரங்க ளில்லை.

இவ்வாறு கூறும்போது, முதலியார் கண்களில் கோபக் குறி தோன்றியது. கடுமொழி கூற வாய் துடித்தது. தன் அழகையே பெரிதாக நினைத்திறுமாந்திருந்த பெண் அவர் உள்ளக்குறிப்பை அறிந்தாளில்லை அவர் விருப்பத்திற் கேற்பவே தான் வார்த்தை யாடுவதாக எண்ணினாள்.

முருக:—ஆனால், காதல்பெற விரும்பவில்லையோ? தேவதாப் பிரசாதமான காதலின்பம், மகாகவிகளுக்கெல்லாம் ஆவேசம் தந்த காதலின்பம் உனக்கு வேண்டாவோ?

குமுத:—கவிகளா! அவர்களைப்பற்றி நினைப்பினும் கேட்பினும் எனக்குப் பயமாயிருக்கிறது.

முருக.—இராமபிரானை மிதிலை வீதியிற் செல்லுங்கால் மேன்மாடியினின்று கண்டு காதல்கொண்ட சீதை,

> இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
> சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
> சுந்தர மணிவரைத தோளு மேயல
> முந்தியென் னுயிரையம் முறுவ லுண்டதே

என்றதுண்மை யன்றா?

குமுத:—முன்னமே கூறினேனே. இவை கவிகள் வர்ணனம். 'புலவர் வாயிற் பொய் வளரும்' என்னும் பழமொழியைத் தாங்கள் அறிவீர்களே. முற்கூறிய கவி கம்பருடையதோ? பொய்யைக் கொட்டி அளப்பதி லவரைப் போன்றார் ஒருவருமில ரென்பதற்கு ஆதாரமாக ஒரு பாகவதர் தாம் செய்த ஹரிகதா காலக்ஷேபத்தில் கூறிய வர்ணனம் ஞாபகத்திற்கு வருகிறது. இலங்கை மாளிகைகளைப்பற்றிக் கூறுமிடத்து, மாளிகைகளின் மேனிலைக்கணுள்ள நிலா முற்றத்தில் தூசுபோக்க மின்னுக் கொடிகளை மடக்கி அடக்கி விளக்குமாறாக உபயோகிப்பரென்றும், அப்படி விளக்கிய பின் அருகிலுள்ள ஆகாயகங்கையின் நீரை அள்ளித் தெளிப்பரென்றும வர்ணித்தாரென்றார். இஃது என்ன? எள்ளத்தனை உண்மையுண்டா? இப்படியும் கூறலாமா? இதனாற்றான் கவிகளென்றால் எனக்கு எரிகிறது.

முருக:—நீ சொல்வது நியாயம. சிறுபெண்ணாயினும் உள்ளதைச் சொல்லுகிறாய். எடுத்த காரியத்தை நிர்வகிக்கக்கூடிய சக்தியுடையாய் நீ. லௌகிக வியாபாரங்களில் வல்ல ஒருவனுக்கு ஏற்ற மனைவியாயிருப்பாய். உனது தாயார் உன்னை அழைக்கிறார்போலும், கேட்டுவிட்டு வா.வருகிற வாரம் நான் வெளியே போக உத்தேசித்திருக்கிறேன். இரகசியமாக இரண்டொரு விஷயங்கள் உன்னிடம் சொல்லவேண்டும்.

குமுத:—இதோ வருகிறேன்.

குமுதம் கீழே சென்று அழைத்த தாயாரைக் கண்டாள்.

ஜீவ:—என்ன செய்தாய்? ஜாக்கிரதையாய் வார்த்தையாடினாயா? கிழவனை ஏய்த்தாயா? இல்லையா? கிழவன் என்ன சொன்னான்?

குமுதத்தின் முகம் கறுத்தது; உதடு வறண்டது.

குமுத:—அந்த விஷயத்தைபபற்றிக் கிழவர் ஒன்றும் சொல்லவில்லை. அதற்கு நேரமில்லை. என்னோடு இரகசியமாய்ப் பேசவேண்டுமென்று சொன்னார். மறுபடி நான் மேன்மாடிக்குப்போக வேண்டும்.

ஜீவரத்நம் இதுகேட்டுப் பெருமூச்செறிந்தாள். கையிலொரு விசிறியெடுத்து வீசிக்கொண்டாள். உள்ளக் குறிப்பு வெளித்தோன்றுதபடி புன்னகையால் மறைத்துக் கூட்டத்திற் கலந்தாள்.

குமுதம் அதிவேகமாய் மேன்மாடியேறினாள்.

முருக:—குமுதம்! உன்னையொத்த சிறுமிகளோடு வார்த்தையாடுவது உனக்கு இன்பமாயிருக்கும். அதை விட்டு என்னோடு வார்த்தையாட இங்கு வரச்சொன்னேன்.

குமுத:—எனது அன்புடைய ஐயா! உம்மோடு வார்த்தையாடுதலைவிட மற்றும் ஓர் இன்பம் எனக்கு உண்டோ?

இப்படி அவள் கூறியபோது முதலியாருக்கு முகம் ஒருவித விகாரமடைந்தது. அவ் வார்த்தை பச்சைப் பொய்யென்று அவர் நினைத்தார்.

முருக:—குமுதம! சாதுரியமாகப் பேசினாய். நான் நெடுநேரம் உன்னைத் தாமதிக்கும்படி செய்யேன்; இரு-இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டும். உனது வருநாளைப்பற்றி உன் தந்தை என்ன சொல்லுவாரோ அதையே நான் சொல்ல விரும்புகிறேன்.

குமுத:—எனது வருநாளா!

முருக:—ஆம, அதைப்பற்றி நீ ஏதாவது நினைத்த துண்டா?

குமுதம் நெட்டுயிர்ப்போடு சிறுநகை செய்து, "இல்லை' யென்று தலையசைத்தாள். "எனக்கு முன்யோசனை கிடையாது. நான் பேதை" என்றாள்.

முருக:—அப்படியானால், இப்போது ஐந்து நிமிஷம் அதைக்குறித்து யோசனைசெய். நான் நாளைக்கு அல்லது நாளையினன்றைக்கு வெளியூருக்குப் போகிறேன். திரும்பி வர நெடுநாள் செல்லும்.

குமுத:—என்ன! போகிறீரா! நெடுந்தூரமில்லையே!

முருக:—அதனை இப்போது சொல்ல முடியாது. போகப்போக எப்படி ஆகுமோ? திரும்பி வர ஓராண்டே-னும் செல்லும. குழந்தையாயிருந்த உன்னிடம் மிக்க ஆசை வைத்திருந்தேனாகலின், உன் விஷயத்தில் கவலை கொள்ளாமலிருக்க இப்போதும் எனக்கு முடியவில்லை.

நான் போகு முன் உன் வருநாளைப்பற்றி உனக்கு ஒரு முடிவான யோசனை யிருப்பின் நலம்.

குமுத:—எனக்கு ஒரு யோசனையுமில்லை. தாங்கள் போய்விடின், உள்ள சுகமும் போம்.

முருக:—அப்படிக் கொள்ளாதே. காடுவா, வீடுபோ வென்னும் நிலைமையிலிருக்கிறேன் நான். எனக்குப் புத்தி ஸ்திரமாயில்லை. சிலநாளைக் கேனும் இடமாறுதல் வேண்டுமென்று நினைக்கிறேன். எனது இப்போதை நிலைமை வெறுப்பாக விருக்கிறது.

குமுத:—வெறுப்பாகவா? என்ன ஆச்சரியம! இப்போதை நிலைமையா வெறுப்பாக விருக்கிறது! தங்கள் செல்வப் பெருக்கிலா?

முருக:—என்ன செல்வம் இருந்தாலும் என்? செல்வம் சுகவாரியோ? என்னைப்பற்றிப் பேச எனக்கு இஷ்டமில்லை. உன்னைபபற்றிப் பேசவேண்டும. உன் வாழ்க்கைநிலை யாதெனக் கொண்டிருக்கிறாய்? விவாகம் செய்து கொள்ள வேண்டியதுதானே.

குமுத:—அப்படித்தான் நினைக்கிறேன்.

முருக:—நீ யாரையேனும் குறித்து வைத்திருக்கிறாயோ? நீ காதலிப்பவனோ, அல்லது உன்னைக்காதலிப்பவனோ ஒருவனை நீ குறித்து வைத்திருக்கலாமே அப்படிப்பட்டவ னிருப்பின் அவனை என்னிடம வரவிடு அவனிடம் ஏதேனும் சரக்கிருக்குமாயின் அவனை மேனிலைக்குக் கொண்டு வர நான் உத்தரவாதியாயிருக்கிறேன்.

குமுத:—எனக்குக் காதலன் ஒருவனுமில்லை முன்னரே அறிவித்தேன். காதலென்பதுண்டென நான் நம்பவில்லை. எனது பெற்றோர்கள் வறியர்கள். எனக்குக் கல்-

யாணமாகவில்லை யென்றால், நானே ஏதாவது ஜீவனோபா-யத்தை மேற்கொள்ளவேண்டும்.

முருக:—கன்னிகைகளாகவே பலர் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கிறார்கள். அவர்கள் தேகயாத்திரைக்கு மிகப் பாடுபடுகிறார்கள். முடிவில் துக்ககரமாய் விடுகிறது. ஒரு மாது ஒருவனை மணந்தால் அவன் பாதுகாப்பான். எல்லாம் அவன் பொறுப்பாகும்.

குமுத:—அதை முற்றும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஒருவனும் முன் வரவில்லை யென்றால் என்செய்வது ?

முருக:—பிறருக்குப் புத்தி புகட்டல் கஷ்டமான காரியம். பிறரை யடக்கி யாளுதல் அதனினும் கஷ்டம். நானோ உன் விஷயத்தில் இவ்விரண்டில் ஒன்றையுஞ்செய்-யத் தகுதி யுடையவனல்லன். யான் வயது முதிர்ந்தவன்; நீ பருவமங்கை நீ உலக வாழ்க்கையைத் தொடங்குகிறாய்; யான் அதனை முடிக்கிறேன். நீ சிறுமியாயிருந்தும் காதலில் நம்பிக்கை யில்லை யென்கிறாய்; நான் காதலித்துக் காதலின்பங் கலக்கவில்லையே யென்று மனங் கசந்து நிற்பவன். நீ காலத்திற்கேற்ற கொள்கையுடையாய். உன் நிலையினின்று நோக்கினால், காதலெங்கு மில்லையென்றே தோன்றும். ஆயினும், நீ காதல் கூராத விவாகம செய்-வதைக் கண்கொண்டு பார்க்க எனக்கு மனமில்லை.

குமுத:—விவாகமானவுடன் மிக்க காதலொடு வாழ்-பவர்களே பின் ஒருவரை யொருவர் மிக வெறுக்கிறார்கள். எனக்குக் கணவன் நண்பனாயிருந்தால் போதும். என்-னிடம் அவன் காதல்கூர வேண்டா. அஃதாவது எனக்கு வேண்டியவற்றைக் கவனித்து என்னிடம் பக்ஷமாயிருக்-கக் கூடியவனாய், என்னைவிட மிக மூத்தவனாய், ஞான்வா-

ஞய், சமர்த்தனுய், தேக வலிமை யுடையவனுயுள்ள ஒரு-வனை நான் மணக்க விரும்புகிறேன்.

முருக:—'செல்வனுய்' என்பதை விட்டாயே. அதை மறவாதே. 'பெருஞ் செல்வனுய்' என்று சேர்த்துச் சொல்.

குமுத:—சொல்வானேன்? பெருஞ்செல்வ மில்லையா ஞல், உற்சாகத்தோடு வாழ்வதெப்படி?

முருக:—பெருஞ் செல்வமின்றி உற்சாகத்தோடு வாழ்வது கூடாதென்று நினைக்கிருய்? கையில் ஒரு காசும் இல்லாத நாட்களில் நான் உற்சாகமாய் வாழ்ந்தேன். நாடோறும் உழைத்து வயிறு வளர்த்தது ஊக்கத்தையும் உற்சாகத்தையும் இறுமாப்பையும் தந்தது. எனது தன்மை யாவும் நன்கு வெளித்தோன்றின. பிறரை யறிவதினும் தன்னைத் தான் அறிவதாலுண்டாம் ஞானம் விருத்தி யடைந்தது. அப்போது நீ சிறுமியாயிருந்தாய். உன்னை என் மடிமேல் உட்காரவைத்துக் கொள்வேன். நீ எனது கடிகாரச சங்கிலியைப் பிடித்து விளையாடுவாய். உன்னைக் காதல் மனைவி, ஆசைக் கண்ணுட்டி யென்றழைப்பேன். உன்னிடம் கபடமில்லை. கிழவன் சிறுமியைக் காதன் மனைவியாகக் கொள்வது தகுதியன் றென்றறிந்து நகை-யாடுவாய். உள்ளபடியே தன்னிலை யுணர்ந்து ஆடிய நகை யாதலின் அந்நகையைக் கண்டு உளம்பூரித்தேன். உன் இயல்பை உள்ளபடி கண்டேன். நீ வளரவளர அது முற்-றும் மறைந்தது. நீ பருவமங்கை யாயினுய், சமர்த்தையு மாயினுய். சாமர்த்தியம் இல்லையானுல், அதற்கு நீ சந்தோ-ஷப் படவேண்டும். அது யாரிடத்தில் முளைக்கிறதோ அவர்களை யழிக்கும்.

குமுதம் ஒன்றுஞ் சொல்லவில்லை. முதலியாருடைய பாஷை அவளுக்கு விளங்கவில்லை. தனக்குச் சாமர்த்திய மில்லை யென்று கூறினு ளாயினும் தன்னை விடச் சமர்த்தை உலகிலில்லை யென்று நினைத்தா ளாகலின், தன் நெஞ்சு குறுகுறு வென்றது.

முருக:—ஆம், உன்னிடம் அப்படிப்பட்ட சாமர்த்தியமில்லை. அதனுல் உன் விஷயத்தில் எனக்குத் திருப்தியே. உன்பால் நன்மையும் உண்மையும் தூய்மையும் இருக்கின்றன. இவை எல்லாச் சாமர்த்தியங்களைக் காட்டிலும் மேலானவை.

குமுதம் முகம் கறுத்தாள். தன் உள்ளக் குறிப்பை வெளிக் காட்டாமலிருக்க அவள் முயன்றுளாயினும் அது முடியவில்லை. முதலியார் தந்திரமாக அவள் முகத்தை உற்று நோக்கினுர். அவர் உள்ளக் கருத்தை அங்கையி னெல்லிக்கனிபோலக் கண்டார்.

முருக:—ஒரு மங்கைக்கு அவள் நற்குணமே பூஷணம். ஓர் ஆபரணத்தின் பருமைக்கும் பாரத்திற்கும் விலை ஏறாது. அதன் ஒளிக்கே விலையுயரும். என்னைப் போன்ற வியாபாரிகள் கடையில் அருமையான ரத்நம் கிடைப்பினும் அதனைப் பரீக்ஷை செய்யாது திருப்தி யடையோம். நான் மதிக்கும் ஒரு பொருளின் உரிய விலை காண விரும்புவேன். உன்னை ஒரு ஸ்திரீ ரத்நமாக நான் நினைக்கிறேன். ஆகவே, உன்னையும் ரத்நத்தைப் போலவே பரீக்ஷிக்க எண்ணுகிறேன். உனக்கு ஏதாவது ஆக்ஷேபம் உண்டா?

குமுத:—ஆக்ஷேபமா? ஒன்று மில்லை. தங்கள் செய்கையையும் ஆக்ஷேபிப்பேனு?

முருக:—குமுதம்! உன்னை ஒரு கேள்வி கேட்க வேண்டும், அஃதொரு கஷ்டமானகேள்வி. அக் கேள்விக்கு நீ தரக்கூடிய விடை எனக்குத் துன்பம் விளைக்குமென்று அஞ்சுகிறேன். யான் 'பரீக்ஷை' என்று சொன்னேனே அது. அக் கேள்வியைக் கேட்கலாமா?

குமுதத்தின் மார்பு படபடவென் றடித்தது. முடிவில் குறித்த விஷயம் வெளியாகப் போகிறதென்று நினைத்தாள். இன்னும் ஒரு நிமிஷத்தில் தான் அகண்ட ஐசுவர்யத்திற்குரியவ ளாவதும், ஆகாததும் முடிவாகு மென்று துணிந்தாள். நான் தக்க விடை கூறுவேனுனல், அதற்கு உரியவளே ஆவேனென்று கொண்டாள்.

முருக:—கேட்கவோ வேண்டாவோ? அந்தக் கேள்வி எப் பருவத்தனும் ஒரு மங்கையைக் கேட்கத் துணியான். அதனுல் உனக்கு மிக்க கோபம் உண்டாம். அஃது ஒரு கிழவன் ஒரு சிறுமியைக் கேட்கக் கூடிய கேள்வியன்று. யாதா யிருக்கலாமென்று நினைக்கிருய்? என்னை மணக்கும்படி உன்னைக் கேட்கிறே னென்று வைத்துக்கொள்.

குமுதத்திற்கு இது கேட்டபோது உண்டான களிப்பிற்குக் கரையில்லை. முகத்தில் ஒருவித விளக்க முண்டாயிற்று. கலகலவென்று சிரித்தாள். 'உடனே சம்மதிப்பேன்' என்ருள்.

முருக:—சம்மதிப்பாயா? உண்மையாகவா? என்னை நீ உண்மையாகவே விவாகம் செய்து கொள்வாயா?

குமுத:—தடையென்ன? நிச்சயமாய்ச் செய்துகொள்வேன். வேருெருவனை விவாகம் செய்து கொள்வதினும் உம்மைச் செய்துகொள்வது எனக்கு இஷ்டமே.

முருக:—(ஒரு நிமிஷம் மௌனமா யிருந்து) ஏன்?

இக் கேள்வி மனக் கலக்கத்தை யுண்டாக்கிற்று. அவர் இப்படிக் கேட்பாரென்று எதிர்பார்க்கவே யில்லை. அதற்கு விடை பகர ஒன்றுந் தோன்றவில்லை. நாணத்தால் முகம் சிவப்பதை அவர் காண்கிறார். மயங்குகிறாள்; தியங்குகிறாள் குமுதம்.

இத் தறுவாயில், 'எனது அருமைக் கண்மணீ! இத்துணை இளமையும் எழிலும் வாய்ந்த நீ இக் கிழவனை மணந்து கொள்வாயா?' என்று கேட்டிருப்பாராயின், "என் ஆருயிர்த்தலைவா! பருவத்தைப் பற்றிப் பேசாதீர். என் ஆசை பொங்கும் அகத்திற்குத் தாங்கள் ஒருகாலும் கிழவராகீர்' என்று விடை பகர்ந்திருப்பாள். அவர் செப்புச் சிலைபோல எதிரில் நின்றார். அவர் கண்களே சுழன்றன; அவை "ஏன்? ஏன்?' எனக் கேட்டன. என்ன செய்வாள், ஏதாவது சொல்லித் தப்பித்துக் கொள்ளலா மென்று நினைக்கிறாள். அவளுக்கு முகம் வரவரக் கறுத்தது; அழுகை வரவில்லையே யென்று நினைத்தாள். கண்களினின்றும் பலபல வென்று நீரை யுகுத்திருப்பாள். எப்படியோ அழுகை வரவில்லை. மறுமொழி பகர மாட்டாமையைக் கண்கள் காட்டின. தன் எண்ணம் நிறைவேறு தென்று தீர்மானித்தாள். தன் தூண்டிலின் நுனியி லிருந்ததாகத் தான் நினைத்த பொன்மீனைக் கரை சேர்த்த தெப்படி?

முருக:—ஏன் என்னை நீ மணக்கிறேன் என்கிறாய்? காதலின் றென்பது நிச்சயம். நீ காதலுண்டென நம்பினாலும் இந்தச் சிறுபிராயத்தில் கிழவனை ஏன் காதலிக்க வேண்டும்? அஃது ஒருபோதும் கைகூடாது. இயற்கைக்கு மாறு. யான் உனது பாட்டனாயிருப்பேன். குமுதம்! செவ்வையாக யோசி: அவசரப்பட்டு விடை கூறினாய். என்மீதுள்ள

பற்றினாலும் கண்ணோட்டத்தாலும் அப்படிக் கூறியிருக்க-லாம். விஷயம் பெரிதாகலின் என்னைப்பற்றி ஒன்றும் நினையாதே. உன் நன்மையைக் கருது. உனது இயற்கைக் குணநலங்களுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் சுகத்திற்கும் ஒத்தபடி நாடு என்ன இளையளாயினும் இப் பரந்த உலகத்தைக் கண்டபின் மனப்பூர்வமாக என்னை மணக்க விரும்புவாயோ?

குமுதம் வெய்துயிர்த்தாள்; கை பிசைந்தாள். இத்-தருணம் தான் செய்யத்தக்கது என்னென்று யோசித்தாள். அவர் பேசினவை அவளுக்கு ஆச்சரியத்தை யுண்டு பண்ணின. அதிவிசித்திரமாய் வார்த்தை யாடினார் கிழவர். ஒருகால் தன்னைக் காதலிக்கிறபடியால் இப்படி யெல்லாம் பேசினாரோ வென்று நினைத்தாள்.

குமுத:—நான் தங்களை மணந்து கொள்ள விரும்பு கிறேன். அதைவிட எனக்குச் சுகம் வேறின்று.

முருக:—(வெறுப்போடு) என் கனா ஒழிந்தது. அதற்-கென்ன செய்வது? இக் காலத்து உலக நிலையும் கல்வியும் யான் கற்றிருக்க வேண்டும். எனக்குப் போதிய அநுபவ மிருந்தும் பெண்களை எள்ளளவும் நம்பலாகாதென்பதை நினைத்தேனில்லை. என்னைப் பொறுத்துக்கொள். யான் கிழவன்; வெட்டிப்பேசுவேன். உனக்கு வெறுப்புண்டாக்கி யிருப்பினும், பொறுத்துக் கொள்ளும்படி கேட்கவும் தெரியாது. பரிதானமும் துராசையும் உன்னை அணுகா வென்று நினைத்தேன்.

குமுத:—பரிதானமா? துராசையா?

இப்படிக் கூறியபோது வார்த்தை நழுவிற்று. மனம் பதறிற்று; உடல் நடுங்கிற்று. கையிலிருந்த விசிறியைக்

கீழே விட்டுவிட்டாள். முதலியார் ஒரு சிறுவனைப்போல் விரைவிற் குனிந்து அதை எடுத்துத் தந்தார்.

முருக:—ஆம். பரிதானமும் துராசையும் செல்வ சம்பந்தமாகப் பரிதானமும், நிலைமை சம்பந்தமாகத் துராசையுமாம். இவற்றை உத்தேசித்தே நீ என்னை மணப்பே னென்றாய். உனக்கு நாயகனாகக் கூடிய தகுதி என்னிட மில்லை. மனத்தால் நட்புக் கொள்ளாத லென்றால் வேண்டியவற்றையும் விரும்பியவற்றையும் தருதலே. யான் விட்டுச் சொல்லுகிறேன். ஒன்றையும் மறைக்கிறே னில்லை. பொய் சொல்ல இந்த வயதில் என்னால் கூடாது. இளமையிலும் பொய் கூறிப் பொலிந்தாரில்லை. முதுமையிற் பொய் கூறுவதென்றால் ஜீவசக்தியையும் காலத்தையும் பாழாக்குதலாய் முடியும். என் சம்பாஷணத்தை நிறுத்துகிறேன். எனக் கிருப்பது போலவே உனக்கும் அது சங்கடமா யிருக்கும். உன்னைப்பற்றி யான் மலைத்திருந்தது என் குற்றம். உன்னை உயர் பீடத்தில் வைத்தேன்; நீ கீழிறங்கி விட்டாய். உன்னைப் பரீக்ஷித்தேன்; நீ தவறிப்போனாய். பெற்றோர்களின் மனப்பாங்கினாலும் அவர்கள் உன்னை வளர்த்த விதத்தினாலும் நீ தவறிப் போனாய். என்னை நீ மணந்து கொள்வாயா என்று வினவியபோது நீ சம்மதியே னென்று உள்ளக் கருத்திற் கொப்பப் பேசி இருப்பின், எனது செல்வத்தை எல்லாம் உனக்கே எழுதி வைத்திருப்பேன்.

குமுதம் மலர விழித்தாள். ஊக்கத்தை இழந்தாள். ஏமாறிப்போய் ஏதோ சொல்ல முயன்றாள். தொண்டையடைத்துக் கொண்டது. பேச்சு வாராது எப்படியோ

கிரியாய் வந்தது. "உண்மை யாகவா? அஃதேன்?" என்றாள்.

முருக:—நீ சத்தியவதி யென் றறிந்திருப்பேன். உள்ளும் புறம்பும் ஒத்தவளென் றறிந்திருப்பேன். நின் மின்னொத்த அழகைப் பொன்னுக்கு மாற்றத் துணிவா யல்லை யென்றும் உலக மென்கிற ஏலக்கடைக்கு நீ அடிமைப்படா யென்றும் தெரிந்துகொண் டிருப்பேன். நான் கணக் காணும் சிறுமி நீ யல்லை; நீ இக் காலத்திற் கொத்த பெண்.

குமுதத்திற்கு அடங்காக் கோபம் பிறந்தது. முதலியார் அவள் சமீபத்திற் போய்க் கையைப் பிடித்துக்கொண்டு, "போய் வருகிறாயா? வந்தனம்" என்றார்.

அவள் கையைப் பிடியினின்றும் உதறிக்கொண்டு, "நான் உன்னை வெறுக்கிறேன். நீ அற்பன். என்னை ஏமாற்றினாய், வஞ்சித்தாய். நீ என்னை விவாகஞ்செய்து கொள்வதாக நம்பவைத்துக் கழுத்தறுத்தாய்" என்றாள்.

முருக:—என் குற்றத்தைப் பொறுத்துக்கொள். நான் உன்னை அப்படி நினைக்கும்படி செய்தேனா, அல்லது நீயே அப்படி நினைத்துக் கொண்டாயா?

குமுத:—எந்தப் பெண்ணாயினும் நீ மணக்கும்படி கேட்டால், சம்மதிப்பாளே யன்றி ஒருபோதும் மறாள். அரம்பை யானாலும் அளவு கடந்த செல்வம் படைத்த உன்னை வேண்டாது மறுப்பளோ? பெருஞ் செல்வம் பெற நேர்ந்தால் அதைக் கொள்வதிற் குறையேனும் வஞ்சனையேனும் உண்டா?

முருக:—பரிபவமின்றிப் பெருஞ் செல்வம் பெறலா மாயின் தகுதியே, குற்றமில்லை. ஒரு சிறுபெண் எழுபது வயதுள்ள கிழவனை மணப்பதா லென்பெறினும் அஃது

அவமானமான காரியம். அக் கிழவன் அவளை விலைக்கு வாங்குவானானால், அவனை மனிதருள் ஒருவனாக எண்ணேன்.

குமுத:—இந்த விஷயங்களை எல்லாம் நீர் முன்னமே யோசித்திருப்பீராயின். ஏன் என்னை இப்படிக் கேட்டீர்?

முருக:—நான் கேட்கவில்லை, கேட்க வேண்டு மென்கிற எண்ணமு மெனக்கில்லை. அப்படிக் கேட்டால் அதற்கென்ன விடை நீ பகர்வா யென்றே வினவினேன்.

குமுத:—அவ் வினாவிற்குப் பொருளென்ன?

முருக:—என்னைப் பொறுத்துக்கொள். நான் உன்னைப் பரீக்ஷிப்பதாக முன்னமே கூறினேன். என் பரீக்ஷையில் நீ தேறவில்லை என்பதுதான் முடிவு நெடுநேரமாயிற்று. களைத்திருக்கிறாய் உனக்கு வெறுப்பு-இல்லை, -வியாகுலம உண்டாக்கினேன். அதற்கு என்னைப் பொறுத்துக்கொள். உனக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று கடவுளை நான் பிரார்த்திக்கிறேன்.

குமுத:—நான் போய் வருகிறேன். எல்லாரும் போய் விட்டிருப்பார்கள். என் தாயார் எனக்காகக் காத்துக் கொண் டிருப்பார்கள்.

முருக:—குமுதம்! உன்னிடம் அதிகமாக எதிர்பார்த்தேன். முடிவில் மோசம் போனேன். ஆயினும் நீ க்ஷேமமா யிருக்கவேண்டு மென்பதே எனது பிரார்த்தனை. மறுபடி உன்னை நான் பாராமற் போகவும் கூடும். ஆகலின் விரோதம் கொள்ளாது விடைபெற்றுக் கொள்ளலாம.

குமுத:—இனி உம்மிடம் நான் நட்புக் கொள்ளேன். நீர் கன்னெஞ்சும தன்னலம் பாராட்டுதலும் உடையீர்.

என்னை நீர் நடத்திய விதத்தை எண்ணினால் என் நெஞ்சம் பகீரென்கிறது. நீர் எடுப்பார் பிடிப்பா ரின்றிச் சாகப் போகிறீர். உம்மைப் பற்றிக் கேள்விப்படவாவது உம்மைப் பார்க்கவாவது ஒருபோதும் எண்ணேன். நான் குழந்-தையா யிருக்கும்போது நீர் எள்ளளவும் பக்ஷமா யிருந்தி-ருக்கமாட்டீர்.

முருக:—அந்தக் குழந்தைத்தன்மை இப்போது உன்னிடம் இல்லை. அதைப் பற்றிப் பேசாதே.

முதலியார் பார்வை அவளுக்குப் பயத்தைத் தந்தது. தான் ஆவலோடு எதிர்பார்த்த ஏதோ ஒரு பொருளைப்-பெறாது ஏமாறி நின்றாளெனத் தெளிவாகத் தெரிந்தது. அவளுக்கு உடல் நடுக்கமும் தலையிறக்கமும் உண்டாயின. இந்தக் கிழவனாருக்குத் தான் மனைவியாதற்கு வேண்டிய மந்திர தந்திரங்களை எல்லாம் செய்தது அவள் நெஞ்சைச் சுட்டது. தான் கர்வப்பட் டிருந்தது தனக்குக் கண்ணாடி போல விளங்கிற்று. தன் தாயாரின் துர்ப்போதனையால் அவரை மணக்க முயன்றமைக்குத் தன்னைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்கலாமென்று நினைத்தாள். திடீரென எழுந்து ஒரு வார்த்தையும் சொல்லாது வேகமாய்க் கீழிறங்கினாள். கூட்டத்திற் பாதி ஜனங்கள் போய் விட்-டார்கள். மற்றைப் பாதி ஜனங்களும் கலைந்து போகின்-றார்கள். அவர்கள் யாவரும் புன்னகை செய்தும் தலை-யாட்டியும் என்ன ஆயிற்றெனக் கேட்பவர் போலக்-காட்டினார்கள். குமுதவல்லியின் தாயாருக்கு ஆத்திரம் சொல்லமுடியாது; சமீபத்தில் ஓடிவந்தாள். குமுதம் வாய் திறக்கவில்லை. இருவரும் வண்டி யேறினார்கள்.

ஜீவ:—முதலியார் எங்கிருக்கிறார் ?

குமுத:—அவர் படுக்கையறையி லிருப்பார்.

ஜீவ:—ஏன் அவர் உன்னுடன் கீழிறங்கி வந்து வண்டி யேற்றவில்லை.

குமுத.—அவர் ஏன் ஏற்றவேண்டும்?

ஜீவரத்நம் கலங்கினான்; ஒன்றுந் தோன்றவில்லை. தன் மகள் முகத்தை உற்று நோக்கினாள். அவள் விடையகர்ந்த விதம் விந்தையா யிருந்தது.

ஜீவ:—என் கண்மணீ! விஷயம் என்ன? ஏதாவது நடந்ததா?

வண்டி போய்க்கொண் டிருக்கிறது. இப்படிக் கேட்டவுடன் அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாது கோவென்று கதறினாள் குமுதம். கண்களில் நீர் தாரைதாரையாய் ஓடிற்று.

குமுத:—(தேம்பிக்கொண்டு) எல்லாம் முடிந்தது; நான் கிழவனை இழந்தேன். எல்லாவற்றையும் இழந்தேன்.

ஜீவ:—அடி, மூடப் பெண்ணே! என்ன செய்துவிட்டாய்?

குமுதம் நடந்தவற்றுள் ஒன்றையும் விடாது சவிஸ்தாரமாய்ச் சொன்னாள்; ஜீவரத்நம் ஸ்தம்பித்து நின்றான்.

குமுத:—இப்படி நடக்குமென்று நான் அறிந்திருக்க வேண்டும். என் யோசனையின்படியே நான் நடந்திருந்தால் இக்கேடில்லை. நான் கிழவனிடம் இன்று வார்த்தை யாடிக்கொண் டிருக்கும்போது தான் எனக்கு அது தோன்றிற்று.

ஜீவ:—இப்படித் தெரிந்திருந்தால், அதற்குத் தக நடக்கும்படி செய்வேன். நாம இவ்வளவு நெருங்கினது கூடாது.

குமுத:—ஆம், ஆம். அவரை மணக்க மாட்டே னென்று கூறியிருப்பின், அவர் சொத்தெல்லாம் எனக்கே சேர்ந்திருக்கும். அவரும் அப்படியே சொன்னார்.

ஜீவ:—இனி ஒன்றுஞ் செய்யமுடியாதா ?

குமுத:—முடியாது.

குமுதம் வெறிபிடித்தவளைப் போன்றாள். வண்டியி-லுள்ள கண்ணாடிகளை உடைக்க நினைத்தாள் ; தன் தாயா-ரை அடிக்க வேண்டினாள் ; மற்றும் இத்தன்மையான பல செய்கைகள் செய்ய முயன்றாள்.

"இனி யான் தமியளானேன். இனி அவர் நமது வீடு தேடி வாரார் ; வண்டியி லேற்றிக்கொண்டு மாலைக் காலங்-களில் சாரி போகார் ; நாடகங்களுக்கும் நகைக்கடைக்கும் அழைத்துச் செல்லார். என் வாழ்நாளை இனித் தாயா-ரோடு கழிக்க வேண்டியதே. இந்தப் பிறந்த நாளைப்போல எங்கும் இராது. இந்த நாளை நினைத்தாலும் பயமா யிருக்-கிறது; குடல் குழம்புகிறது. இனி யாவரும் எட்டியும் கூட்டியும் என்னைக் காட்டி நகையாடுவார்கள். கண்டார் சிரிக்கும் கழுதைப் பிறப்பாயிற்று என் பிறப்பு" என்றாள்.

ஜீவ:—இப்படி முடியுமென்று யார் நினைத் தார்கள் ? இப்படியுங் குணங்கெட்ட பெருஞ்செல்வனொரு-வன் இருப்பானா ? அவன் புத்திமா னென்று நினைத்தேன். உன்னை அவ்வளவு வியந்து பேசுவான். அவன் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறான். அவ-னுடன் வைத்துக் கொளுத்திக் கொள்ளப் போகிறானோ ?

குமுதம் நெட்டுயிர்த்துத் தட்டழிந்து தேம்பித் தேம்பி ஒருவாறு அழுகை மாறினாள்.

ஜீவரத்நம் களுக்கண்டு வாய்பிதற்றுவதுபோல இருந்திருந்து, "அந்தக் கிழப்பாவி பணத்தை எங்கே வைக்கப் போகிறான்" என்றாள்.

அத்தியாயம் - 3

இரண்டு மூன்று நாட்கள் கழித்து அநந்தாசாரி காரியஸ்தருகத்திலிருந்து வீட்டிற்குப் புறப்படுகிற தருணத்தில் ஒரு சேவகன் வந்து" எஜமானே! முருகப்பமுதலியார் மனிதன் ஒருவன் வந்திருக்கிறான். தங்களோடு நேரே வார்த்தையாடவேண்டுமென்கிறான்" என்றான். "நல்லது, அழைத்துவா" என்றார் நியாயவாதி. உடனே அந்தச் சேவகன் ஓடிப்போய் ஒருவனை அழைத்துவந்தான். அவன் வந்தவுடன் 'முதலியார் தங்களிடம் தரச் சொன்னார்'என்று 'இரகசியம்' என்று எழுதப்பட்டிருக்கும் ஒரு கடிதத்தைத் தந்தான்.' உங்கள் எஜமான் சுகமா ?'என்றார்.

" ஆம், ஐயா, இப்போதுதான் புறப்பட்டுப் போனார். சுகமாகத்தான் போனார் " என்றான் சேவகன்.

"அப்படியா?போய்விட்டாரா?"என்றார் நியாயவாதி.

அங்ஙனம் சொல்லிவிட்டுக் கண்ணாடி போட்டுக்கொண்டு கடிதத்தைப் பிரித்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துப் பன்முறை படித்தார். அதன்மேல் ஆவலோடு, நின்ற சேவகனை மேலும் கீழுமாக நோக்கி,

"அப்படியானால், தனியாகவே புறப்பட்டுப்-போய்விட்டாரோ ?"என்று மறுபடி கேட்டார்.

சேவ:—ஆம், ஐயா, தன்னந்தனியாய்ப் போனார்.

நியா:—இன்ன இடத்திற்குப் போகிறேனென்று சொன்னாரா?

சேவ:—இல்லை, ஐயா!

நியா:—உங்களுக்கு என்ன உத்தரவளித்தார்? எங்கிருக்கச் சொன்னார்?

சேவ:—ஒரு மாதம் விடுமுறை பெற்றுக்கொண்டோம். பிறகு யாவரும் அரண்மனைக்கு வந்துவிடவேண்டும்.

நியா:—உங்கள் எஜமான் வருகிறவரையில் அவருடைய வியவகாரங்களை எல்லாம் கவனிக்க வேண்டியவன் நானே யென்றும், என்னிடமே நீங்கள் வேதனமும் வீட்டுச் செலவும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உங்களுக்குத் தெரியுமா?

சேவ:—நேற்றிரவு எங்களை எல்லாம் அழைத்து அப்படித்தான் சொன்னார்.

நியா:—சொன்னாரா? வியவகாரநிபுணராகலின் ஒன்றையும் அரை குறையாக விட்டுப் போகார். தெரியுமா? ஒரு மாதத்திற்குமேல் அவர் வாராதிருந்தால், அடிக்கடி நான் நேரே வந்தாவது அல்லது யாரையேனும் விட்டாவது அரண்மனையை மேற்பார்க்க நேரும். ஒழுங்கு பெற வேண்டியவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். உங்கள் எஜமான் அப்படித்தான் எழுதியிருக்கிறார். உங்களுக்கு ஏதேனும் வேண்டியிருப்பினும் அல்லது நீங்கள் ஏதேனும்தெரிந்துகொள்ள வேண்டினும் இங்கு வரலாம்.

சேவ:—வந்தனம், ஐயா.

நியா:—சேவகா ! முதலியார் உன்னை உடனழைத்துச் செல்லவில்லை என்பது எனக்கு மிக்க துயரத்தைத் தருகிறது.

சேவ:—ஆம், ஐயா ! எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. முதலியாருக்கு வயது எழுபதுக்கு மேலாகிறது. அவர் தாம் நினைக்கிறபடி வலியுடையவராயில்லை. யாரேனும் ஒருவன் அவருடன் எப்போதும் இருத்தல் வேண்டும். நான் வருகிறேனென்று சொன்னதற்கு அவர் செவிகொடுக்கவே இல்லை. அவரிடத்திற் சேவகம் செய்வது ஒரு புண்ணியமேயாயினும் பிடித்தாரானால் ஒரே பிடிதானென்பது தங்களுக்குத் தெரிந்திருக்குமே. நல்லதோ கெட்டதோ எண்ணினாராயின் நடத்தியே விடுவர்.

நியா:—உள்ளது. நன்றாகச் சொன்னாய். அவர் நினைக்குமளவு தேகபலம் அவருக்கு இல்லை என்றாய். அவர் வயதுக்கு இவ்வளவு சுறுசுறுப்பும் உழைப்பு மிருப்பது எனக்கு அதிசயமாயிருக்கிறது.

சேவ:—ஆம், ஐயா ! அவர் சுறுசுறுப்பாகத்தானிருக்கிறார். தன் ஊக்கத்தாலும் உழைப்பாலும் அப்படி இருக்கிறார். பலஹீனராயினும் பலவானாக நடக்க வேண்டுமென்று மனவுறுதி கொண்டிருக்கிறார். இரத்தாசயம் பலஹீனப்பட்டிருக்கிறதென்றும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும் வைத்தியர் சொல்லி ஆறுமாதமாகிறது.

நியா:—அப்படியா ! வைத்தியர் அதற்கு ஏதாவது சிகிச்சை சொன்னாரோ ?

சேவ:—ஆம், ஐயா ! "இடமாறுதல் வேண்டும்; ஒன்றுஞ் செய்யக் கூடாது." என்றார்.

நியா:—அவர் இப்போது தனியே சென்றதற்கு அதுவே காரணமாக இருக்கலாம். அவருக்கு இடமாறு-தலும் சலன மற்றிருத்தலும் வேறு சூழலும் வேண்டும். அப்படியானால் வியவகாரங்களை யெல்லாம் நெடுந் தூ-ரத்தில்விட்டு இருக்கவேண்டுவதேமுறை. இதோ யான் எனது காரிய கிருகத்தை விட்டு வீட்டிற்குச் செல்லப் போகிறேன். வீட்டிற்குப் போகும்போது யான் வேறு மனிதனைய் விடுகிறேன். முதலியாரைப்பற்றி நமக்குக் கவலை யொன்றும வேண்டா. ஏதாவது கெடுதி யிருந்தால் உடனே நமக்கு அறிவிப்பார்.

சேவ:—ஆம், ஐயா! நிசசயமாக அப்படிச்செய்வார். வேண்டுமானால், தந்திசொல்வதாகச் சொன்னார்.

நியா:—நல்லது! எனக்கு வருமுன் உனக்கு ஏதேனும் அவரிடமிருந்து சமாசாரம் வருமானால் அல்லது என்னால் ஆக வேண்டியது ஏதேனும் இருக்குமா-னால்,என்னை வந்து காண். யான் இவ் வியவகார கிருகத்திற் பகல் ஒருமணி வரையும் இருப்பேன். எனது வீட்டு விலாச-மும் உனக்குத் தெரியுமே.

சேவ:—தெரியும், ஐயா!

நியா:—கோடைக்காலத்தில் யான் எனது கிராமத்தி-ற்குச் செல்வேன். முக்கியமான வியவகார மிருந்தால் நீ அங்கு வரலாம். கணககுப்பார்த்து அவரவர்களுக்குச சேரவேண்டியதைத் தருகிறேன்.

சேவ:—வந்தனம், ஐயா! (சேவகன் சென்றான்.)

நியாயவாதி நின்று மறுபடி முதலியார் கடிதத்தைச் சட்டைப் பையிலிருந் தெடுத்துப்படித்தார். அதன் பொரு-ளடக்கம் இது.:

என தருமை நண்பரே!

குமுதவல்லி பிறந்த நாட் கொண்டாட்டத்தன்று எனக்கு ஒரு கெட்ட சமாசாரம் தெரிந்தது. யான் சிரத்தை கொண்டிருந்த ஒரு கருமம் கெட்டுப் போயிற்று. யான் ஏமாறிப்போனேன். எனது சொத்துக்கு அதனால் ஓர் அழிவுமில்லை. உமக்குச் சொல்லவேண்டிய விஷயங்களெல்லாம் முறையாகச் சொன்னேன். ஆகவே, மனக் கவலை சிறிது மின்றிச் செல்வேன். யான் சிலகாலம் திரும்பேன். இன்ன விடத்திற்குப் போவதென்பதும் நிச்சயமாகவில்லை. என்னை இழந்ததாகவே நினைத்துக் கொள்ளும். இறப்பேனாயின் எனது சட்டைப் பையில் சேமித்து வைத்திருக்கும் கடிதம் உமக்கு வந்து சேரும். அதனால் என் மரணம் தெரியவரும். நீர் செய்த உதவிக்கெல்லாம் யான் மிக்க கடமைப்பட்டவனாகிறேன். எனது மரணசாசனத்தில் யான் அக்கடமையைச் செலுத்துதல் வெளியாகும். இருபது வருஷங்களாக எனது வியவகாரங்களை எல்லாம் தாங்களே கவனித்து வருகிறீர்கள். என் வியவகாரம் முற்றும் தங்களுக்கு மனப்பாடம். இப்போது திடீரென வேறொருவரை மேற்பார்க்க நியமித்தல் கூடாத காரியம். ஓர் யந்திரம் ஓட்டிவிட்டால் எப்படிச் சலியாது தானே ஓடுமோ அப்படியே என் வியவகாரங்களும் தாமே நடைபெறும். ஆளிருந்து நடத்த வேண்டுமென்பதில்லை. யான் சுவேச்சையாக இருந்து ஓய்வடைய வேண்டுவது இன்றியமையாதது. இதற்காக யான் வெளிச்செல்கிறேன். இறப்பினும் இறப்பேன். ஆகவே, தங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். இப்படிக்கு

வ. முருகப்பன்.

"எல்லாம் கூடமாயிருக்கிறது. ஓரிடத்தும் ஒரு குறிப்புமில்லை. வியாபாரம் செய்தேனென்கிறார். நஷ்டம் வந்ததென்கிறார். அவருக்கு ஒருகாலேனும் நஷ்டம் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. அஃது அவருடைய செல்வத்திற்கொரு கெடுதியும் விளையாதென்கிறார்.' ஏதோ அவர் மனத்தில் ஒரு விசித்திரமான யோசனை வைத்திருக்கிறார். அவருடைய சொத்தை அவருக்குப் பின் கைப்பற்றுதற கேற்றவரைத் தேடுகிறார். அவருக்கு ஒரு பைத்தியம் பிடித்திருக்கிறது. தன்னைத் தன் பொருட்டே நேசிப்பார் வேண்டுமென்கிறார். இந்த வயதில் அப்படி நினைப்பது தவறு. யாவர்தாம் கிழவனை நேசிப்பார்கள்? பெற்ற பிள்ளைகளும் இக்காலத்தில் நேசியார்" என்று பெருமூச்சு விட்டார் அநந்தாசாரி. அவருக்கிருந்த மகன் ஊதாரி; மகள் அவசரக்காரி. அவர்களிருந்தால் இவரிடம் அவர்களிலொருவருக்கேனும் பிரியமாவது மரியாதையாவது இருக்குமோ? இந் நாளிற் கிழவனென்றால் பாவியென்பார்கள். சில வருஷங்களுக்கு முன்பு அப்படி இல்லையே. கிழவர்களுக்கே கௌரவம் மிக்குண்டு. அஃதிருக்க. முதலியார் வியவகாரங்களி லொன்றை நினைக்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஜீவரத்நத்தின் எண்ணம் ஈடேறவில்லைபோலும். குமுதத்தின் தூண்டில் உடைந்தது போலும். என்ன கிழவராயினும் முதலியார் ஒரு மாதை ஏமாற்றத் திறமை வாய்ந்தவரே. நான் குறிப்பாக ஒரு வார்த்தை சொன்னேன். என் குறிப்பை யறிந்து அதன்படி நடந்தார். எப்படியோ அவர் ஊரிலில்லை. வெளியேபோய் விட்டார். எங்குப் போயிறங்குவாரென்பது தெரியவில்லை. அமரகியம் செல்வரோ? நான் நினைக்கவில்லை. நான் அவ-

ரோடு வார்த்தையாடியதில் பிறந்த வூருக்குப் போக வேண்டு மென்கிற எண்ணம் சிறிதேனும் இருந்ததாகத் தோன்றவில்லை. 'என்னைத் தாரை வார்த்ததாக நினைத்துக் கொள்ளுங்கள்' என்கிறார். இஃதென்ன விந்தை. இவரைப் பார்க்கிலும் பெருஞ்செல்வர் இந்த மண்டலத்திலில்லை? இவர் பெயரை அறியாதார் எந்தத் தேயத்துமிலர். இன்று அவரிருக்குமிடம் தெரியவில்லை யென்றால் நாளையே அது தெரிந்துவிடும். வியவகாரம் நிற்கும் நிலைமையைநோக்கி-னால் ஒரு மாதத்தில் திருமபி வருவாரென்று தோன்று-கிறது. அவரைப்பற்றி வீண் கவலை கொள்வதிற் பயனில்லை.

இப்படி நினைத்துக் கொண்டு தமது தொழிற் சாலையை விட்டு வீடுபுகுந்து சிற்றுண்டிகொண்டு தமது மனைவி யாருடன் உத்யானவனம் சென்றார். கனவிற்காணும் உருவமபோல முதலியாருடைய உருவம் அநந்தாசாரியர் எதிர்நின்று, வண்ணமாநகர வீதிகளினின்றும் மறைவானதொரு குகையுள், "என்னை இழந்ததாக வைத்துக்கொள்" என்று கூறி மறைந்தது.

அத்தியாயம் - 4

அமரகிய தேயத்திற் சோமர்குடி என்கிற ஒரு சிறு கிராமமுண்டு. பல்வகைப் புல் பூடுகளும் நாநாவிதக் கொடி-செடிகளும் செழித்தோங்கி வளர்ந் திருந்தன. முற்றறி-வன் நினைவும் மூதுணர்வோர் முயற்சியும் ஒன்று சேர்ந்த-தன் பயனுய எழின் மலர்களும் இளந்தளிர்களும் நன்

கனிகளும் காண்பார் காட்சியைப் பறித்தன. அத்தகைய கிராமத்தில் ஒரு சிறிய சந்தில் ஒருநாள் மாலைக் காலம் யோசனையி லாழ்ந்த ஒரு விருத்தர் அடிமே லடிவைத்து நடந்து சென்று களைப்பினு லொரு பெருமூச் செறிந்து ஒரு மரத் தடியி லுட்காந்தார். அவர் இளைத்த முகமும் கிழிந்த உடையும் கிழப்பருவ மென்னும் குற்றத்திற்காக வேலையி னின்று தள்ளுண்டு எங்காவது வேலை அகப்படுமா வென்று தேடிவரும் கூலிக்காரனுடையவற்றை ஒத்திருந் தன. சிறிதுநேரம் மரத்தடியில் ஏக்கத்தோடு உட்காந் திருந்து பின் தலைப்பாகையை எடுத்துவிட்டு ஏதோ மண்டைக் குடைச்சலை மாற்றுவார் போலத் தலையைத் தடவிக் கொடுத்தார். எதிரி லிருந்த ஒரு குண்டு மல்லிகைச் செடியின் கிளை யொன்றில் வநது உட்காந்த ஒரு சிட்டுக் குருவியை நோக்கி, "யான் எடுத்த காரியத்தைச் செவ்வை யாக நிர்வகித்தே னென்று நினைக்கிறேன். ஒரிடத்திலும் யான் இன்னுனென்று தெரிவித்துக் கொள்ளவில்லை. யான் இருக்குமிடம் ஒருவருக்குந் தெரியாது" என்று மெல்லெனக் கூறினர்.

அந்தப் பறவை தன் இறகு கோதிக் கண்கள் மின்ன ஒரு பக்கமாய் மேல் வைத்த பார்வையால், "விஷயம் செவ்வையாய் எனக்கு விளங்குகிறது. நீர் எங்களி லொரு வரானீர். நீரும் நாடோடியாய் மறுநாளைப் பற்றிக் கவலை கொள்ளாது இருக்கிறீர். பறவை யாகிற எனக்கும் மனித ராகிய உமக்கும் ஏதோ ஒருவித ஒற்றுமை யிருக்கிறது. நாம் சகோதரர்கள்" என்பது போல அவருக்குத் தோன்றிற்று; இருந்தாற்போலிருந்து அவர் முகம் நகையொடு விளங்கிற்று. தம் நிலைமை தாம் காணுத-

தாயும் இனிமையாயும இருந்தது. இரண்டு மூன்று நாட்களாய்த் தாம் அதிக உழைப் பெடுத்துக்கொண்டு ஒரு காலத்தும நடவாத தூரம் நடந்து வந்ததனால் கால்கள் மிக்க வலி யெடுத்தன. ஆயினும் தமக் குண்டான மனோற்சாகத்தால் என்ன தண்டனை விதிப்பினும் விதிக்க வென்று பாடசாலையை விட்டு ஓடிப்போகும் மாணுக்கர்களைப்போல அதைப் பொருட்படுத்திஞரில்லை. பல வருஷங்களாகப் புதுப பொருள்களின் இடையி லிருந்துகொண்டு புது விஷயங்களை அநுபவிக்க வேண்டுமென எண்ணிஞர். அது கைகூடவில்லை. செல்வத்தால் சித்தசாந்தியேனும் சுகமேனும் வாரா வென்பது அவர் கொள்கை. திரவியம் தேடித் தேடிக் குவித்தும் குண மொன்றுமில்லை. வீண் உழைப்பாய் முடிவதே யன்றி வேறன்று. சூழலும் சங்கமும் பிறவும் முற்றும் மாறவேண்டிய தென்று நினைத்தார். இதறகு என்ன செய்யவேண்டும்? வறுமையின் சுவை காண வேண்டும். இதனின் மேலானவழி வேறொன்றில்லை. தமது நாட்களில் உடம்பின் சடத்துவத்திற்கும் உயிரின் சைதன்யத்திற்கும் ஓயாப் போர் நடப்பதால் அருவருப்புக் கொண்டு உலகப் பொருள்களிற்பற்றற விட்டுத் துறந்து தன்னந் தனியே இருந்த மகான்களை அவர் தரிசித்ததுண்டு. நாகரிக மென்று யாம் கூறுவதை வெறுத்து நாடகன்று காடுபுகுந்து மானிடப் பிறவியின் பயனை அவ்விடத்துப் பெற விரும்பும் நல்லோரையும் அவர் கண்டதுண்டு. இத் தன்மையோர் யாவரையும் ஊக்கியது ஓர் ஆசையே. அஃதாவது உயிர்க்கு உறுதி நாடவேண்டுமென்னும் ஆசையே. அதஞற்றன் சகல கற்பனைகளையும் மாயக் காட்சிகளையும் அவர்கள் விட் டோடிப்போக

முயன்றார்கள். முதலியார் சிறுவரைப் போலப் போகங்களிற் புரள நினைத்தாரில்லை. கெட்ட வழியில் செல்வதென்றால் தடை தட்டிக்கொண் டோடுகின்ற தன்மை வாய்ந்தது மக்கள் மனம். முதலியாருக்கு அப்படி இல்லை. அவர் தாம் துறவியாக வேண்டுமென்று எண்ணினாரில்லை. சுவேச்சையாய்க் கவலை சிறிது மின்றிப் பிறர் தாம் செய்வதைக் காணாதவாறு வாழ விரும்பினார்; தாம் நினைத்ததை நினைத்தவாறே சொல்லவும் செய்யவும் வேண்டினார். அதனால், இப்படிப்பட்ட காரியத்தைச் செய்தார். தாம எடுத்த காரியத்தின் பயன் இன்னதா மென்றும், அதனை முடிக்குமாறு இன்னதா மென்றும் அறுதியிட்டா ரில்லை. தாம் பிறந்த பட்டிக்குப் போய்த் தம் தாய் தந்தையா குடியிருந்த குடிலைக் காணவேண்டு மென்பதே அவர் யோசனை. ஆனால், அதைக் காணவேண்டு மென்கிற அவா அவருக்கு அடியோ டில்லை. தாம் இலக்காகக் கொள்வது இன்னதெனத் துணிதற்கே அவர் அங்குச் செல்ல நினைத்தார். மிக்க வறுமை நிலையில் வாழ்வாருடைய சுக துக்கங்களுக்கும் மிகக செல்வ நிலையில் இறுமாந்திருப்பாருடைய ஆநந்தக் களிப்புக்கும் உள்ள மாறுபாட்டைத் தாமே பரீக்ஷிக்க வேண்டினார். இந்த அபிப்பிராயம் அவருக்கு ஒரு வருஷமாக உண்டு. அவருடைய வியவகாரங்கள் அவ்வபிப்பிராயத்திற்குத் தடையாயில்லை. குமுதவல்லியினிடம் ஒருகால் உண்மை இருக்குமோ வென்ற சந்தேகமே இதுவரையும் தடையா யிருந்தது. இப்போது அத்தடை நீங்கிற்று. அதனால் அவர் வெளிக் கிளம்பினார். ஆயினும் அவருடைய இலக்கு இன்னதென்று அவருக்குத் தெரியவில்லை. தமக்குப் பின் தமது செல்வம் நல்வழியில் உப-

யோகமாதற் கொத்தவகை ஒன்று, தானே எதிர்ப்படலா மென்று கொண்டார். காரிய நிர்வாக சபையாராவது ராஜாங்கத்தாராவது தமது செல்வத்தை உபயோகித்து லாகாதென்பது அவர் எண்ணம. அதுபற்றியே தமது பெயரைக் கூறினும் வியாபார சாலைகள் நடுங்கக் கூடிய மகைதசுவர்யவான் மரத்தடியில் இருந்து மதிமயங்கு கின்றார். பழைய முதலியார்க்கும் மரத்தடி முதலியார்க் கும் உள்ள வித்தியாசம் தொண்டைமானுக்கும் தோட் டிக்குமுள்ள தொத்திருந்தது.

"யான் புதுத்துறையி லிறங்கினேன். எனது தேட் டம் பிறர் தேட நினையாததொன்று. யான் புதுவகையான ஆண் மக்களையும் பெண் மக்களையும் தேடுகிறேன். யான் சத்தியவான்களையும் சத்தியவதிகளையும் நாடுகிறேன். காணினும் காணலாம்; காணும விருப்பினும் இருக்கலாம். அதைப் பற்றிச் சிந்தை யில்லை. இடவேறுபாடும் புதுக் காட்சியும் வேண்டுவன. அவற்றைப் போதிய வழியில் யான் பெறுவேன்" என்று தன்னிலைமையை நினைத்து நினைத்து உள்ளக் கிளர்ச்சியும் ஊக்கமும் பெற்றார். சோமர்குடியினின்றும் புறப்பட்டுத் தாம் பிறந்த பட்டிக் குப போவதற்காக இருப்புப் பாதை வண்டியேறிப் பட் டிக் கடுத்த இருப்புப்பாதைநிலை யொன்றி லிறங்கி அங்கு ஒரு சத்திரத்தில் இராத் தங்கினார். மறுநாள் அதிகாலையில் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கால் நடையாகச் செல்ல ஆரம்பித்தார். அவர் தாம் பிறந்த பட்டியாகிற கிராம வேற்பட்டிக்கும் இருப்புப்பாதையடிக்கும் பதின்மூன்று கல் தூரம் உண்டு. அவருக்கு நடைப் பழக்கமில்லை. ஒரு கல் நடந்தார். கால் உளைச்சல் உண்டாயிற்று; சிறிது

நேரம் ஓரிடத்தி லுட்காந்தார். இப்படியே கல்லூக்கு ஒரு முறை ஓரிடத்திற் சிறிதுபோது உட்காந்து உட்காந்து சென்று பட்டியை யடைந்தார். இடை வழியில் தாம் கையிற் கொண்டுவந்த அப்பங்க ளிரண்டுமூன்று தின்றார். அவை தவிர வேறு ஆகாரமில்லை. பட்டி போய்ச் சேர எட்டுமணி யாயிற்று. பிராமணன் வீடு தேடிப் போய்ச் சாப்பாடு போடுவார்களா என்று விசாரித்தார். ஒரு பிராமணன் வந்து, முடியாதென்றான். மிக்க பசியா யிருக்கிறது.ஏதேனும் உண்டி தந்தால் ஆறுஅணுக் கொடுப்பதாகக் கூறினார். அப்படியானால் சிறிதுநேரம் காத்திருக்க வேண்டுமென்றும் தாங்கள் யாவரும் உண்டபின் மிச்சத்தைத் தருவதாகவும் கூறினான் பிராமணன். முதலியார் உட்சட்டைப் பையில் நூறு ரூபாய்த் தாள்கள் சேமித்து வைத்திருந்தார். தமக்கு மிக்க ஆபத்து வந்தா லன்றி அவற்றைத் தொடுவதில்லை யென்று பிரதிக்ஞை செய்து கொண்டார். வெளிச்சட்டைப் பையில் ஐந்து அல்லது ஆறுரூபாய் நாணய மிருந்தன. அவை உள்ள மட்டும் செலவு செய்துவிட்டுப் பின் யாசிக்கத் தீர்மானித்தார். அந்த நாணயத்தினின்றும் ஆறணு எடுத்துப் பிராமணன் கையில் கொடுத்தார். பிராமணன் அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான். முதலியாருக்குப் பசி பொறுக்க முடியவில்லை. மணி பத்து ஆயிற்று. ஏனென்று கேட்பாரில்லை. பிராமணனை அழைக்கலா மென்றால் அவன் தாழிட்டுக்கொண்டு உள்ளே ஏதோ செய்கிறான். முதலியார் துடிக்கிறார். பத்தரை மணிக்குப் பிராமணன் கதவைப் படீ ரென்று திறந்து இடைகழியி லிருக்கும்படி சொல்லித் தையலிலை யொன்று விரித்து வாழைக்காய்ப் பொரிக்கறி,

கொத்தவரை வற்றல், ஊறுகாய் வைத்துச் சாதம் பரிமாறிச் சாம்பார் வார்த்தான். முதலியாருக்கு அஃது அந் நேரத்திற்கு அமிர்தமா யிருந்தது. பாதி யுண்டபின் மற்றைப் பாதிக்குப் பிராமணன் நீர்மோர் விட்டான். அதையும் உண்டு ஆனபின் முதலியார் அவ்வீட்டுத்திண்ணைமேல் படுத்துத் தம்மை மறந்து உறங்கினர். அன்றிரவு சுத்தமான காற்றைச் சுவாசித்தார். விடிய இரண்டு நாழிகைக்கு நித்திரை தெளிந்தெழுந்து காலைக் கடனைக் கழித்தார். உடம்பு இலேசாயும் சுறுசுறுப்பாயு மிருந்தது. உடம்பில் நெடுநாளா யிருந்த வலி நீங்கிற்று தங்களால் ஆகாததையும் ஆகுமென்று சொல்லி, நம்பு மியல்புடைய நோயாளிகளை ஏய்த்துக் கொள்ளை கொள்ளையாகப் பணம் பிடுங்கிடும் சில வைத்தியர்கள் காட்டலாகாத குணத்தைப் பிரகிருதி மாதா காட்டக் கண்டார். வியர்வை சொட்ட உடம்பு வருந்தி உழைத்து உண்பதைவிட்டு நாடோடிகளாகத் திரிந்து பிச்சை யெடுத் துண்ணும் சோம்பேறிகளின் வாழ்க்கையி லிருக்கும் சுகத்தை ஒருவாறு அநுபவித்தார். அவர்கள் சுவேச்சையை நினைத்து வியப்படைந்தார். விலை யுயர்ந்த உடுப்பணிந்திருக்கும் ஒருவனுக்கு வீதியில் நடந்து செல்லும் வாழ்க்கை, துன்பத்தைத் தருவதாகத் தோன்றும். ஆனல் நண்பர், பகைவர், நொதுமலராகிய முத்திறத்தாரால் நெருக்குண்டு இடியுண்டு குடும்பக் கவலைகளால் மொத்துண்டு நிற்கும் அவன் இதனைப் பார்க்கிலும் துன்பகரமான வாழ்க்கை யுடையவ னல்லனே? பிரகிருதி மாதாவோடு தனித்து வாழும் வாழ்க்கையைவிட மேலான தொன்றுமில்லை யென்று முதலியார் தெரிந்து கொண்டார்.

ஒருயிர் எங்கும் நிறைகின்ற முழுமுதற் கடவுளின் வியாபகத்திற் கதிரொளியும் கண்ணொளியும்போல வியாப்பியமா யுள தென்று தன் இயல்பானே அறியும் அறிவின் மிக்க தொன்றில்லை யென்று நினைத்தார். அவருடைய ஆத்மா ஒருவித சாந்தியை யடைந்தது; மனமாகிய பெருங்கடலின் எழும் நினைப்பென்னும் அலைகள் அடங்கின. காணக் கூடாத கடவுளின் கருணைத் திறத்தை நினைக்க எல்லாத் துயரங்களும், எல்லா மயக்கங்களும் ஒழிந்தன. அவர் தம் பழைய வாழ்க்கையை அடியோடு ஒழித்து விட்டுப் புது வாழ்க்கையை ஆரம்பித்தார். பழைய வாழ்க்கை கனுக்கண்டதுபோ லாயிற்று. பழைய வியவகாரங்களின் வாசனையும் அவர் மனத்திலில்லை. இப் புது வாழ்க்கையில் இதுகாறும் யாதொரு விசேஷ சம்பவமு மில்லை. இவரைக் கண்ணெடுத்துப் பார்ப்பாருமில்லை; காலை வந்தனம் மாலை வந்தனம் அளிப்பாரு மில்லை.

குடியானவனொருவன் ஒரு குதிரையை அரைமணி நேரம் பிடித்திருக்குமபடி கேட்டான். முதலியார் அது செய்ய, இரண்டணுத் தந்தான். விசேஷசம்பவம் ஒன்றும் இல்லையாயினும் புதுப்புது விஷயங்களைக் கண்டு ஆநந்தித்தார் முதலியார். உலகர் தம் வாழ்வின் சாரமான பாகத்தைப் பேராசையால் வியர்த்தமாக்குகின்றார்களென்கிற உண்மை அவருக்கு விளங்கிற்று.

“ தேகாரோக்யத்தையும், மனஸ்திருபதியையும், இழுக்கற்ற இன்பத்தையுமப பெறுதற்கு கைந்நிறையப பொன் வேண்டு மென்பதில்லை. பொருள் சிறிதிருப்பினும் அமையும். ஈசுவர சிருஷ்டியினகப்பட்ட பொருள்களால்

தீமைகள் விளைந்தில. நம்மை நாமே கெடுத்துக்கொள்கிறோ மென்னும் மறைபொருளைத் தெரிந்து கொண்டார். "'உண்பனநாழி யுடுப்பனவிரண்டே' என்றபடி உயிர்வாழ்க் கைக்கு நமக்கின்றியமையாப் பொருள்கள் எளிதிற் பெறலாகும் சிலவேயாக, நாம் ஆசைக்கொரு வரையறை கொள்வதில்லை."

ஆசைக்கொரளவில்லை அகிலமெல்லாங்கட்டி யாளினும் கடன்மீதிலே, ஆணைசெலவே நினைவர் அளகேச னிக-ராக அம்பொன்மிக வைத்தபேரும், நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர், நெடுநா ளிருந்த பேரும், நிலையாக வேபினும் காயகற் பந்தேடி நெஞ்சுபுண் ணுவரெல்-லாம், யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது முறங்குவது மாகமுடியும்" என்றமொழி இலேசு மொழியன்று; உண்மை யென்பதை அறிந்து அதை எப்போதும் மனத்தில் வைத்து ஒழுகுவா ரரியர். நாம் வாழு முறைப்-படி வாழ்வோமானால் நெடுங்காலம் வாழ்வதேயன்றி மிக்க இன்பத்தோடும் வாழலாம என்று நினைத்தார். பின் அப பிராமணன் வீட்டில் பழஞ்சோறுண்டு அடுத்த சோலையில் ஓர் ஆலமரத்தடியில் பசும்புற்றரைமேல் படுத்-துக்கொண்டார். பலவகைப் பறவைகள் விதம் விதமாகப் பாடிச் செவிக்கின்பஞ் செய்தன. அடுத்தோடின தொரு-சிற்றாற்றி னொலியும் செவிக் கமுதமாயிற்று. எங்கும் பச்சைப்பசேரென்றிருந்த காட்சி மனோரம்மியமாயிருந்-தது. சூழலின் அழகையும் ஆரவார மின்மையையும் கண்டு மகிழ்ச்சிகொண்டு அங்கிருந்து ஏதாவது படிக்கவேண்டு மென்று நினைத்தார். உடனே தமது சட்டைப்பையிலிருந்த திருக்குறள் மூல எட்டுப் பிரதியை எடுத்துத் திருப்பினார்.

'அன்புடைமை' என்னும் அதிகாரம் எதிர்ப்பட்டது. அவ்வதிகாரத்தில்,

> அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
> ரென்பு முரியர் பிறர்க்கு

என்னும் பாவினைப் பன்முறை படித்தார். இஃது என்ன பொருளமைதி யுடைத்து! 'அன்பு' என்னும் குணம் உண்டென நம்பி என்னைப்போல மோசம் போயினோர் எத்தனை பெயர்களோ! கவிகளிற் பலர் அன்பைப்பற்றி விரிவாக வருணித்துள்ளார்களே. அவர்கள் அந்நியர்களோடு அளவளாவி இன்புற்றிருப்பார்களா? என்னளவில் போலி யன்பைத் தவிர உழுவ லன்பென்பது உளதாகக் காணவில்லை. குமுதவல்லியின் கொள்கையே நேரிதானதென்று நினைக்கிறேன். சிறுவர்களும் சிறுமிகளும் காதல் கொண்டிருப்பதாகப் பேசுகிறார்கள், விவாகமும் செய்து கொள்ளுகிறார்கள். விவாகமானவுடன் அதுவரை அவர்களுக்குத் தோன்றிநடத்திய கண் மழுங்கும் ஒளி திடீரெனமாய்கிறது. நூற்றிலொன்றும் இதற்கு மாறாகவில்லை. எனக்கு விவாகம் நடந்து யான் என்ன சுகம் கண்டேன்? விபரீதமாய் முடிந்தது எனக்கு மக்கள் பிறந்தபோது யான் மகிழ்ச்சி பெற்றேன்; பல எண்ணமும் கொண்டேன். என் மக்கள் என்னை நேசிப்பார்களென நினைத்திருந்தேன். சிறுபிள்ளைகளாயிருந்தமட்டில் அன்புடையார் போலத் தோன்றினார்கள். யௌவனபருவம் அடைந்தபோது அவர்களால் உண்டான துக்கத்திற்கு அளவில்லை. அவர்களுக்கு அன்பென்பது இலேசமுமில்லை. அவர்கள் கன்னெஞ்சிலும் அன்பு இடம் பெறுமோ? கொள்வதேயன்றிக் கொடுப்பது கூடாது என்பது அவர்கள் கோட்பாடு. அவர்கள் தாயின்

இரட்டைச் சாயைகளொத்திருந்தார்கள். கரவற்ற காதலென்பது இப்பூமண்டலத்தின்கண் இல்லையோ ?

நிலத்துமா னிடர்க்கே
யுரிய ராகி யுருதமுன் பெரிது
முற்றுழி நீங்குவ தொன்றுமாம் வேட்கை
யென்னு மதனுக் கென்றும்வே ருகி
மனத்தொடு மனத்தினை மன்றப் பிணிக்குங்
கட்புல னுகாக் கனிவெனுங் கயிறு
கெண்டா தின்றொடர் மேதகு பட்டு
முடிசசென வொருகவி முன்பணி பெறவே
கழறிய கழிபெருங் காதன்மிக்கொத்த
கற்பினும் பொற்பினுங் கன்மகள் போன்மக
ளென்னலாகு மில்லக் கிழத்தியொ
டருநலந் துய்க்கு மாண்டகை யொர்மிகச்
சிலர்.

என்கிறார் ஒருகவி. அவர் அன்பிருக்க எங்கேனும் நேரிற் கண்டாரோ அல்லது இருபபதாகக் கனக் கண்டாரோ ? என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி இளைத்து முகம்வாடி மனஞ்சோர்ந்து சிறிது உறங்கின தருணத்தில் குட்டையாய்க் குரூபியாய் ஒராள் ஒரு காவுதடியைத் தோளில் வைத்துக்கொண்டு அவ்வழியே ஓடிவந்தான். இவர் உறங்கின மரத்தடியண்டை வந்ததும் சிறிது நேரம் நின்று நோக்கிக் காவுதடியை இறக்கி வைத்தான். காவுதடி இருபுறமுமுள்ள கூடைகளில் பச்சிலை மருந்துகள் நிரம்பியிருந்தன. அவர் அருகிற் சென்று பக்கத்திலிருந்த புத்தகத்தை யெடுத்துப் பிரித்தான். ஏடுகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை. "பாட்டு, கண்ணுயில்லையே. ஒண்ணுக்கும் ஒதவாது" என்று

சொல்லி எறிந்துவிட்டான். "ஆர் எங்கிறேன். எளுந்திரி எங்கிறேன். எங்கே இர்ந்து வர்ரே எங்கிறேன்" என்றான். முதலியார் கண்விழித்துத் தலையெடுத்துப் பார்த்து "வெளியூர், ஐயா!" என்றார்.

"அப்படியென்ன, இந்த வூர்த் தெருவுங்க ஒனக்கு தெரியாது? எனக்கு சநது பொந்தெல்லாம் தெரியும். வர்ஷம் வர்ஷமா இந்த தெருவுங்கள்ளே திரிஞ்சி வர்ரேன். உன்னைப் போலே தரித்ரம் பிடிச்சவனைப் பார்க்கலே, ரண்டுகல்லு தாண்டி ஒரு சின்னவூர் இருக்குது. அந்த வூர்லே ஒரு ஊடு இருக்குது. அதுலே இருக்கிறவங்க எல்லா நல்லவங்க. வர்ரையா. ஒனக்கு என்ன? வேலை செய்ய முடியலேயோ?" என்றான் ஊரான்.

"ஆம், ஐயா, முடியவில்லை. கிழப்பருவமன்றோ?" என்றார் முதலியார்.

"ஆமா, உன்னைப் பாத்தால் சாவுறப் போல தான் இருக்கிறே. கிழவனுய் உட்டால் என்ன இருக்குது. இந்த நாள்ளே ஆர் லச்சியம பண்றான். எனக்கு நாப்பது வயதாகுது. கை ஒழைச்சி சாப்பிடுறேன். எந் தலை எளுத்து அப்படி இருக்குது" என்றான் ஊரான்.

முதலியார் அவன் இறக்கி வைத்திருந்த கூடைகளைப் பார்த்து, "அந்தக் கூடைகளி லென்ன?" என்றார்.

"என்ன இருக்குது என்ன கேக்கிறை? எல்லாம் அதுலே இருக்குது. வைத்தியனுங்களுக்கு வேண்டிய தெல்லா மிருக்குது. ரசமில்லே, கெந்தகமில்லே, பாஷாண மில்லே. மைத்த தெல்லா மிருக்குது. எல்லா மூலிகையும் பச்செலையு மிருக்குது. நானு போகாத எடமில்லே. காலமையும சாய்ங்காலமும் வர்ஷ முந்நூத்தறுவத்தைஞ்சி

நாளும் பச்செலே கொண்டாரப் போவேன். இருளனே அறியாத பாம்பில்லே" என்று இறுமாப்போடு கூறினன் ஊரான்.

"நீ தானே? உன் பெயர் தான் இருளனே?" என்றார் முதலியார்.

"ஆமா, நாந்தா. என்னே அறியாதவங்க இல்லே. உம் பேரென்ன?" என்றான் ஊரான்.

"என் பெயர் முருகன்" என்றார் முதலியார்.

"நீ இந்த காலத்தி மன்ஷனு யில்லே, நீக்குபோக்கு தெரியலே. ரொம்ப களேச்சிப்போ யிருக்கிறெ. எங்கே போறெ?" என்றான் ஊரான்.

"எனக்கு கிழக்கு மேற்குத் தெரியவில்லே. இந்தப் பிரதேசத்திற்கு யான் வந்ததில்லே. நேற்றிரவு ஒரு திண்ணேயில் படுத்துறங்கினேன். இன்றிரவுக்கு உறங்க ஒரு குடிலேனும அகப்படுமோ வென்று பார்க்கிறேன்" என்றார் முதலியார்.

"உன்னண்டே ராசா பம்மை யிருக்குதா?" என்றான் ஊரான்.

முதலியாருக்கு ஒன்றுந் தோன்றவில்லே. சிறிதுநேரம் கழித்து ஒருகால் நாணயத்தைத் தான் இப்படிச் சொன்னனே வென்று சந்தேகித்து ஒரு நாணயத்தை யெடுத்து, 'இதுவா?' என்று கேட்டார்.

அவன், 'ஆம்' என்றான் "அபபடியானல் இன்னும் சில பொம்மைகளு முண்டு. அவற்றிற்கு இராத்தங்க விடுதி கிடைக்குமோ?" என்றார் முதலியார்.

"ஏங்கிடைக்காது? நா னழைச்சிக்கினு போறேன் ஒரு எடத்துக்கு. அங்கே என் பேச்சிக்கி என்னு மா-

யாதை நடக்குது பார். அவங்கள் நல்ல மன்ஷாள் ; தங்க-மானவங்க. நெல்ல சாப்பாடுபோடுவாங்க ; நெல்ல ஒப-சரணை செய்வாங்க. அது ஒரு சத்ரம். ஒரு கெழுவி வைச்சி இருக்குறு" என்று சொல்லித் தன் காவுதடியை எடுத்துத் தோளில் வைத்து வழிநடந்து, "ஒனக்குப் பெருமையா யில்லையா ?" என்றுன் ஊரான்

முதலியார், "பெருமையா ? நாஞ ? எனக்கென்ன பெருமை வந்தது ? என்னைப்போலப் பாவிக் கிழவ ஞெரு-வன் வேறு இந்த வுலகிலிரான். என் வார்த்தையை முற்றும் நம்பலாம். என்னைப பற்றிச் சிறிது கவலை கொள்ளும் பிராணி ஒன்றில்லை. வாழ்வோ அல்லது தாழ்வோ என் மட்டிலே தான். செய்து பிழைக்கவோ எனக்கு வேலை அகப்படவில்லை. நிராதரவாய் நிற்கிறேன். இந்த நிலையி லுள்ள எனக்கென்ன பெருமை ?" என்றுர். "உன் ஆயுசில் பெருமையாயிருக்கல்லே எண்ணு இப்போ நீ பெருமை யாயிருக்கலாம். இந்த வழியிலே இருளன் நடந்தாஞ ஞக்கா, அறியாதவங்க இல்லே. எனக்கு உன் மூஞ்சியைப் பாத்தால் ஆசையா யிருக்குது. அது என்னமோ தெரியலே. என்னுலே முடிஞ்சதையல்லாம் உனக்குச் செய்வேன்" என்றுன் இருளன்.

"வந்தனம், ஐயா !" என்றுர் முதலியார். இருளன், முதலியார் பக்கத்தில் நடந்து வருவதைக் கவனித்தான். அவர் துவண்டு துவண்டு போகிறுர் ; தன்னேடு நடக்க முடியவில்லை.

"கூட வா, நீ தள்ளாதவன்தான். என்னுலும் சம-யம் வந்தாக்கா ஓடித்தான் வரொணும். ஓடோடி நடந்தாலும் ஒரு மணி புடிக்கும் ; வெளிச்சம் வாங்குது ;

பனி பெய்யுது. அடியைக் கொஞ்சம் இழுத்துவை. நான்-கை குடுக்குறேன்'' என்றான்.

முதலியாருக்கு இந்த வார்த்தைகளை ஓர் அநாகரிகன் சொல்லக் கேட்பது வெட்கமா யிருந்தது. தாம் தம்மை அவ்வளவு மூப்பினராக நினைத்தா ரில்லை. ஆயினும், நடை அவருக்குப் பழக்க மில்லாமையால், காலோய்ந்து போ-யின. என் செய்வது? இருளன் பின்னே நடக்கின்றார். சிறிது தூரம் சென்றதும் முதலியார் நடக்க முடியாமல் பின் தங்கினார். பார்த்தான் இருளன். மனத்தில் இரக்க மிக்கது. "என்னண்டே ஒரு மருந்து இருக்குது. தண்ணி-யா இருக்கும். வாயிக்கு நண்ணா யிருக்கும், ஒணுமா? குடிச்சதும் நரம்புங்க எளுந்து உக்காரும். எளப்புத் தெரியாது'' என்றான். முதலியார் அவன் முகக் குறிப்பை உற்று நோக்கினார். அவன் உள்ளத்தில் கருணை ததும்-புதல் கரதலா மலகமென விளங்கிற்று. அவன் வார்த்தை-யில் முழு நம்பிக்கை வைத்தார். "ஐயா, தாரும். இப்-பொழுதே குடிக்கின்றேன்'' என்றார். இருளன் ஒரு சிறிய புட்டிலைத் தந்தான். முதலியார் எள்ளளவுஞ் சந்-தேகங் கொள்ளாது, உடனே திறந்து அந்த மருந்தைக் குடித்தார். ஐந்து நிமிடத்திற் கெல்லாம் முதலியாருக்கு ஒரு விதத் தெளிவு பிறந்தது; ஊக்கம் உண்டாயிற்று. சிறுபையனுக் கிருக்கும் வலிமை பெற்றார். பத்துக்காவத-மும் ஒரு நொடியில் நடக்கலாமென்று நினைத்தார். "இந்த மருந்துக்கு என்ன செலவாகிறது?'' என்று வினவினார். அதற்கு இருளன், "ஒரு காசி இல்லே. சாமி இப்படிப் பட்ட அருமையா யிருக்கிற சரக்கை எல்லாரும் எளிதிலே பறும்படி வைச்சிருக்கிறார். மனுஷனுங்கோ அதை

தெரிஞ்சி வாங்கி அவருக்கு நன்றியுள்ளவங்களாக நடக்க அறியலே'' என்ருன்.

"ஐயா! நீர் என் விஷயத்தில் விசேஷ கருணை யுடையீர். எனக்கு அஃது அதிசயமா யிருக்கிறது'' என்ருர் முதலியார்.

"என்ன அதிசயம்? உன்னைப் பாத்தால் நரைச்சித் திரைச்சி யிருந்தாலும் நன்னு வாழ்ந்தவனைப் போல தோணுது. பட்டாளத்திலே பெரிய வேலையி லிருந்தையா; பெரிய கடை வைத்திருந்தையா?'' என்ருன் இருளன்.

"என் ஐயா! யான் கள்வனு யிருக்கலாகாதா அல்லது தப்பி யோடிவந்த குற்றவாளியா யிருக்கலாகாதா? என்னை இவர்களில் ஒருவனுக என் கொள்ளவில்லை? என்னிடம் மிக்க பக்ஷம் வைத்தீர்'' என்ருர் முதலியார்.

"என்ன பக்ஷம்! நெஞ்சிலே பட்டதைச் சொன்னே. ஒனக்கு மருந்து குடுத்தேன். அப்படித்தானென் பாட்டனுர் சொல்ருர். ஏழைங்களுக்கு தர்மத்துக்கு மருந்து குடுக்கச் சொல்ருர். அவர் எளுதின, 'ஆயுர் விர்த்தி மார்க்கம்' என்கிற செவடியில் சொல்ருர். அந்தச் செவடி நல்ல செவடி. அந்தச் செவடியை நான் ஒருத்தருக்குங் காட்டினதில்லே. காட்டினலும் ஒண்ணுந் தெரியாது. எங்கப்பன் எனக்கு அதைப் படிச்சிக் குடுத்தார். எங்கப் பாட்டனுருக்கு சாகும்போது தொண்ணூத் தெட்டு வயசு'' என்ருன் இருளன்.

"உன் பாட்டனுர் மூப்பு வாராதிருக்க ஏதாவது மருந்து எழுதி வைத்திருக்கிருரா?'' என்ருர் முதலியார்.

"பேசா எழுதிவைச் சிருக்கிருர். அது ஒரு மூலிகை. அதுக்குப் பேர் அமுதமூலி'' எண்ணு எழுதிவைச் சிருக்-

கிறார். நானும் தேடித்தேடிப் பாக்கிறேன். ஆப்பிடலே. 'சதமூலி' என்னொரு மூலிகையுமுண்டு. அதுவும் அந்த செவடியில் இருக்குது. அத்தை இருவது நாளைக்கு எழுந்ததும் நாலுநாலு எடுத்துச் சாப்பிட்டால் செரியா நூறு வர்சம் இருப்பாங்கோ. அத்தையுந் தான் தேடறேன். ஆப்பிடலே'' என்றான் இருளன்.

''அந்த இரண்டு மூலிகைகளில் ஒன்று அகப்படுமானால் நீ கோடீசுவரனாவாய். நீயே அஃது இன்ன மூலிகை யென்று பிறரறியாதபடி திராவகம் இறக்கிப் பிரியமான பெயர் வைத்து விற்கலாம். அப்போது சாலையில் நடக்க வேணும் பச்சிலே சேர்க்கவேணும் வேண்டா. போகத்திற் கிடந்து புரளலாம்'' என்றார் முதலியார்.

''நானா! அப்பா, அப்பா, எனக்கு வாணாம். ராஜாங்களுக்கு சொகமேது? அவங்க செய்கிற தப்புக்கு எவனாவது ஒரு ஏழை ஆப்பிட்டுக்குறான். எரக்கமில்லாதே அவனை வாட்றாங்க. கோடீசுவரனுங்களுக்கும் அந்த கெதிதான். குடிக்கக் கஞ்சியில்லாதே பரிதவிக்கிறவன் எதிரிலே, வடை பாயசத்தோட வயிறு கிழியச் சாப்புட்டுத் தொந்தி தடவிக்கினு பேசறாங்க. ஒரு வைத்தியனிருக்கிறான், என்னாண்டே காலணாவுக்கு பச்செலே வாங்கித் திராவகம இறக்கிப் புட்டிங்களிலே ஊததி ஒரு ரூபாய்க்கு விக்கிறான். நான் குடுத்து வைச்சது இது, அவன் குடுத்துவைச்சது அது'' என்றான் இருளன்.

முதலியாருககு அவன் வார்த்தையைக் கேட்க விருப்பும் வியப்பும் உண்டாயின. இன்னும் பேசுவானா வென்றிருந்தது. நாகரிகமும் கல்வியும் சிறிதுமற்ற

மூடனுக்குத் தமக்கிராத சிந்தைநிறை விருத்தலைக் கண்டு மெச்சினார்.

மறுபடி, “கோடீசுவரனுங்களுக்கு புத்தி யில்லே. வேண்டியதெல்லாம் வாங்கிவிடறாங்க. அதுக்குமேலே வாங்க ஒண்ணுமில்லை. அப்புறம் அவங்க உயிரோடிருந்தும் பயனில்லே. மோடார் வண்டியிலே ஏறி ஊரெல்லாம் ரவாணு வர்றாங்க. ஆனால் ஒரு ஊரையும் அவங்க பாக்குற தில்லே. பக்ஷிங்க பாடுவதை அவங்க கேட்டதில்லே. ஒரு பூ வாசனையும் அவங்களுக்குத் தெரியாது. ஆனா மோட்டார் வண்டி பறக்கும்போது கிளம்புற மண்ணும் அந்த வண்டிக்கு ஊத்திற எண்ணெ நெடியுந்தான் அவங்க கண்டது. போன வர்சம் நான் ஒரு தெருவிலே போய்க்குனு இருக்கிறேன். அப்போ ஒரு மோட்டார் வண்டி கா கா என்று கத்திக்குனு வந்துது. என்னமோ கெட்டுப்போச்சி. திடீரென நின்னுவிட்டது. ஓர் த்தன் கதவை துறந்து வெளியிலே குதிச்சான். அப்போ குயில் கூவுது. அது என்ன கூவுதே என்ணு கேட்டான். “ஐயா! அது குயில்” என்ணு சொன்னேன். “இதுதானு குயில்? நான் இதுவரையும் பார்த்ததில்லே” என்ணு சொன்னான். பட்டினத்தானுக்குக் கண்ணுமில்லே, காதுமிலலே. வீண் ஆடம்பரமும் விசாரமும் உலகத்திலே ரம்ப இருக்குது. நினைச்சிக்குனு சிரிப்பு வருது. வரவரத்தான் இப்படி ஆச்சி. எங்க பாட்டனார் காலத்திலே இப்படியில்லே. அந்தக்காலத்திலே வைத்யருங்களுக்குப் புழைப்பில்லே, இப்போ நல்ல அடி அவங்களுக்கு. பணக்காரனுங்க பணத்தை என்னு கொட்றாங்க அவங்களுக்கு. அப்பப்பா! எனக்குப் பணம் வாணும். நான் இப்படியே காடுமேடெல்லாந் திரிஞ்சி

திரிஞ்சி நாள் வந்தா ஒரு மரத்துங்கீழே கவலை யில்லாதே சாவேன். பணம் வந்தால், தொகை மிஞ்சிப்பூடும். கட்டை சொகம் தேடும். உடம்பு வளையாது. பச்சைத்தண்ணி யிலே கைகழுவினாலும் கால்கழுவினாலும் தலைநோவு ஜுரம் வந்துடும். கடைசீலே சாவுக்கு நடுங்கும்படி வரும். அப்பப்பா! எனக்குப் பணம் வேண்டாம். பொம்மனாட்டிங் களுக்கு நோவு வந்தா நல்லா தாங்குறாங்க. அதை நினைச்சிக்குனா, ஆச்சரியமாயிருக்குது" என்றான் இருளன்.

"ஆனாலும், அவர்கள் சில வேளைகளில் தங்கள் வரையும் பார்த்துக் கொள்கிறார்கள். தன்னயங்கருதல் என்கிற குணம் அவர்களிடம் தவறாது இருக்கிறது" என்றார் முதலியார்.

"பொம்மனாட்டிங்களண்டையா அந்தக் குணம் இருக்குது என்கிறாய்? நீ புறந்த ஊர் எது? நீ எந்தப் பொம்மனாட்டியை பாத்தை? பட்டினத்துப் பொம்மனாட்டியையா? நாட்டுப்புறத்துப் பொம்மனாட்டியையா? நாட்டுப்புறத்துப் பொமமனாட்டிகள் ராவும் பகலும் ஒழைக்கிறாங்க. ஆம்படி யானைப் பத்தியோ அல்லது கொளந்தை களைப்பத்தியோ அவங்களுக்குக் கவலை ஓயாது இருந்த படியே இருக்குது. தங்கவரைக்கும் பாத்துக்கொள்ள அவங்களுக்கு நேரமேது? கோழி கூவ எழுந்திரிக்கிறாங்க. ஊட்டைக் கழுவுறாங்க, மெழுவுறாங்க, கொளந்தை குட்டிங் களுக்குத் தலைக்கு ஊத்துறாங்க, கடைக்குப் போறாங்க, அடுப்பு மூட்றாங்க, சமைக்கிறாங்க, ஆம்படியான் எங்கே ஜாஸ்தி குடிச்சுட்டு வர்றானோ எண்ணு பயந்துகுனு இருக்குறாங்க. வேறே எத்தைப் பத்தியாவது நினைக்க நேரமேது?" என்றான் இருளன்.

"ஆம், நீ சொல்வது நியாயந்தான். என்னைக் காட்டிலும உனக்குப் பெண்களைப்பற்றிச் செவ்வையாய்த் தெரிகிறது. உன்னால் ஒரு விஷயம் நான் கற்றுக்கொள்ளு-கிறேன். கல்விக்குக் கரையேது ? எத்தனை வருஷம் கற்றாலும் அநேக விஷயங்கள் இன்னும் கற்க நிற்கும்" என்றார் முதலியார்.

"ஒவ்வொர்த்தருக்கு அநுபவம் ஒவ்வொரு விதமா-யிருக்கும். அதோ, வெளக்குத் தெரியுதே, அதுதான் சத்திரம்" என்றான் இருளன்.

"என்னைச் சத்திராதிகாரி கொள்வாரோ கொள்-ளாரோ? " என்றார் முதலியார்.

"நிச்சியமாக் கொள்ளுவா. எனக்கு வேண்டிய-வங்களுக்குச் சாப்பாடும் விடுதியும் இல்லே எண்ணு சொல்லமாட்டா."

"முன்னே கூறியபடி நீர் என் விஷயத்தில் மிகவும் பக்ஷமாயிருக்கிறீர் அதற்குக் காரணம் எனக்குத் தோன்றவில்லை" என்றார் முதலியார்.

"அதுக்கு ஒரு கதையா காரணமா ? சகாயம் வேண்டியிருந்தது எண்ணு தெரிஞ்சால் சகாயம் செய்ய வேண்டியதுதானே. யாராயிருந்தா என்ன? பிறருக்குச் சகாயம் செய்யாதவன் மகா பாபியாயிருக்கணும். நீ தள்ளாத கிழவன். உன் மூஞ்சியைப் பாத்தால் உனக்கு ஏதோ வருத்தம் இருக்கிறதா தெரியுது. அது போதாதா?" என்றான் இருளன்.

இப்படி வார்த்தையாடிக்கொண்டே இருவரும் சத்திரம் போய்ச் சேர்ந்தார்கள். சத்திரத்தின் கதவு

திறந்திருந்தது. ஆண்பிள்ளைகள் சத்தம் கேட்டதனால் வழக்கமாய் வந்து சாப்பிடுகிறவர்கள் இருந்தார்களெனத் தெரிந்தது. இருளன் முதலியாரை அழைத்துக்கொண்டு உள்ளே சரேலென்று புகுந்தான். அங்கே ஒருத்தி தையல்வேலை செய்து கொண்டிருந்தாள். அவளருகிற் சென்று, "அம்மா ! தங்க, விடுதி யிருக்கிறதா?" என்றான். அவள் "அது வருகிற ஆளைப் பார்த்துத் தான் சொல்ல முடியும்." என்றாள். "ஆம், அது மெய்தான் உனக்கு நான் தெரியாதா?" என்றான் இருளன். "நீ தெரியும், கூடவந்திருக்கிற ஆள் தெரியாதே" என்றாள் அவள்.

"அவர் எனக்குச் சிநேகிதர். இங்கே அவருக்கு வேலை இல்லை. தள்ளாதவராய்ப் பூட்டார். நீ கண்டவனை எல்லாம் சேர்க்கிறதில்லை எண்ணு எனக்குத் தெரியாதா?" என்றான் இருளன்.

அப்போது அவள் முதலியாரை நோக்கி "எந்த ஊர், ஐயா!" என்றாள்.

"நான் வண்ணை" என்றார் முதலியார். "நடந்துதான் வருகிறீர்களோ?" என்றாள் அவள்.

"ஆம்" என்றார் முதலியார்.

"பசியாயிருக்கிறீங்களோ?" என்றாள் அவள்.

முதலியார் விடை பகரவில்லை.

"பசியாக இருக்கிறாப் போல் தோணுது. அந்த அறைக்குள் போய் இருங்க. சாப்பாடு பரிமாறுவாங்க. ஒரு சாப்பாட்டுக்கு இரண்டரை அணு" என்றாள்.

இருளன் முதலியாரைக் குறித்த அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு அநேக ஆண்பிள்ளைகள் இருந்-

னார்கள். இருளன், "நான் சொல்லலையா? அவள் ரம்ப இரக்கமுள்ளவ" என்றான். தன் கூடையை இறக்கிவைத்து விட்டு ஓரிடத்தில் இருளன் உட்கார்ந்தான். அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்துச், "சொகமா? எல்லாம் சொக-மா?" என்றான். சிலர் அதற்கு மறுமொழி கூறினார்கள். பிறகு எல்லோரும் தத்தமக்குத் தோன்றியபடியெல்லாம விளையாட்டாகப் பேச ஆரம்பித்தார்கள். அந்தச் சத்தி-ரத்தில் ஜனங்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். ஆயினும் கூட்டம் குறையவில்லை. அங்கிருந்தவர்களில் மூவர் வெளிச் சென்றாரில்லை. அவர்கள் இருளனோடு ஓயாது வார்த்தையாடிக்கொண் டிருந்தார்கள். இடை-யிடையே பரிகாசமான வார்த்தைகளையும சொன்னார்-கள். அவர்கள் வார்த்தைகளை முதலியார் நன்றாகக் கவனித்தார்; அதனல் அவர்கள் முரடர்கள் என்றும் பிழலாண்டிகளென்றும் தெரிந்துகொண்டார். தாம் அவர்-கள் சம்பாஷணத்தைக் கவனியாததுபோல மௌனம் சாதித்திருந்தார். அம் மூவருள் வீரப்பிள்ளை என்பவன் முதலியாரை நோக்கி, "நீங்க ஆர் ஐயா? எங்கிருந்து வார்றிங்கோ? உங்களுக்கு என்ன வேலை?" என்றான்.

"எனக்கு ஒருவேலையும் இப்போது இல்லை. சில வருஷங்களுக்கு முன் தேகதிடமிருந்தபோது நான் கணக்கப் பிள்ளையா யிருந்தேன்" என்றார் முதலியார்.

"கணக்கப் புள்ளையா! படிக்குறது, எழுதுறது, கணக்குப் போட்றது, காயிதம் எடுத்துக்குனு ஓடுறது தானே?" என்றான் வீரப்பிள்ளை.

"ஆம், அவையே" என்றார் முதலியார்.

"உங்களைத் தள்ளிவிட்டாங்களோ?"

"என்னால் முடியவில்லை" என்றார் முதலியார்.

"உங்க வயசு என்ன?"

"எழுபது ஆகிறது" என்றார் முதலியார்.

எல்லோரும் சிறிதுநேரம் ஒன்றும் பேசாது ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள். இவ்வுலகத்தின்கண் வாழும் உயிர்களை எல்லாம் உறவாக்குகின்ற ஓர் இயற்கை யுணர்ச்சி அவருடைய விருத்த தசையையும் பலஹீன ஸ்திதியையும் கண்டபொழுது அவர்கள் உள்ளத்தை உருக்கிற்று. இழிசனர்களும், முரட ரென்று இகழப்படு வோரும் வயது முதிர்ந்தவர்களைக் கண்டால், மரியாதை-யும் பக்ஷமும் உடையவ ராகிறார்கள். போகத்திற் கிடந்து புரள்கிற சுயகாரியப் புலிகள் கூட்ட மொன்றிலேயே தொண்டுகிழவர்களுக்கு மரியாதை எள்ளளவு மில்லை. அக்கூட்டத்தின் நயகுணங்கள் மிதமிஞ்சிய போகத்தால் கூர்மழுங்குகின்றன.

இவர்கள் இப்படி யிருக்கையில், ஒருவன் சத்திரத்-திற்குள் வந்தான். அவனைக் கண்டவுடன் எல்லாரும், "வாங்க, வாங்க" என்று இடம் பண்ணினார்கள். அவன் இருளனைக் கண்டதும், "அண்ணன், எப்படி இருக்கிறீங்க?" என்றான்.

அதற்கு இருளன், "கருப்பண்ணா! நன்னாதான் இருக்குறேன். உன்னைப் பாத்தனே. அதுவே போதும்" என்றான்.

முதலியார் வந்தவனை நோக்கினார். அவன் ஆளு மேளமா யிருக்கிறான்; இபபடிப்பட்ட கட்டழகனை முதலி-யார் இதுவரையும் கண்டதில்லை.

அவன் உடுப்பு விகாரமாயிருந்தது. முதலியாருக்கு இஃது அத்தியாச்சரியமா யிருந்தது.

மறுபடி இருளன், "நீ எங்கிருந்து வர்றே?" என்றான்.

"நான் கிரணவேற்பட்டி மலைக்குகையி லிருந்து வந்தேன். எனக் கென்ன? வேடிக்கையுங் கூத்துந்தான். அகண்டைசுவர்யத்திலே புறந்தவன் போலத்தான் இருக்குறேன். எல்லாம் என் இஷ்டந்தான். நான் வைசசா குடுமெ சிறைச்சா மொட்டெ" என்றான் கருப்பண்ணன். உடனே சிலர் ஏவலின்மேல் ஒருவையல் ஒரு சாராயப் புட்டில் எடுத்தோடிவந்து ஒரு பாத்திரத்தில் நிறைய ஊற்றிக் கருப்பண்ணனுக்குக் கொடுத்தான். அவனும் அதை வாங்கிக் குடித்தான். அஃதானவுடன் பழையபடி, இருளன், "ஏதாவது புதுச் சமாசாரம் உண்டா? உன் சாலே வேட்டை எபபடி இருக்குது?" என்றான்.

கருபபண்ணன் அந்த அறையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

"இன்னைக்கி, இங்கே அன்னிய ரொருத்தர் இருக்காரே. அவர் நம்ம இனத்தாரா யில்லே. நம் சங்கதியெல்லாம் அவருக்குத் தெரியா தெண்ணு நினைக்கிறேன். அவர் என்ன, நமக்கு வேண்டியவரா?" என்று வினவினான்.

"நமக்கு வேண்டியவர்தான். கள்ள னெல்லாம் உன்னண்டை ஒண்ணும் செய்யமுடியாது. உன் வித்தை யெல்லாம இவரண்டே காட்டாதே. பாவம்! இவர் பழுத்த பழம். அவருக்குப் பந்துக்களுமில்லே; வேண்டியவங்களுமில்லே. இவர் பேர் முருவன். தள்ளாத காலத்திலே

உத்யோகத்தி'லிருந்து தள்ளிவிட்டாங்க" என்றான் இருளன்.

கருப்பண்ணன் இவற்றையெல்லாம் சாவதானமாய்க் கேட்டிருந்து, முதலியார் முகத்தை உருவ நோக்கினான். அவனுடைய கம்பீரமான பார்வையைக் கண்ட முதலியாருக்குச் சிறிதுபோது ஒன்றுந் தோன்றவில்லை.

"பழுத்த பழமா! ஏழையா! ஒலகத்திலே இருக்கவே கூடாது. இன்னம் உயிரோடிருக்கிறது உங்களுக்கு வெறுப்பா யில்லையா?" என்றான் கருப்பண்ணன்.

முதலியார், "ஏறக்குறைய அப்படித்தான் இருக்கிறது" என்றார்.

"உங்களண்டை ரம்ப பொறுமை இருக்குதுங்க. ஏழையா யிருக்குறதே கஷ்டம்; கிழவனா யிருக்கிறது அதைவிடக் கஷ்டம. உங்களைப் போலே இவ்வளவு கிழவனானா, நான் குளத்திலே குட்டையிலே விழுந்து சாவேன் உயிரோடிருந்தென்ன? உடம்பிலே வலிவுமில்லே. வேண்டியவங்களு மில்லே" என்றான் கருப்பண்ணன்.

அப்போது ஒருவன், "ஆமாம், உனக்கு வேண்டியவங்களைப்பத்தித்தான் எந்நேரம் பேச்சு" என்றான்.

அதற்குக் கருப்பண்ணன், "எனக்கு வேண்டியவங்க வேறே ஒருவருமில்லே. என் புள்ளைதான் எனக்கு வேண்டியவன். அவனுக்காகத் தான் நான் உயிரோடிருக்குறேன்" என்றான்.

இருளன்? "கருப்பண்ணா! உன் புள்ளை எப்படி இருக்குறான. சொகமா இருக்குறானா?" என்று விசாரித்தான்.

"அண்ணு! சொகமா இருக்கிறன். இந்தப்பக்கத்திலே அவனைப்போல, பலசாலிப் பயலே நீ பார்த்திருக்கவே மாட்டெ" என்றான் கருப்பண்ணன்.

"அவனைப் பள்ளிக்கூடம் அனுப்பலையா?" என்றான் இருளன்.

"அவனோடு என்னைத்தவிர வேறெவனுக்கும் சம்பந்தங் கூடாது. அவன் காட்டிலே பூப்போல இருக்கணும். ஆத்தாளைப்போல இருக்கணும். அந்தச் சமாதியின் மேல் முளைச்சிருக்கும் குடமல்லிபோல இருக்கணும்" என்றான் கருப்பண்ணன். அவன் மனைவி ஞாபகம் வந்துவிட்டது. ஆருத்துயரம் விளைந்தது. "பயல் சங்கதியை எடுக்காதேயுங்க, அவன் நண்ணுத்தான் இருக்கிறன். பொம்மனாட்டிங்க அவனைப்பாத்துக்குறங்க" என்றான்.

இப்படி இவர்கள் சொல்லாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் தம்பிரானொருவர் அச்சதிரத்திற்கு வந்தார். அவர் வருவதைக் கண்டு யாவரும் எழுந்து மரியாதை செய்தார்கள். வீரப்பிள்ளையைப் பார்த்து, "அப்பன்! நீ சிறைச்சாலையி லிருக்கிறயென்று நினைத்தேன். இன்னும் அங்குப் போகவில்லையா?" என்றார் தம்பிரான்.

அதற்கவன் "உங்க புண்யத்திலே இன்னம் போகலே, சாமி!" என்றான்.

தம்பிரான் அவனை விட்டு மற்றொருவனைப் பார்த்து "மாயாண்டியா அவன்? இந்நேரத்தில் உன்னை இங்குக் கண்டது வியப்பையும் விசனத்தையும் உண்டாக்கியது. பாவம்! உன் பெண்டாட்டியும் மகளும் உனக்காகக் காத்திருப்பார்கள். இப்படிக் காக்கவைக்கலாமா?" என்றார்.

அவன், "ஆமாங்க. என்ன நேரம் ஆய்ப்போச்சி.? இப்போ பத்தரை மணிதானே. மூண்டைங்க பத்தரை மணி வரைக்கும் விழிச்சிக்குனு இருக்க மாட்டாங்களா?. என்ன கேடு?" என்றான்.

எல்லோரும் அவன் நன்றாய் விடை பகர்ந்தானென்று நகையாடினார்கள். தம்பிரான் வெறுப்போடு அவனை இகழ்ந்து கருப்பண்ணனைக் கீழ்க் கண்ணால் நோக்கி, "அப்பன்! கருப்பண்ணன்! செந்தலைச் சேவகர்கள் உன்னைத் தேடவில்லையா ?" என்றார்.

"யமதூதர்கள் உங்களைத் தேடலையா ?" என்றான் அவன். தம்பிரானுக்கு முகம் வெளுத்தது. அதன்பின் முதலியாரைக் கண்டு, "நீ யார், அப்பா? எங்கிருந்து வருகிறாய் ?" என்று வினவினார்.

"வண்ணையிலிருந்து வருகிறேன்" என்றார் முதலியார்.

"அங்கே என்ன செய்கிறாய் ?"

"இராத் தங்குகிறேன்"

"நீ ஏன் குடிக்கவில்லை?"

"எனக்கு வழக்கமில்லை."

"உனக்கு என்ன உத்யோகம்?"

"எனக்குச் சிலகாலமாய் உத்யோகமில்லை"

"அப்படியானால், ஜீவனம் எப்படி? "

"யாசகம்"

இழிவு இழிவு. "ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற், கிரவி னிளிவந்த தில் "என்கிற பொய்யாமொழியை நீ கேட்டதில்லையா ? "

"கேட்டிருக்கிறேன். என்ன செய்வது? வயோதிகம்."

"வயோதிகமா! சோம்பலென்கிறாயா! உனக்கு என்ன பிராயம்.?"

"எழுபது."

"அருகிலுள்ள கைத்தொழிற் சாலைக்குப் போய் வேலைசெய். இந்தப் பக்கத்தில் எங்காவது யாசகமென்று வருவாயானால், உன்னைச் சேவகர்களிடம் ஒப்புவிப்பேன்."

"தாங்கள் கற்ற அறநூலிற் கண்டது இதுதானோ?"

"சிறுவன் செய்தாலென்ன கிழவன் செய்தாலென்ன? அரைக்காசுக்குச் செய்தாலென்ன ஆயிரம் பொன்னுக்குச் செய்தாலென்ன! குற்றம் குற்றமே."

"குற்றம் புரிவதெனக்கியல்பே, குணமாக் கொள்ளல் நினக்கியல்பே, சிற்றம்பலவா" என்றார் பெரியோர்கள். குற்றம் புரியாதார் இப் பொல்லா நிலத்து யாவர்? கடவுள் குற்றத்தைக் கண்டு பரிகரிப்பாராயின், யாவர்தாம் வீடு காண்பார்? ஒருவருக்கும் பிழைக்கும் வழியே இராது. கடவுளுக்குக் கருணாகரன் என்கிற பெயர் ஏலாது. சாமி! தாங்கள் இப்படிக் கூறுவது நன்றாயில்லை. தங்கள் வேஷத்திற்குத் தக்க கடவுட்டன்மை சிறிது தங்களிடம் இருக்க வேண்டும்.

எல்லாரும் "நல்ல சூடு. பேஷ். பேஷ்" என்றார்கள்.

தம்பிரானுக்குத் தக்க விடை இறுக்க முடியவில்லை. அதனால் அவரைவிட்டு யாவரையும் நோக்கி "நேரமாகிறதே. எல்லாரும் சத்திரத்தை விட்டுப்போவது தகுதியன்றா?" என்றார்.

"பதினொரு மணியாகாமல் நாங்கள் போவதில்லை" என்றார்கள்.

அப்போது தம்பிரான் அவர்களை நோக்கி, "நான் ஏன் இங்கு வந்தேனென்று அறிவீர்களா? வெறிவிலக்குதல் என் கடமையாகக் கொண்டு வந்தேன்" என்றார்.

"அதற்குச் சத்திரக் கதவைச் சீக்கிரம் அடைப்பதனால் என்ன பயன்? கள்ளுக்கடை சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிடும்படி உத்தரவு செய்யுங்க. அதனால் பெரிய லாபம் உண்டு" என்றான் வீரப்பிள்ளை.

இதுவரை ஒன்றும் வார்த்தையாடாதிருந்த, இருளன், "நீ சொல்வது நாயம். பீரிலென்னவோ போட்டுக் காச்சுறாங்க. எப்பேர்ப்பட்ட பலசாலியானாலும் விழுந்து விடுகிறான். சாராயம் காச்சுற இடங்களை அடைச்சா நன்மை" என்றான்.

"உன்னை நான் நெடு நாளாய் அறிவேன். நீ மகா புத்திமான். நீ பெரிய பிரசங்கி" என்றார் தம்பிரான்.

"என்னை நீங்க அறிவிங்க உங்களை நான் நண்ணா அறிவேன். நம்மண்டை உங்க ஜெபம் சாயாது. உங்க பாச்சா பலிக்காது. எனக்கு ஒரு மடமுந் தெரியாது. அது நான் செய்த பாக்ய மெண்ணு நினைக்குறேன். நான் வேர்வை சொட்ட ஓடி ஓடி ஒழைத்து வயித்தை வளக்குறேன். நோவாளிங்களுக்கு ஒரு நன்மை செய்குறேன். நீங்கள் எங்களை விட ஒண்ணும் மேலாயில்லே. நீங்கள் ஆசையா வைச்சிவளக்கிற பொண்ணு என்னை வசிய மூலிகை கேட்டா. 'உனக்கு ஏன்?' எண்ணு கேட்டேன். 'எங்கசாமியார் நான் சொல்றபடி கேட்க வசியம் பண்ணப் போறேன்' எண்ணு சொன்ன" என்றான் இருளன்.

யாவரும் கைகொட்டிக் கல்லென்று நகைத்தார்கள்.

தம்பிரான் தடுமாறிப் போனர். இனி அங்கு நிற்க முடியவில்லை. சரேலென்று நடந்தார். மணி பதினென்றாயிற்று. சிலர் தவிர மற்றெல்லாரும் போய்விட்டார்கள். அந்தச் சிலரும் படுக்கை யறைக்குப் போகிற தருணம். முதலியார் அதைத் தெரிந்துகொண்டு, "வருகிறாயா, ஐயா! என்னிடம் மிக்க அன்பு காட்டினாய். நான் ஒரு காலத்தும் செய்த நன்றியை மறவேன்" என்றார்.

அதற்கு இருளன், "கிழவா! அதிகாலை எழுந்து நான் போய் விடுவேன். ஒரு புட்டி மருந்து வைச்சிவிட்டுப் போறேன். நடக்கும்போது ஆயாசமா யிருந்தா அதைக் குடி. ஆனாலும் நீ நடந்துபோக முடியாது. வருகிறேன்" என்றான்.

முதலியார் கருப்பண்ணனை நோக்கி, "தங்களை மறுபடியும் சந்திக்க விரும்புகிறேன்" என்றார்.

"அப்படியா? அப்படியே செய்யுங்க. இந்தப் பக்கம் நீங்க எங்கே போனாலும் ஒருத்தரும் உங்களைத் தொடமாட்டாங்க. நீங்க கவலை யில்லாதே போகலாம். நானும் என்னைச் சேர்ந்தவங்களும் உங்களுக்கு எப்போது சகாயம் வேணுமானாலும் அப்போ வேண்டிய சகாயத்தைச் செய்வோம்" என்றான் கருப்பண்ணன்.

"ஒரு கூட்டத்தைப் பற்றிப் பேசுகிறீர்களோ?" என்றார் முதலியார்.

"இல்லை, நான் ஒரு குடியரசைப் பற்றிப் பேசுறேன். இந்தப் பக்கத்திலே எத்தனைபேர் இருக்குறாங்க. அவங்களுக்கு ராஜா இல்லே; கட்டுமில்லே. சுவேச்சையாய்த் திரிவாங்க. அவங்க ஒருத்தனையும் ஒண்ணும் கேட்கிறதில்லே.

யறிச்சுக்குவாங்க, வைச்சிக்குவாங்க" என்றான் கருப்பண்ணன்.

"லச்சாதிகாரிங்களைப் போல" என்றான் வீரப்பிள்ளை.

"நண்ணு சொன்னே. லச்சாதிகாரிங்களைப்போலே! அவங்களைப்போலே கொள்ளை யடிப்பவங்களு மில்லே. அவங்களைப்போல மூடி மூடிக் காப்பாத்தி வைக்கிறவங்களு மில்லே."

"ஆனால் அவர்கள் கொள்ளையடிக்கும்போதும் காப்பாற்றி வைக்கும்போதும் சில சமயங்களில் படும் கஷ்டத்திற் கவதியில்லை" என்றார் முதலியார்.

"லச்சாதிகாரிங்களுக்கு வேதனை இல்லையானா, தெய்வத்துக்கு நாயமா இருக்காது. பணம் மிதமிஞ்சி இருக்குது; சொகமும் அப்படியே இருக்கலாமா? இருக்கக் கூடாது. அதனாலே அவங்களுக்குச் சொகமில்லே. ஒண்ணு இருந்தா, ஒண்ணு இருக்காது. சாமி ஒரு மட்டமா நிரவி விடுறான். கள்ளப்பயலைப் பாத்தா, ராஜாவைவிட மகிழ்ச்சி ரொம்ப இருக்குது."

முதலியார் சிறுநகை செய்துவிட்டு, "எல்லாருக்கும் போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு நின்றார். சத்திரக்காரி கையில் மெழுகு திரியோடு மரப் படிக்கட்டின்மேல் அழைத்துச் சென்று மேன்மாடியில் ஒரு சுத்தமான சிறிய அறையைக் காட்டி, "இதில் படுத்துக் கொள்ளுங்க; சௌகரியமா யிருக்கும். இந்த அறைக் கதவுக்குத் தாழில்லை. ஆனால் ஒருத்தரும் கிட்ட வரமாட்டாங்க" என்றாள்.

"நீங்கள் இவ்வளவு பிரியமா யிருக்கிறீர்கள். அம்மா! போய் வருகிறீர்களா? நான் உங்களுக்கு என்ன செய்யப் போகிறேன்" என்றார் முதலியார்.

"சேச்சே, அப்படிச் சொல்லாதேயுங்க நீங்க காசு கொடுக்கலே? நண்ணு உறங்குங்க. இதோ, இந்த மெழு-கு திரியை இங்கே வைக்கிறேன். நெருப்புப் பெட்டி இதோ இருக்குது. பாத்துக் கொள்ளுங்க. வேணும் போது ஏத்திக் கொள்ளுங்க" என்று சொல்லிக் கீழிறங்கி-னாள். அப்போது, கருப்பண்ணன் நின்றுகொண்டு ஏதோ பிரசங்கம் செய்வதைக் கண்டாள். உடனே ஒவ்வொருவ னிடமும் சென்று கையை நீட்டினான். அவனவன் என்ன-வோ கொடுத்தான். பிறகு அவன் சத்திரக்காரியண்டை வந்து, "நாங்க யாசகம் பண்றோம். நீங்க அரை ரூபாயா-வது கொடுக்கணும்" என்றான்.

"விஷயம் என்ன?" என்றாள்

மேல் மாடியி லிருக்கிறாரே, தாத்தா, அவருக்கு நடந்துபோக முடியுமா? கொக்குப்போல நரைச்சிருக்-குது; வெளுத்துப் பழுத்துக் கிடக்குறார்; தள்ளாடுறார். அவருக்கு நாங்க ஒண்ணரை ரூபாய் போட்டிருக்கிறோம். நீங்க அரை ரூபாய் கொடுக்கோணும்" என்றான்

உடனே அவளும் புன்னகை செய்துகொண்டே தன் பையைத் திறந்து அரை ரூபாய் எடுத்துக் கொடுத்தாள். வீரப்பிள்ளை, கருப்பண்ணன், இருளன் தவிர மற்றெல்லா-ரும் சத்திரத்தை விட்டுப் போனார்கள்.

கருப்பண்ணன் அந்த இரண்டு ரூபாயையும் ஒரு துணியில் முடிந்துகொண்டு அடிமேல் அடி வைத்து அரவஞ் செய்யாமல் மேன்மாடிக்கு ஏறினான். மற்றிருவரும்

அவனைப் பின் தொடர்ந்தார்கள். முதலியார் படுத்திருந்த அறைக்குள் சென்று கருப்பண்ணன், படுக்கையைத் தடவினான். முதலியாருக்கு மார்பு படபட வென்றடித்தது. முன் பின் அறியாத இடத்திற்கு விசாரியாது ஒருவன் பேச்சைக் கேட்டு வந்ததற்கு விசனித்தார். அவர்கள் நடையுடை பாவனைகளால், கல்வி அறிவும் நாகரிகமு மற்ற போக்கிரிக ளென்பது கரதலாமலகம போல முன்னரே விளங்கிற்று. அவர்கள் கள்வரா யிருக்கலாம். இருப்பின், தம்மைக் களவாடவே வருவார்கள்; கொலைக்கு மஞ்சார்க ளென்று நினைக்க மனம் மடிந்தது. கருப்பண்ணனுடைய பருத்த வடிவம் தெரிந்தது. பின்னே இருவர் நிற்பதையும் கண்டுகொண்டார். என்ன நடக்குமோ வென்று தெரியாமையால் உறங்குவதுபோல நடிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். கண்களைச் சிறிது திறந்துகொண்டு குறட்டை விட்டார். "கிழவன் பாவம்! உறங்குகிறான்" என்று சொல்லிக்கொண்டு கருப்பண்ணன் படுக்கைக்குச் சமீபத்தில் வந்து மெதுவாகத் தலையணையைத் தூக்கி, என்னவோ ஒன்று அதன் கீழ் வைத்தான். மிக்க பிரயாசப்பட்டு முதலியார் அசையாது அப்படியே இருந்தார். அஃது எப்படி முடிந்த தென்று அவருக்கே தெரியவில்லை. தாம் இன்னொரென்று அவர்கள் அறிய இடமில்லை. அதனை யறிந்தா லன்றி அவர்கள் தமக்கொரு கெடுதியும் செய்யா ரென்றும், பிறவாறும் புங்கானுபுங்கமாய் யோசனைகள் கிளம்பின.

"விழிச்சா கிழவன் சந்தோஷப்படுவான்" என்றான் கருப்பண்ணன்.

"அதுக்கென்ன சந்தேகம்" என்றான் இருளன்.

சத்தம் செய்யாமல் அவர்கள் திரும்பிப் படிக்கட்டிறங்கி வந்தார்கள். கால்மணி கழித்து முதலியார் எழுந்து உட்கார்ந்தார். மார்பு படபட வென் றடித்தலும் பெருமூச்சு விடுதலும் நிற்குமட்டும் ஒன்றுஞ் செய்தாரில்லை. அவை நின்றபின் மெழுகு திரியை ஏற்றிப் படுக்கையைப் பரிசோதித்தார். தலையணையின் கீழ் இருந்த காகித மடிப்பை எடுத்தார். அது பாரமா யிருந்தது. திறந்து பார்க்க, அதனுள் நாணயங்க ளிருந்தன. அந்தக் காகிதத்தில், "வழிச் செலவுக்கு வச்சுக்கோ. உன் சிநேகருங்க குடுத்தது" என் றெழுதி யிருந்தது. ஒரு நிமிஷம் முதலியாருக்கு ஒன்றுந் தோன்றவில்லை ; ஸ்தம்பித்து நின்ருர். இப்படிப்பட்ட முரட்டு மனிதர்களுக்கும் இரக்கம் இருக்கக் கண்டது புதுமை யென்று நினைத்தார். தங்களைக் காட்டிலும் ஓரேழைக்கு உதவிபுரிய வேண்டினார்க ளென் றறிந்தார். அவர்கள் நிர்மலமான எண்ணத்தையும் யதார்த்தமான அன்பையும் கண்டவுடன் முதலியார் கண்களில் நீர் ததும்பிற்று. "செல்வர்களை அளபபதுபோல வறியர்களையும் அளந்த குற்றத்தைக் கடவுள் பொறுப்பாராக" என்று சொல்லி, மிக்க பக்தியோடு அக் காகிதத்தைப் பழையபடி நாணயங்களோடு மடித்துச் சேமித்துத் தாம் உயிரோடிருக்கு மளவும் அதைக் காப்பாற்றி வைத்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். "இதுவரை என் கைப்பட்ட எந்தப் பாங்கி நோட்டும் இதற்கு இணையாகாது. என் சொத்துக்க ளெல்லாவற்றையும் விட இதை வைத்திருப்பதில் எனக்கு இறுமாப்பு அதிகமுண்டு" என்று தமக்குத் தாமே உரையாடினார்.

அத்தியாயம் - 5

மறுநாள் சூரியோதயத்திற்குமுன் மூவரும் எழுந்து போய்விட்டார்கள். இருளன் எழுந்தவுடன் பழஞ்சோ-றுண்டு தன் காவுதடியை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு தலை வாயிலில் நின்ற சத்திரக்காரியை நோக்கி, "நான் அழைச்சிவந்த கிழவனைக் கவனி, அம்மா! இதோ இந்தப் புட்டியை அவனண்டை குடு" என்றான். அது கேட்டுச் சத்திரக்காரி அப்படியே செய்வதாகத் தலை யசைத்தாள். யாவர்க்கும் பின்பு சத்திரத்தை விட்டுச் சென்றவன் கருப்பண்ணன். அவன் அன்று காலை எழுந்-திருக்கும்போது அவனுக்கு உற்சாகமில்லை. முகஞ் சாம்பி யிருந்தது. இதைக் கண்ட சத்திரக்காரி அவன்மேல் தனக்குண்டான அன்பினால், "என்ன, ஐயா! என்ன சங்கதி? ஏன் விகாரமா யிருக்கிறை?" என்றாள்.

"என்னவோ காரணந்தெரியலே. ராத்திரி உற்சாகமா யிருந்தேன். எழுந்ததுமுதல் ஒரு விகாரமா இருக்குது" என்றான்.

"காரண மொண்ணு மில்லையா?"

"காரணம் எனக்கொண்ணுந் தெரியலே. என்னவா-வது கெடுதி வருமோ என்னமோ தெரியலே."

"உளறுதே."

"நான் என் புள்ளையைப் போய்ப் பாத்தா தான் அது போகும்."

"நீ முழுமூடனா யிருக்கிறை. ஆனாலும் புள்ளைமேலே இவ்வளவு பாசமா வைக்குறது?"

"எனக்கு வேறே என்ன இருக்குது? எல்லாம் அந்தப் புள்ளை தானே."

"இந்த வுலகத்திலே எதுமேலேயும் இவ்வளவு ஆசை வைக்கக் கூடாது. அது பெரிய தப்பு."

"ஏன் கூடாது? வேறே எதுமேலே ஆசை வைக்குறது. இந்த வுலகத்திலே ஆசை வைக்கக் கூடாதெண்ணு, வேறே எந்த வுலகத்திலே ஆசை வைக்குறது?"

"ஏன்? அந்த வுலகத்திலே உன் பெண்டாட்டி இல்லையா?"

"பெண்டாட்டியா! அம்மா, நீங்க நல்லவங்க. நீங்க அப்படிச் சொல்லக்கூடாது. அவள் என் பெண்டாட்டியா யில்லே; என காதலியா யிருந்தாள். பெண்டாட்டிக்கி அவள் எத்தனையோ படி மேலே. நோன்பெடுத்தாவது பட்டினிகிடந்தாவது அவ கிட்ட நான் போகமுடியுமாணு, அப்படியே செய்வேன். என் உடம்பையும் லச்சியஞ் செய்ய மாட்டேன். அவ பெத்துவைச்ச புள்ளை தான் ஒண்ணு எனக் கிருக்குது. அவளுக்காக அந்தப் புள்ளை மேலே நான் ஆசை வைக்க வேண்டுமே. அவளுக்காக அந்தப் புள்ளையை நான் கும்பிடவும் வேண்டுமே."

அவன் வைராக்கியத்தைக் கண்டு சத்திரக்காரி அதிசய மடைந்தாள்.

"ஆசை வை; ஆனு, கும்பிடாதே. அது பெரிய தப்பு. எப்படி இருக்குமோ! காயம் என்ன நிலே. இண்ணைக்கு இருக்கிறவங்க நாளைக்கில்லே. பூ, பிஞ்சி, பழம் எல்லாந் தான் உதிர்ந்துபோகுது. ஆறிலேயும் சாவு, நூறிலேயும்

சாவு யமன் என்ன குழந்தை எண்ணு பாக்றுெ, குட்டி யெண்ணு பாக்றுெ?" என்றுள்.

"அம்மா! அம்மா! உங்க வாயாலே காலையிலே அப்படிச சொல்லாதேயுங்க. என் காதில் நாராசங் காச்சி விட்டதுபோ லிருக்குது" என்றுன். அவன் கண்களில் தாரை தாரையாய் நீர் வடிந்தது.

"கருப்பண்ணு! நான் அப்படிச் சொல்லலே. ஐயோ, பாவம்! எனக்கென்ன, கெட்ட எண்ணமா? உன் புள்ளை சிரஞ்சீவியா யிருக்கணும்" என்றுள.

"அப்படிச் சொல்லுங்க. ஆசீர்வாதம் பண்ணுங்க" என்று சொல்லிச் சிறிது தூரம் சென்று திரும்பிவந்து, "அமமா! ஒண்ணு சொல்ல மறந்துபோனேன். அந்தக் கிழவன் எழுந்தா, நானிருக்கும் எடத்துக்கு வரச் சொல்லுங்க. அவனைப் பார்த்தாலே எனக்குச சந்தோசமா யிருக்குது. அவன் பெரிய மனிசனு யிருக்கணும்" என்றுன்.

அவளும, "நானும் அப்படித்தான் நினைக்கிறேன்" என்றுள்.

கருப்பண்ணன் வழி நடந்தான்.

நெடுநேரம் கழித்து ஏறக்குறையப் பத்துமணிக்கு முதலியார் படிக்கட் டிறங்கி வந்தார்.

வேலைக்காரி பார்த்துவிட்டு ஓடிப்போய், "அம்மா கிழவர் இறங்கிஞர்" என்று சொன்னுள். சத்திரக்காரி வந்து முதலியாரைக் கண்டு, "ஐயா, பெரியவரே! நன்ணு உறங்கினீர்களா? ஒரு தொந்தரையு மில்லையே?" என்று கேட்டாள்.

"அன்பினால் தொந்தரை சிறிதிருந்தது. யான் உறங்கும்போது யாரோ என் படுக்கையண்டை வந்து ஒரு காகிதத்தில் சில நாணயங்களை முடித்துவைத்துப் போனார்கள்" என்றார் முதலியார்.

"ஆமாம். எனக்கு எல்லாந் தெரியும். அது கருப்பண்ணன் செய்த வேலை. இப்போதான் போனான். முரட்டுப் பயலா யிருந்தாலும் மனஸு நல்ல மனஸு உங்களுக்கு நடக்க வழியில்லை எண்ணு இப்படிச் செய்தான். நீங்க மேலே போனபிறகு அவங்க எல்லாரும் கூடிப் பேசி இப்படிச் செய்தாங்க" என்றாள்.

"அவர்கள் மிக நல்லவர்கள் இந்தக் கிழவனைப்பற்றி அவர்களுக் கென்ன ?" என்றார் முதலியார்.

"நீங்க வண்டி வைச்சுகுனு போகலாம். எபபடியோ உங்க பிரியம். இப்போ அந்த அறைக்குள்ளே போயிருங்க. வேலைக்காரி வருவா. இட்டிலி காப்பி கொண்டுவருவா" என்றாள்.

சிறிதுநேரத்திற்கெல்லாம வேலைக்காரி நான்கு இட்டிலியும் சாம்பாரும் காப்பியும் கொண்டுவந்தாள். முதலியார் அவற்றை உட்கொள்ளும்போது தமது மனையில் அதிகாலையில் ஒருநாளைப் போலவே தமக்கு வேலையாட்கள் பரிமாறிய பண்ணிகார பக்ஷணங்களுக்கும் இதற்கும் உள்ள வித்யாசத்தைப் பற்றி நினைத்தார். "அநியாயமாய்ப் பெருஞ் செல்வர்களாகிய நாம் எவ்வளவு பண்டங்களைப் பாழாக்குகிறோம். எவ்வளவு வீண் செலவு செய்கிறோம். நாம் நமக்கும் பிறர்க்கும் கெடுதி விளைக்கிறோம். ஏழைகள் சுகமா யிருக்கிறார்கள் ; ஒருவருக் கொருவர் எவ்வளவோ பக்ஷமா யிருக்கிறார்கள். எல்லாம் ஆடம்பரமும் கூத்துமா

யிருக்கின்றனவே யன்றி வேறல்ல. நாம் செய்து கொள்ளத் தக்க காரியங்களுக்கெல்லாம் வேலையாட்களை நியமிக்கிறோம். வேலையாட்கள் இருக்க வேண்டுவது முறை தான். ஆயினும் அநேக ரிருப்பின், அதனாற் சுகம் விளை- யாது. அவை யிருக்க, நமது வாழ்நாட்களின் சாரமான பாகத்தைப் பணம் தேடுவதிலேயே செலவழிக்கிறோமே. இஃதென்ன விபரீதம. சுகத்தையாவது மிக் குயர்ந்த வஸ்- துக்களையாவது விலைக்குப் பெறக் கூடுமோ? ஏன், பணம் பணமென்று இரவும் பகலும அலைகிறார்களோ எனக்கு விளங்கவில்லை" என்று என்ன என்னவோ எண்ணி எண்ணி ஏங்கினார். இதுவரை இங்கு நடந்த விஷயங்களை நினைத்து நினைத்து மகிழ்ச்சி கூர்ந்தார். அநாமதேயங்களாய் அநாக நிகர்களாய் நித்ய தரித்திரர்களாய் இருக்கும் மனிதர்கள் எவ்வளவு அன்பும் இரக்கமும் காட்டினார்க ளென்பதை நினைக்க நினைக்க மிக்க விந்தையா யிருந்தது. தம் அரண் மனைக்கு நாடோறும் எத்தனையோ கடிதங்கள் ஏழைகள் குடிக்கக் கஞ்சி யின்றி இருக்கும் தருணத்தி லிருப்பதைப் பற்றி வரும். அவற்றை ஒருவரும கவனிப்பதில்லை. குப்- பையி லெறிந்து விடுவது வழக்கம். ஏனெனில், அவர்கள் எழுதுவது முழுப்பொய். அப்படிப்பட்ட பொய்யர் கடி- தம் ஒன்றும் இங்கு வாராது. முதலியார் கோயில் குளங்- களுக்கும் வைத்தியசாலை பாடசாலைகளுக்கும் செய்த தானமெல்லாம் அவர் டம்பத்திற்கும் பெருமைக்கும் செய் தனவென்று அக்கம் பக்கத்தார் இகழ்ந்தார்கள். அப்படிப் பட்ட இகழ்ச்சிக்கிடம் இங்குச் சிறிதுமில்லை. இங்குத் தாம கண்டவர்களுக்குப் பணம் தந்தால் திருப்தியுண்டோ? இல்லை. இருளனுக்கு ஏதாவது தந்திருந்தால் கோபம்,

வந்திருக்கும். கருப்பண்ணன் ஒருவர் பரிசு தந்தால் பெறுன். தானே பிறர் பொருளைக் கவர்வன். இந்த விஷயங்களெல்லாம் ஒன்று பத்து நூறாயிரமாக அவருக்குத் தோன்றின. அடுத்தபடி, ஒரு காரணமு மின்றி, கருப்பண்ணன் பிள்ளையைப்பற்றிக் அவன் வார்த்தைசொல்ல நேர்ந்தபோது அவன் பார்வையும் கனிவைக் காட்டும் பெண்பிள்ளைக் குரலொலியும் இருந்தபடியை ஞாபகம் செய்தார். தாம் அந்தப் பிள்ளையைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று நிச்சயித்தார் முன்னுள் இரவு அந்தப் பிள்ளையைப்பற்றிப் பேசும்போது தமக்கு ஒருவித இரக்கம் உண்டாயிற்று. அந்தப் பிள்ளை அரோக திட காத்திரத்துடன் இருக்கவேண்டும; கேட்பாரின்றிச் சுவேச்சையாய்த் திரியவேண்டுமென்று நினைத்தார். என்ன பணம் இருந்தாலும் தேகாரோக்யமாவது, சுவேச்சையாவது பெறக் கூடுமோ வென்று எண்ணிஞர். தாம் தமது வாழ்நாளெல்லாம பொருள் தேடுவதிலேயே செலவிட்டது வியர்த்தமென்று வருந்திஞர். ஆனல், 'கிராம வாழ்க்கையின் இரகசியங்களெலலாம தெரிநதால், அதனிடத்தும் பல குறைகள் தோன்றும் எந்தக் காட்டிலாயினும் குக்கிராமத்திலாயினும் மனஸ்தாபங்களும, விரோதங்களும், பொறாமைகளும், பொல்லாங்குகளும் இருக்கும். சமாதிக் குழியில் சாந்தியைக் காணலாம். அதுவும் சந்தேகந்தான் அங்குப் போனவர்களில் யாவர் திரும்பி வந்து தம் அநுபவத்தைத் தெரிவித்தார்? பூச்சி புழுக்களும் மிருக பக்ஷிகளும் ஆண் பெண்களும் உயிர் வாழ்க்கைக்குப் போராடி நிற்கவேண்டுவதே. 'சாந்தி, சாந்தி' என்று வீணுக் கதறுகிறார்கள். குன்றும் ஒரு காலத்திற் குன்றும்; வேற்றுருவ மடையும்.

அதன் நிலைமை குலைக்க முயல்வனவு முண்டு. ஒருவரோ டொருவர் இடியுண்டு அடியுண்டு நெருக்கி வாழ்வதன் பயன் என்! ஒன்று மில்லையே.' என்று மனம் புழுங்கினார்.

இப்படிப பலபல நினைத்துக் கொண்டிருக்கையில் சத்திரக்காரி சமீபத்தில் வந்து, "காப்பி குடிச்சிங்களா?" என்றாள்.

"ஆம், குடித்தேன். எனக்கு இன்றுகாலை உற்சாகமா யிருக்கிறது" என்றார்.

"ராத்திரிக்கு இப்போ ரெட்டை மனிசரா யிருக்கிறீங்க. ஏதாவது வேலை கிடைச்சா, செய்கிறீங்களா?" என்றாள்.

"வேலை செய்யக்கூடா தென்பதில்லை. எனக்கு வயதாகிறது. இன்னுஞ் சில வருஷங்களே இருப்பேன். அதற்குள் செய்யவேண்டிய காரியம் பல உண்டு. அதனால் யான் இங்குத் தங்கி யிருந்து கைவேலை செய்து பிழைக்கத் தடையா யிருக்கிறது" என்றார்.

"ஆனா, நீங்க மறுபடி நடந்து போகவேணுமோ?" என்றாள்.

"ஆம்" என்றார்.

"இஷ்டப்படி செய்யுங்க. ஒரு கல்லுக்கு அப்புறம் ஒரு தோட்டம் இருக்குது. அங்கே வேலை அகப்படும். வேணுமானால், ஜீவனம் இங்கேயே செய்யலாம்" என்றாள்.

"ஆம், நீர் சொல்வது நன்மையே. ஆனாலும் நான் ஒருவரைத் தேடிக்கொண்டு செல்கிறேன" என்றார்.

"பந்துவா?" என்றாள்.

"பந்துஅல்லர்; நண்பர்தாம்" என்றார்.

"அந்த நண்பரைக் கண்டால் போதுமா?" என்றாள்.

"அதற்குமேல் எனக்கொன்றும் வேண்டியிராது. என் எண்ணம் ஈடேறும். என் குறை முடியும். மரித்தாலும், மனஸ்திருப்தியோடு மரிப்பேன்" என்றார்.

"அது இருக்கட்டும். உங்களுக்கு நடந்து வழக்கமில்லையோ ?" என்றாள்.

"இல்லை". என்றார்.

"நீங்க நண்ணு வாழ்ந்தவரெண்ணு நினைக்குறேன்" என்றாள்.

"ஆம, ஆம். உள்ளது" என்றார்.

சத்திரக்காரி ஒரு பெருமூச் செறிந்து, "நீங்க சிலநாள் இங்கே தங்கே னென்கிறீங்க. உடம்புக்குப் பலம் வருமே, இருக்கக் கூடாதா ? மனஸு ஒண்ணிலே இருக்குது. நீங்க உங்க சிநேகிதரைக் கண்டு பிடிப்பீங்க எண்ணு நினைக்கிறேன்" என்றாள்.

"கண்டு பிடிப்பே னென்று தான் நானும் நினைக்கிறேன். அஃதிருக்க, உமக்கு நான் கடமைப்பட்டவனாகிறேன்" என்றார்.

"சே, அப்படிச் சொல்லாதீங்க. நான் என்ன செய்தேன். துட்டு குடுத்திங்க; சாப்பிட்டிங்க வேலைக்குப் போகிறீங்களா வெண்ணு கேட்டேன். மாட்டே னென்றீங்க. உங்களுக்கும் எனக்கும் நடந்தது இதுதானே" என்று கோபத்தோடு முடுக்கிக் கொண்டு அறைக்கு வெளியே போய்விட்டாள். சில மாதர்கள் என்ன விசித்திர மானவர்களா யிருக்கிறார்கள். இந்த மாது வழியிற் போகிற கிழவன் தனக்கு முடியாத வேலையைச் செய்ய மாட்டே னென்பதற்காகக் கோபித்துக் கொள்ளுகிறாள். ஏழைகள் ஒருவருக் கொருவர் காட்டும் பக்ஷம் செல்வர்-

கள் செய்யும் எல்லாத் தானங்களைக் காட்டிலும் பெரிது. செல்வர்களுக்கு இது கிடையாது, என்று நினைத்தார். விடை பெற்றுக்கொண்டு போகப் புறப்பட்டு வந்தார். அதை அறிந்த சத்திரக்காரி "இருளன் உங்களுக்கு ஒரு புட்டியில் என்னமோ ஊத்தி வைச்சுவிட்டுப் போயிருக்கிறான். எடுத்துக் கொள்ளுங்க" என்றாள்.

"இருளனை மறுபடி சீக்கிரம காண்பீர்களா?" என்றார்.

"ஒரு வாரமோ, ரெண்டு வாரமோ அல்லது ஒரு மாசமோ செல்லும் எப்படியும் வருவான்" என்றாள்

"எனது வந்தனம் சொல்லுங்கள். அவன் காட்டிய அன்பை ஒருகாலும் மறவேனென்று சொல்லுங்கள்" என்றார்.

"மறவாமல் இருக்குறது சொம்மா. பேசி விட்டுத் திரும்பினவுடனே மறந்து விடுகிறது வழக்கம்" என்றாள்.

"அஃதுண்மைதான்; ஆனால், நான் மறவேன்" என்றார்.

"ஜாக்கிரதையாக வழி பார்த்துப் போங்க வழியில் போக்கு வண்டிகள் அகப்படும. ஏறிக் கொள்ளுங்க; நடக்க வேண்டாம். இந்த நிலைமை தான் நல்லது. வேண்டியது எல்லாம் இருந்தால், குறை என்ன இருக்குது?" என்றாள்.

எல்லாம் இருந்தால், வந்தது அனர்த்தம். உடம்பும் உழைப்பதில்லை; மனத்திற்கும் வேலையில்லை. ஒன்றுமில்லையானால், ஓடியோடி உழைத்து வேண்டியதைத் தேடுவதற்கேற்ற உபாயங்களைப் பற்றி யோசிக்க நேரும். அதனால், தேகபலமும் மனோல்லாசமும் உண்டாம் மேலும் மேலும்

உழைப்பதற்கு ஊக்கமுமா இருக்கும். ஊக்கமில்லாத மனிதன் உதவாத மனிதன். விடைதருக, போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் முதலியார்.

"மறுபடி ஒருகாலத்தில் உங்களை உங்க சிநேகிதரோடு இங்குக் காண்பேனென்று நினைக்கிறேன்" என்றான்.

"எனது நண்பரைக் கண்டால், அத்தியாவசியம் இங்கு வருவேன். நீ நெடுநாளைக்குச் சுகமா இருக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு வழி நடந்தார்.

அத்தியாயம் - 6

முதலியார் வழி நடக்கையில் வானத்தில் மந்தாரம் போட்டிருந்ததால் இளைப்புத் தோன்றவில்லை. உஷ்ண தேசங்களில் அப்படிப்பட்ட குளிர்ந்த நாட்கள் சிலவேயுண்டு. ஆகலின், முதலியாருக்கு உற்சாகமா யிருந்தது. இரண்டு மூன்று கல் கடந்து சென்றபின் எதிரில் ஒரு நாய்க்குட்டி ஓடி வரக் கண்டார். அதன் கழுத்துப் பட்டையில் "என் பெயர் மணி. என்னைப் பாதுகாப்பாருண்டோ?" என்று எழுதியிருந்தது. அந்த நாய்க்கு உடையவர் பெயராவது விலாசமாவது இல்லை. அது ஜாதி நாயாய் மிக அழகாயிருந்தபடியால் முதலியாருக்கு அதைக் காண ஆசையாயிருந்தது. உடையவர் இன்னாரென்று தெரியுமளவும் இதைத் தாம் வைத்து வளர்க்க எண்ணினார். மேலும் அதற்கு ஒரு காலில் அடிபட்டு இரணம் ஆறிருப்பது கண்டார். அதன் சிறிய தலையின்மேல் தட்டிக் கொடுத்தார்.

அந்த நாய்க் குட்டியை நோக்கி "உன்னை நான் பட்டினி விட்டு இறக்கும்படி விடேன். நீ என்னிடம் இரு. பத்திரிகைகளில் நாயைக் காணவில்லையென்று பிரசுரம் காணின், உன்னைக்கொண்டுபோய் உன் எஜமானனிடம் விடுவேன்" என்றார். இனிமேல் தாம் தன்னந் தனியாயில்லை, அந்தச் சிறிய நாய் தமக்குத் துணையாயிருக்குமென்று நினைத்தார்.

அநேக எண்ணங்கள் எழுந்தன. அடுத்தடுத்து, 'இந்தப் பிரபஞ்ச சிருஷ்டிக்குப் பயனென்ன' என்று ஆராய்ந்தார். இந்த அண்டகோடிகளெல்லாம் எழுவகைத் தோற்றத்தோடு கூடிய உயிர்களுடன் ஆக்கின கடவுளுக்கு அழிப்பது தானோ திருவுள்ளமென்று உசாவினார். "பயன் அத்தியாவசியமிருக்க வேண்டும். இல்லையானால் சிருஷ்டி எல்லாம் சிறுபிள்ளை விளையாட்டாவதேயன்றிக் கொடுந் தொழிலாய் முடியும். இதுதானோ? பெருங்குற்றமுமாம். உயிர்களைப் பிறப்பிறப்பிற் சுழல்வித்து முடிவில் சில வருஷங்களில் அழிப்பதானால் அது பைத்தியக்காரன் கண்ட கனவினும் இழிந்ததாம். இந்தப் பிரபஞ்சத்தில் உயிர்களை அல்லல் பட விட்டுக் கூத்துக் காண்பதெல்லாம் அவர்களைத் துயர்க் கடலின் மூழ்குவித்து முடிவில் கொன்று விடுவதற்குத்தானோ?" என்று தமக்குள்ளே பேசிக்கொண்டார் முதலியார். அப்போது வண்டிவரும் சப்தம் கேட்டது. அநத வண்டி சமீபத்தில் வந்தபோது அதனுள் ஒரு பெண் உட்காந்திருக்கக் கண்டார். அந்தப் பெண் இவர் நடந்து வருவதைக் கண்டு மனமிரங்கி 'ஐயோ! பாவம், நடக்க முடியவில்லையே! வண்டியில் ஏறிக் கொள்கிறீரா?" என்றாள்.

"நீங்கள் மிக்க இரக்க முடையவர்களாய் இருக்கிறீர்கள்." என்று ஆரம்பித்தார் முதலியார்.

"ஏறிக் கொள்ளுங்க. நெய்வாங்கிக்குனு போறேன். அது தான் வியாபாரம். வழியிலே ஒரு ஊரிலே இறங்கி இன்னும் கொஞ்சம் வாங்கிக்கினு போகணும். பாரம் ரொம்ப இல்லே. நீங்க ஏறிக்கலாம்" என்றாள்.

முதலியார் உடனே நாயை வண்டியில் வைத்து விட்டுத் தாம் ஏறி உட்கார்ந்தார்.

"நீங்க வைச்சிருக்கிறது நல்ல நாய். ரொம்ப அழகாயிருக்குறது" என்றாள்.

"ஆம், அதன் காலில் ஓர் இரண மிருக்கிறது. அதனாற்றான் கையிலெடுத்துக் கொண்டு நடந்து வந்தேன்?" என்றார்.

"ஐயோ! பாவம். அப்படியா? நீங்க எங்கே போகணும்?" என்றாள்.

"கிரணவேற்பட்டிக்குப் போக வேண்டும்" என்றார்.

"அம்மா! அவ்வளவு தூரமா போகணும்?" என்றாள்.

"ஆமாம், அஃது எனக்குத் தெரியும். வழியில் அங்கங்குத் தங்கிப் போய்விடுவேன். உம்மைப்போன்ற இரக்க முள்ளவர்கள் யாராவது வழியில் வண்டியில் ஏற்றிக் கொண்டால், ஏறிக் கொள்வேன்" என்றார்.

"இந்த ஊரிலேதான் நான் இறங்கணும். நீங்க என்ன செய்யப் போறீங்க?" என்றாள்.

"எனக்கு என்ன வேலை யிருக்கிறது. இந்த நாயின் காலுக்கு எண்ணெய்ச் சீலை யிட்டுக் கட்டவேண்டும்" என்றார்.

"அரைமணி நேரத்தில் நீங்க திரும்பிவந்தா, இன்னம் கொஞ்சம் தூரம் வண்டியிலேத்திக்குனு போவேன்" என்றாள்.

முதலியார் "அப்படியே அரைமணிக்குள் திரும்பி வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கடைக்குப் போய்த் தேங்கா யெண்ணெயும் மருந்தும் வாங்கிக் கலந்து ஒரு சீலை கிழித்துத் தடவி நாயின் காலிற் சுற்றினார். காலில் எலும்பு முறியவில்லை. நாய்க் குட்டிக்குப் பசியாயிருக்குமென்று நினைத்துப் பக்ஷணம் வாங்கித் தந்தார். அதன்பின், வண்டி அவிழ்த்து விட்டிருக்கு மிடத்திற்குத் திரும்பினார். நெய்க் காரியும் தன் காரியத்தை முடித்துக்கொண்டு அங்கு வந்தாள். வண்டியைக் கட்டினார்கள். பழையபடி வண்டி ஏறினார்கள். முதலியார், "வண்டி ஏறிவருகிறதற்கு நான் என்ன தரவேண்டும்" என்று கேட்டார்.

"ஒண்ணும் வேண்டாம். நீங்க செலவுக்கு வைச்சி குங்க அந்தக் காசை" என்றாள். அரை மணி நேரத்தில் வண்டி நெய்க்காரி ஊருக்கு அருகில் வந்து விட்டது.

"என்ன சிநேகிதராயிருந்தாலும ஒரு நாளைக்குப் பிரிஞ்சிதான் போகணும். உங்களை இங்கே இறக்கி விடணுமே, அது எனக்கு வருத்தமா யிருக்கிறது. நடந்து தானே நீங்க போகணும. நேரா இந்தப் பாதை யாகவே போங்க. இருட்டிலே எங்கேயாவது தங்குங்க. கொஞ்சம் இருட்டிவிட்டா கள்ளர் பயம் ரொம்ப. அவங்க பொல்லாதவங்க. கருப்பண்ணன் எண்ணு ஒருத்தன் இருக்கரான். அவன்தான் அவங்களுக்குக் கெல்லாம்

தலைவன்'' என்றாள் முதலியார் புன்னகை யரும்பி, "கருப்பண்ணா! அவன் எனக்கு வேண்டியவன் தான்'' என்றார்.

"அப்படியா? அப்படியெண்ணு தெரிஞ்சா வண்டியிலே நானே உங்களை எதிர்க்குணு இருப்பேனே. அவனுக்கு நான் பயப்படலே. எத்தனையோ தரம் அவன் கொளந்தைக்கி நான் பசு நெய் கொடுத்திருக்கிறேன் அந்தக் கொளந்தையை அவன் 'பாச்சாக் குட்டி' எண்ணுதான் சொல்லுவான். அந்தக் கொளந்தை மேலே அவனுக்கு ரொம்ப ஆசை. அதனாலே என்னை ஒண்ணும் செய்யமாட்டான்'' என்றாள்.

"அந்தக் குழந்தையை நான் பார்த்ததில்லை. குழந்தை எப்படி இருக்கும்?'' என்று கேட்டார் முதலியார்.

"சொல்லணுமா? கிருஷ்ண விக்ரஹம்போல இருக்கும். எனக்குப் புள்ளைங்க மேலே ஆசை கிடையாது. எனக்குப் புள்ளைங்க இன்னும் பறக்கலே. அது நல்லது. புள்ளைவேண்டாமெண்ணுதான் இருக்கிறேன். ஒருவேளை எனக்குப் புள்ளை புறந்தால் அப்படித்தான் இருக்கணும். பாவம்! அந்தக் கொளந்தைக்கித் தாயில்லே'' என்றாள்.

"குழந்தை பிரசவித்தவுடன் தாய் இறந்தாளோ''? என்றார் முதலியார்.

"இல்லே, இல்லே. அப்புறம் ஒரு வருஷமா, ஒண்ணரை வருஷம் இருந்தாள். அவளைப்போல அழகான பெண்ணை நான் பார்த்ததில்லே. ரதி கூடக் கெட்டாள். கருப்பண்ணன் கல்யாணம பண்ணிக்கினவளுமல்ல; வைச்சிக்கினவதான். இருந்தால் என்ன? கருப்பண்ணன் மேலே உயிரை வைச்சிருந்தா. கல்யாணம் பண்ணிக்கினவகூட அப்படி நடக்கமாட்டா. அவள் செத்துப்போனபோது. கருப்பண்-

ளான் பைத்தியக்காரனைப்போலே திரிஞ்சான். இருந்தாப் போலே இருந்து ஓடுவான்; ஆராவது கிட்ட வந்தா, கொல்லப்போவான். வரவரப் பாச்சாக் குட்டிமேலே ஆசையெல்லாம் சேத்து வைச்சான். இப்போ தேவையில்லே. உங்களை விட்டுப் பிரிஞ்சிபோக மனஸு வரலே. நாய்க் குட்டியை ஜாக்ரதையா பாத்துக்குங்க. ரொம்ப தூரமாவது ரொம்ப நேரமாவது நடக்காதேயுங்க. என்னமோ பொம்மனாட்டி சொன்னேனென்னு நினைக்காதெயுங்க'' என்று வண்டியை ஓட்டச்சொன்னாள். வண்டியும் போய்விட்டது. முதலியார் நாய்க்குட்டியுடன் பழையபடி நடக்க ஆரம்பித்தார். பழைய சம்பவங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவருக்கு ஞாபகம் வந்தன. ஒரு செல்வன் தன் வண்டியில் ஏழைகளை ஏற்றுவானா? ஏற்றான். ஒருகால் தம்மிடம் வேலை செய்துகொண்டிருந்த ஒருவன் ஒரு நாள் தனக்கு ஒரு மணி நேரத்திற்குத் தமது வண்டி வேண்டுமென்று விண்ணபஞ் செய்துகொண்டதும், அதற்குத் தமது காரியத்தலைவன் அந்த வழக்கம் அடியோடு கூடாதென்று தடுத்ததும், அவன் வார்த்தையைக் கேட்டுத் தாம் முடியாதென்று சொல்லி விட்டதும் ஞாபகத்திற்கு வந்தன. நெய்க்காரி செய்கையைக் கண்ட முதலியாருக்குத் தமது செய்கையை நினைக்கவும் வெட்கமாயிருந்தது. "பிறருக்கு உதவுவது நமது கடமை. அவர்களுக்கு நன்றியறிவு இருக்கிறதோ இல்லையோ! அதனால் நமக்கென்ன? ஒன்றை எதிர்பார்த்து நன்மை செய்தல் கூடாதென்பதை இந்த நெய்க்காரியிடம் கற்றுக்கொண்டேன்'' என்று சொல்லிக் கொண்டார் வழியில் நிற்கவில்லை. ஒரு கல் நடந்து வந்த பின் இரண்டு சாலைகள் கூடுமோரிடத்தில் ஒரு கல் நட-

டிருந்தது. அதன்மேல் சிறிதுநேரம் உட்கார்ந்து நாயைக் கீழே விட்டார். நாய் மூன்றுகாலில் தத்தித் தத்தி நடந்தது. அப்போது ஒரு மோட்டார் வண்டி அதிவேகமாய் அந்தச் சாலையில் ஓடிற்று. நாய்க்கு ஓரடியில் அஃது ஓடிய வைதக் கண்டு முதலியார் எழுந்தோடிப்போய் அதை எடுத்துக்கொண்டு, "நீதப்பினது தம்பிரான் புண்ணியம், காலில் இரண மிருந்தபடியால் தான் தப்பினாய். வேகமாய் ஓடியிருந்தால், சக்கரத்தின் கீழ் அகப்பட்டுக் கூழாயிருப்பாய்" என்று நாயைத் தடவிக் கொடுத்து மறுபடி நடக்கலாயினார்.

சூரியாஸ்தமனம் ஆயிற்று. முதலியார் சமீபத்திலுள்ள ஊரில் இராத் தங்க வேண்டிச் சிறிது வேகமாய்ச் சென்று கூப்பிடு தூரத்தில் ஒரூரைக் கண்டு அதைக் கிட்டினார். அங்கே ஒரு சத்திரத்து வாயிலில் அதிவேகமாய்க் கண் தெரியாது ஓடின மோட்டார் வண்டி நிற்பது தெரிந்தது. அருகிற் சென்று விசாரித்தார். வண்டியிலென்னவோ ஒரு கருவி ஒடிந்தது; அதைச் செப்பனிடப் போகிறார்களென்றார்கள். அதைக் கேட்டுக்கொண்டு தாமும் அந்தச் சத்திரத்தில் தங்கலாமென்றெண்ணி உட்புகுந்தார். அப்போது, "மோட்டார் வண்டியில் வந்தவர்கள் யாரோ பிரபுக்களாகவே இருக்கவேண்டும், நமக்குத் தெரிந்தவர்களாயிருந்தாலும் இருக்கலாம்; நம்மிடம் வியாபாரஞ் செய்பவர்களாயிருந்தாலும் இருக்கலாம்; வண்ணைக்கு வந்து நம்மைக் கண்டு வார்த்தை யாடினவர்களாயிருந்தாலு மிருக்கலாம். யாராவது நம்மைக் கண்டறிவார்களானால் நாம் எடுத்த காரியம் பலியாது" என்று நினைத்துப் பதுங்கியும் ஒதுங்கியும் ஒரு மறைவில் நின்றார். அங்குப் பத்துப் பன்னிரண்டு

பெயர்கள் வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசிக்கொண்டி-ருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயம் மோட்டார் வண்டியைப் பற்றியதேயாம். ஒருவன் "ஒடிந்து வீழ்ந்தது. இப்படித்தான் மோட்டார் வண்டிகளெல்லாம் ஒடிந்து நாசமாய்ப் போகவேண்டும்" என்றான்.

மற்றொருவன் "ஐயோ! பாவம்! நாலாயிரம ஐயாயிரம் போட்டு வாங்கினுங்களே" என்றான்.

அதற்கு முன்னவன் "யாருக்கென்ன ? இந்த வண்டி வந்தபிற்பாடு சாலைகள் எல்லாம் நாசமாயின. இந்தப்பணம் படைத்த பாதகர்களால் ஆணுக்கும பெண்ணுக்கும் ஆபத்து அதிகமாயிற்று" என்றான்.

வேறொருவன், "பணக்காரர் கொழுத்துப்புட்டாங்க" என்றான்.

முன்னவன், "அன்று நிகழ்ந்த செய்தி தெரியாதா? பாவம் ! ஒருத்தி தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உயிர் போன்றவள். ஒரு மோட்டார் வண்டியில் அகப்-பட்டுக் கொண்டாளே தெரியாதா ? ஒருமணி நேரத்தில் அவள் இறந்து போனுள். ராஜாங்கத்தார் அவள் பிரே-தத்தை அறுத்துப் பரிசோதித்து, "அடியொன்றும் பட வில்லை. மோட்டார் வண்டியால் இவளுக்கொரு கெடுதியும் நேர்ந்ததாக நினைக்க இடமில்லை, மார்படைத்து இறந்தா-ளென்று சொல்லி விட்டார்கள். நீதி முறை நிற்கும் நிலை இது பணம் என்ன செய்யும்? பத்தும் செய்யும என்பது தெரியாதா ?" என்றான்

அப்போது சத்திரக்காரி ஓடி வந்து, "போதும், போதும், ஐயா ! இந்த நீதிகூட வேறே எங்கேயும் கிடை-யாது. இந்த ராச்யமே மேல். மோட்டார் வண்டிங்க வந்து

பின்னால்தான் எனக்கு நல்ல பிழைப்பு. இந்த மோட்டார் வண்டி ஓடியா திருந்தா, இந்த ரெண்டு பெரிய மனுசருங்க என் வர்றாங்க? ரெண்டுபேரிலே ஒருத்தர் பெரிய பிரபு. இப்போதான் சொத்து கைக்கு வந்தது. அவர் பெயர் ஐயாப்பிள்ளை" என்றாள்.

அதுகேட்ட ஒருவன், "புதுப் பெயரா யிருக்கிறது. அவர் எங்கிருந்து வருகிறார் உனக்குத் தெரியுமா, அம்மா? மோட்டார் ஓட்டி எங்கே அம்மா?" என்றான்.

"எனக்கு அவர் இங்கிருந்து வர்றா ரென்னு தெரி-யாது. அவருக்கு மோட்டா ஓட்றவன் இல்லே. அவரே ஓட்டிக்கிறார். அவர்கூட ஒருத்தர் இருக்குறா, அவர் சிநேகிதர். அவர்பெயர் ராமசாமி ஐயர். யாரா யிருந்தா எனக்கென்ன? பணம் நல்லா செலவு பண்றாங்க" என்றாள்.

ஒருபயல், "ஓட்றவன் எங்கே"? என்று கேட்டான்.

"ஓட்றவன் இல்லே. அவரே ஓட்றார்" என்றாள்.

ஒரு நிமிஷம் யாவரும் மௌனமா யிருந்தார்கள். முதலியார் வரவர மூலையில் ஒதுங்கினார். இந்த ஐயாப் பிள்ளையும் ராமசாமி ஐயரும் அவருக்குத தெரிந்தவர்களே. ஒருமுறை ஐயாப்பிள்ளைக்கு இருபதினாயிரம் ரூபாய் கடன் வேண்டுமென்று இந்த ராமசாமி ஐயர் முதலியாரிடம் வந்-திருக்கிறார். அவர் பத்திராசிரிய ரென்பதை அவர் அறி-வார். இன்னும் அவர் செய்யும் சில அற்பவேலைகளும் அவ-ருக்குத் தெரியும். ஐயாப்பிள்ளையையும் முதலியார் ஒரு முறை சந்தித்திருக்கிறார். பிள்ளையவர்கள் யோக்யதை-யும் நன்கறிவார். பிள்ளையவர்கள் பழி பாவங்களுக்கு அஞ்சாதவர். அவருக்கு இன்னது செய்யத் தக்கது இன்-னது செய்யத் தகாதது என்று தெரியாது. மனம்போன

போக்கெல்லாம் போவார். அவருக்குக் கட்டுமில்லை, காவலுமில்லை. ஒரு கவலையு மின்றி இராத்தங்கத் தாம் வந்தவிடத்தில் இவ்விரண்டு துஷ்டர்களையும் கண்ட முதலி-யாருக்கு வெறுப்பா யிருந்தது. சாப்பாட்டு வேலையை முடித்துக்கொண்டு வேறு எங்கேயாவது சென்று இராத்-தங்க வேண்டுமென்று தீர்மானித்தார். அப்படி யிருக்கை-யில் அங்கிருந்தவர்கள் உரத்துப் பேச ஆரம்பித்தார்கள். சாலை வியவகாரத்தைப் பற்றி அவரவர் தத்தம் அபிப்பிரா-யங்களை வெளியிட்டார்கள்.

ஒருவன், "சாலை ஜனங்களுக்கே போடப் பட்-டிருக்கிறது. அந்தச் சாலைகளில் நடக்கும்போது அவர்கள் உயிருக்கும் உடலுக்கும் கெடுதி நேர்வதானல், என்ன வென்று சொல்வது?" என்றான்.

மற்றொருவன், "மோட்டார் வைச்சிருப்பவங்க ஜனங்க அல்லவோ? அவங்களுக்குச் சாலைகள் ஏற்படலை-யோ? அந்தச் சாலைகளிலே போகும்போது அவங்க மோட்டாருக்குக் கெடுதி நேர்வதானா, என்னன்னு சொல்வது?" என்றான்.

இவற்றைக் கேட்ட இடைப்பய லொருவன், "போங்கையா, போங்க. நாங்க ஆடுமாடுங்களை சாலை வழியா ஓட்றதா இல்லையா? ஒரு மோட்டா வண்டி மணி-க்கு நாபபது ஐம்பது கல் ஓடுது. கண்ணும் தெரியலே, மண்ணும் தெரியலே. றெக்கை கட்டிக்குனு பறக்குது. நாங்க எப்படி ஆடுமாடுங்களை ஓட்றது. எங்களுக்கு வேறே வழியா இருக்கு?" என்றான்.

எல்லாவற்றையும் சாவதானமாய்ப் பார்த்துக்கொண் டிருந்த நரைத்துத் திரைத்த கிழவ னொருவன், "மெய்தான்.

புகைவண்டி போறதுக்கு வேறே வழி இருக்கிறதுபோலே, மோட்டா வண்டி போறதுக்கும் வேறே வழி இருக்கணும். அப்பா! மோட்டார் வண்டி அபாயமானதா யிருக்குது" என்றான்.

அப்போது வேறொருவன், "புகை வண்டிக்கி ஒரு வழி, மோட்டார் வண்டிக்கி ஒருவழி, மனுசாளுக்கு ஒரு வழி, இப்படி வழிங்கபோட்டுப் போட்டு ஊரையெல்லாம் பாழாக்கணும். இருக்குற மரங்களையெல்லாம் வெட்டிச் சாய்க்கணும். மேடு பள்ளங்களையெல்லாம் நிரவணும்" என்றான்.

அப்போது கதவு திறந்த சப்தம கேட்டது. சத்திரக்காரி, "உஷ், பிரபுக்கள் வர்றாங்க. பேசாதிருங்க" என்றாள். சத்திரக்காரியின் இரண்டு பெண்களும் ஏதோ வேலை செய்வதாக நடித்தார்கள். இரண்டு பிரபுக்களும வெளியே வந்தார்கள். முதலியார் மறைவிலிருந்து நோக்கினார். ஒருவர் ஐயாப்பிள்ளைதாம். ஊரையும், குடியின் பேரையும கெடுத்த பாவி ஐயாப்பிள்ளைதாம். அவர் பின் வந்தவர் ராமசாமி ஐயர்தாம். முதலியாருக்குச் சந்தேகமில்லை. வெளியே வந்தவுடன் ஐயாப்பிள்ளை சத்திரக்காரியின் இரண்டு பெண்களையும் பார்த்து, "இவர்கள் பெயர் என்ன? நல்ல பெண்கள். எங்கள் விஷயத்தில் நிரமப அன்பு காட்டினார்கள். இவர்கள் இரண்டு பெயருக்கும் வித்தியாசம் தெரியவில்லை. ஒருத்தியைப் பார்த்தால் மற்றொருத்தியைப் பார்க்கவேண்டாம். ஒரு நாளத்தில் பூத்த இரண்டு தாமரைபோல இருக்கிறார்கள்" என்றார்.

சத்திரக்காரி ஒரு நிமிஷம் விடை பகரவில்லை. அவர் கேட்ட விதமும் தொனியும் நன்றாகவில்லை. முடிவில்,

சிறிது கடுமையாகவே, "பெரியவள் பெயர் ராதா, சின்ன-வள் பெயர் ருக்மிணி" என்றாள். "பேஷ். பெயர்கள் நன்றா யிருக்கின்றன. எந்தப் பெண்ணின் பெயர் ருக்-மிணி?" என்றார் பிரபு.

அத்தருவாயில், சத்திரத்தின் வாயிற் கதவண்டை ஒருவன் கம்பளத்திற சுருட்டிய மூட்டையை எடுத்-துக்கொண்டு உள் நுழைந்தான். அந்த மூட்டையை ஒரு பலகையின்மேல் வைத்துவிட்டு நாற்புறமும் கண்களை யுருட்டி யுருட்டிப் பார்த்தான். எல்லாரும் அவனைப் பார்த்-தார்கள். சிலர் அறிமுகமானவ னென்று அமைந் திருந்-தார்கள். வேறு சிலர் பயந்து நடுங்கினார்கள். மூலை-யிற் பதுங்கி மறைந்திருந்த முதலியார் மிக்க வியப் படைந்-தவராய்த் தமக்கும் தெரியாமல் ஓரடி எடுத்து முன் வைத்-தார். வந்தவன் கருப்பண்ணன். அவன் உடுபபுக்கள் கிழிந்து அலங்கோலமாய் மண்படிந் திருந்தன. அவன் அடையாளமே தெரியவில்லை. முகம் சிவந் திருந்தது; கண்களில் தீப்பொறி பறந்தன. நிறையக் குடித்தவன் போலத் தோன்றினான்.

"சிநேகிதர்களே! நிலா வெளிச்சம் நன்னா யில்லை யா?" என்றான்.

ஒருவரும் வாய் திறககவில்லை. சத்திரக்காரி வந்து, "கருப்பண்ணா! சங்கதி என்ன?" என்றாள். "ஒண்ணு மில்லே. வெய்யிலிலே திரிஞ்சேன். நான் குடிச்சுவிட்டில்-லே, அம்மா! அப்படி நினைக்காதிங்க. எனக்கு உடம்பு சரியா யில்லே. கொஞ்சம் வெந்நீர் குடுங்க" என்றான்.

அப்படிச் சொல்லும்போது உடம்பு பதறிற்று, பற்கள் நறநறவென்றன. சத்திரக்காரி ஏற இறங்கப் பலமுறைபார்

த்தாள். அவனைப் பல வருஷங்களாக அவள் அறிவாள். அவனிடத்தில் நயமில்லை யாயினும் அவனை விரும்பினாள். அவனிடம் மரியாதையும் வைத்திருந்தாள். முகத்தை உற்றுப் பார்த்து அவன் குடித்திருக்கவில்லை யென்று அறிந்தாள். ஏதோ அசௌகரியமே யென்று தெரிந்து கொண்டாள். உள்ளே "வர்றையா, அப்பா!" என்றாள். "இல்லேங்க, அம்மா! இங்கே தான் இருக்குறேன்" என்றான். உடனே அவள் உட்சென்று ஒரு பாத்திரத்தில் நிறைய வெந்நீர் கொணர்ந்து கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டு ஸ்தம்பித்து நின்றான் கருப்பண்ணன். சத்திரக்காரி பெண் ருக்மிணியினிடம் ஐயாப்பிள்ளையும் ராமசாமி ஐயரும் வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். கோபத்தை அடக்க முடியவில்லை. ராதா கருப்பண்ணனை நோக்கினாள். பிள்ளையும் ஐயரும் தன் தங்கையோடு சொல்லிய வார்த்தைகள் அவள் செவியில் விழுந்தனவாயினும் தனக்கு அவர்களிட மிருந்த வெறுப்பினால் அவர்களை நோக்காது இவனை நோக்கினாள். இவன் இருந்த கோலத்தைக் காணவே அவளுக்கு ஒருவிதம் பய முண்டாயிற்று. "நாளைக் காலை எட்டு மணிக்கெல்லாம் மோட்டார் வண்டியைச் செப்பனிடுவார்கள். நீயும் உன் தமக்கையும் இருவரும் எங்களோடு மோட்டாரில் சாரி செய்யப் பிரிய மிருந்தால், நன்றா யிருக்கும். எங்களுக்கு, கல்வேலை, காரிய நிர்ப்பந்தங்களு மில்லை. இந்த இடம் வசதியா யிருக்கிறது. இங்கே எத்தனை நாளிருந்தாலும் பாதகமில்லை" என்றார் ஐயாப்பிள்ளை.

"உங்களோடு இருந்தால், அதுவே போதாதா? நாளை இந்த வீட்டைப் புகைப்படத்தி லெடுக்கலா மென்றிருக்-

கிறேன். நீங்கள் வந்து நிற்கமாட்டீர்களா?" என்றார் ஐயர்.

"ஏன், நிற்க என்ன தடை. ருக்மிணி! ஐயர் படமெடுத்துத் தமது பத்திரிகையில் வைத்து யாவரும் உங்கள் அழகைக் கண்டு வியக்கும்படி செய்வார்" என்றார் பிள்ளை.

"எனக்கு வேண்டிய பெண்களை ஒருநாளில் உலகப் பிரசித்தி பெறும்படி செய்வேன்" என்றார் ஐயர்.

ருக்மிணி கண்ணெடுத்து வெறுப்போடு நோக்கி, "ரொம்ப வேடிக்கையா யிருக்கும்" என்றாள்.

"ஆம், வேடிக்கையாகத்தா னிருக்கும். உனக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்று சொல்லிப் பிள்ளை தமது கடிகாரச் சங்கிலியில் தொங்கின சிறிய தந்த விராகத்தைப் போலக் கூத்தாடினார்.

"நல்லதைக் கெட்ட தாக்குவேன். கெட்டதை நல்ல தாக்குவேன். சுந்தரியைக் குரூபியாக்குவேன். குரூபியைச் சுந்தரி யாக்குவேன். எத்தனையோ பெண்களின் கூந்தல் சுருண்டிருப்பதாகக் காட்டினேன்" என்றார் ஐயர்.

"ஐயா, என் கூந்தலுக்குப் போதிய சுருள் இருக்குது. நீ ஒண்ணுங் காட்டவேண்டாம்" என்றாள் ருக்மிணி.

"பெண்புத்தி போகாது. எவ்வளவு சிறியவளா யிருந்தாலும் வாய்வெட்டுப் போகாது. அதுதான் பெண்களுக் கிருக்கிற கெடுதி. வாக்கு என்ன கடுமையா யிருக்கிறது" என்றார் பிள்ளை.

அப்போது சத்திரக்காரி, "ருக்மிணி! வேலையைப் பார். சமைக்கிற அறையில் அழைக்கிறாங்க, பார்" என்றாள்.

ருக்மிணி தன் தாயாருடைய குறிப்பை யறிந்து கொண்டு உடனே போய்விட்டாள் இதுவரையும் அசையாது இருந்த கருப்பண்ணன், "இங்கே ராலேங்க மோட்டார்வண்டி ஒட்றதுக்கு நண்ணு யிருக்கலே யா?" என்றான்.

"திவ்யம். பகு திவ்யம். அரை க்ஷணம்கூட ஓரிடத்திலும் தடையில்லே. என்ன வேகம்! என்ன வேகம்! வண்டி உடையா திருந்தால் இந்நேரம் எவ்வளவோ தூரம் போயிருக்குமே" என்று ஐயாப்பிள்ளையும் ஐயரும் சேர்ந்து சொன்னார்கள்.

"ஒட்றவன் ரொம்ப கெட்டிக்காரன்" என்றான் கருப்பண்ணன்.

"ஒட்டுகிறவனே இல்லே. பிள்ளை யவர்கள் தாமே ஓட்டுகிறார்" என்றார் ஐயர்.

சாதாரணமான காலததிலும் கருப்பண்ணனைக் கண்டாலே யாவருக்கும் பயம். ஒருவரிடத்தும் கலந்து வார்த்தை சொல்லாத கருப்பண்ணன் அவர்களிடத்தில் வார்த்தை சொல்லியது எல்லாருக்கும் அதிசயமா யிருந்தது. முதலியார் வைத்த கண் வாங்கவில்லே. கருப்பண்ணனையே நோக்கினார். அவனுக்கு விகாரம் பிறந்திருக்கிற விஷயம் அவருக்கு நன்றாய்த் தெரிந்தது.

"பிள்ளை யவங்களா? ஓட்றாங்க?" என்று சொல்லிப் பிள்ளை யிருந்த திசையில் திரும்பி, "நீங்க தானா பிரபு?" என்றான் கருப்பண்ணன்.

"ஆம்" என்றார் பிள்ளை

"உங்க வண்டியை நீங்களே ஓட்றதோ? உங்களுக்கு உடம்பு வலிவும் கூர்மையான பார்வையு மிருக்கணும" என்றான்.

"உண்டு. என்னை நானே புகழ்ந்து கொள்ளக் கூடாது" என்றார்.

"மணிக்கு எத்தனை கல்?" என்றான்.

"நாற்பது ஐம்பது. சில வேளைகளில் அதற்குமேலும் விடுவதுண்டு. நான் எப்போதும் தலைகால் தெரியாமல் விடுவேன். வண்டி சீக்கிரம் உடைந்துபோகும். ஆனால் என்ன? வேறே ஒன்று வாங்கிக் கொள்கிறது." என்றார்.

"மெய்தான். வேறே ஒண்ணு வாங்குறது. அது இருக்கட்டும். எப்போவாவது ஆபத்து உண்டா?" என்றான்.

"ஒரு நாளுமில்லை. எனக்கு ஒராபத்தும் நேர்ந்ததில்லை. என் உயிரைக் காப்பாற்றுவதில் நான் வெகு ஜாக்ரதை. மற்றவர்கள் உயிரைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்றார்.

"நீங்க ரொம்ப அதிஷ்டசாலி. வண்டி பறந்தாலும் வழியிலே ஒருத்தருக்கும் கெடுதியில்லெ என்கிறீங்களே. ஆணு, பெண்ணு, ஒரு நாய், ஒரு கொளந்தை மேலே மோதித் தள்ளலையா?" என்றான்.

"அது சாதாரணம். அடிக்கடி அஃது ஒரு வேடிக்கையாயிருக்கும். அஃது எங்கள குற்றமா? ஏதாவது குறுக்கிட்டால், நாங்களா ஒதுங்கிப் போவோம; மேலே வண்டியை விடுகிறதுதான். என்ன, ராமசாமி ஐயரே!" என்றார்.

"ஆமாம், அடிக்கடி மோட்டார் வண்டிக்காரர் நாய்க்கும் பூனைக்கும் ஆட்டுக்கும் மாட்டுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்குமா வண்டியை நிறுத்துவார். அவர் என்ன காரியமா எங்கே போவாரோ? இதுதானே அவருககுக் கவலை. இன்று, அந்தக் குழந்தையைப் பாருங்கள். வாயு

வேகம் மழை வேகமாய் வருகிற வண்டிக்கு எதிரில் ஓடிவந்து புல்லை நீட்டிற்றே. என்ன மூடத்தனம்! அந்தக் குழந்தைமேலே வண்டியை ஏற்றினது ஓர் ஆச்சரியமன்று" என்றார் ஐயர்.

சத்திரக்காரி திடுக்கிட்டு, "கொளந்தைக்கி காயம் படலையோ?" என்றாள்.

"இல்லை, இல்லை. குழந்தை கீழே விழுந்து ஒரு கர்ணம் போட்டது. ஒரு பகடைதான், செத்துப் போயிருக்கும்" என்றார் பிள்ளை.

கருப்பண்ணன் ஏதோ சொல்ல முயன்றான். பேச நா எழவில்லை. சிறிதுநேரம் பொறுத்து, "வண்டியை நிறுத்திக் கொளந்தையைப் போய்ப் பாத்திங்களா?" என்று வெட்டென்க் கேட்டான்.

"வண்டியை நிறுத்துவதா? திருமபிப் போவதா? இதுதானே எங்களுக்கு வேலை? குழந்தைக்குக் கெடுதி யில்லை" என்றார்.

"நிச்சயமா தெரியுமா?" என்றான் கருப்பண்ணன்.

"நிச்சயமாகவா!" என்றார் பிள்ளை. கருப்பண்ணன் உடனே ஆட்டுக்குட்டி மேல் புலி பாய்வது போல ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து ஊட்டியைப் பிடித்தான். "விடடா, கையை எடடா! ஐயரே! இவனை யாராவது பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கதறினார் பிள்ளை.

"தெய்வம் உனக்குச் சகாயம் பண்ணுமா, அடா? தெய்வம் ஏழா நரகத்திற்கும் கீழா நரகத்தில் உன்னைத் தள்ளிக் கொளுத்தாதா, பாவிப் பயலே!" என்று சீறி ஒரு கத்தியை எடுத்து ஒரே குத்தாக ஓங்கி ஊட்டியிற் குத்தினான் கருப்பண்ணன். இரத்தம் ஓடிற்று.

ஐயர் திறந்திருந்த ஒரு கதவு வழியாகத் தெருவிற்கு ஓடிப்போய், "கொலை! கொலை! கேட்பாரில்லையா! கருப்பண்ணன்!" என்று கதறினார். சிறிதுநேரம் கழித்து ஒரு கிராமாதிகாரி வந்து பார்த்துக் கருப்பண்ணனை நோக்கி, "நீ பேசாமல் வரப்போகிறாயா, இல்லையா?" என்றார்.

"ஒருத்தருக்கு என்னால் ஒரு கஷ்டமும் வராது. போகிற இடத்துக்கு நான் வரத் தடையில்லை. ஆனா ஒரு பேச்சி இருக்குது. கேக்கணும்" என்றான் கருப்பண்ணான்.

"கூடாது" என்றான் அதிகாரி.

"கேட்டுத்தான் தீரணும். ஒரு காரணமுமில்லாமே அவனைக் கொண்ணுவிட்டேனென்ணு நினைக்கிறீங்க. எனக்குத் தகுந்த காரணம் இருக்கவே இருக்குது. தெய்வத்துக்கு முன்னே சொல்றேன். இந்தப் பயலும் என்னைப்போல ஒரு காதகன் தான். அதோ, பாருங்கள், அந்தக் கம்பளத்தில் கட்டி வைச்சிருக்கிறதை" என்று காட்டினான்.

ஒருத்தன் ஓடிப்போய்க் கட்டை அவிழ்த்தான். குழந்தையின் சவம் இருக்கிறது. முகம் சந்திரபிம்பம் போல இருக்கிறது. சிறிய கையில் ஒரு பிடிப் புல் இருக்கிறது. எல்லாரும், "ஐயையோ! ஐயையோ! இது கருப்பண்ணன் குழந்தை!" என்று ஏக காலத்தில் கூவினார்கள். ராதா ஓடிவந்தாள். "ஓ! பாச்சாக் குட்டி! நீயா? என் கண்ணே! பூட்டையா! எண்ணைக்கி உன்னை மறுபடி காணப் போறேன், என் கண்மணி!" என்று கதறியழுது மூர்ச்சையானாள். மற்றெல்லாரும் முகத்தைத் திருப்பிக்

கண்களை மூடிக்கொண்டார்கள். முதலியாருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அவர் திகைத்து நின்றார். இப்படி அப்படி அசைந்தா ரில்லை. இடியொலி கேட்ட நாகம்போலக் கலங்கினார்.

மூர்ச்சை தெளிந்து, ராதா மறுபடி, "பாச்சாக்குட்டி! அம்மா! அம்மா! வந்து பார். ருக்மிணி! வந்து பார். பாச்சா பூட்டானே! தங்க விக்ரகம் ஆச்சே, படத்திலெழுதலாமே. கொளந்தை யென்றாலும் கொளந்தையா? என்ன அழகடி, அம்மா! இன்னும் அழகு வடியுதடி, ருக்மிணீ!" என்று கதறினாள். அது கேட்ட கருப்பண்ணன் நெட்டுயிர்த்தான்.

"நீங்க எல்லாம் பாக்கிறீங்க, என் பாச்சாக் குட்டியை. அந்த மோட்டா வண்டிதான் அவனைக் கொண்ணுது. சாலையிலே விளையாடிக்குனு இருந்தான். நானும் பக்கத்திலே; வேலையா இருந்தேன். இந்தப் பாழும் வண்டி வர்றதைக் கண்டேன்; ஓடிவந்தேன். அதுக்குள்ளே மூழ்கிட்டு போசசி. கிட்ட வந்து பாத்தேன்; வயித்திலே நெருப்பு விழுந்தது. மோட்டா வண்டி பின்னோடே ஓடினேன். ஐங்காதம் போனாலும் விடமாட்டேன். வண்டி வழியிலே உடைஞ்சி போச்சி. நான் குறுக்கு வழியா ஓடிவந்து வண்டியண்டை பாத்துவிட்டுக் காலடி பிடிச்சிக்குனு இங்கே வந்தேன். கொளந்தையைக் கம்பளியிலே வைச்சி எடுத்துக்குனு வந்தேன். எப்போ பழிக்குப்பழி வாங்கப் போறோமெண்ணு வந்தேன். பாவியைக் கொண்ணேன். எனக்குத் திருத்தியாச்சி. என் கொளந்தைக்கு, என் கண்மணிக்கு, ஒரு முத்தம் கொடுக்கணும். விடபோறீங்களா இல்லையா?" என்றான்.

கிராமாதிகாரி கையிற் போட்ட விலங்கைக் கழற்றி எறிந்து, "போ, அப்பா! உன் குழந்தையண்டை போ" என்றார்.

குழந்தையைச் சூழ்ந்திருந்த பெண்கள் சிறிது விலகி நின்றார்கள். கருப்பண்ணன் அருகில் போய், "அப்பா, பாச்சாக் குட்டி, எழுந்திரிடா, ஒரு முத்தம் தாடா, உன்னை விட்டுப் பிரிய முடியாதுடா, என் உயிரே! சத்திரக்காரம்மா இன்னு காலையிலே சொன்னது சரியாச்சிடா, இன்னைக்கு எழுந்திரிக்கும் பொழுதே என்னமோ எனக்கு விகாரமா யிருந்துதே. இதுக்குத் தாண்டா அப்பா! ரொம்ப நேர மாச்சிடா, எழுந்திரிச்சி வாடா! வரமாட்டையா? நான் என்ன செய்வேண்டா, கண்ணே" என்று சொல்லிக் கொண்டே சாய்ந்தான். பக்கத்தில் நின்ற கிராமாதிகாரி தூக்கிப் பிடித்து நிறுத்த முயன்றார்; முடியவில்லை. ஐந்து நிமிஷத்திற் கெல்லாம் கருப்பண்ணன் உடம்பு பனிக்கட்டி போல ஆயிற்று. முதலியார் அது தெரிந்ததும் தம்மையும் பிறரையும் மறந்து ஓடிப்போய்க் கருப்பண்ணன் சவத்தண்டை நின்று, "கருப்பண்ணா! மோசம் செய்தாயா?" என்று கதறினார்; துயர்க் கடலின் மூழ்கினார்.

மறு க்ஷணம் அங்குத் தங்க மனமில்லை; பிதா புத்ரர் சவங்களைப் பார்க்கக் கூடவில்லை. மரண சமாசாரத்தைப் பற்றிப் பலரும் பேசக் கேட்க வேண்டியதாயிற்று; அது சகிக்க முடியவில்லை. சத்திரத்தை விட்டு உடனே வெளிக் கிளம்பினார் முதலியார். இன்ன ஊருக்குச் செல்லுகிற பாதை யென்று தெரிந்து கொள்ளாமலே நிலாவெளிச்சத்தில் வழி நடந்தார். ஒரு கல் நடந்தபின், எதிரில் ஒருவன் வரக் கண்டார். அவன் அடுத்த கிராமத் ததிகாரி

அவன் முதலியாரை நோக்கி, "ஐயா! நீங்க எங்கே இருந்து வர்றீங்க!" என்றான்.

"நான் லக்ஷ்மி அம்மையார் சத்திரத்திலிருந்து வருகிறேன்" என்றார் முதலியார்.

ஏதோ ஒரு கொலை நடந்ததென்கிறாங்களே உண்மைதானா? உமக்குத்தெரியுமா?" என்றான். "ஆம், உண்மைதான். கொலையாளி அகப்பட்டான்" என்றார் முதலியார்.

"அப்படியா! யார் பிடித்தது?" என்றான்.

"மரணம் அவனைப் பிடித்தது. இனி அவன் தப்ப முடியாது" என்றார்.

"மரணமா? கருப்பண்ணன் தான் கொலையாளியென்றல்லவா கேள்விப்பட்டேன்?" என்றான்.

"ஆம். கருப்பண்ணன் தான் இறந்தான்" என்றார்.

"நான் நம்பலே. ரொம்ப நல்லவனாச்சே, அவனுக்கு அப்படி வராது!" என்றான்.

'இல்லே, ஐயா! உண்மைதான். நீங்கள் போய் விசாரித்தால் விவரம் நன்றாய் விளங்கும். அப்படிப்பட்ட மரணம் யாருக்கு வரும்?" என்றார்.

"அப்படியா? ஆனா, நான் போய்வர்றேன்" என்று சொல்லிவிட்டுப் போனான். முதலியார் நிற்கவில்லை. நடந்து செல்கின்றார். அப்பொழுது அவருக்கு என்ன என்னவோ எண்ணங்கள் பிறந்தன. முன்னாளிரவுதான் கருப்பண்ணனைக் கண்டார். முன்னாளிரவுதான் அவன் கட்டழகையும் தேகக்கட்டையும் வியந்தார். முன்னாளிரவுதான் அவன் மனப்பாங்கையும் நாகரிக நிலைமையையும்மெச்சி அவை பூர்வபுண்ணிய பலனென்று நிச்சயித்தார்;முன்னாளிரவுதான் அவன் சேகரித்துத் தம் தலையணைக்கீழ் வைத்த

காணயத்தை எடுத்துக்கொண்டு அவன் பூததயையை அறிந்தார்; முன்னிரவுதான் அவன் பிள்ளைமேல் வைத்த காதலின் பெருக்கைக் கண்டு அதிசயித்தார். நேற்றிரவு இருந்தான், இன்றிரவு இல்லை. இருபத்துநான்கு மணி நேரத்தில் தானும தன் மகனும் மண்ணுலகை நீத்தார்கள். மோட்டார் வண்டியின் இரக்கமற்ற உருளின்கீழ் அவர்கள் ஆசை யெல்லாம் நாசமாயிற்று. கொலையும் மரணமும் நடந்த இடத்தைவிட்டு நெடுந்தூரம் செல்ல வேண்டுமென்று துணிந்தார். கருப்பண்ணன், அவன்பிள்ளை இவர்கள் உதிரத்தின்மேற்பட்ட காற்றும் பரவாத இடத்திற் புகவேண்டுமென்று தீர்மானித்தார்.

அவருக்கு மனைவியில்லை; மக்களில்லை; நண்பருமில்லை. அவரைப்பற்றிக் கவலைகொள்ளும் பிராணி ஒன்றுமில்லை. அவர் ஊரிலில்லையே யென்று தேடுவாருமில்லை. இந்த இடத்தில் பழைய முருகப்ப முதலியாராக இல்லை. தம பழைய நிலைமையை அவர் முற்றும் மறந்தார். இருளைக்கண்டது முதல் நேர்ந்த விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் யாதொரு சம்பந்தமுமின்றி ஞாபகத்திற்கு வந்தன. முடிவில் நேர்ந்த விஷயம அவர் கண்முன் நின்றது. உலகம் அவருக்கு இப்போது நரகம் போலத் தோன்றிற்று; எந்தச சப்தமும் அழுகுரலாய்க் கேட்டது. கருப்பண்ணனை மறததல கூடாதாயிற்று. அவன் குழநதை விஷயம நெஞ்சிற் குடிகொண்டது. கருப்பண்ணன் ஞாபகம் மறக்கக் கூடிய தூரமான இடம் செல்லவேண்டுமென்று உறுதிகொண்டார். வழியில், ஒரு சிறிய கிராமத்தை யடைந்தார். அந்த ஊர் அடங்கி இருந்தது. அந்தக் கிராமத்திற்குள் நுழைந்து வெளியே சென்றார்.

அங்கு ஒரு பாழ் மண்டபம் இருந்தது. அம்மண்டபத்தில் ஒரு மணிநேரம் இளைப்பாறவும், கால்களின் நோவை ஆற்றிக்கொள்ளவும் எண்ணி ஒரு கல்லின்மேல் உட்கார்ந்தார். நாய்க்குட்டியை எதிரில் விளையாட எடுத்துவிட்டார்.

'நாயும் பூனையும் நரியு மிருப்பக்
கால னென்னுங் கண்ணிலி யெனது
பாலனுயிர் கொடு பரிந்துசென் றனனே'

என்று தாம் வாசித்திருந்த அடிகள் நினைவிற்கு வந்தன. 'இந்த நாய்க்குட்டிக்கு வந்த விபத்து நீங்கிற்றே; கருப்பண்ணன் குழந்தை அப்படி இறந்ததே. இவற்றிற்குக் காரணம் தோன்றவில்லையே! தலையெழுத்து இப்படியு மிருக்குமா?' என்று ஏங்கினார். 'ஐயாப்பிள்ளை கொலையுண்டது நியாயமே. கருப்பண்ணன் இறந்ததற்கும் தக்க காரணம் உண்டு. கருப்பண்ணன் குழந்தை சக்கரத்தின்கீழ் அகப்பட்டு இறந்தது அநியாயம், அநியாயம்!' என்றார். இளம் பிராயத்தில் தம்மைத் தரித்திரம் பிடுங்கித் தின்றது. பால்யத்தில் அகண்ட ஐசுவரியம் வந்தது. காதல் கொண்டதாக நினைத்து ஒருத்தியைக் கல்யாண முடித்தார். அவள் அடங்காப் பிடாரி. அவளால் அவமானம் வந்தது. பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களும் ஒழுங்காயில்லை; கெட்டவழியிற் சென்றார்கள். ஆகாத மனைவியும், நல்வழியில் ஏகாத பிள்ளைகளும் அகால மரணம் அடைந்தார்கள். அதுமுதல் தன்னந் தனியாக வாழ்ந்தார். எழுபது வயதானபின் தமது செல்வத்தை யெல்லாம் விட்டுப் பிச்சை எடுத்துப் பிழைத்தாவது அன்பென்னும் அரும் பொருளைக் காண விரும்பினார். கருப்பண்ணன் குழந்தையைப்பற்றி அறிந்தபின், அந்தக் குழந்தையைச் செல்வ-

னாக வாழும்படி செய்யவேண்டுமென்று நினைத்தார். அந்தக் குழந்தையின் மரணம் அவர் யோசனைகளையெல்லாம் பாழாக்கிற்று. இதுவரையும் தம்மால் யாருக்கு என்ன பயன்? செல்ல நின்ற தம் வாழ்நாட்களைச் செவ்வையாகக் கழிப்பதெப்படி? தமது செல்வம் கழுத்திற் கட்டித் தொங்கும் பாரமான பொன் திரிகைபோலத் தோன்றுகிறதே. அதனை யாது செய்வது? ஏழைகள் பெரும் பொருளை வேண்டவில்லை. பொருளைக்கொண்டு பிறர்க்கு நன்மை செய்வது கூடாது என்று வேறு வேறு கவலைகள் கொண்டார்.

'சூரியோதயம் சீக்கிரம் ஆகும். சூரியன் தனது ஆயிரம் கிரணங்களோடு பேரொளி செய்து எழுவன். அவன் அன்றும் ஓடினன், இன்றும் ஓடுவன். நல்லவர் மேலும காய்வன்; தீயவர் மேலும் காய்வன். இராமனையுங் கண்டான்; இராவணனையுங் கண்டான். சீதையையும் அறிவன்; சூர்ப்பணகையையும் அறிவன். யார் வாழ்ந்தாலும் யார் செத்தாலும் அவனுக்குக் கவலையில்லை. கடவுளுக்கும் அப்படியே' என்று எண்ணினர்: உடனே முதலியாருக்கு ஓர் உண்மை விளங்கிற்று. 'இல்லை, அப்படி இல்லை. நாம் கொண்ட கொள்கை தவறு. முன்னோர் ஜீவசரித்திரங்களை நோக்கினல், கடவுள் ஒவ்வோருயிரையும் கவனிக்கிறார். ஒவ்வோருயிரிடத்தும் கவலை கொள்கிறாரென்பது தெற்றெனவிளங்கும். குற்றத்திற்கேற்ற தண்டனை இன்றோ நாளையோ வந்தே தீர்கிறது. இந்தத் தண்டனையை விதிப்பவர் யார்? அவரவர்கள் புண்ணிய பாவங்களை அறிந்து அவற்றின் பயன்களை நுகர்விப்பவர் கடவுளே. அவருடைய ஆக்ஞையாலன்றோ, பல்லாயிரம் அண்-

டங்களும், நாள்களும், கோள்களும் தத்தம் நிலையில் நிற்கின்றன! அவருடைய ஆணையாலன்றே, கரையில்லாக் கடல்களும் நிலை கடவாது நிற்கின்றன! எல்லாப்-பொருள்களிலும் உள்ளும் புறம்பும் ஊடுருவி நின்றும் ஒருவரும் காணாத ஒரு பரமபொருள் இல்லை என்பாரு-முண்டு. சாத்திரக் கண்கொண்டு காண்போர்க்கு அவ-ருடைய சொல் ஏறுமோ? என் தாயாருக்கு என்ன பக்தி இருந்தது! அவள் காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்காத நாளில்லை. எனக்கு ஞானம் பிறக்கவில்லையே. அது கிடக்க. காதலென்பதைக் கண்டிலனே. காண்பே-னாயின், துக்கமும், நஷ்டமும், முதுமையும், மரணமும் சூரியனைக் கண்ட பனி ஆகுமே! கருப்பண்ணனுக்கு என்ன காதல்! இறந்த குழந்தையை அவன் கையி லேந்தி நின்ற காட்சியும், அதன் பொருட்டு அவ்விடத்திலேயே உயிர்துறந்த தன்மையும் என் நெஞ்சைவிட்டு நீங்கவில்-லையே. செத்தாலும் காதலோடு சாகவேண்டும் காத-லின்றி வாழ்ந்தென்ன பயன்? என் உள்ளக் கருத்தை வள்ளலறிவன். அவனைத்தான் நம்புகிறேன். அவன் ஒருபோதும் என்னைக் கைசோர விடான். காதலென்பதை எனக்குக் காட்டுவன். என் செல்வத்தை நல்வழிப்-படுத்துவன். என் ஓயாக் கவலையை ஒட்டியருளுவன்' என்று ஊக்கங் கொண்டார். சிறிதுநேரம் உறங்கலா-மென்று அங்குப் படுத்துக்கொண்டார். உறக்கம் வர வில்லை. மறுபடி எழுந்து வழிநடக்க ஆரம்பித்துச் சிறிது தூரம் சென்றார். பலஹீனமாயிருந்தது. என்ன செய்-வது என்று நினைத்தார். உடனே இருளன் தமக்கு வைத்-துப்போன மருந்து ஞாபகத்திற்கு வந்தது. அதை

எடுத்துக் குடித்தார். களைப்பு நீங்கி ஊக்கம் உண்டா-யிற்று. நில்லாது நடந்து சூரியோதயத்திற்கு ஒரு பட்-டினம் போய்ச் சேர்ந்தார். அங்கும் யாவரும் கருப்-பண்ணனுக்கும் அவன் குழந்தைக்கும் நேர்ந்த அநியாய மரணத்தைப்பற்றியே பேசினார்கள். ஆகவே, முதலியா ருக்கு அங்கும் தங்க முடியவில்லை. ஒரு சத்திரத்திற்குப் போய்ச் சாப்பாட்டு வேலையை முடித்து அச் சத்திரத் திண்ணைமேல் உண்ட இளைப்பாறச் சிறிது உட்கார்ந்தார். காற்று வேகமாய் அடிக்க ஆரம்பித்தது. வானம் இருண்-டது. முதலியாருக்குப் போவதா இருப்பதாவென்று தெரிய வில்லை. இன்ன இடத்திற்குப் போவதென்றும் ஒரு குறிப்பில்லை. கருபபண்ணனும் அவன் குழந்தையும் மரித்த விதங்களை நேரே அறிந்தாராயினும், அவை அவர் மனத்தை விட்டு நீங்கவில்லையாயினும், பிறர் அவற்றைப் பற்றிப் பேசும்போது எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்ததுபோ லாயிறறு; ஆறாப் பெரும் புண்ணிற் பழுக்-கக் காய்ச்சின இருப்புச் சலாகையை நுழைத்ததுபோ-லாயிற்று. கருப்பண்ணன் குணங்களைப் பலரும் மெச்சிப் பேசினார்கள். ஆயிரம் ஐயாப்பிள்ளைகளை உருக்கி ஒன்-றாய் வார்த்தாலும், ஒரு கருப்பண்ணனுக்கு நிகராகாது என்றார்கள். அவன் குழந்தையின் குறுகுறுத்த நடையை-யும் குதலைச் சொல்லையும், குற்றமில் அழகையும் எடுத்துச் சொல்லிச் சொல்லி வயிற்றைப் பிசைந்தார்கள். கைகளை நெரித்தார்கள். கருப்பண்ணன் அவன் குழந்தை மேல் வைத்திருந்த ஆசைப் பெருக்கையும் அக் குழந்தை அவ-னிடம் கொஞ்சிக் குலாவினதையும் கா்ணுக் காட்சி யென்று கரைந்தார்கள். இவற்றையெல்லாம் கேட்கக் கேட்க

முதலியாருக்கு மனம் நைந்துருகியது. வருவதுவருக, இனி இங்கு நிற்பதில்லையென்று நடக்க ஆரம்பித்தார். காற்று மிகக் கடுமையாக அடித்த படியால் கடற்கரை வழியாகப் போகவில்லை. இன்ன வழியிற்றான் செல்வதென் றில்லாமல், கண்ட கண்ட வழிகளிலெல்லாம் சென்றார். புயற்காற்றோடு சிறு தூறலும் விழுந்தது. வரவர வழியும் மேடாயிற்று. மேட்டின் மே லேறினார். போகப்போக அஃது ஒரு குன்-றென்று தெரிந்தது. கால்மணிக் கெல்லாம் மழை விடுவிடு வென்று சோனாமாரியாகப் பொழிந்தது. ஒதுங்க இட-மில்லை. அது மனித சஞ்சார மற்ற இடமாயிருந்தது. ஆயி-னும், முதலியாருக்கு ஊக்கம் குறையவில்லை. காற்றும் மழையும் கலந்தடித்ததனாற் சிறிது கலக்கமடைந்தார். திரும்பவும் முடியாது; திரும்பினாலும் வழி தெரியாது. ஆகவே, முற்ற நனைந்தாராயினும் உடம்பு பனித்தாராயி-னும், பரிகாரந்தேட இடமில்லை. குன்றின்மேலேறிச் செல்லச் செல்லக் களைப்புண்டாயிற்று; கண் தெரியவில்லை; ஒரு கல் தடுக்கி விழப்போய் மற்றொரு கல்லைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தார். சண்டமாருதத்தில் அகப்பட்ட சருகு போலத் தோன்றினாரேயன்றி ஒரு மனிதராய்த் தோன்ற வில்லை.

“களைபபினாலும் குளிரினாலும் இங்கே இறப்பே-னானால், ஊரார் என்ன சொல்லுவார்கள்? சிலநாட்கள் கழித்து எனது பிரேதத்தை யாவராவது காண்பார்கள். யான் சேமித்து வைத்திருக்கும் பொருளை எடுப்பார்கள்; அநந்தாசாரியருக்கு நான் எழுதி வைத்திருக்கும் கடிதத் ைதப் படிப்பார்கள். நான் இன்னானென்று அறிந்து கொள்வார்கள். முதலியாருக்குப் பைத்தியம் பிடித்தது

போலும் என்பார்கள். எனது எண்ணம் அநந்தாசாரி-யருக்கு மாத்திரம் தெரியும்; வேறொருவரும் அதனை அறியார்கள். நான் ஆகாத காரியத்தில் தலையிட்டேன். அதற்கு என் அறியாமையே காரணம். நான் கொண்ட எண்ணத்தை இனி விட்டுவிடவேண்டும்; பழையபடி போகங்களை நுகரவேண்டும்; வைத்தியர்கள் சூழ, ஒருநாள் மரிக்கவேண்டும். மிக்க ஆடம்பரத்துடன் பறை முதலியன முழங்கத் தேரும் திருவிழாவுமாக நரவாகன மேறிப்போய் நடுக்கட்டையி லெரிய வேண்டும்' என்று நினைத்தார். நாய்க் குட்டியை நோக்கி, "மணீ! நீ சொல்ல விரும்பு-வதை நான் அறிவேன். என் உயிரை அபாயத்திற் குள்-ளாக்கினால் உன் உயிரையும் அப்படி ஆக்கக் கூடாதென்-கிறாய். உண்மைதானே? என்றாற் கூடுமானால், உன் உயிரைக் காப்பாற்றி விடுகிறேன். மனுஷ சஞ்சாரமுள்ள இடம் எங்காவது தெரியுமானால்; ஒரு குடிலாவது, வீடா-வது தோன்றுமானால்; விரைந்தோடிப் போய் உன்னை யாவர் வசத்திலாவது வைப்பேன்" என்றார்.

"இது, இது தான் வாழ்க்கை. வீண் ஆசைகளும், வீண் எண்ணங்களும், வீண் பெருமையும் என்ன தந்தன? அவை கானனீர் ஒப்பனவேயாம். உடம்பும் அதற்குச் சம்பந்த முடையனவும் அநித்தியம். உயிர் ஒன்றே நித்-தியம்" என்று வாய் விட்டுக் கூறினார்.

குன்றின் உச்சிக்குச் சென்று மற்றொரு பக்கம் இறங்-கினார். சாய்ப்பா யிருந்தபடியால், இறங்குவது மிக எளி-தாயிற்று. சில இடங்களில் வழுக்கி முதலியார் கீழே வேகமாய்ச் சேர்ந்தார். சிறிது நேரத்திற் கெல்லாம் மலை யடி வாரத்திற்கு வந்தார். கடற்கரை அருகி லிருந்து

இலை யாதைகள் பிரிந்துபோவதும் தெரிந்தது. ஆயினும், காற்றும் மழையும் கனத்தனவே யன்றிக் குறைந்த பாடில்லை. முதலியாருக்குக் கைகால் முதலிய அவயவங்கள் சிலிர்த்தன: உடம்பு விறைத்தது. திடீரென்று உடம்பை வாளினாற் குத்தினதுபோல இருந்தது. வரவர எல்லா உறுப்புக்களும் இளைக்க ஆரம்பித்தன. "தெய்வமே இஃதென்ன !" என்று சாய்ந்தார்.

இதுவரையும் நாய்க் குட்டியின்மேல் ஒரு துளி நீரும் படாது மார்பில் அணைத்து வைத்திருந்தவர் அதைக் கைவிட்டார். அதற்குக் குளிர் பொறுக்கக் கூடவில்லை. முதலியாருக்குப் பிரஞ்ஞை யில்லை; விழுந்து கிடக்கிறார்.

அத்தியாயம் - 7

அன்று மாலை வரையும் மழை ஒரே படித்தாய் அடித்தது. அதன்மேல் சட்டென நின்றது. வானம் வெளுத்தது, மூன்றாம் பிறை தோன்றிற்று. கோயில் மணி அடித்தார்கள். மரித்தவ ரெழுவதுபோல முதலியார் சிறிது பிரஞ்ஞை பெற்றுக் கண்களைத் திறந்தார். தம்முடன் யாரோ இருப்பதாகத் தெரிந்தது. ஒரு பெண் தமக்கருகில் குனிந்து தன் கைகளில் தம்மைத் தாங்கிக்கொண்டிருந்தாள். மிக்க வியப்போடு தமது தலையைத் தூக்கி அவள் முகத்தை உற்று நோக்கினார். அவள் கண்களில் கருணை ததும்பிற்று. மிக்க கவலையோடும் ஜாக்கிரதையோடும் தமக்குச் சிகிச்சை செய்வது கண்டார். வார்த்தை சொல்லவும் எழுந்திருக்கவும் முயன்றார். ஆனால், மிக்க

விநயத்துடன் அந்தப் பெண், வேண்டாவென்று தடுத்தாள்.

"இப்போது சிறிது குணமா யிருக்கிறதா, அண்ணு! நல்லது, இப்போது எழுந்திருக்க முயல வேண்டா; சிறிது நேரம் பொறுத்து எழுந்திருக்கலாம். முதலில் உடம்பிற்குச் சிறிது பலம் வரவேண்டும்" என்று இனிய குரலில் ஆவலோடு கூறினள்.

இவ்வளவு விநயமாகவும் பக்ஷமாகவும் தம்முடன் வார்த்தை சொல்லிய பெண் யாவளோ என்று தெரியவில்லை. விழித்து விழித்துப் பார்த்து வியப்படைந்தார். போதிய வெளிச்ச மின்மையால் அவள் முகம் செவ்வையாகத் தெரியவில்லை. பிரஞ்ஞை வர வரத் தாம் ஓர் அநாதைக் குழந்தைபோல அவள் மார்பின் மேற் சாய்ந்திருப்பதை அறிந்தார். பழைய ஞாபகம் சிறிது சிறிதாக வந்தது. உடம்பெல்லாம் இடைவிட்டு இடைவிட்டுச் சுறுக்குச் சுறுக்கென்று குத்திற்று. முதலியார் மெல்லெனப் பேச ஆரம்பித்தார்.

"நீ என்னிடம் இவ்வளவு பக்ஷமா யிருக்கிருயே! இதுவரை எனக்கு அறிவு விளக்கமில்லை. இப்போதுதான் வருகிறது. நான் நெடுது தூரம் நடந்து வந்தேன்; புயற் காற்றிலும் பெருமழையிலும் அகப்பட்டுக் கொண்டேன். என்னவோ விகாரமா யிருந்தது. இந்த இடத்தில் வீழ்ந்திருப்பே னென்று நினைக்கிறேன்" என்றார்.

"ஆமாம. அதைப்பற்றி என்ன? நீங்கள் ஒன்றும் இப்போது நினைக்கவே கூடாது. சிந்தை யின்றி இருங்கள். இன்னும் சிறிது போதிற் குணமாகும்" என்றாள்.

ஒரு களைப்பு வந்து கண்களை மூடினார். மறுபடியும் திறந்தார். மிக்க கவலையோடு, "ஆ, நாய்க்குட்டி! நான் வைத்திருந்த நாய்க்குட்டி!" என்றார்.

"நாய்க் குட்டி நன்றா யிருக்கிறது. அதைப் பற்றிச் சிறிதும் கவலை வேண்டா. அது தன்னையும் காப்பாற்றிக் கொண்டு உம்மையும் காப்பாற்ற அறியும். அதனாற்றான் நான் இங்கு வந்தேன். ஆறத்தனை பருமனுள்ள பெரிய நாய் போலக் குரைத்தது, அண்ணா! அந்த நாய்க்குட்டி நற்கதிக்குப் போக வேண்டும்" என்றாள்.

முதலியார் ஒரு பெருமூச்சுவிட்டு, "மணி எங்கே இருக்கிறது?" என்றார்.

"இங்குத் தான் இருக்கிறது. மழை நீரில் மூழ்கும் சமயம். அப்போது குரைத்துக் கொண்டிருந்தது. என்னுடைய முன்றானையை எடுத்துத் துடைத்து ஒரு சீலையில் மூடிவைத்தேன். அதோ! அஃது என்னைப் பார்த்துக் கொண்டு உட்காந்திருக்கிறது" என்றாள்.

"நான் ஒருகால் இறந்தால், அதை நன்றாய்ப் பார்த்துக் கொள்" என்றார்.

"யோசனை யின்றிப் பிதற்ற வேண்டா. இந்தக் குன்றின்மேல் உங்களை இறக்க விடுவேனா? உங்களை எழுப்பி என் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோக விரும்புகிறேன். காற்றுமில்லை, மழையுமில்லை. உங்களுக்கு நடக்கச சக்தி வரவேண்டும். அதற்குத் தான் எதிர்பார்க்கிறேன்" என்றாள்.

"வீடு வெகுதூரமோ?" என்றார்.

"இல்லை. இதோ இருக்கிறது. நூறு கஜ மிருக்கும். என்மேற் சாய்ந்து கொள்வீரானால் உங்களைச் சோரவி-

டேன். எனக்கு உடம்பில் அதற்கு வேண்டிய பலம் இருக்கிறது" என்றாள்.

முதலியார் எழுந்திருக்க முயன்றார். அதற்கு உதவி செய்தாள். தைரியத்தினாலும் துணிவினாலும் மெல்லென எழுந்து நின்றார். கைகால்கள் விடுவிடுவென்று உதறின.

"எனக்குப் பலமான வியாதி இருக்கிறதென்று நினைக்கிறேன். உனக்கு என்னால் மிகுந்த கஷ்டம் நேரிடும்" என்றார்.

"கஷ்டத்தைப் பற்றிப் பேசவேண்டாம். அரைக்ஷணம் இப்படியே நில்லுங்கள். நாய்க்குட்டியை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று ஓடிப்போய் நாய்க் குட்டியை எடுத்து வந்து, "அண்ணா! நீங்கள் இந்த நாய்க் குட்டியை எடுத்துக்கொள்ள முடியுமா?" என்று கேட்டாள்.

கையை நீட்டி அதை வாங்கிக்கொண்டு பழையபடி தமது மார்பின் சட்டைக்குள் வைத்தார். உடனே அவள் அவர் இடுப்பில் கையைக் கொடுத்து அவரைத் தூக்கிப் பிடித்துக் கொண்டாள். "அவசரப் படலாகாது. அடிமேலடி வைத்து நடக்கவேண்டும். மூன்றாம் பிறை வெளிச்சத்திலும் நக்ஷத்திர வெளிச்சத்திலுமே நாம் வீடு சேரவேண்டும்" என்றாள்.

முதலியார் மிக்க கஷ்டத்தோடு அடிமேலடி வைத்தார். அவருக்குப் பார்வை மங்கலாயிற்று. அவள் உறுப்புக்கள் செவ்வையாகத் தெரியவில்லை. ஒரு முறை தட்டித்தள்ளாடி விழப் போனார். அப்போது அவருக்கு ஒரு கெடுதியும் நேராதபடி தன் பலத்தையெல்லாம் கொண்டு தாங்கினாள். விளக்கு வெளிச்சம் தெரிந்தது. "வீட்டிற்குச் சமீபத்தில் வந்துவிட்டோம். என் வீடுதான் முதல் வீடு"

-என்றாள். முதலியார் சிறிது வேகமாக அடி வைக்க எத்தனம் செய்தார். "இவ்வளவு வேகமாய் நடக்கலாகாது. வழியிற் பெரிய பாறைக ளிருக்கின்றன" என்றாள். மெல்லென அழைத்துக்கொண்டு வீடு சேர்ந்தாள். முதலியார் சமைய லறையில் தாம் இருக்கக் கண்டார். அங்கே ஒரு மூலையில் ஒரு சாய்ப்பு நாற்காலி இருந்தது. அதன்மேல் அவரை உட்கார வைத்தாள். ஓடிப்போய்த் தெருக் கதவைத் தாழிட்டு வந்து, "நாய்க் குட்டியைத் தாருங்கள். அதற்கு ஏதாவது ஆகாரம் வேண்டும். உங்களுக்கும் அது வேண்டும்" என்றாள். நாய்க் குட்டியை அடுப்பண்டை வைத்தாள். முதலியார் மதிமயங்கிப் போய் அவள் செய்கிறவற்றை யெல்லாம் கவனித்தார். அவள் உறுப்புக்கள் செவ்வையாகத் தெரியவில்லை. அதற்குப் போதிய வெளிச்சமு மில்லை; முதலியாருக்கும் பார்வை மங்கலாயிருந்தது. ஆயினும், அவள் முகத்தால் மனக் குறையும் வருத்தமுமுடையவள் போலத் தோன்றினாள். ஒருமுறை இருமுறை, தான் இன்னாரென்றும் அவளுக்குத் தக்க வெகுமானம் செய்யத் தக்க பெருஞ் செல்வரென்றும் தெரிவிக்கலாமென்று நினைத்தார். இவ்வளவு வெளிப்படையாகத் தான் இன்னாரென்று தெரிவித்துக் கொள்ள மனம் ஒப்பவில்லை. அந்தப் பெண் தன்னை யாரென்று விசாரியாமலே தனக்கு உபசாரங்க ளெல்லாம் செய்து, வீட்டிற்கும் அழைத்து வந்தாள். தம்மை ஓர் ஏழை யென்றே யறிந்திருக்க வேண்டும். அவள் செய்கையை நினைக்குந் தோறும் அவர்க்கு அதிசயம் பெரிதாயிற்று. இதற்குள் அவள் அடுத்த ஓர் அறையில் நுழைந்து ஒரு பெரிய கம்பள மெடுத்து வந்து, "இஃதெனது தகப்பனாருடையது. இது

உஷ்ணமானது; வழுவழு வென்றிருக்கும். ஈர உடுப்பைக் களைந்துவிட்டு இதைப் போர்த்துக்கொண்டு இந்தப் படுக்கையிற் படுத்துக் கொள்ளுங்கள். நான் உள்ளே போகிறேன்" என்று சொல்லிச் சென்றாள். முதலியார் அவளை அப்புறம் செல்ல வொட்டாது தடுத்து, "பொறு, பொறு. நீ செய்கிற காரியம் இன்னதென்று உனக்குத் தெரியவில்லையா? என்னைப் பார்த்தால், உனக்கு எப்படி இருக்கிறது? பைத்தியக்காரனைப்போலவா இருக்கிறது? உன்னைப் பார்த்தால், எனக்குப் பைத்தியக்காரி போலத் தோன்றுகிறது. நீ தனியாகவா இங்கே வசிக்கிறாய்?" என்றார். "ஆமாம், தன்னந் தனியாய் வசிக்கிறேன்" என்றாள்.

"அப்படியானால் நீ செய்கிறது அறிவில்லாத காரியமென்று நினைக்கவில்லையா? ஒரு பிரயாணியை - இறக்கக் கூடிய ஓர் ஏழையை வீட்டிற்குள் அழைத்து வந்தாய். அஃது அபாயமான காரியமென்று நினைக்கவில்லையா? நான் தப்பி யோடி வந்த குற்றவாளி யாகவேனும் கள்ளனாகவேனும் கொலையாளி யாகவேனும் இருக்கலாமே. இத்தன்மையா னென்று என்னை அறுதியிட்டுச் சொல்லமுடியாதே!" என்றார். அவள் புன்னகை செய்து தலையசைத்து "ஆம், சொல்ல முடியா தென்பது உண்மையே. எனக்கு அது தெரியவும் வேண்டா. எனது காட்சியைக் கொண்டு தான் நான் நடப்பது" என்றாள்.

"நீ என்ன கண்டாய்?" என்றார்.

"நான் ஒரு தள்ளாத கிழவனைக் காண்கிறேன். அவன் என் தகப்பனார் இறக்கும்போ திருந்ததைவிட முதிர்ந்த கிழவன். காற்றிலும் மழையிலும் அடிபட முடி-

யாதவனென்று றறிகிறேன். அவனும் நோயும் பலஹீனமு முள்ளவ னென்றும், அவனுக்குச் சிகிச்சையும் நல்ல ஆகாரமும் சிலநாட்களுக்கு வேண்டுமென்றும் அறிகிறேன். நான் வேண்டிய சிகிச்சை செய்து நல்ல ஆகாரங் கொடுக்கத் துணிந்தேன். நான் சொல்வதுபோல அக் கிழவன் நடக்க வேண்டும். தன் ஈரஉடுப்பைக் களைந்துவிட்டு இந்தக் கம்பளத்தைப் போர்த்துக் கொள்ளவேண்டும்'' என்றாள். அப்போது முதலியாருக்கு அழுகை தொண்டையில் துறுத்துக்கொண்டு வந்தது. அதை யடக்கிக்கொண்டு, "இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொள்ளப் போகிறாயா? ஓர் அந்நியனுக்காகவா? பிரதி யொன்றுஞ் செய்ய மாட்டாத பரதேசிக்காகவா?'' என்றார்.

"என்ன! என்ன! மறுபடி அந்த வார்த்தை சொல்ல வேண்டாம். என் மனம் நோகும். நான் ஒரு பிரதிலையும் எதிர்பார்க்க வில்லை. தெய்வத்திற்குப் பிரீதியாக நான் உம்மைப் பாதுகாக்க வேண்டும்'' என்றாள்.

அவள் எள்ளளவு வஞ்சகமு மின்றி வார்த்தை சொல்லுகிறாளென்று அறிந்தார்.

"அதற்குத்தானா எனக்கு இங்கு இடங் கொடுத்தாய்?'' என்றார்.

"அஃதொரு காரணம். மற்றொரு காரணமு முண்டு. எனது தகப்பனார்மேல் ஆசை நிரம்ப வைத்திருந்தேன். அவர் இறந்தபின், எனக்கு வேண்டியவர்கள் ஒருவருமில்லை. உம்மைப் பார்த்தால், எனக்கு அவரைப் பார்த்தாற்போல இருக்கிறது. நான் சொல்லுகிறபடி நீங்கள் கேட்கப் போகிறீர்களா இல்லையா? உடனே ஈரஉடையை

நீக்கி இக் கம்பளத்தைப் போர்த்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

முதலியார் கண்களில் நீர் ததும்பிற்று. "நீ சொல்லு-கிறபடியே செய்வேன். உன் பெயரென்ன? சொல்" என்றார்.

"என் பெயர் அமுதவல்லி" என்றாள்.

"அமுதவல்லியா? நல்ல பெயர். என் பெயரைச் சொல்லவா?" என்றார்.

"உங்களுக்கு ஆக்ஷேப மில்லையென்றால் சொல்லுங்-கள். உங்கள் பெயரைப்பற்றி எனக்கு என்ன? ஒன்று மில்லை" என்றாள்.

"என் பெயர் உனக்குத் தெரிந்திருக்கவேண்டும். என் பெயர் முருகப்பன். கிரணவேற் பட்டியிலிருந்து நடந்து வருகிறேன்" என்றார்.

"அவ்வளவு தூரத்தி லிருந்தா நடந்து வருகிறீர்? நடப்பானேன்?" என்றாள்.

"நான் எனது நண்ப னொருவனைத் தேடுகிறேன். அகப்படுவாரோ அகப்படாரோ? இறப்பதற்குள் அவனைக் காண விரும்புகிறேன்" என்றார்.

"நீங்கள் நிச்சயமாக அவனைக் காண்பீர்கள். முதலில் உங்களுக்குப் பலம் வரவேண்டும். பிறகு நீங்கள் சுறுசுறுப்பாய்த் தேடலாம். உடையை மாற்றிக்கொள்ளப் போகும்போது நான் அப்புறம் போகிறேன்" என்று சொல்லி அடுத்த அறைக்குள் நுழைந்தாள்.

முதலியார் ஈரஉடையைக் களைந்து அவள் தந்த கம்பளத்தைப் போர்த்துக் கொண்டார். அவள் வந்தபின் உட் சட்டையைக் காட்டி இதை ஜாக்கிரதையாகச் சேமித்-

று வை. அதனுள் சில கடிதங்க ளிருக்கின்றன. அவற்றைப் பிறர் பார்க்க லாகாது" என்றார்.

"அப்படியே. ஒருத்தரும் அதைத் தொடமாட்டார்கள். இங்கு யாவரும் வருவதில்லை. மனத்திலொரு சஞ்சலமும் வையாதீர்கள். சுடச் சுடக் காபபி கொணர்கிறேன். குடித்துவிட்டு நித்திரை செய்யுங்கள். நாளைக் காலையிற் குணமாயிருக்குமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிச் சென்றாள். முதலியார் அதற்கு ஒன்றுஞ் சொல்லவில்லை. அவள் பறபறப்புடன் நீரைக் கொதிக்க வைத்துக் காப்பிப் பொடி நிறையக் கொட்டி இறக்கிப் பால் விட்டுக் கொணர்ந்தாள். முதலியார் 'அமுதவல்லி!' என்றார்.

"ஏன்? இங்குத்தான் இருக்கிறேன்" என்றாள்.

"ஆம், நீ இங்கு இருப்பது எனக்குத் தெரியும். நல்ல சமயத்தில் உன்னைக் கடவுள் என்னைக் காப்பாற்ற விட்டார், அவருக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? ஆம், நீ என்னை எப்படிக் கண்டாய்?" என்றார்.

"ப ழ பெய்தால் எனக்குக் குதூகலம். ஆகவே, வீட்டுக்கு வெளியே வந்து காற்றும் மழையும் கலந்தடிப்பதைப் பார்த்து நின்றேன். அப்போது ஒரு நாய் குரைக்குமொலியும் இடையிடையேசெய்த அழுகையொலியும் என் செவிகளில் விழுந்தன. நாய்க்கு என்னவோ ஆபத்தென்று நினைத்து உடனே ஒலி வந்த திசைநோக்கி ஓடினேன். நாய்க் குட்டி உங்களைச் சூழ்ந்து உங்களுக்கு வந்த ஆபத்தை நீக்க வேண்டிற்று. நாய் இல்லையானால், நீங்கள் இறந்து போயிருப்பீர்கள்" என்றாள்.

முதலியாருக்கு உடம்பு வலியில் பசி தெரியவில்லை. ஆயினும், அவளைத் திருப்தி செய்வதற்குக் கிண்ணத்தை

வாயில் வைத்து இடைவிட்டு இடைவிட்டுச் சிறிது சிறிதாகப் பருகினுர்.

"நீ இங்குத் தனியே வசிக்கிறேன் என்கிருயே. எப்போதும் அபபடித்தான் இருக்கிருயோ?"

"ஆம், என் தகப்பஞர் இறந்தது முதல் அப்படித்-தான் வசிக்கிறேன்."

"அவர் எப்போது இறந்தார். ?"

"அவர்இறந்து ஐந்து வருஷங்க ளாகின்றன."

"உனக்குக் கல்யாண மாகவில்லையா ?"

அவள் நகை செய்து, "இல்லை, நான் இன்னும் கன்னிகைதான்" என்ருள்.

"அப்படி உனக்கு வயது அதிகமானதாகத் தெரிய வில்லையே."

"எனக்கு வயது இப்போது இருபத்தைந்தாகிறது. இளமையில் என்னை உண்மையாகவே ஒருவரும் காதலிக்க வில்லை இனிமேலா, செல்வத்திற்கு மகிழ்ந்து கல்யாணம செய்து கொள்வேன்! எனக்கு இப்போது என்ன குறை?"

முதலியார் அப்போது அவளை உற்று நோக்கினுர். அவள் கட்டழகி யென்றறிந்தார். அவள் உறுப்பமைப்பு, வண்ணம், சுருண்டு இருண்டு நெய்த்த கூந்தல், மருண்டு மருண்டு நோக்கும் கண்கள், சின்ன இடை, அன்ன நடை இவற்றைக் கவனித்தார். அவர் புன்னகை அரும்பி "ஆனல், நீ கல்யாண மில்லாமலே யிருக்கப் போகிருயோ? புதுமையா யிருக்கிறது" என்ருர்.

"நான் அப்படி நினைக்கவில்லை. பற்பல பெண்கள் என்னைப்போல வேண்டுமென்றோ அல்லது வேறு வழியில்லாமையாலோ வயது சென்ற கன்னிகைகளாக இருக்கிறார்கள். கல்யாணம் செய்து கொண்டவர்கள் எல்லாரும் இன்பத்தை நுகர்கிறார்களா? இல்லையே! ஒருத்தி உள்ளபடியே ஒருவனிடம் காதல் கொள்ளவில்லையானால், ஒருவனை மணக்காமலே வாழக்கூடுமானால், கன்னிகையாயிருப்பதே நல்லது. அதுதான் எனது அபிப்பிராயம். அண்ணா! பேசாது படுத்துக் கொள்ளுங்கள்:" என்றாள்.

முதலியார், "உனக்கு நானிருப்பது பாரம் தானே. நாளைக்கும் நான் இவ்விடம் விட்டுச் செல்லும் நிலைமையில் இல்லையே" என்றார்.

"அப்படிப்பட்ட புத்தியில்லாத காரியம் செய்ய உங்களை யார் விடப்போகிறார்கள்? நீங்கள் இங்கே சில நாட்கள் தங்கியே இருக்கவேண்டும். வேறு யோசனையை விட்டுவிடுங்கள்" என்றாள்.

"இங்குத் தங்குவதற்கு யான் ஒன்றும் தர வேண்டாவோ?" என்றார்.

"நீங்கள் ஒன்றும தரவேண்டா. தந்தாலும் பெற்றுக் கொள்வாரில்லை. நான் அன்ன சத்திரம் வைத்திருக்கவில்லை" என்றாள்.

"ஆனால், உனக்கு ஜீவனோபாயம் யாது?" என்றார்.

"நான் சரிகைவேலை செய்து ஜீவிக்கிறேன், தையல் வேலையும் நேர்த்தியாகச் செய்வேன்" என்றாள்.

"சரிகை வேலையில் போதிய வருவாய் இருக்கிறதா?" என்றார்.

"என் செலவுக் கெல்லாம போய் மிஞ்சும். நான் வீண் செலவுகள் செய்வதில்லை. வாய் ருசி தேடுவதில்லை. பணமோ பணமோ என் றலைவதில்லை. போதும், போதும். என் பெயரும் ஜீவனமும் உங்களுக்குத் தெரிந்தன. இதுபோதும. நாளைக்கு மற்றை விஷயங்களைப் பற்றிச் செவ்வையாய்ப் பேசலாம். நேரமாகிறது. நீங்கள் நன்றாக உறங்குங்கள். நான் அடுத்த அறையிற்றான் படுத்துக்கொள்கிறேன். வேண்டும்போது அழைப்பீராஞல், ஓடி வருவேன்" என்று சொல்லிவிட்டுச் சிறிது ஆகாரம் கொண்டு நாய்க் குட்டிக்கும் சிறிது கொடுத்துப் படுக்கைக்குச் சென்றாள். முதலியாருக்குச் சட்டைப்பையில் வைத்திருக்கும் கடிதத்தைப்பற்றி ஞாபகம் வந்தது. ஒருகால் அவள் எடுத்துப் பார்ப்பின், தம விஷயமெல்லாம் வெளியாய் விடுமே யென்று எண்ணிஞர். மறுபடி அவள் ஒருகாலும் அப்படிச செய்யாளென்கிற துணிவு பிறநதது. அவள் குணத்தையும் செய்கையையும கண்ட வளவில் அவள் சத்தியவதி யென்றறிந்தார். அதஞல் அதைப்பற்றிய கவலையும நீங்கிற்று.

அமுதவல்லி அடுத்த அறையிற் படுத்துக்கொண்டு "நான் இந்தப் பெரியவரை நல்ல சமயத்திற் கண்டேன். இன்னும் சிறிதுநேரம் காணுதிருப்பின், அவர் இறந்திருப்பார். இப்போதும் நோய் பலமா யிருக்கிறது. மிக்க பலஹீனமாக இருக்கிருர். என்ன ஆகுமோ ? எப்படி முடியுமோ ? எப்போது குணப்படுமோ ?' என்று சிந்தித்துக்கொண்டு உறக்கம் கொள்ளாமல் படுத்திருந்தாள். பொழுது விடிவதற்குள் முதலியாருக்குக் காய்ச்சல் கண்டது. அமுதவல்லி வந்து கண்டு அதற்குத்

தனக்குந் தெரிந்த மருந்துகள் கொடுத்துப் பார்த்தாள். காய்ச்சல் குறையவில்லை. உடம்பிற் குத்தலும குடைச்சலும் அதிகமாயின. நரம்புகள் தெறித்தன. முதலியார் பிழைப்பது அரிதென்று நினைத்தாள். மூன்றும் நாள் இருந்தாற் போல இருந்து முதலியாருக்கு நிலைக்கண் பட்டது! மேட்டைப் பார்த்த வண்ண மிருந்தார். மேல்மூச்சு வாங்க ஆரம்பித்தது. என்ன செய்வாள், அமுதவல்லி! பாவம். உதவிக்கு ஒருவருமில்லை. அவர் படுக்கையண்டை நின்று, சிறிதுபோது கண்ணீர் விட்டுத் தேம்பினாள். அவரைத் தனியே விட்டுப் போகவும் மனமில்லை. ஆயினும் இனித் தன் வைத்தியம் செல்லாது, வைத்தியரை அழைத்து வரவேண்டுமென்று ஓடிப்போய் அடுத்த வீதியில் வசித்த வைத்தியரை அழைத்து வந்தாள். அவர் நாடியைப் பிடித்துப் பார்த்தார் "மீறிப் போ யிருக்கிறது, பிழைக்கிறது அருமை. ஆனாலும் பார்க்கிறேன்" என்று தேன் கொண்டுவரச் சொல்லிப் பூரக்கட்டு இலிங்கக்கட்டு இவற்றை அந்தத் தேனில் உரைத்துக் கொடுத்தார். அமுதவல்லி, "ஐயா, வைத்தியரே! இவர் எனது தகப்பனாருக்கு நெருக்கமான சிநேகர். பல வருஷங்களாக எனது தகப்பனாரைப் பார்க்கவேண்டு மென்றிருந்து வந்திருக்கிறார். வழியில் மழையில் நனைந்தார். கிழவராகையால் உடனே காய்ச்சல் கண்டு விட்டது. ஜாக்கிரதையாய்க் கவனித்துப் பாருங்கள். உங்களுக்குத்தக்கபடி செய்வேன்?" என்றாள். அந்த விஷயம் ஊரிலெங்கும் பரவிற்று. அந்த ஊரார்கள் கிழவரைப் பார்க்க வந்தார்கள். அவர்களில் ஒரு தள்ளாத கிழவர், "அம்மா, அமுதவல்லி! நீயோ தனியா யிருக்கிறாய். என்னதான் உன் தகப்பனாருக்கு,

வேண்டியவரா யிருந்தா லென்ன? நோயாளியை வைத்துக் கொண்டு நீ என்ன செய்வாய்? உனக்கேன் இந்த வேலை யெல்லாம் ?" என்று புத்தி உரைத்தார்.

"நான் அவரை எப்படி நிராகரிப்பேன் ? என் தகப்-பனுருக்கும் அவருக்கும் அவ்வளவு நெருக்கம். வந்து விட்டார். எப்படிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன் ? சிறிது குணமானல், ஏதாவது வேலை பார்த்துக் கொள்வார்" என்றுள். வைத்தியர் அடிக்கடி வந்து நாடி பிடித்துப் பார்த்தார். 'குணம். 'சிறிது குணம்' என்றே சொல்லிக் கொண்டு வந்தார். இரண்டு நாட்களில் காய்ச்சல் விட்டது. முதலியார் மறுபடி தாய் வயிற்றிலிருந்து பிறந்தார். அமுதவல்லி ஓடி யோடித் தமக்காக உழைப்பது கண்டார். அதிசயம் ஒரு பக்கமும நன்றியறிவு ஒரு பக்கமும் உண்டாயின. அவற்றிற் கிடையே ஒரு சந்தேக முண்டாயிற்று. அந்தச் சந்தேகங் கொண்டது தமக்கே வெட்கமாய் இருந்தது. அவர் வியாபாரியாகலின், நற்செயலோ தீச்செயலோ ஒன்று காணின் ஏதாவது சுயநயம் பற்றியே செய்-திருக்க வேண்டுமென்று கருதக் கற்றிருந்தார். தேகதிடம் சிறிது வரவுமயுக்தி யோசனைகள் சிறிது தலையெடுக்கவும், "ஓர் அநியனுக்காகத் தன் காலத்தை யெல்லாம் செலவிட்டு இவ்வளவு ஈடுபாடும் கவலையும் அவள் கொண்டத-ற்கு ஏதாவது ஒரு காரண மிருக்க வேண்டும. நம்மை நாம் சொல்லியபடி ஓர் அநாதப் பிரயாணியாக அவள் கருத வில்லை. நம்மை வேறு விதமாக அறிந்திருக்க வேண்டும்" என்று நினைத்தார்." நாம் காய்ச்சலில் ஏதாவது பிதற்றி இருகக வேண்டும், அதனுல் அவள் "நம்மைப் பற்றி ஏதாவது அறிந்திருக்க வேண்டும் என்று நினைத்தா

"அம்மா, அமுதவல்லி! நான் ஏதாவது வாய் பிதற்றி-னேனா?" என்று கேட்டார்.

"ஆம், பிதற்றினீர்."

"என்ன சொன்னேன் ?"

"கருப்பண்ணா! கருப்பண்ணா! என்றீர்கள்"

"இருக்கலாம். நான் கருப்பண்ணன் குழந்தை பாச்சாக் குட்டியின் சவத்தையும் அந்தக் குழந்தைமேல் வைத்திருந்த பாசத்தால் அவன் உயிர் துறந்ததையும் நேரிற் கண்டிருந்தேனாகலின், சொல்லி இருக்கலாம். இன்னும் ஏதாவது சொன்னேனா?"

"ஆம், பணம், பணம்! என்றீர்கள். தங்களிடத்தில் இல்லாமை பற்றி அதனையே வேண்டி நினைத்திருந்தமை-யால் அப்படிச் சொன்னீர்களென்று நினைத்துக் கொண்டேன்."

"நான் கடிதங்களை வைத்திருக்கும் உட் சட்டை தந்தேனே, அஃது எங்கிருக்கிறது?."

"பெட்டியில் அன்று வைத்த இடத்தி லிருக்கிறது. நான் பிறகு அதைத் தொடவில்லை"

"நான் உனக்கு என்ன பிரதி செய்யப்போகிறேன் ? நீ இவ்வளவு பக்ஷமாயிருக்கிறாயே. எனக்கு வியாதி குணமானதும் என்னை வேலை தேடிக்கொள்ள விட்டுவிடு. நான் பட்டிருக்கும் கடனைத் தீர்க்கவேண்டும்."

"கடனைத் தீர்ப்பதா யிருந்தால் இங்கு என்னோ டிருந்தன்றோ தீர்க்க வேண்டும். விட்டுவிடு என்றீரே அது யுக்தமன்று"

"உன் கடனைத் தீர்க்குமட்டும் இங்கிருப்பேன். நான்

கிழவனுயினும் சில உபயோகமான வேலைகள் செய்யத் தெரியும்."

"அப்படியே நானும் நினைக்கிறேன். அதனைப் பின் பார்த்துக் கொள்வோம். இப்போது கவலையற்றிருங்கள்: இன்னும் ஒருவாரம் கழித்தால், பிறகு என்னை எதற்கும் நீங்கள் எதிர்பார்க்க வேண்டா."

இந்த வார்த்தையைக் கேட்டதும் முதலியாருக்கு மனம் ஒரு வித விகாரத்தை யடைந்தது. அவர் இதுவரை உண்டோ இல்லையோ என்று சந்தேகங் கொண்டிலைந்த கள்ளமற்ற அன்பைச் சீக்கிரம் காண நேருமென்று நினைத்தார். இதுவரையும் தம் வாழ்க்கையில் அனுபவித்தறியாத இனிமையையும் சவுகரியத்தையும இப்போது அனுபவித்தார். அமுதவல்லியின் அமைதித்தன்மையையும் வஞ்சகமின்மையையும் நினைக்குந்தோறும் மகிழ்ச்சி யடைந்தார். சிறு கிராமத்தில் வசிக்கிற ஓரேழைப் பெண்ணிற்கு இருந்த பெருந்தன்மையையும் மனத்தூய்மையையும் உற்று நோக்கினர்; உள்ளம் பூரித்தார்.

இப்படி யிருக்கும் தருணத்தில் அமுதவல்லி தலைவாயிலிற் சென்று வார்த்தையாடும் சப்தம் கேட்டது. ஒரு கிழவியொடு வார்த்தையாடினு ளென்பதைக் குரலால் அறிந்தார். கிழவி, "அம்மா, அமுதம்! நீ செய்வது ஒண்ணும் நண்ணு இல்லேம்மா. வழியிலே போறவனைக் கொணுந்து படுக்க வைச்சிக்குனு இருக்கிறே, வாணும். வாணும், சொல்றேன். என்னமோ சொல்றேண்ணு நினைக்காதே. அவன் எப்படி உன் தோப்பனருக்குச் சிநேகிதன்?" என்முள்.

"உயிருக்கு இனிப் பயமில்லை. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் எழுந்து உலாவுவார். அவர் தள்ளாத

கிழவர்; மிக நல்லவர். அஃது என்னவோ தெரியவில்லை; ஒருகால் இத்தனை நாட்களாய்ச் சமீபத்திலேயே இருந்து அவருக்கு வேண்டிய சவுகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்ததனு லிருக்கலா மென்று நினைக்கிறேன், அவ-ரிடத்தில் எனக்கு விசேஷ பிரியமாக இருக்கிறது" என்-ருள் அமுதவல்லி.

"நீ ஒண்டிபா யிருக்கிறவ; ஆம்படியாளு மில்லே. புள்ளைங்களு மில்லே. ஒன் தோப்பனுருக்கு வேண்டிய கிழவ னெண்ணு சொன்னு, அப்படித் தானிருக்கும். நானு, சேக்கவே மாட்டேன். அவன் நூறு சொல்ருன். ஒன் தோப்பனுருக்கு தெரிஞ்சவ னெண்ணு சொல்ருன். அதை எப்படி நம்புறது. அவன் குத்தவாளியாயிருப்பான்; அல்லது கள்ளப்பயலா யிருப்பான். யாருக்குத் தெரியும்? சாமிக்கித்தான் தெரியும். இப்போ தான் அவனுக்கு உடம்புக்கு முடியலே, எழுந் துட்காந்து கொஞ்சம் பலம் வந்தா, கத்தியை தீட்டிக்குவான்; கழுத்தை அறுத்துடுவான்" என்ருள் கிழவி.

"பாட்டி! நீங்கள் எனக்கு நன்மைதான் சொல்லுகி-றீர்கள். இந்தக் கிழவரை அப்படி நினைக்கவேண்டா. ஒரு காலத்தும் அவர் எனக்குக் கெடுதி செய்யா ரென்பது நிச்-சயம்" என்ருள் அமுதவல்லி.

அப்போது அமுதவல்லிக்கு முதலியார் விழித்திருக்-கும் ஞாபகம் வந்தது. எங்கே தாங்கள் பேசிக்கொண் டிருந்ததை யெல்லாம் கேட்டுவிட்டாரோ என்று உள்ளே வந்து பார்த்தாள். நடந்த சம்பாஷணம் முழுவதும் கேட்டிருந்த முதலியார் உறங்குவதுபோல நடித்தார். அவருக்-

குத் தம்மைப் பற்றி அமுதவல்லியும் பிறரும் கொண்டிருக்கும் அபிப்பிராயம் தெரிந்தது.

'நம்மைத் தன் தகப்பனருக்கு நண்பனென்று சொல்லுகிறாள். பிறர் கேட்பதற்கும் புத்தி சொல்ல வருதற்கும் இடந் தாராமல் இப்படிச் சொல்லுகிறாள். என்ன நல்ல மனம்! என்ன கருணை! இன்னும் என்ன சொன்னாள்? தனக்கு நம்மிடத்தில் விசேஷ பிரியம் இருக்கிறதென்றாள். நாம் அதை நம்பலாமோ? இந்தச் சமயம் ஒரு வேளை அப்படி இருக்கலாம். பெண்கள் ஒவ்வொரு சமயத்தில் அப்படிச் சொல்வது சகஜமே. நம்மீது பிரியமா! நாம் இப்போதிருக்கும் இந்த வறுமை நிலையில், தள்ளாத நிலையில், நோய்கொண்ட நிலையில் ஒன்றுக்கும் உதவாத நிலையில் யார்தாம் பிரியமாயிருப்பார்கள்!' என்று நினைத்தார்.

ஆயினும், அவருக்கு ஒருவித ஊக்கமும் உற்சாகமும் பிறந்தன. அன்று மத்தியானம் அமுதவல்லி பத்தியம் கொடுக்க எழுப்பியபோது சிறிது தைரியமாக எழுந்து உட்கார்ந்தார். அப்போது அவளை நோக்கி, "ஏன், அம்மா, அமுதவல்லி! நான் உனது தகப்பனருடைய நண்பனா?" என்றார். நாணத்தால் முகம் சிவந்து, "அண்ணா! உங்களுக்கு வியாதி பலமாயிருந்தது. நீங்கள் இறந்துபோவீர்களென்றே நினைத்தேன். அப்போது இந்தக் கிராமத்திலிருக்கும் ஒரு வைத்தியரை அழைத்து வந்தேன். என்ன சொன்னால் அவர் உங்களைக் கவனித்துப் பார்ப்பாரென்று யோசித்தேன். அப்படிச் சொல்லலாமென்று தோன்றிற்று. அதனைச் சொன்னேன். அதனால் யாருக்கு என்ன கெடுதி? நான் சிறிது படித்திருக்கிறேன். என்

தகப்பனார் என்னைப் படிப்பித்தார். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், 'வாய்மை யெனப்படுவ தியாதெ-னின் யாதொன்றுந், தீமை யிலாத சொலல்'. என்றும், 'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்' என்றும் பணிக்க வில்லையா? என் தகப்ப-னார் இப்போ திருந்தால், தம்மால் ஆனமட்டும் உங்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்தே இருப்பார். நீங்கள் அவருக்கு நண்பராகியே இருப்பீர்கள்'' என்றாள்.

''உன் தகப்பனார் யாவர்?'' என்று கேட்டார் முதலி-யார்.

''அவர் ஒரு பூநதோட்டம் வைத்திருந்தார். பூக்களை எடுத்து மாலை தொடுத்து ஜீவனஞ் செய்து வந்தார். அவ-ருக்கு நல்ல வருவா யுண்டு. நானும் இந்தத் தொழில் செய்திருந்தேன். எங்களுக்கு 'இல்லை' என்கிற குறை இல்லை. அவர் இறந்தார். அதன்பின் நான் தனியே இருந்து வரு-கிறேன்.''

''உன் தாயாரைப் பற்றி என்ன?''

''எனக்குப் பத்தாவது ஆண்டில் என் தாய் இறந்-தாள். அவள் இறக்கும்போது நான் சிறு பெண்ணாயினும், நான் அவளை மறநது போகவில்லை. அவள் கட்டழகி. என் தகப்பனார் அவள்மேல் மிக்க அன்பு கூர்ந்து இருந்தார். அவர் ஒரு நாளும் அவள் இறந்ததாகச் சொல்வதே இல்லை. அவள் எப்போதும் தம்மோடு இருந்ததாகவே நினைத் தார். நானும் அவள் அவருடன் இருந்தா ளென்றே நினைக்கிறேன். கள்ள மற்ற காதல் இருவ ருயிரையும் ஒன்று சேர்க்க வல்லதாயின், அவள் அவரை விட்டுப் பிரியவில்லை என்பது திண்ணம். உங்களுக்கு ஆயாசமா

யிருக்கிறதாகத் தெரிகிறது. நான் நெடுநேரம் உங்களோடு வார்த்தை சொல்லிவிட்டேன்.''

"இல்லை, இல்லை. உன்பேச்சைக் கேட்கக் கேட்க எனக்கு விருப்பாயிருக்கிறது. நீ எனக்குச் செய்த நன்மைக்கு ஓர் அவதியில்லை. என்னை நீ என்ன பக்ஷமாக நடத்தினாய்! உன்னைப் பற்றி நான் அறியவேண்டாவோ? ஆனால், உன்னை விசாரிப்பதற்கு எனக்கு ஓர் உரிமையு மில்லை. நீ செய்த நன்மைக்குப் பிரதிசெய்யக் கூடியவனு மில்லை. அசக்தனாய், ஏழையாயிருக்கிறேன். எழுத்துவேலை, கணக்குவேலை இவ்விரண்டிலும் சமர்த்தன். ஆனால் பார்வை செவ்வையாயில்லை; கையும் நடுக்குகிறது. ஆகவே, அந்த வேலைகள் செய்வது கூடாது. எப்படியானாலும், என்னால் கூடியதைச் செய்வேன்'' என்றார். முதலியார்.

"உங்களுக்குக் கூடை முடையக் கற்றுக் கொடுக்கி-றேன். அந்த வேலை செய்வீர்களா?''

"அதை நான் கற்றுக் கொண்டால், உனக்கு உதவியா-யிருப்பேனா?''

"அதற்கு என்ன தடை? இந்த இடத்தில் கூடைகள் நன்றாய் விற்கும். நல்ல வருவாய் உண்டு. பழக்கூடை, பூக்கூடை, மீன்கூடை இவைகள் விசேஷமாக வேண்டி இருக்கும். வேலையும் சுலபமானதே. உங்களுக்குச் சிறிது பலம் வந்தவுடன், அந்த வேலை செய்யலாம்.''

"எனக்கு நீ, செலவழித்த பொருளெல்லாம் திருப்-பிக்கொடுத்தற்கு வேண்டியதை நான் சம்பாதிக்க வேண்டு-கிறேன். உன் பொறுமைக்கும் நன்மைக்கும் பிரதியாக

நான் என்ன கொடுத்துத் தீரும்? பொறுமைக்குப் பொன்னோ ஈடு? நன்மைக்கு ஞால மென்செய்யும்? அவை தேவதாப்பிரசாதமல்லவோ?" என்று கூறிக் கலங்கினார். அவர் கலக்கத்தைக் காணாதாள் போல நடித்து ஏதோ ஒரு வேலையைச் செய்துகொண்டிருந்தாள். அப்போது முதலியார்,"அமுதவல்லி! உன்னோடு வார்த்தை சொல்லிக் கொண்டிருந்த கிழவி யார்?" என்றார்.

"அந்தக் கிழவியைப் பார்த்தீர்களோ?" என்றாள் அமுதவல்லி.

"இல்லை, அவளை நான் பார்க்கவில்லை. அவள் பேச்சைக் கேட்டேன்." என்றார் முதலியார்.

"அப்படித்தான் நினைத்தேன். அப்போதே எனக்குச் சந்தேகம். அதனால்தான் ஓடிவந்து பார்த்தேன். தாங்கள் உறங்குவதுபோல இருந்தீர்கள். அது நியாயமோ? அது தருமமோ? அது முறையோ? அது வஞ்சகமன்றோ? பாவகம் செய்தல் பாவமன்றோ?" என்றாள். முதலியார் இக்கேள்விகளுக்கு விடையளிக்க முடியாது மயங்கி வேறு பேச்சுக் கொடுக்க வேண்டி, "இந்தக் கிராமத்தில் வசந்தோற்சவம் ஆரம்பித்தார்களா?" என்றார்.

"ஆம் நடக்கிறது. அது நிற்க. வைத்தியர் வருகிறார். அவர் உங்களுக்கு இப்போது ஒரு கவலையும் ஓர் எண்ணமும் கூடாதென்று வற்புறுத்தினர். ஆகவே, பேசாமல் படுத்திருங்கள்" என்றாள்.

"என்னைப் பற்றி அவருக்கு என்ன கவலை?" என்றார் முதலியார்.

"ஏன் இல்லை? உங்கள் வியாதியைக் குணப்படுத்தினவர் அவர்தாம். ஒரு நாளைக்கு எத்தனை முறை வந்தார்!

இத்தனைக்கும் நீங்கள் தரித்திர ரென்பதும், நானும் அவ-ருக்குத் தக்கபடி செய்யக்கூடாதவ ளென்பதும் நன்றாகத்-தெரியும். அவர் நல்ல குணவான். சில வைத்தியர்கள்போல வெட்டெனப பேசார். அவரைக் கண்டாலே நோய் பறக்கும். உங்களை அவர் நல்லவர், பெருந்தன்மை யுடையவ ரென்கிறார்." என்றாள்.

"நானும் அவர் குணவானென்றே நினைக்கிறேன். அவரையும் இன்று லன்றோ நான் கண்டது? அவர் பெய-ரென்ன ?' என்றார்.

"அவர் பெயர் வீரராகவ முதலியார்" என்றாள். அதற்குள் வைத்தியர் உள்ளேவந்தார்.

"பெரியவரே குணமாகத் தோன்றுகிறதா ? எப்படி இருக்கிறது ?" என்றார்

"ஆமாம், எவ்வளவோ அநுகூலம்; உங்களிருவருக்-கும் நான் என்ன நன்மை செய்யப் போகிறேன்!"

"அநுகூலமென்று நினைத்து நடக்கக் கூடாது. பல-ஹீனம் நிரம்ப இருக்கிறது. ஓரிடத்தில் உட்காந்திருக்க வேண்டும்" என்றார் வைத்தியர்.

"என்ன அப்படிச் சொன்னீர்கள்? நான் எத்தனை நாட்கள் இங்கு இருக்கலாம்? அமுதவல்லிக்கு என்னால் எவ்வளவு தொந்தரை ? நானோ ஏழை. என்னிடத்தி-லொரு செப்புக் காசு மில்லை. அமுதவல்லிக்காவது தங்க-ளுக்காவது நான் ஒன்றுந் தர முடியாது. நீங்களிருவரும் எனக்கு உழைப்பது வீண்." என்றார் முதலியார்.

"எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாகச் செய்து கொள்ளுகிறீர். உங்களைப் பணம் கேட்டது யார், ஐயா?" என்றார் வைத்தியர்.

மூவரும் சிறிதுபோது மௌனமாயிருந்தார்கள். முத-லியாருக்குக் கண் சிறிது கலங்கிற்று. தம் வரலாறு முழுவதையும் கொட்டிவிடலாமென்று நினைத்தார். தம்மிற் பெருஞ் செல்வரில்லை யென்று சொல்ல வாய் எடுத்தார். சொல்லி விட்டால், பயனோக்கா நட்பினால் விளையும் இன்-பம் பாழ்படுமென்கிற யோசனை குறுக்கிட்டது. பொருளைக் கொண்டு எதையும் பெறக்கூடுமென்று இறுமாந்திருந்த தம்மைத் தாமே பழித்துக்கொண்டார். ஊரையும் விலைக்கு வாங்கலாம்; உள்ளன்பு விற்குமிடம் ஏது? எல்லாம் வல்ல இறைவனைப் போல அதுவும விலைக்கு வாங்கக் கூடியா-தன்றேயென்று மனமுருகினார்.

வைத்தியர் எழுந்து "நான் போய்வருகிறேன். ஐயா! இனிக் குணபாகந்தான். அதற்கு ஐயமில்லை. சீக்கிரம் அநு-கூலமாகவேண்டு மென்பதுதான் எங்கள் பிரார்த்தனை. ஆனாலும், உடம்புக்குப் பலம் வர ஒரு மாதமாவது செல்லும். பத்திரமாய் இருங்கள்" என்றார்.

"வைத்தியரே! பகவத் கடாக்ஷத்தால் தாங்கள் பல்லாண்டு பல்லாண்டாக நன்கு வாழவேண்டும்!" என்று ஊக்கத்தோடு கூறினார் முதலியார்.

அத்தியாயம்-8

நாள் ஆக ஆக முதலியாருக்குச் சிறிது சிறிதாகப் பழைய தேகம் வந்தது. மாலை வேளைகளில் அவர் கிரா-மத்தைச் சுற்றிவர ஆரம்பித்தார். அந்தக் கிராமம் அவர் கண்களுக்கு மிக அழகாயிருந்தது. அங்குச் சில சிறு

குடில்களே இருந்தன. அவைகளும் அவருக்கு அழகாய்த் தோன்றின. அவைகள் எல்லாவற்றினும் அமுதவல்லி வீடே மிக அழகாய்த் தோன்றிற்று. கடற்கரைக்குப போய் வருவதென்றால் அவருக்கு ஆனந்தமா யிருந்தது. கிராமத்தார் இவரை நாடோறும் காணவே இவரொடு பழகி விட்டார்கள். அவர்கள் இவரை அந்நியராக நினைக்கவில்லை. இவரும் அவர்கள் குணத்தொடு பழகினார். அங்கு நிகழ்ந்தன யாவும் இவருக்கு இன்பத்தை விளைத்தன. தமமை ஆபத்திற் கண்டு ஆதரித்த அமுதவல்லியின் குணத்தை நினைக்க நினைக்க அடங்கா மகிழ்ச்சி கொண்டார். தாம பெற்ற பெண்ணாயினும் அவ்வளவு பயபக்தியுடனும் கவலையுடனும் நடநது கொள்ளாள். அவள் கூடை கட்டும் தொழிலைக் கற்றுக்கொடுத்தாள். அவர் பாடசாலையிற் பயிலும் சிறுவன் உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிந்து கற்பதுபோல அத்தொழிலை அவள்பால் கற்றார். முதலில் ஒரு கூடை கட்டி முடிநததும், அவள் அதை எடுத்துக் கொண்டு கடைக்குப் போய் இரண்டணவிற்கு விற்றாள்.

"அண்ணா! அந்தக் கூடையை நாலணவிற்கு விற்றேன்" என்றாள். "அம்மா, அந்த நாலணவை நீயே வைத்துக்கொள். யான் சம்பாதிக்கும் பொருளெல்லாம் உன்னுடையவே" என்றார் முதலியார்.

"நான் மறுப்பேனானல், தங்கள் மனத்திற்குச் சங்கடம் விளையு மென்று நினைக்கிறேன். அப்படியே நான் தங்கள் வருவாயை யெல்லாம் கொள்வேன்" என்றாள்.

கோடீசுவரரான முதலியார் கூடைகட்டி வருகிறார். அந்தக் கிராமத்தில் இரகசியத்திற்கு இடமில்லை. ஒவ்

வொருவருடைய வியவகாரங்களும் மற்றவர்களுக்கு நன்-றாய்த் தெரிந்தன. முதலியார் தமது இரகசியத்தை வெளிவிடாது வைத்திருந்தது இவ்விடத்தில் விபரீத நடை யென்று கண்டு வெட்க மடைந்தார். அடிக்கடி வைத்-தியர் வந்து முதலியார் தேகநிலையை அறிந்தார். நாளடை-வில் வைத்தியருக்கும் முதலியாருக்கும் நட்பு வலிதாயிறறு. முதலியார் தாம் ஒரு வியாபாரசாலையிற் கணக்கப் பிள்-ளையா யிருந்ததாகவும மூப்பு வந்த பின் தம்மை மேலதிகாரி-கள் நிராகரித்ததாகவும் கூறிய கதைகளை யெல்லாம் வைத்-தியர் முற்றும் நம்பினர். அடிக்கடி அமுதவல்லியின் தந்தையைப்பற்றி வைத்தியர் முதலியாரைக் கேட்பதுண்டு. அமுதவல்லி தன் தந்தைக்கு இவர் நண்பரென்று சொல்லி-வைத்திருப்பதற் கொப்பவே, அவருக்கும் தமக்கும் நெடுங்கால நட்பென்றும் தாம் அவரைக் கண்டு பல வருஷங்கள் கழிந்தன வென்றும் அவர் பலருக்கு உபகாரியா யிருந்தபடியால் அவரைககண்டு இத்தள்ளாத காலத்தில் அவருதவிபெற்று நாட்களைக் கழிக்கலாமென்கிற ஆசையாற் றான் தாம் அங்கு வநதாரென்றும் விடைபகர்வார் அவர் அப்படிப் பகர்ந்தது அமுதவல்லிக்குந் திருப்தியாகவே இருந்தது. கிராமத்தார் யாவரும் அவரைத் தனது தந்தை-யின் நண்ப ரென்றே கொள்ளவேண்டு மென்பது அவள் விருப்பம். அமுதவல்லி முதலியாருடைய வரலாற்றை யறிய-வேண்டி அவரை ஒன்றும கேட்கவில்லை. அவர் பருவத்-தையும் பலஹீனத்தையும் நோக்கியே அவருக்குத் தான் உதவிபுரிய நினைத்தாளே யன்றி, அவரைப்பற்றி அறிய ஒரு சிறிதும் விரும்பின ளில்லை. வைத்தியர் அவளை எப்-போதும் புகழ்ந்தே பேசுவர். அவர் முதலியாரை நோக்கி,

"அவளுக்கு விவாகம் முன்னமே நடந்திருக்கவேண்டும். இத்தனை நாள் நாயகனுக் கிசைந்த நங்கையும், மக்களுக்கிசைந்த மாதாவுமா யிருப்பாள். சர்வஞ்ஞராகிய கடவுள் இன்னாத சொல்லும், ஏறுமாறான செய்கையும், வரவிற்குத் தகாச் செலவும், பண்டம் போற்றாப் பண்புமுள்ள மங்கைமாரை ஆண்மக்கள் எளிதின் விரும்பி மணந்துகொள்ளவும், பல மாண்புள்ள பாவைமாரை ஒருவரும் விரும்பாது தள்ளவும் விதித்தல் காண்கிறோம். ஈசன் செயலப்படி இருந்தால், யார் என்ன செய்யக் கூடும்?" என்றார். அதற்கு முதலியார், "ஏன், ஐயா! அப்படிச் சொல்லுகிறீர்? அமுதவல்லிக்கு இருபத்தைந்து பிராயந்தானே. இனி விவாகம் நடக்க லாகாதா?" என்றார்.

"ஏது, ஐயா! பெரியவரே! ஏது அவளுக்கு விவாகம்? அவள் காலத்தை இப்படித்தான் கழிப்பள். கைப்பொருளில்லை. யார் நெருங்குவார்கள்? இளம்பெண்ணாயிருப்பின் இன்மையைப் பொருட்படுத்தாது கொள்வார்கள். இல்லையாயின் பொருளை எதிர்பார்ப்பார்கள். நமது அமுதவல்லிக்குப் பொருள் எப்படி வரப் போகிறது? ஒருகால் வருமாயினும், விலைகொடுத்து வரனை வாங்க இசையாள். நம்மைப் போன்றவர்களுக்கு ஏராளமாகச் செலவு செய்வள். ஏது விவாகம்?" என்றார் வைத்தியர்.

மீட்டும் முதலியார், "பேரழகி, ஐயா!" என்றார்.

"உங்கள் கண்ணிற்கு அப்படித் தோன்றுகிறாள். குழந்தைப் பருவத்தி லிருந்து பார்க்கிற எங்களுக்கு அப்படித் தோன்றாள். உடனிருந்து பழகினால் உள்ள அழகு புலப்படாது. அயலார்க்கே அது புலப்படும்." என்று இப்படி நெடுநேரம் வார்த்தை யாடிக் கொண்டிருந்து விடை

பெற்றுச் சென்றார். முதலியார் வீட்டைவிட்டுப் புறப்-பட்டுக் கடற்கரை யடைந்தார். அங்கு உட்கார்ந்துகொண்டு, 'இவ்வுலக வாழ்க்கையில் இன்பமில்லை யென்று நினைத்தோம். அது தவறு. இந்தக் கடற்கரைக் காட்சி என்ன அற்புதமாயிருக்கிறது. இந்தக் காட்சியைக் கண்டு களிப்பவர்கள் இவ்வுலகத்தை வெறுப்பார்களோ? இப் பூவுலகின் அமைப்பே அமைப்பு! அதன் அழகே அழகு! உயி ரென்னும் ஒரு பொரு ளுண்டென்றும், அது ஞானக்கண் கொண்டு இதனினும் அழகான காட்சியைக் காணு மென்றும் உய்த்துணர்கிறோம. வாழ்க்கை நலத்தைக காணத் தலைப்பட்ட வுடன் அவ்வாழ்க்கைக் கொருகால் இறுதி நேருமோ வென்று எனது உயிர் வருந்துகிறதே! நான் இறந்தபின் அமுதவல்லி என்ன செய்வா ளென்பதை நேரிற் காண விரும்புகிறேன். அஃதெப்படி முடியும்? முடியாதே! மனிதப் பிறப்பில் இத்தன்மையான குணத்தோடு கூடிய ஒரு பெண் இருப்பளென்று நான் ஒரு நாளும் நினைக்கவில்லை. என்ன திட்பம்! என்ன தட்பம்! என்ன தூய்மை! என்ன வாய்மை! உள்ளும் புறம்பும் ஒத்திருக்கின்றனளே! செல்வத்திற் பிறந்தவளுமலலள். செல்வத்தை விரும்பு-வாளுமல்லள். தன் தொழிலையே விரும்பி நிற்பள்' என்று பலவற்றை நினைத்தார். அப்போது போது சாய்ந்தது. குளிர்ந்த காற்று வீசத் தொடங்கிற்று. இனிக் கடற்கரை யிலிருத்த லாகா தெனக் கருதி எழுந்து வீடு நோக்கி நடந்தார். நடந்துசெல்லும் போது, வழியில் ஒரு காகிதத் துண்டு காற்றி லடித்துக்கொண்டு வந்தது. முதலி-யார் குனிந்து அதை எடுத்தார். அதன்கண் என்னவோ எழுதப்பட்டிருந்தது. கையெழுத்து மிக அழகா

யிருந்தது. அதைப் படித்துப் பார்க்க முயலுமுன், ஒருவன் பின்பக்கமிருந்து வேகமாய் ஓடிவந்து வணக்கமாய், "ஐயா! அஃது எனது. எனது குறிப்புப் புத்தகத்திலிருந்து கிழிந்து விழுந்தது. அது பறந்து போகாதபடி எடுத்ததற்கு உங்களுக்கு அநேக வந்தனம்" என்றான். முதலியாரும் மிக்க வணக்கமாய் அதை அவன் கையிற் கொடுத்துவிட்டு அவன் வடிவத்தை நோக்கினார். அவன் நெடியனாய், உடற்கட்டுடையனா யிருந்தான். அவன் முகத்தில் ஞானவிளக்க மிருந்தது. அவன் கண்கள் பளபளப்பாயும் கூரிய பார்வையுடையனவாயுமிருந்தன: அவனுக்கு வயது முப்பத்தெட்டு நாற்பது இருக்கலாம். அவன் நடந்து கொள்ளும் விதம் மனத்தைக் கவரக் கூடியதும் இனியதுமாம. அவன் முகக் குறியால் முதலியாரைப் பற்றி ஏதேனும் அறிய விரும்பினானென்று சிறிதும தோன்றவில்லை. ஆனால், அவரை விரும்பும் கொள்கையனென்று தோன்றிற்று. முதலியார், "நீ கடற்கரையிற்றான் படிக்கிறதோ?" என்றார்.

"பெரும்பாலும அப்படித்தான். நான் ஓர் அறை எடுத்துக்கொண் டிருக்கிறேன். உண்பதும் உறங்குவதும் அங்குத்தான். அங்குப் போதிய வசதியில்லாமைபற்றி நான் இங்கு வந்து விடுகிறேன். அமுதவல்லி வீடுவரையும தங்கள் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு போகலாமோ?" என்றான்.

"நான் அங்கு வசிப்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்றார் முதலியார்.

"யாருக்குத் தெரியாது? கிராமம் முழுவதும் அதை அறியுமே. நான் இந்தக் கிராமத்திற்குப் புதியவனே.

இங்கு வந்து ஒருவார மாயிற்று. ஆயினும், எனக்கே அது தெரிந்திருக்கிறது: நீங்கள் கூடைகட்டுகிறவர் அல்லரா?"

"ஆம்" என்றார் முதலியார்.

"உங்களைப்பற்றி யான் எல்லாம் அறிவேன். என் பெயர் கருணாநிதி. நான் ஒரு பத்திரிகாசிரியன். மிக்க ஏழை. போகலாம், வாருங்கள்" என்றான். அவனுடைய மனத்தைக் கவரும் சீரிய வாக்கும், கூரியநோக்கும முதலியாருக்கு இன்பந் தந்தன. அவன் கையின்மேற் சாய்ந்து அந்தக்கிராமத்தைப் பற்றியும் அதன் தோற்றத்தைப் பற்றியும் சீதோஷ்ண நிலையைப் பற்றியும் உல்லாசமாய் வார்த்தையாடிக் கொண்டு வழிநடந்தார்.

"ஐயா, நான் மணியாடியிலிருந்து வருகிறேன். அந்த இடத்தில் செலவு அதிகமாயிருக்கிறது. என்னிடம் முந்நூறு ரூபாய் உண்டு. அது ஒரு வருஷத்திற்கு வரவேண்டும். உண்டி, உடை, உறையுள் எல்லாம் அதற்குள் ஆக வேண்டும்" என்றான் கருணாநிதி.

"நீ பத்திரிகாசிரியன் என்றாயே. இப்போது அந்தத் தொழிலில் இல்லையா ?"

"இல்லை, என்னைத் தள்ளிவிட்டார்கள். இரண்டுவருஷம் சேவித்தேன். ஒரு பிரபு செய்த குற்றத்தைப் பத்திரிகையில் எழுதினேன். அந்தப் பாவிப் பயல் என்னைத் தொலைத்து விட்டான். அச்சி யந்திரசாலைகளுக் கெல்லாம நான் அரட்டன் புரட்டனென்று தெரிவித்தான். அதனால் எனக்குத் தக்க தொழில் எங்கும் கிடைத்திலது. என்னிடம் அப்போது இருந்த இந்த முந்நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு அங்கிருந்து பெரும்பாலும் கால் நடையாகவே வருகிறேன்.

என்ன செய்வது? அது பன்னிரண்டு மாதம் வரவேண்டும். அதற்குள் எடுத்த நூலை எழுதி முடிப்பேன்."

"அஃதென்ன நூல்."

"அஃதொரு நவீனகம். அதனுற்றான் எனக்குப் பெயரும் பெரும் புகழும் வருமென்று நினைக்கிறேன்."

"நூல் நல்ல நூலே. ஆனால் எத்தனையோ நவீனகங்கள் இப்போது உலவுகின்றனவே."

"அவை நவீனகங்கள் ஆகா. அந்தக் கந்தைகளையா நவீனகங்கள் என்பது? அவற்றில் ஆபாசங்கள் நிரம்பியிருக்கின்றன. நூதனமான கற்பனைகளில்லை. கல்லையும் உருக்கும் சோக ரச புஞ்சமான வர்ணனங்களில்லை; நீதியுமில்லை, நேர்மையுமில்லை. என்ன நவீனகங்கள்!"

"நவீனகம் எழுதுவானேன்? நல்ல நூலாக எழுதலாகாதா?"

"நல்ல நூல் என்றால் எனக்கு இன்னதென்று தெரியவில்லை. விளங்கச் சொல்லுங்கள்."

"நல்ல நூல் என்றால் மதநூல்."

"ஆம். ஐயா! இந்த நாளில் முன்னோர்கள் ஈட்டிவைத்த முடியா முதல் போன்ற மதநூல்கள் எத்தனையோ உள. அவற்றையே படிப்பாரில்லை!"

இது நாஸ்திக மதம் பரவி நிற்கும காலமன்றோ? உரு மாறிய பிறப்புப் பிறந்துஞ் செத்தும் உழல்கின்ற, ஒன்றானும் ஊறுபடாப் பொன்றாத வுயிருண்டென்று சுருதி, யுக்தி, அநுபவங்களா லறிபவர் கோடிக் கொருவர் உண்டோ இல்லையோ என்று ஐயப்பட வேண்டி இருக்கிறது. அது நிற்க. இப்போது தெருக்கோடிக்கு வந்தோம், நான் இங்கு உங்களை விட்டுப் போகிறேன்."

"அப்பா! வீட்டளவும் வரவேண்டும். என்னோடு காப்பி குடிக்க வேண்டும். அமுதவல்லி உனக்கும் தருவாளென்பது நிச்சயம்."

"எனக்கு மாலையிற் காப்பி குடிக்கும் பழக்கமில்லை." என்றான் கருணாநிதி.

"ஒருவர் வருந்தி அழைத்தால், அப்போது குடிப்பதற்குத் தடை சொல்லலாமா?" என்றார் முதலியார்.

"வருந்தி அழைத்தால் தடையில்லை ஆனால் இங்கு என்னை வருந்தி யழைக்கும் நண்பர்களில்லை" என்றான்.

"நான் அழைக்கிறேன். அமுதவல்லியும் படித்த பெண். உன்னோடு வார்த்தை சொல்லப் பிரியப்படுவாள்" என்றார்.

"நான் ஒரு முறை அந்த மாதைக் கண்டேன். அவளுக்குஇந்த விடத்தில் அதிக மதிப்பிருக்கிறதாகத தோன்றுகிறது. அஃதிருக்க. என்ன அழகு! என்ன அழகு!"

"நீ அப்படி நினைக்கிறாய். நானும் அப்படி நினைக்கிறேன். நான் கிழவனாகலானும், அவள் என்மீது அன்பாயிருத்தலானும் நான் அப்படி நினைக்கிறேன் என்று எல்லாரும சொல்லுகிறார்கள்."

வீட்டு வாயிலண்டை வந்து சேர்ந்தார்கள். அமுதவல்லி அவர்களைக் கண்டு புன்னகை அரும்பினாள். முதலியார் கருணாநிதியின் உள்ளக் குறிப்பை யுணர வேண்டி, கீழ்க்கண்ணால் அவன் முகத்தை நோக்கினார். அப்போது கருணாநிதியின் பார்வை அவள் மீது நாட்டப்பெற் றிருந்தது. ஆயினும், அவன் உள்ளக் குறிப்பு நன்கு புலப்படவில்லை.

முதலியார் உட் சென்றதும் அமுதவல்லியை நோக்கி, "அம்மா, அமுதவல்லி! இவர் பெரிய படிப்பாளி. உலக நிலை யுணர்ந்தவர். உத்தம குணமுடையவர். என்னைப் பிடித்து அழைத்து வந்தார். இங்கு வரின், காப்பி தருவா யென்று சொன்னேன்" என்றார்.

"அதற் கென்ன? அப்படியே தருகிறேன்" என்று கூறி இருவருக்கும் நன்மொழி வழங்கி ஆசனத்திருத்திப் பின் அடுக்களை புகுந்து ஒரு பாத்திரத்திற் காப்பிக்கஷாயம் வார்த்துச் சீனியிட்டுப் பாலூற்றி வடித்தெடுத்து இரண்டு செம்புகளில் நிரப்பிக் கொணார்ந்தாள். அவ் விருவரும பெற்றுக் குடித்தார்கள். "ஐயா! இவரைக் கடற்கரையிற் றான் கண்டீர்களோ? அடிக்கடி அங்குத் தான் செல்வர். ஏதாவது நிதி கிடைக்குமென்று நினைத்துத் தேடி வருகிறார் போலும்" என்றாள்.

அப்போது முதலியார் "நான் அபபடிப்பட்ட எண் ணத்தோடு கடற்கரை செல்வதில்லை.

செனறோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தோ ரெல்லா முண்ணுதுஞ் செல்லார்

என்னுங் கலித்தொகை யடிகளை நான் படித்திருக்கி றேன். ஐசுவரியத்தைத் தேடுவதென்றால் ஒரு நாள் இரண்டு நாட்களில் முடிவதா? அதற்கு வருஷங்கள் செல்லும. நாடோறும் கோடிசுவரர்களைக் காண முடியு-மோ? முடியாது" என்றார்.

கருணாநிதி, "கோடீசுவரர்களா! அவர்களைப் பற்றிப் பேசவேண்டா. நான் அவர்களை அறவே வெறுக்கிறேன்" என்றான்.

"அப்பா, ஒருவரையும் வெறுக்கலாகாது, பாவம்! கோடீசுவரர்கள் தனித்தும் துயரத்திலாழ்ந்தும் இருக்கிறார்கள்" என்றார் முதலியார்.

"அவர்களுக்கு அதுவும் வேண்டும்; அதற்கு மேலும் வேண்டும். மோசத்தாலாதல் பிறர் உழைப்பாலாதல் பெருஞ் செல்வத்தைத் தேடுகிறார்கள். செல்வத்தைச் சேமத்தில் வைப்பது கூடாது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதன இருந்தால் போதுமென்பது எனது கொள்கை. ஒருவனுக்கு என்ன வேண்டும்? நாழியரிசிதானே ஒரு நாளைக்கு வேண்டும். 'உண்பது நாழி யுடுப்பன விரண்டே' என்று பெரியாரும் கூறவில்லையா?" என்றான் கருணாநிதி.

"வெற்றரிசியை வேகாமலா உண்ண வேண்டுமென்கிறாய்? அதைப் பாகஞ் செய்தற்குக் கருவிகளும் அதனோடு உடன் உண்ணப்படும் வியஞ்சனங்களும் வேண்டாவோ? இருக்க வீடும், படுக்கச் சயனமும் வேண்டாவோ?" என்றார் முதலியார்.

"அவை வேண்டும். திருஷ்டாந்தமாக, இந்த வீட்டை எடுத்துக்கொள்ளுங்கள். இதன்கண் உள்ளன வாழ்க்கைக்குப் போதியன. சிறிய வீடு, நாகப்பழம் போன்ற பழகின சட்டிபானைகள், பித்தளை செப்புப்பாத்திரங்கள், தட்டுமுட்டுகள், தலையணை மெத்தைகள்: இவை போதியன. இதற்குமேல் இவ்வுலகில் ஒருவருக்கும் ஒன்றும் வேண்டா" என்றான் கருணாநிதி.

"ஐயா! நெடுகப் புகழ்கின்றீர், இவ்வளவு புகழ்ச்சி வேண்டா. இஃதோர் ஏழைக் குடிலே, ஐயா!" என்றாள் அமுதவல்லி.

"தயை செய்து அப்படிக் கூறுதீர்" என்றான் கருணாநிதி.

"எப்படிக் கூற வேண்டா?" என்றாள் அவள்.

"என்னை 'ஐயா' என்று அழைக்க வேண்டா. நான் ஓர் ஏழைப் பயல்" என்றான்.

"ஏழையாயின் என்ன? பெருந் தன்மை யில்லையா?" என்றாள்.

"அஃதிருக்கலாம், இந்தப் பெரியவரைப் போலத் தான் நானும் இருக்கிறேன், ஆனால் அதைப் பிறர் வற்புறுத்திக் கூறினால், அது கேட்க நாங்கள் விரும்புவதில்லை. உள்ளது போகாது" என்றான்.

"அது மெய்யே, அஃதிருக்க. உன் சரித்திர முழுவதும் அமுதவல்லிக்குச் சொல். விருப்போடு கேட்பாள்" என்றார் முதலியார்.

கருணாநிதி, "அமுதவல்லி! நீ என் சரித்திரத்தைக் கேட்க விரும்புவாயா?" என்று வினவினான்.

"நிச்சயமாய் விரும்புவேன்."

"விசேஷமாக ஒன்றுமில்லை. ஆனாலும், மறைப்பதற்கு இரகசியமும் ஒன்றுமில்லை. சிலர் மறைத்து மறைத்து வைப்பார்கள், எனக்கு அது வெறுப்பு. உள்ளது உள்ளபடி இருக்கவேண்டும். தன்னையே இன்னொன்று காட்டாத ஒருவனும் உண்டு. அப்படிப்பட்டவனை நான் முற்றும வெறுக்கிறேன். ஐயா! நீங்களும் வெறுப்பீர்களென்று நினைக்கிறேன்."

"ஆம், கேட்பானேன்? அது சர்வ விகாரம்" என்றார் முதலியார்.

"ஒருவன் குற்றவாளியானால், தான் குற்றவாளியே என்று சொல்லவேண்டும். ஒருவன் நாஸ்திகனானால், தான் நாஸ்திக னென்றே சொல்லவேண்டும். ஒருவன் வறியனானால், தான் வறிய னென்றே கூறவேண்டும். ஒருவன் கோடீசுவரனானால், தான் கோடீசுவரனென்றே கூற-வேண்டும். குற்றவாளி குணவானைப போல நடிப்பதும், வறியன் செல்வனைப்போல நடிப்பதும், கோடீசுவரன் குடிக்கக் கஞ்சி யற்றவனைபபோல நடிபபதும் கூடா என்ன சொல்லுகிறீர், ஐயா, பெரியவரே!"

"நீ எப்போதாயினும் கஞ்சிக்கு அழுவதுபோல நடித்த கோடீசுவரனைக் கண்டது உண்டா? என் வரையில் நான் கண்டது இல்லை" என்றார் முதலியார்.

"நானும் கண்டது இல்லை. கோடீசுவரர்களெல்லாரும் பிரசித்தர்கள். அவர்களை யாவரும் அறிவார்கள். அவர்கள் படம் பத்திரிகைகளில் வெளிப்படுகின்றன. அவர்கள் மகா குரூபிகளா யிருக்கிறார்கள். நான் ஒரு கோடீசுவரனைக் கண்டது உண்டு. அவனை ஒரு சிறு குழந்தை காணுமானால் பயந்து நடுங்கும்! உடனே அதற்குக் காய்ச்சல் காணும்."

"அவன் யாவன்? அவன் பெயர் யாது?" என்றார் முதலியார்.

"ஊரைச் சொன்னாலும், பேரைச் சொல்லலாகாது. அவன் இருப்பது அமரகீயம். அவன் பெரிய சீமான்" என்றான் கருணாநிதி.

"உங்கள் சரித்திரத்தைச் சொல்லுங்கள். அவை இருக்க" என்றாள் அமுதவல்லி.

"உங்கள் அருமையான காலத்தை என் கதையைச் சொல்லிக் கழிக்க எனக்குப் பிரியமில்லை. ஆனாலும்

நண்பர்களோடு வார்த்தை சொல்லுதலைவிட இன்பம் வேறில்லையாகலின், ஒருவாறு அதைச் சொல்லுகிறேன். நான் செய்த புண்ணியம், எனக்கு ஒரு நாளும் மிதமிஞ்சிய ஆகாரம் அகப்படவில்லை; அதனால் என் உடம்பு பருக்கவில்லை. யான் வைத்தியர்களைத் தேடிச் செல்லவில்லை. நான் ஒரு பரம்பரை ஏழைக் குடியிற் பிறந்தவன். எனது தந்தைக்கு ஒரு செல்வன் வீட்டில் கூப்பிட்ட குரலுக்கு, ஏனென்னும் வேலை. போவென்கிற இடத்திற்குப் போகவேண்டும்; வா என்கிற இடத்திற்கு வரவேண்டும். அவர் குலத்தையும் குணத்தையும் நோக்கினால், அவருடைய செருப் பெடுக்கவும் அச்செல்வனுக்குத் தகுதியில்லை. எனக்குப் பத்து வயதானவுடன் நானும் அவருக்குத் துணையாயிருந்தேன்; உடன் உழைத்தேன். நான் பள்ளியிலிருக்கும் நேரம் தவிர மற்றை நேரங்களில் ஏதாவது இட்ட வேலைசெய்து இரண்டு அணா அல்லது கால் ரூபாய் கொண்டு வந்தேன். சில சமயங்களில் ஆபத்தான வேலைகளையும் செய்ய நேர்ந்தது. ஆயினும், நான் ஒன்றுக்கும் அஞ்சவில்லை. அன்றெழுதினவன் அழித்தெழுதா னென்கிற துணிவு எனக்கு உண்டு நான் ஆடவந்த கூத்தெல்லாம் ஆடினாலன்றி இறப்பது இல்லை என்று கொண்டேன். என்பால் சாதக விருத்தியில்லை. தந்திரமும் வஞ்சனையும் எனக்குத் தெரியா. என்னைப் படைத்தவன் அப்படிப் படைத்தான், நான் செய்த பாவம்'' என்றான் கருணாநிதி.

"ஏன் பாவ மென்கிறாய் ?'' என்றார் முதலியார்.

"உங்களுக்கு உலகம தெரியாது. தந்திரமும வஞ்சனையு மில்லை யானால், இந்த உலகத்தில் உயர்நிலைக்கு வர முடியாது; செல்வம் தேடவும் முடியாது. பெருஞ் செல்

-வர்களிடம் நெருங்கி அவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம துணையாய் நின்றும் அவர்களிடம் சமயோசிதமாகப் பேசியும் அவர்களை அத்தியாயம் அத்தியாயமாகப் புகழ்ந்தும் வருபவர்களானால், அவர்கள்பால் எதையும் பெறக்கூடும்'' என்றான் கருணாநிதி.

“ஆம், ஆம், அஃதுண்மையே. அதை நினைத்தால், என் வயிறு எரிகிறது'' என்றாள் அமுதவல்லி.

“அப்படியானால், நீங்கள் நினைக்கவேண்டா. பெருஞ்செல்வர்களைப் பற்றி உங்களுக்கென்ன? நீங்கள் அவர்களைக் காண நேராது. எனக்கும் அப்படியே. அவர்களைக் காண எனக்கும் இப்போது இடமில்லை. ஒரு வருஷத்திற்கு முன்னும் இரண்டொரு பிரபுக்களோடு பழகினேன். அது நிற்க. அப்படி ஒழிந்த வேளைகளில் இட்டவேலை எத்தன்மைத் தாயினும் செய்து கொடுத்து ஏதேனும் பெற்று என்தந்தையோ டிருக்கு நாளில் என் தந்தை இறந்தார். பூமியிற் பிறந்ததும் அன்னையை இழந்தேன். இப்போது பிதாவையும் இழந்தேன். ஆகவே, தன்னந் தனியனாயினேன். அப்போது தான் மணியாடியில் தர்மபாடசாலைகளும் தர்மகலாசாலையும் ஏற்பட்டன. நான் ஒரு தர்மபாடசாலையிற் சேர்ந்தேன். வருஷம் தவறாது மேல் வகுப்புக்கு மாறினேன். பரிசுகளும் பெற்றேன். சர்வகலா சங்கப் பிரவேச பரீக்ஷையிற் சிறப்பாகத் தேறினேன். அதன் பின், கலாசாலைக்கு வந்து படித்துப் பால பண்டித பரீக்ஷை, பண்டித பரீக்ஷைகளில் தேறிப் பட்டத்தொடு பதக்கங்களும் பெற்றேன். உடன் ஒரு பத்திரிகைச் சாலையில் அமர்ந்தேன். ஐயா, பெரியவரே! என் கதையெல்லாம் சொல்லுகிறேன். உங்களுக்கு ஒருகால் வெறுப்பா யிருக்கலாம். எப்போது

அமுதவல்லிக்கு வெறுப்புத் தட்டுகிறதோ, அப்போது எனக்குத் தெரிவியுங்கள்'' என்றான் கருணாநிதி.

''அமுதவல்லி! என்ன சொல்லுகிறாய்? போதுமா?'' என்று முதலியார் புன்சிரிப்பொடு வினவினார்.

''இல்லை, உலகிற் போராடிய ஒரு தைரியசாலியைப் பற்றிக் கேட்பது இனிதேயாம். விரிவாகச் சொல்ல வேண்டுகிறேன்'' என்றாள் அமுதவல்லி.

கருணாநிதிக்கு முகங் கறுத்தது. ''நான் தைரியசாலி யல்லன். சில விஷயங்களில் என்னைப் போன்ற கோழை வேறொருவன் இரான்'' என்றான்.

''எந்த விஷயங்களில்?'' என்றாள் அமுதவல்லி.

''நான் சொல்லுகிறேன்; நகையாட லாகாது. பெண்கள் விஷயத்தில் எனக்கு நடுக்கம், மிக்க நடுக்கம்''என்றான்.

முதலியாருடைய கண்கள் ஒளிசெய்தன. நீ வேடிக்கைக்கு அப்படிச சொல்லுகிறாய். யார்தாம் இதை நம்புவார்கள்?'' என்றார்.

''பெண்களைக் கண்டால் வெட்க முண்டாகு மென்று நான் சொல்லவில்லை. ஒரு பெண்ணால் எனக்கு நேர்ந்த துன்பம் அத்தகையது. நான் ஏமாறிப்போனேன். அதைப் பற்றிப் பின்பு சொல்லுகிறேன். முன்பு எடுத்த கதையை முடித்துவிடுகிறேன். சர்வகலா சங்கப் பட்டத்தைச் சுமந்து நின்றது தவிர வேறொன்றுங் காணவில்லை. கலாசாலைப் போதகாசிரியர் ஒருவர் என்மீது வைத்த பிரியத்தால் ஒரு பத்திரிகாசிரியருக்கு என்னைப்பற்றி எழுதினார். சொற்ப வேதனத்திற்கு அப் பத்திரிகாசிரியர் வேலையி லமர்த்திக் கொண்டார். வேலை நிர்ப்பந்தமானது. கஷ்டத்திற்குத் தக்க பயனில்லை. ஆயினும், அந்த இடத்தில் தான்

எனக்கு இறகு முளைப்பதாகத் தோன்றிற்று. ஒழிந்த வேளைகளில் ஏதாவது கவிகளோ கதைகளோ எழுதி விற்றேன். அதனால். விசேஷ ஊதியம் வரவில்லை யாயினும், ஊக்கம் பிறந்தது. இந்த நிலையி லிருக்கும்போது ஒரு பெண்மீது காதல் கொண்டேன்" என்றான் கருணாநிதி.

"அப் பெண் உங்கள்மீது காதல் கொண்டாளோ ?" என்று சிறுநகையோடு கேட்டாள் அமுதவல்லி.

"முதலில் அவள் என்னைக் காதலித்தா ளென்றே நினைத்தேன். அவளும் அவள் அன்னையும் மணியாடிப்பிலிருக்கிற தமது நெருக்கமான பந்து ஒருவன் வீட்டிற்கு வந்து இரண்டு மூன்று மாதம் தங்கி இருந்தார்கள். அவளுக்கு முன்பின்னாக இருபது பிராயம் இருக்கலாம். அவள் மகா ரூபவதி. அவள் அழகை நோக்கின், இரதி அவளுக்குப் பணிப்பெண்ணாகவும தகாளென்றே சொல்லலாம். அவள் குணம் வெளிப்படும் வரையில், நான் அவளைத் தேவதாமசமென்றே நினைத்தேன். ஒருநாள் அவளோடு கலந்து வார்த்தையாடியபோது, "நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ என்னைக் காதலிக்கிறாயோ ?" என்று கேட்டேன்.

அவள் கலகலவென்று நகைத்து, 'காதலுண்டென்று நான் நம்பவில்லை' என்றாள்.

'மற்றெதைத்தான் நம்புகிறாய் ?' என்றேன்.

'பெருஞ் செல்வனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுகிறேன்' என்றாள்.

'ஆனால், என்னை மணந்துகொள்ளாயா ? நீ சிறுமி தானே. சில வருஷங்கள் பொறுத்திரு. சீக்கிரம் நான்

பிரசித்த ஞேவே னென்று நினைக்கிறேன். பின் என்னை மணந்துகொள்' என்றேன்.

'இல்லை, இல்லை, நான் ஒரு கோடீசுவரனை மணந்து கொள்ளப் போகிறேன்' என்றாள்.

"இதனாற்றான் கோடீசுவரர்களென்றால் எனக்கு ஆகிறதில்லை" என்றான்.

அப்போது முதலியார், "அவள் பெயர் என்ன?" என்று வினவினார்.

"அவள் பெயர் குமுதவல்லி" என்றான் கருணாநிதி.

இது கேட்டதும முதலியாருக்கு மயிர் சிலிர்த்தது. அவருக்கு உண்டான ஆசசரியத்திற்கு அளவில்லை. ஆயி-னும், தமக்கு உண்டான மனோவிகாரத்தை அவர் வெளிக்-காட்டவில்லை.

"அதற்குமேல் என்ன நடந்தது?" என்றார்.

"தனது தாய் தந்தையர்கள் அந்தக் கோடீசுவரனுக்-குத் தான் மனைவியாதற்குத் தகுதி பெறத் தனக்கு வேண்-டிய கல்வியும் சங்கீதமும கற்பித்தற்குத் தமது கைப்-பொருளை எல்லாம் செலவழித்தார்களென்றும், எப்படி-யாவது அந்தக் கிழவரை வலையிற் போடவேண்டியது என்றும், கிழவருக்குத் தன் வயதிற்கு மும்மடங்கிற்கு மே லாகிற தென்றும் சொன்னாள்" என்றான் கருணாநிதி.

"நல்லது, அந்தக் கிழவனை அவள் மணந்தாளா?" என்றார் முதலியார்.

"இல்லை, இன்னும் இல்லை. மணந்திருந்தால், சமா-சாரப் பத்திரிகைகளில் அடிபடாதா? அவன் எங்கேயோ போயிருக்கிறா னென்று கேள்வி."

"அவன் பெயர் உனக்குத் தெரியுமா?"

"அவன் பெயரை அறியாதார் யார்? அவன் பெயர் ராஜா முருகப்ப முதலியார் என்கிறார்கள்."

"நீ அவனைப் பார்த்தது உண்டா?"

"நான் அவனைப் பார்த்ததுமில்லை; அவனைப் பார்க்க விரும்பவுமில்லை. அந்தத் துரோகி முகத்தில் விழிக்கவும் ஆகாது."

"நீ அவனைக் கல்யாணஞ் செய்திருந்தால் உன் வாழ்க்கை துன்ப வாழ்க்கையாய் முடிந்திருக்கும். உனது நற்காலம், நீ தப்பினாய்."

"அதற்கென்ன சந்தேகம். ஒருவன் முன்னுக்கு வர வேண்டும்போது, காதலில் அகப்படுவதைவிடச் சுவேச்சையாயிருத்தலே நலம்."

"அப்படிச் சொல்லாதே. காதலைவிடச் சிறந்ததொன்று இவ்வுலகில் உண்டா?" என்றார் முதலியார்.

அமுதவல்லி அவரை நோக்கி, "அண்ணா! உங்களுக்கு வாலிபம் திரும்புகிறது. நீங்கள் கல்யாணஞ் செய்துகொள்ளுங்கள். மனைவி எப்படி நடந்துகொள்ளுகிறாளென்பது தெரியவரும்" என்றாள்.

"அம்மா, அமுதம்! மனைவிமார்க்குத் தங்கள் கணவர்களைப்பற்றிக் கவலை கிடையாது. யான் கண்டவளவில் கணவனைப்பற்றிக் கவலை கொள்ளும் ஒருத்தி இல்லை என்றே சொல்வேன். அப்பா! அப்பா! இன்னுமொரு ஜன்மத்திலும் எனக்குக் கல்யாணம் வேண்டா."

"நானும் கல்யாணம் செய்துகொள்ளேன். ஒருமுறை கல்யாணம் நடப்பதாயிருந்தது. ஒருவன் என்னைக் காதலிப்பதுபோலக் காட்டினான். நானும் அவனைக் காதலித்தேன். எனது தந்தைக்கு நஷ்டம் வந்தது என்று தெரிந்-

தனும் என்னை நிராகரித்தான். அதனோடு கல்யாணம் செய்துகொள்ளும் ஆசை எனக்கு ஒழிந்தது" என்று கூறிக் கருணாநிதியை நோக்கி, "உங்கள் கதையை முடித்தீர்களா? இன்னும் இருந்தால் கேட்க விரும்புகிறேன்" என்றார்.

"அதிகமில்லை. இதோ முடிக்கிறேன். அந்தப் பெண் என்னை நிராகரித்ததால் எனக்கு ஊக்கம மிக்கது. எப்படியேனும் உழைத்துப் பொருள் தேட முயன்றேன். அப்படி இருக்கையில், என் வேலைக்கே மோசம் வந்தது. ஒரு பிரபு செய்த குற்றத்தைப் பகிரங்கப் படுத்தினேனென்று அவன் வேலையிலிருந்து என்னை நீக்கிவிட்டான். அதுமுதல் நகரத்தை விட்டுக் கிராம வாசஞ் செய்து வந்தேன். ஒரு குடிலிற் குடியிருந்துகொண்டு ஒரு நூல் எழுதி வருகிறேன்; இந்தக் கிராமம கடற்கரையி லிருப்பதால், இங்குத் தங்கலாமென்று கருதி வந்தேன். ஒரு வாரமாய இங்குத் தான் இருக்கிறேன். இதுவே எனது கதை நேரமாகிறது. இப்போது ஏழுமணி இருக்கலாம். பெரியவருககு உறக்கம் போதும். நான் போய்வருகிறேன்" என்றான் கருணாநிதி.

"இல்லை, எனக்கு உறக்கம் இல்லை. நன்றாக விழித்துக்கொண் டிருக்கிறேன். உனது கதையைக் கேட்க விரும்புகிறேன்; உன்னையும் விரும்புகிறேன். ஒழிந்தபோது இங்கு வநது வார்த்தையாடிவிட்டுப் போவாய் என்று நம்புகிறேன்" என்றார் முதலியார். கருணாநிதி போன பின் அவர் அமுதவல்லியை நோக்கி, "அம்மா! அவனைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்றார்.

"சிறிது நேரம் வார்த்தை சொன்னால் ஒருவர் குணத்தை அறிய முடியுமா? ஆனால் இவர் நல்லவரென்றே நினைக்கிறேன்."

"நானும் அப்படியே நினைக்கிறேன்."

"உங்களுக்கு நல்ல துணைவர் அகப்பட்டார். அவர் சல்லாபத்தால் காலம் கழிவது தெரியாது. நீங்கள் இப்போது ஆயாசமாயிருக்கிறது போலத் தோன்றுகிறது. புத்திக்கு அதிக வேலை கூடாது."

"கருணாநிதி தன் கதை முழுவதும் ஒன்றும் ஒளியாது சொன்னான். இல்லையா.?"

"ஆம், அவர் கள்ளங் கவடில்லாதவர் தாம்" என்றாள்.

"என்னைப்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா?" என்று வினவினார் முதலியார்.

"தெரியாது. தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணம் எனக்கு உதிக்கவே இல்லை."

"ஏன்.?"

அமுதவல்லி விலாப் புடைக்க நகைத்து, "உதிக்கவில்லை. அஃது என்னவோ?" என்றாள்.

"அமுதம்! நான் உனது தந்தையின் நண்பனல்லனென்று அறிவாய். அவரை நான் பார்த்ததே இல்லை என்றும அறிவாய்."

"ஆம், அறிவேன்."

"அப்படி இருந்தும், என் கதையை நீ ஒரு சிறிதும் கேட்கவில்லையே!"

"அண்ணா! நான் தகாத கேள்விகள் கேட்பதில்லை. உங்களைப் பார்த்தால், எனது தந்தையைப் போலிருக்கிறீர்கள். உங்களை இத்தனை நாளாய்க் கவலையோடு பாதுகாத்தேன்.

நீங்கள் இப்போது எனக்கு அந்நியராகத் தோன்றவில்லை. பழக்கம் ஏறிவிட்டபடியால், உங்களைப் பிரியவும் இனி விரும்பேன். உங்களுடைய நிறையையும் பொறையையும் நன்றியறிவையும் நோக்க, எனக்கு உங்களிடத்தில் மிக்க பற்றுண்டாயிற்று. இதற்கு என்ன சொல்லுவீர்?" என்றாள் அமுதவல்லி.

"இன்னது சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. இறைவன் உனக்கு இன்னருள்புரிக என்பதன்றி வேறென்ன சொல்வது?"

"ஆகவே, எனக்கு உங்களைப் பற்றி ஒன்றும் தெரிய வேண்டா. பாவம்! கருணாநிதி மிக்க ஏழைமை நிலையிலிருக்கிறார். அவருக்கு நாம் இரண்டிலே மூன்றிலே நல்ல சாப்பாடு போட வேண்டும்"

"அமுதம! 'நாம்' என்று சொல்லாதே; 'நான்' என்று சொல். நான் பரதேசி; அகதி. உனக்குக் கொடுக்கவேண்டிய கடனிற் பாதியும் இன்னும் செலுத்தவில்லையே! நான் என்ன சாப்பாடு அவனுக்குப் போடப் போகிறேன்?" என்றார்.

"உங்கள் கடனைக் கழித்துக்கொண்டு தான் வருகிறீர்கள். நீங்கள் சம்பாதிப்பதை எல்லாம் நான் தானே இனி வாங்கிக் கொள்ளப் போகிறேன். ஒரு காசும் விடமாட்டேன்" என்றாள்.

"தெய்வங் கூட்டுவித்தால், அன்பு வழி காட்டினால், அப்படியே ஒரு காசும் விடாது என் உடைமை எல்லாம் நீ பெறுக" என்றார் முதலியார்.

அத்தியாயம் - 9

சில மாதங்கள் கழிந்தன. கார்காலம் வந்தது. முதலியார் வரவர அழகான கூடைகள் கட்டுவதில் கைதேர்ந்தார். கருணாநிதி தனது நூலை எழுதுவதில் முனைந்து நின்றான். அடிக்கடி ஒழிந்த வேளைகளில் அமுதவல்லி வீட்டிற்கு வந்து உல்லாசமாய் உரையாடிப் போவான். அடிக்கடி நல்லுணவும் அளிக்கப் பெறுவான் நாளடைவில் தான் இயற்றிய கவிகளிற் சிலவற்றைச் சமயோசிதமாக எடுத்துக் கூறினான். அமுதவல்லி அவற்றின் சொன்னயமும் பொருளமைதியுங் கண்டு வியந்தாள். பின்பு, அவன் எழுதிவரும் நூலைத் தனக்குப் படித்துக் காட்டும்படி கேட்டாள். அவன் அப்படியே செய்தான். அதன் சுவை கண்டு மகிழ்ந்தாள்; இடையிடையே சிற்சில யோசனைகள் கூறினாள். அவற்றை உளங்கொண்டு கதையை ஆங்காங்கு மாற்றி அவள் மதிநுட்பத்தை வியந்து பாராட்டிப் புகழ்ந்து உரையாடினான். ஒரு நாள் அமுதவல்லி கோயிலுக்குப் போயிருக்குஞ் சமயத்தில் கருணாநிதி அவள் வீட்டிற்கு வந்தான். முதலியாரைக கண்டு, "ஐயா, ஏன் இந்த ஊதைக் காற்றில் வெளியே நிற்கிறீர்? அமுதவல்லி பார்த்தால் என்ன சொல்லுவாள்?" என்றான்.

"அமுதம் வீட்டிலில்லை; கோயிலுக்குப் போயிருக்கிறாள்" என்றார் முதலியார்.

கருணாநிதி ஏமாறியவனைப் போல விழித்து, "அமுதவல்லி யின்றி வீடு ஒருவகையா யில்லையா? அதன்கண் எல்லா மிருந்தும், அவள் ஒருத்தி இல்லாமையால் மங்கள

யில்லை. அது தாமரை யில்லாத பொய்கையையும் சந்திர னில்லாத வானத்தையும் இப்போது ஒத்திருக்கிறது" என்றான்.

முதலியார் முறுவல் செய்து மௌனமா யிருந்தார். மறுபடி கருணாநிதி, "ஐயா! அவள் ஒரு விசித்திரமான பெண். அவளிடம் ஒரு சக்தி இருக்கிறது; அதனை அவள் அறியாள்" என்றான்.

"அஃது என்ன சக்தி?" என்றார் முதலியார்.

"எந்தச் சக்திக்கு இரசவாதிக ளெல்லாம் வீணில் அலைந்தார்களோ அந்தச சக்தி. இரும்பைப பொன்னாக்-கும் சக்தி. உண்டதே உண்டு கண்டதே காணும்- என்றும் ஒரு படித்தான-வாழ்க்கைக்குப் புதுமை தரும் சக்தி. இப்-படிப்பட்ட பெண் உலகின்கண் இருப்பாளென்று நான் நினைக்கவில்லை. இக்காலத்துப் பெண்கள் செய்யும் வஞ்-சனைகளை நினைத்தால், அடக்கமும் அமைதியுமான வாழ்க்-கையை இவ்வளவு இனிமையாக நடத்தும் ஒரு பெண்மணி-யைக் காண்பது அதிசயமன்றோ? முன்பு குமுதவல்லி யென்னும் ஒரு பெண்ணைப்பற்றிச் சொன்னேனே. அவ-ளுக்கு என்ன ஆசை! பரி கட்டினுந் தீராது, கரி கட்டி-னும் தீராது; மேருவானும் தீராது, தாருவானும் தீராது. அப்படி யிருக்க, இவளிடம் என்ன அமைதி! என்ன அமைதி! இவளுக்குப் பெயருக்குத் தக்க குணமிருக்கிறது. 'அலையிடைப் பிறவா அமுதே என்கோ!' என்னும் அடி இவளைப பார்க்கும் போதெல்லாம் என் ஞாபகத்திற்கு வருகிறது. எவன்தான் இப்படிப்பட்ட பெண்மணியை மணந்து கொள்ளான்!" என்றான்.

"நீ மணந்து கொள்வாயா?" என்றார் முதலியார்.

"கேட்கவும் வேண்டுமோ? கரும்பு தின்னக் கைக் கூலியோ? பால் குடிக்கக் கால் பிடிப்பதோ? அதைப்பற்றித் தங்களிடம் பேச இருக்கிறேன். எனக்குத் தாங்கள் சகாயம் செய்யவேண்டும்."

"அப்பா! எனக்குப் பயமா யிருக்கிறது. அந்த வேலை என்னால் முடியாது. நீ நேராகவே பேசிக்கொள்."

"நான் அப்படியே செய்கிறேன். தாங்கள் எனக்காக வேறொன்றும் செய்யவேண்டா. அவளுக்கு என் மீது பிரிய மிருக்கிறதா என்று தெரிந்து சொல்லுங்கள். என்னை மணந்து கொள்ளும் எண்ணம் அவளுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"ஒருவனும் தன்னை விரும்பா னென்றே முடிவு செய்துவிட்டாள்" என்றார் முதலியார்.

"ஒருவனும் விரும்பாமை எனக்கு அநுகூலமே. அவள் என் உயிரினும் இனியவள்; ஒருபோதும் என் ஆசை மாறாது."

அவன் அன்பையும், துன்பையும், வன்மையும் அறிந்த முதலியார், "நீ அவள்மேல் மிக்க அன்பு வைத்திருக்கிறாய்!" என்றார்.

"பயன் என்ன? ஒரு வருஷ தேக யாத்திரைக்கு வேண்டிய பொருள் இருக்கிறது. அதற்குமேல் ஒரு காசும் இல்லை. நான் அன்பு வைத்து என்ன! அவள் என்னை மணந்து கொள்வா ளென்று தெரிந்தால், அது மிக்க ஊக்கத்திற்கு இடமாகும். எனது நூல் விரைவில் முடியும். நீங்கள் அவள் அபிப்பிராயம் அறிந்து சொன்னால், அதுவே எனக்குப் பேருபகாரம்."

"அறிவது எப்படி?"

"நீங்கள் வார்த்தை சொல்லிக்கொண் டிருக்கும் போது தக்கபடி விஷயங்களைக் கோத்து, 'உனக்கு மணம் புரிய மனமுண்டா?' என்று கேளுங்கள்."

"அது கேட்டாயிற்று, அவள் 'இல்லை' என்றே விடை பகர்ந்தாள்."

"மறுபடி கேளுங்கள். அப்போது என்னைப் பற்றிய பேச்சு ஏதாவது எடுங்கள்."

"உன்னை மணந்துகொள்ளப் பிரியமில்லை என்று சொல்லி விடுவாளானால், என்ன செய்வாய்?"

"செய்வது என்ன! எடுத்த நூல் முடியப் போகிற தில்லை நான் ஏழை; அமுதவல்லியை விட ஏழை. எனது நூலை விற்று இரண்டாயிரம மூவாயிரம் ரூபாய் சம்பா-திப்பேனானால், என்னை மணந்து கொள்ளுமபடி அவளைக் கேட்பேன். எனக்கு இதை விடப் பெரிய வீடு வேண்டா. என்னை அவள் கணவனாகக் கொண்டு இதன்கண் வாழ்வா-ளானால், எங்கள் வாழ்க்கையைக் கண்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் யாவரும் பொறாமைப் படுவார்கள். அப்படி உடலும உயிரும் போலவும, நகமும் சதையும் போலவும் ஒதது வாழ்வோம். எல்லாம அவள் என்னை விரும்பினாற்-றான்."

"மெய்தான். வஞ்சனை இன்றி என்னால் ஆன உதவி-யைச் செய்வேன்."

கருணாநிதி இது கூறியவுடன் முதலியாரிடம் விடை-பெற்றுச் சென்றான். அவன் காதற் சிறப்பையும் கவலைப் பெருக்கையும் தைரியத்தையும் உள்ளவாறு உணர்ந்த முதலியார் மனம் களித்தார். என்ன காதல்! என்ன

காதல்! தாம் இறக்குமுன் இருவருக்கும் மணம் நடப்ப-தைக் கண் குளிரக் காண வேண்டும் என்று தீர்மானித்தார். தமக்கு மரணகாலம் நெருங்கினதாக ஒரு காரணமு மின்றி நெஞ்சிற் பட்டது. தமது செல்வத்திற்கு ஓர் ஏற்பாடு ஆக வேண்டுமே என்று பரிந்தார்.

அந்தச் சமயத்தில் கோயிலுக்குப் போன அமுத-வல்லி வீடு வந்து சேர்ந்தாள். "அம்மா, அமுதம்! சுவாமி தரிசனம் ஆயிற்றா?" என்றார்.

"அண்ணா! ஆயிற்று. எனது தந்தையைப் போலவே கேட்டீர்கள். நீங்கள் என்னைவிட்டு ஒருகாலும் பிரிந்து போகலாகாது. போவீர்களானால், நான் ஆற்றாது என் வாழ்-நாள் எல்லாம் வருந்துவேன். எனது கடனை யெல்லாம் நீங்கள் செலுத்திய பின்னும் இங்குத்தான் இருக்கவேண்-டும். என்னைப்போல யாவர் தங்களை உபசரிப்பார்கள்?" என்றாள் அவள்.

"அஃது எனக்குத் தெரியும், அம்மா! என் ஜன்மத்-தில் இதுவரை இபபடிப்பட்ட உபசரணை எனக்கு நடந்த தில்லை, அம்மா,! கருணாநிதி நான் மிக்க அதிர்ஷ்டசாலி என்று சொல்லுகிறான். அவன் உத்தமன். அவனுக்கு வயது முப்பது இருக்கலாம். பாவம்! இன்னும் விவாகம் ஆகவில்லை. விவாகம் ஆகுமோ ஆகாதோ?"

"அவர் விவாகம் செய்து கொண்டால், உள்ளபடியே தம்மைக் காதலிக்கும் குணவதி யாகிற ஒரு சிறுமியைத் தேடிச் செய்து கொள்ளவேண்டு மென்பது எனது கோ-ரிக்கை. அவர் படித்தவர், விஷயங்களின் உண்மை அறிந்-தவர், ரஸஞ்ஞர். உயர்ந்த பதவிக்கு வரத் தக்கவர்" என்-றாள் அமுதவல்லி.

"நீ அப்படி நினைக்கிறாயா?"

"அந்த விஷயத்தில் எனக்குச் சந்தேகம் சிறிதும் இல்லை."

"தன்னைக் காதலிக்கும் குணவதியாகிற ஒரு சிறுமியை அவன் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று நீ விரும்புகிறாய்? காதல் என்பதன் இயல்பை நீ அறிவாயா?" என்று வினவினார் முதலியார்.

"நான் அதனை அநுபவித்து அறிந்ததில்லை. முன்பு நான் ஒருவனை மணந்துகொள்ள நினைத்தேனென்று சொன்னேன். அவனிடம் எனக்குக் காதல் பிறக்கவில்லை. அடிக்கடி அவனைக் கண்டும் உரையாடியும் வந்ததனால் பிறந்த மோகம் அது. அஃது ஒரு சித்தவிகாரம். நான் நினைக்கிறபடி காதல் வேறு. அஃது என்றும் குன்றுவது அன்று. நான் எவனையாவது காதலித்திருந்தால், அவன் சம்பந்தங் கொள்ளாத காரியத்தைக் கனவிலும் நினையேன்; சூரியன் கிரணம் ஒவ்வொன்றிலும் அவன் பார்வையைக் காண்பேன்; இனிய ஓசை ஒவ்வொன்றிலும் அவன் இன்பக் குரலைக் கேட்பேன்; தனியே இருந்து ஒரு புத்தகத்தைப் படிப்பேனானால், அதனுள் எந்த வாக்கியம் அவனுக்குக் களிப்பைத் தருமென்று ஆராய்வேன்; அவனாலும் அவனுக்காகவும் நான் உயிர் வாழ்வேன்; எனக்குக் கண்ணும் கருத்தும் கடவுளும் அவனாய் இருப்பான்" என்று கூறிக் கதறி அழுதாள்.

"ஏன், அம்மா, அழுகிறாய் அழாதே" என்றார் முதலியார்.

"அண்ணா, நான் அழவில்லை. எனக்கு அந்த விஷயத்தைப் பற்றிப் பேசினதால் ஒருவித உணர்ச்சி உண்டா

யிற்று. காவியங்களைப் படிக்கும்போதும் உருக்கமான பாட்டுக்கள் நேர்ந்தால், இத்தகைய உணர்ச்சி எனக்கு உண்டாவது வழக்கம்'' என்றாள் அமுதவல்லி.

"அம்மா! அமுதம்! உனக்குத் தெரியவில்லை. உனது உள்ளத்தைப் போலக் கனிந்த உள்ளம் வேறொன்றும் இவ்வுலகில் இராது. நான் அறுதியிட்டுச் சொல்லுவேன்'' என்றார் முதலியார்.

"எனக்கு இளகிய மனம் உண்டு. அதனாற்றான் அநர்த்தம் வந்தது! நான் காதலிப்பேன்; என்னைக் காதலிப்பார் ஒருவரைக் காணேன். பெற்ற பிதாவினிடம் சொல்வது போலச் சொல்லுகிறேன். என்னை யாரேனும் காதலிப்பார்களோ என்று பன்முறை நான் ஏங்கியது உண்டு. கருணாநிதி யாகிய கடவுள் மகிழ்நனையும் மக்களையும் தரவேண்டுமென்று பிரார்த்தித்ததும் உண்டு. கைக்குக் கனமாக ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, அதற்குத் தாலாட்டிப் பாலூட்டி வளர்க்க விரும்பினேன்.

இப்போது அப்படிப்பட்ட எண்ணங்கள் கொள்வதில்லை. இனிமேலா எனக்குக் கல்யாணம்? பாதி வயது ஆயிற்று; பணமும் கையில் இல்லை. எனது கரை கொள்ளாத காதல் பயன் கொள்ளாது பாழாயிற்று!''

"பாழாயிற்று! காதலா பாழாயிற்று! காதல் ஒரு காலத்தும் பாழ்படாது. உன் உள்ளக் கனிவின் பயனை நீ இன்னும் சில நாட்களில் உற்றுணர்வாய். அது நிற்க. உன்னைப் போலவே கருணாநிதியும் ஒரு பெண்ணின் போலிக்காதலைக் கண்டு பொங்கி வழிந்து முடிவில் ஏமாறிப் போனான்.''

“நான் இளமையும் செல்வமும் வாய்ந்த ஒரு சிறுமி-யாயிருந்து, கருணாநிதி போன்ற ஒரு குணவான் என்னைக் காதலித் திருந்தால், அப்படிப்பட்ட கணவனைத் தந்ததற்-குக் கடவுளுக்கு வணக்கம் செலுத்தி இருப்பேன். எத்தனை வருஷங்கள் என்னைப் பொறுத் திருக்கும்படி கேட்டாலும், பொறுத்திருப்பேன். என்னால் ஆன சகாயங்களைச் செய்து உற்சாகமும் ஊக்கமும் கொள்ளும்படி செய்திருப்பேன்” என்றாள் அமுதவல்லி.

“கருணாநிதியைப் போன்ற வரனைப் பெற்று வாழ எவள்தான் விரும்பாள். நீ இன்னும் சிறிது இளையவளா யில்லையே. நீயே அவனைக் காதலித் திருக்கலாமே!” என்றார் முதலியார்.

‘ஆம, அதைப்பற்றி இப்போது நினைத்து என்ன பயன்?” என்று சொல்லிவிட்டு வீட்டு வேலைகளைப் பார்க்-கப் போனாள்.

“நிறை செல்வமிருந்தால், இப்படிக் காதலில் நமபிக்-கை பிறவாது.நல்ல காலம,கருணாநிதியை மணந்துகொள்ள இசைவா ளென்றே அவள் வார்த்தையால் தெரிந்தது.' இனி, நாம் சும்மா இருகக லாகாது. அவனை அவளோடு அதற்கு ஒத்தபடி வார்த்தை சொல்லும்படி தூண்டவேண் டும. ‘சுபஸ்ய சீக்ரம்’ என்னும் ஒருவட சொற் பழமொழி. கலப்பற்ற காதல் கைகூடி வருதலே அரிது. அது கைகூடி வரும்போது அதனைப் போற்றிக் கொள்ளாது தாமதிக்-கவும் கூடுமோ! காதலின்றி வாழ்தலாற் பயனில்லையே!' என்று நினைத்து, “சர்வேசா! எனது வாழ்நாளில் பெரும் பாகத்தை வியர்த்தமான காரியங்களில் ஒழித்தேன். முடி

வில், காத லின்பம் கைகூடிற்று. எனது நன்றி யறிவைக் காட்டும்வரை என்னை இவ்வுலகில் வைத்திரும். அதன்பின் மரணம வரின், கவலையின்றி மரிப்பேன்" என்று கடவுளைப் பிரார்த்தித்தார்.

இராப்போசனம் உண்டு சயனத்திற் படுத்தார்; உறக்கம் இல்லை. எப்பொழுது விடியப் போகிற தென்று ஆவலுடன் எதிர்பார்த்தார். மறுநாள் சூரியோதயத்திற்குச் சிறிது முன்பே எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துச் சிற்றுண்டிகொண்டு கருணாநிதி வருவானு என்று பார்த்திருந்தார். மணி எட்டு ஆயிற்று. கதவைத் தட்டினுன் கருணாநிதி. முதலியார் ஓடி வந்து கதவைத் திறந்தார். "வா, அபபா! ஏன் இத்தனை நேரம்! வருவாய், வருவாயென்று எதிபார்த்து நின்றேன்" என்றார்.

"என்ன ஐயா! விசேஷம் ஏதேனும் உண்டா?"

"விசேஷம ஒன்றுமில்லை. நான் அமுதவல்லியின் அபிப்பிராயத்தை அளந்தேன். அவள் இசைவா ளென்றே நினைக்கிறேன். இனி, நீ நேரே பேசி முடித்துக்கொள். தாமதியாதே."

"நீங்கள் வேடிக்கைக்குச் சொல்லுகிறீர்கள்" என்றான் கருணாநிதி.

"இந்த வயதிலா எனக்கு வேடிக்கை? இதுவரையும் அப்படி எப்போதாவது வார்த்தை சொல்லி இருக்கிறேனு? நான் தொண்டு கிழவனுய், தன்னந் தனியனுய், திக்கற்றவனுயிருந்தும்; இந்த மங்கையர்க் கரசியைக் காணு முன்னும், எனக்குக் காதலே மற்றெல்லாவற்றினும் சிறந்த தெனவும், பொன்னினும் மணியினும் போற்றத் தகுந்த தெனவும்

வானுலகிற் சேமிக்கும் வளநிதி யெனவும் அறிவேன். நான் நாடோடியாகத் திரிந்து கொண்டிருந்தவனாகலின், எனக்கு உணர்ச்சி இல்லை என்று நினையாதே'' என்று மேல்மூச்சு வாங்க ஆவேசத்தோடு கூறினார். முதலியாருக்கு இரத்தாசயம் பலஹீனப் பட்டிருக்கிறதென்று அமுதவல்லி சொல்லி இருந்தபடியால், கருணாநிதி நடுநடுங்கி அவர் அருகில்வந்து, "ஐயா! மனஸ்தாபம வேண்டா. தங்களுக்கு உணர்சசி உண்டென்று நான் நன்கு அறிவேன், உடம்பை அலட்டவேண்டா. அமுதவல்லிக்குத் தெரிந்தால், இக் குற்றத்தைப் பொறாள். அவள் என்னை உண்மையாகக் காதலிக்கிறாளென்று அறிவது எனக்குப் பேரின்பந் தானே. அப்படிக் காதலிப்பாளானால், இந்த உலகத்தை நான் வெல்வேன். இன்னும் ஒரு முறை, இரண்டுமுறை பரீக்ஷித்துப் பாருங்கள். அவள் எண்ணம் நன்றாக வெளியானல், நல்லதுதானே'' என்று சொல்லி விடை பெற்றுச் சென்றான். முதலியார் தனியே இருந்தார். இப பிறப்பில் பெற முடியாதென்று நினைத்ததொன்றைப் பெற்றார். அது வேறொன்றிற் கன்றித் தமக்காகவே தம்மை விரும்புதலாம். அமுதவல்லியும் கருணாநிதியும் தம்மை ஏழை யென்றும், தள்ளாத கிழவனென்றும், திக்கற்றவனென்றுமே கருதுகிறார்களென்று நினைத்து இன்பக்கடலில் ஆழ்ந்தார். தாம கோடீசுவரரென்பதை வெளியிடலாமா என்று நினைத்தார். இப்போது வெளியிடின் நம்பமாட்டார்கள்; நம்பும்படி செய்தால், இதுவரை வஞ்சித்ததற்காகத் தமமைச் சினந்து கொள்வார்கள். அதனால், வெளியிடாமலிருப்பதே உசிதமென்று கொண்டார். இன்னும் சிலநாள், உண்மை மிக்க இருவ-

ரோடு இருந்து அவர்களுக்கு மணமுடித்து மகிழவேண்டும் என்று தீர்மானித்தார்.

அத்தியாயம் - 10

சில மாதங்கள் கழிந்தன. கருணாநிதி நாள் தவறாது அமுதவல்லி வீட்டிற்கு வருவதும் அவளோடும் முதலியாரோடும் வார்த்தையாடுவதுமாக இருந்தான். அடிக்கடி மாலை வேளைகளில் அமுதவல்லியும் அவனும் உலாச்சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும் வரையும் முதலியார் அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருப்பார். என்ன ஆகிறதோ, எப்படி முடியுமோ, கருணாநிதி தன் அபிப்பிராயத்தை வெளியிட்டானோ இல்லையோ, அவள் அதற்கு என்ன விடை கூறினாளோ, உடன்படப் பிரியமிருந்தும் நாணத்தால் ஒருகால் மறுப்பாளோ என்று ஏக்கம் அடைந் திருப்பார். முதலியார் வீண் கவலையை விலைக்கு வாங்கினார். கருணாநிதியும் தாமதிக்கவில்லை; அமுதவல்லியும் மறுக்கவில்லை. இருவருக்கும் நெருக்கம் மிக்கது. பல விஷயங்களைப் பற்றி அவர்கள் பேசினார்கள். கருணாநிதி தான் முடிக்கப் போகிற நவீனகத்திற் பல அத்தியாயங்களை அமுதவல்லிக்குப் பலமுறை படித்துக் காட்டினான். அவள் மாற்றவேண்டுமென்ற இடங்களில் விஷயங்களை மாற்றினான்; கூட்டவேண்டும் என்ற இடங்களில் விஷயங்களைக் கூட்டினான். இப்படி இருக்கையில், ஒரு நாள் மாலை அமுதவல்லி கருணாநிதியை நோக்கி, "அன்ப-

ரே, இன்று ஓரிடத்திற்குத் தங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். அந்த இடத்திற்கு 'ராக்ஷஸ துர்க்கம்' என்று பெயர். அஃதொரு செங்குத்தான குன்று. அதன் உச்சியில் ஒரு பாறை உளது .அப்பாறையின் மேல் நின்று பார்த்தால், காட்சி அற்புதமா யிருக்கும்" என்றாள்.

"அப்படியே செல்லலாம்."

இருவரும் புறப்பட்டார்கள். அவர்கள் சரசமாக வார்த்தை சொல்வதைக் கேட்பதும் நெருங்கிப்பழகு-வதைக் காண்பதும் முதலியார்க்குப் பெருங் களிப்பைத் தந்தன. இருவரும் போய்க் குறித்த இடத்தை அணுகி-னார்கள். அமுதவல்லி கூறிய பாறையும் வரவரக் குறுகினதாய் ஒருவர் நிற்கவும் இடம் பெறாததாய் இருந்தது. இருவரும் வார்த்தை யாடிக் கொண்டு நின்ற பாறையிலிருந்து திடீரெனக் குதித்து அப்பாறையின் உச்சியின்மேல் அமுதவல்லி நின்றாள். காற்று வேகமாய் மோதுகிறது; அவள் சேலை அக் காற்-றில் அலைகிறது. கருணாநிதி அவள் நிலையைக் கண்டு கலங்-கினான். தவறி வீழ்ந்தால் ஓர் எலும்பும் அகப்படாது. அவனுக்கும தெரியாமல் அவன் கைகள் அவளைப் பிடிக்க முயன்றன. அத் தறுவாயில், அவள் முகத்தைத் திருப்பிக் கயல் போலப் பிறழும் கருநெடுங் கண்களால் நோக்கி-னாள். அந்தக் காம்பீர்யமுள்ள நோக்கில் என்னவோ ஒரு சக்தி இருந்தது. உடனே பிடிக்கப் போனவன் நாணி நடுங்கிப் பின்வாங்கி நின்று, "அமுதவல்லி! ஜாக்ரதை" என்றான்.

"பயப்பட வேண்டா, அபாயம் ஒன்றுமில்லை. இஃது எனக்குப் பழக்கம். அடிக்கடி இங்கு வரும்போதெல்லாம்

நான் இங்குச் சிறிதுநேரம் நிற்பேன். அற்புதக் காட்சி-களைக் காண்பேன். என் துக்கங்களை யெல்லாம ஒருவாறு மறப்பேன்'' என்றாள்.

அந்த நிலையில் அமுதவல்லி விண்ணுடு துறந்து மண்ணுடு புகுந்து நெடுநாள் தன்நாடு காணுதிருந்து இப்போதுகண்டு அங்குப் பறந்து செல்ல முயலும் தேவமாதைப் போலக் கருணநிதி கண்களுக்குத் தோன்றினள். 'அமுதவல்லி! போகவேண்டா. எங்களோடு இன்னும சிலகாலம் இரு. என்னோடு இரு'' என்று வாய்விட்டுக் கதறினன். அமுதவல்லி திரும்பிப் பார்த்து, "என்ன சொல்லுகிறீர்? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. நான் எங்கும் போகவில்லையே. யார் உமக்கு அப்படிச் சொன்னார்கள் ?'' என்றாள்.

"ஒருவரும் சொல்லவில்லை. நீ நிற்கும் இந் நிலையில் எனக்கே அப்படித் தோன்றிற்று. உன்னை விட்டுப் பிரிந்தும் உயிர் வாழ்வேனே !'' என்றான் கருணநிதி

இதைக் கேட்டவுடன் அமுதவல்லியின் முகம் பசந்தது; உதடு துடித்தது; மயிர் சிலிர்த்தன. அவளை இந்நிலையில் கண்ட கருணநிதி உவகை கொண்டான்

'அவள் என்னைக் காதலிப்பாளாயின், என்னைப்போலப் பாக்கியசாலி இல்லை' என்று நினைத்து, "நாம் இருவரும் அவ்வளவு நெருங்கிப் பழகினேம். இல்லையா ?'' என்றான்.

"ஆம், உள்ளது, என்றும் அப்படியே பழகுவோமென்று நம்புகிறேன்.''

"நானும் அப்படியே நம்புகிறேன். பெண்களோடு பழக எனக்குத் தெரியாது. இதுவரையும் ஒரு பெண்ணினிடத்தும் நான் இப்படி வார்த்தை யாடியது இல்லை'' என்றான் கருணநிதி.

அதன்பின் என்னவோ சொல்ல முயன்றான். நா எழவில்லை. அவன் வாழ்நாளில் இப்படி வார்த்தை நழுவியது என்றும இல்லை.

'என்ன இது! எனக்கு என்ன நேர்ந்தது? நாக் கட்டுண்டதே! வாய் பூட்டிடப்பட்டதே!' என்று ஓர் ஆவேசம் கொண்டு, "அமுதவல்லி! நான் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறேன்" என்றான்.

அமுதவல்லி அசைவற்றுச் சித்திரப் பாவை போல நின்றாள். அவள் மூச்சு விடுவதாகவும் தெரியவில்லை.

"அப்படியே செய்து கொள்ளலாம். உம்மை முழுமனத்தோடு காதலிக்கும ஒரு பெண்ணைக் கண்டீரென்று நினைக்கிறேன்" என்று சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் கண்களில் ஆர்வக் கண்ணீர் ஓடி வருவதைக் கருணாநிதி கண்டான். அவனுக்கு ஒரு துணிவு பிறந்தது. மனோதிடம் கொண்டு, "ஆம், அமுதவல்லி! ஆம், ஒரு பெண்மணியைக் கண்டேன் நான் முழு மனத்தோடு காதலிக்கிற ஒரு மாது சிரோமணி என்னைக் காதலிக்கிறாளென்றே நம்புகிறேன் ஒரு கால் நான் நினைபபது தவறானால், இவ்வுலகத்தை இழந்தவன் ஆவேன் நான் நினைப்பது தவறா? சொல், அமுதவல்லி!" என்றான்.

அவளுக்கு ஒன்றும் சொல்லமுடியவில்லை. கண்களில் ஆர்வக் கண்ணீர் பெருகுகிறது. அப்போது கருணாநிதி அவள் வலக்கையைப் பிடித்துக்கொண்டு, "நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று உனக்குத் தெரியவில்லையா?" என்றான்.

"எனக்கு எப்படித் தெரியும்? நான் எப்படி நம்பக் கூடும்? அதற்கு உரிய பருவம் எனக்கு இல்லையே!" என்றாள்.

"அமுதவல்லி! காத லென்பதையே கேள். உனக்-காக உருகும் என் உள்ளத்தைக் கேள்; உன்னைப் பெற ஆசைகொள்ளும் என் உயிரைக் கேள்; உன்னைப் போற்றி செய்யும் என்னைக் கேள். நமக்கு நற்காலம் வந்துவிட்டது, கண்மணி!" என்றான்.

அதன்பின் இருவரும் சிறிதுபோது அந்த உலகத்தையும் கடந்து நிற்கும் மௌனம் சாதித்தார்கள். "காதலை எழுதிப் படிக்கவாவது வாய்விட்டுச் சொல்லவாவது அதற்கு ஒரு பாஷையும் உண்டோ?"

"என்ன! நீங்கள் என்னைப் புதிதாகக் கண்டவர்போலப் பார்க்கிறீர்களே!"

"உன்னை யான் என்றும் கண்டதே இல்லை. நீ இப்போ திருக்கிறபடி கண்டதே இல்லை. ஒரு நாளும் இவ்வளவு அழகாக நீ இருந்ததே இல்லை. உன்னை யான் என்றும் காதலியாகவும் நாயகியாகவும் கண்டதே இல்லை."

"உங்களுக்கு நன்மையை நீங்கள் செய்து கொள்வதாக நினைக்கிறீர்களா? அப்படியானால், வேறு யாரை யேனும் கல்யாணம் செய்து கொள்ளலாம்."

"அப்படிச் சொல்லாதே. வேறொருத்தியையும் மணந்து கொள்வேனா? உன்னையே மணந்து கொள்வேன். என்னைக் கொள்வாயா என்பது தான் கேள்வி."

"உங்களுக்கு நன்மைக் கென்று தெரிந்தால்-"

"அதனால் எனக்கு எல்லா நன்மையும் விளையும். எனது எண்ணத்தை நான் வெளியிட்டபடியே, உன் எண்

-ணத்தையும் வெளியிடவேண்டும். என்னை நீ காதலிக்கிறு 'யோ, அமுதம்!''

''அஃது உமக்கு முன்பே நன்கு தெரிந்திருக்குமே.''

''எனக்குத் தெரியாதே! இன்னும் நிச்சயமாய் ஒன்றுந் தெரியவில்லையே!''

''உங்களைப் பற்றி நிசசயமாய்த் தெரிந்து விட்டதா? நான் வெட்டெனப் பேசுகிறேன் என்று நினைக்கவேண்டா. உங்கள் நன்மையைப் பற்றியே நான் நினைக்கிறேன். நான் ஓர் ஏழைப் பெண்; கை வேலை செய்து பிழைப்பவள். எனக்கு இளமையும் இல்லை; சாமர்த்தியமும் இல்லை. நீங்களோ மேதாவி. ஒரு நாள், அதுவும் சீக்கிரத்தில், உயர்ந்த பதவிக்கு வரலாம், செல்வத்தையும் பெரும் புகழையும் பெறலாம். அப்போது என்னைக் கண்டதற்கும் நீங்கள் வருந்த நேரும்.''

அப்படி வருந்துவேனால், என்னைப் போலக் கொடும் பாவி உலகில் இல்லை. பஞ்ச மா பாதகன் செல்லும் நரகமும் எனக்குப் போதாது—ஏழாம் நரகத்திற்கும் கீழாம் நரகத்திற் செல்வேன்.''

''நீங்கள் விளையாட்டாக வார்த்தை சொல்லுகிறீர்கள்.''

''இல்லை, உள்ளபடி சொல்லுகிறேன். எனது கேள்விக்கு விடை பகரவேண்டும்.''

''என்ன கேள்வி?''

''நீ என்னைக் காதலிக்கிறாயா? உண்டு, இல்லை: இரண்டிலொன்று சொல்.''

அப்போது இருவர் நோக்கும் ஒன்று கூடின.

''நீங்கள் சிறு குழந்தையைப் போலப் பேசுகிறீர்கள். உங்களிடத்தில் நான் வைத்திருக்கும் காதல் இப்படிப்பட்ட

தென்று வாக்கினுற் சொல்ல முடியாதே! சொல்ல முடியாததைச் சொல், சொல் என்று வற்புறுத்துகிறீர்களே.''

கருணாநிதி அவளை மார்போடணைத்து முத்தம் அளித்தான்.

''அது போதும். நீ காதலித்தால், அஃது ஒரு காலத்தும் போலிக் காதலாகாதென்று நான் அறிவேன்—நான் ஒன்றுக்கும் உதவாதவனையும் காதலிப்பாயோ?''

''அதைக் கேட்பான் ஏன்?''

''அப்போதும் காதலிப்பாய் என்பதில் தடை இல்லை. ஆரா அமுதமே! தெவிட்டாத தெள்ளமுதமே! பெண்ணில் உன்னைப் போலப் பலர் இருந்தால், ஆணிலும் உண்மையும் உறுதியும் உடையவர் பலர் இருப்பார்கள் இனி எனக்கு ஒரு குறையும் இல்லை. என்ன கஷ்டம் வந்தாலும், ஒரு நொடியில் நீக்குவேன்''

''எனக்கும் இப்படிப்பட்ட இன்பம் வரும் என்று நான் நினைக்கவில்லை. இப்போது நடந்தவை யாவும் உண்மையே என்று நம்பக்கூடவில்லை. நீங்கள் என்னை ஏன் காதலிக்க வேண்டும்?''

''நீ ஏன் என்னைக் காதலிக்க வேண்டும்?''

''உங்களைக் காதலிப்பதற்கு உங்களிடத்தில் பல யோக்யதைகள் உண்டு. அவை உங்களுக்குத் தெரியவில்லை. எனக்கு நன்றாய்த் தெரிகின்றன.''

''உன்னிடம் அவற்றைக் காட்டிலும் விசேஷ யோக்யதைகள் இருக்கின்றன. அவை உனக்குத் தெரியவில்லை. எனக்கு நன்றாய்த் தெரிகின்றன.''

இரண்டு குழந்தைகளைப் போல இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அவர்களுக்கு விகற்பம் என்பதே

இல்லை. கைகோத்துக் கொண்டு அக் குன்றை விட்டிறங்கி வந்து அதன் அடி சேர்ந்தார்கள்.

"என் ஆருயிர்த் தோழ! வீடு சேர்ந்ததும் பெரியவருக்கு இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும். அவருக்கு மிக்க சந்தோஷமாயிருக்கும்" என்றாள் அமுதவல்லி.

"ஆம், மிக்க சந்தோஷ மாயிருக்கும்—எப்போது முடியப் போகிறதென்று எத்தனை நாளாய்க் காத்துக் கொண்டிருக்கிறார்" என்றான் கருணாநிதி.

"அஃது எப்படி?"

"உன்னைக் காதலிக்கிறேன் என்றும்; மணந்து கொள்ளும்படி கேட்க வேண்டினேன் என்றும்; ஆனால், எனது ஏழைமை அதற்குத் தடையாய் நின்றது என்றும் சொன்னேன்."

"ஏன், நான் ஏழை அல்லளா?"

"என்னைப்போல அவ்வளவு ஏழையாய் இல்லை உனக்கு வீடு இருக்கிறது. கைத்தொழில் இருக்கிறது. எனக்கு வீடும் இல்லை, வாசலும் இல்லை; மாடும் இல்லை, கன்றும் இல்லை. செய்ய வேலை இல்லை, பணப் பையும் இல்லை. நான் எழுதுகிற நூலை நம்பி இருக்கிறேன். அது விற்கவில்லையென்றால், என் கதி என்ன? ஓடு எடுத்துக்கொள்ள வேண்டும். உன்னை மணமுடிக்கவும முடியாது."

"அப்படிச் செய்வீர்கள் என்றே நினைத்தேன்."

"என்னைப் பரிகசியாதே, அமுதம்! நான் உன்னை மணந்து கொள்வது உறுதி. ஆனால், எனது நூல் விலையாகு முன் மணந்துகொள்ள மாட்டேன். எனக்கு ஆயிரம் ரூபாய் வருமென்று நினைக்கிறேன். அது வந்தாலும் இருவரும் கலந்து வாழ்க்கை தொடங்கப் போதும்."

"அது போதும். அதுவே நமக்குப் பெரிய முதலன்றோ?"

"வீடு உனது, அதன்கண் இருப்பனவும் உன்னுடையவை. வேறு இருக்கையாவது சாமான்களாவது தேட வேண்டும் என்பது இல்லை. நீ உழைப்பதை வேண்டாதபடி, நான் உனக்கு உழைக்க வேண்டும். அது தானே?"

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்குகிறது. கைகளைக் கட்டிக் கொண்டு குட்டிச்சுவர் போலச் சும்மா உட்காந்திருக்க வேண்டும்."

"இப்போது அப்படி இரு என்று நான் சொல்லவில்லையே."

"நீங்கள் என்னைக் காதலிப்பதனால், இனிமேல் நான் இன்னும் கஷ்டமெடுத்து உழைக்க வேண்டும்."

"பிரியப்படி செய், அமுதம்! எனக்கு ஆக்ஷேபம் இல்லை வேண்டுமானால் நீ உனக்கு உழைத்துக்கொள். எனக்காக உழைக்கவேண்டா."

"எனக்கே நான் உழைத்துக் கொள்கிறேன். எனக்கு, நீங்கள் உழையுங்கள். பெரியவர் நமமிருவருக்கும உழைப்பார். தெய்வந்தான் எனது நன்மைக்கு அந்தப பெரியவரை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தது."

"ஏன், அவர் உனது தந்தைக்கு நண்பரல்லரா?"

"இல்லை, கிராம ஜனங்களுக்கு ஏதேனும் ஒன்று சொல்லவேண்டுமே; அதற்காக அப்படிச் சொன்னேன்."

"ஆனால், அவர் முன்பின் அறியாதவரா?"

"ஆம். அவர் வந்த விதத்தைச் சொல்லுகிறேன். கேளுங்கள்" என்று முதலியார் கதையை முற்றும் சொல்லி முடித்தாள்.

"ஆனால், அபாயமான காரியத்தைத்தான் செய்தாய். அவர் குணத்தை அறியாமலே அவரை உள்ளே சேர்த்துக் கொண்டு அவருக்கு எல்லாம் செய்தாய்."

"அவர் அயோக்யராகத் தோன்றவுமில்லை, அப்படி நடக்கவுமில்லை. எனக்கு அருள்புரியத் தன் வடிவ மறைத்து வந்த ஒரு தேவதை என்றே நினைக்கிறேன்."

"அவர் எனது தந்தையின் நண்பரல்லர் என்கிற விஷயத்தை வெளிப்படுத்த வேண்டா" என்றும் உரைத்தாள் அமுதவல்லி.

இருவரும் வீட்டை அடைந்தார்கள். முதலியார் அவர்கள் இன்னும் வரவில்லையே போய்ப் பார்க்கலாம் என்று பரிந்து வீட்டை விட்டுச சிறிது தூரம வந்தார்; நாய்க் குட்டியும் அவரைப் பின் தொடர்ந்து வந்தது. அவர்கள் எதிர்ப்பட்டவுடன், "சூர்யாஸ்தமனத்தைக் கண்டீர்களா ? அல்லது, நீங்கள் ஒருவரை யொருவர் கண்டீர்களா? "என்றார் முதலியார். அமுதவல்லி ஓடிப்போய் ஆசையாக அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "எனக்கு இன்பமாயிருக்கிறது.என்றுமில்லாதஇன்பமாயிருக்கிறது" என்றாள். முதலியார் கருணாநிதியை நோக்கி, "ஆனால், உன் எண்ணம முடிந்ததா ? நீங்களே முடிவு செய்துகொண்டீர்களா ?" என்றார்.

"ஆம், ஐயா ! நாங்கள் முடிவு செய்து கொண்டோம. எங்களை ஆசிர்வதிக்க வேண்டும" என்றான் கருணாநிதி.

"என் ஆசீர்வாதம் உங்களுக்கு இருக்கிறது கடவுளுக்கே தெரியும். இன்று போல என்றும் நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் ஓர் அரிய நிதியைப பெற்றீர்கள். கல்யாணம் செய்து கொண்டு கலந்து வாழுங்கள். நான் இருந்

தால், நீங்கள் பிரியப்படி இருக்க முடியாது. கல்யாணத்தை என் கண்ணால் பார்த்துவிட்டு நான் செலவு பெற்றுக்கொள்வேன்" என்றார்.

"அஃது ஒருபோதும் நடவாது. நாங்கள் கல்யாணமானவுடன் வருத்தத்தை யடைய நீங்கள் விரும்புவீர்களா? இஃது உங்கள் வீடு, அண்ணா!" என்று சொல்லிவிட்டுக் கருணாநிதியை நோக்கி, "நாம் இவரை விட்டுவிடுவோமா?" என்றாள் அமுதவல்லி.

கருணாநிதி, "எங்காவது உண்டா? ஐயா! உங்களால் அன்று நான் அமுதவல்லியைக் கண்டேன்! முதலில் என்னை இவ் வீட்டிற்கு அழைத்து வந்தவர் யாவர்? எங்கள் சுகத்திற் கெல்லாம் நீங்களே காரணம். அப்படி இருக்க, நீங்கள் போய் விடுவதாகச் சொல்லலாமா?"

"நான் நன்கு உழைக்கக் கூடியவன். நாமிருவரும் ஒன்றுகூடி அமுதவல்லிக்காக உழைக்கலாம்" என்றான்.

"யதார்த்தமாகவா அப்படிச் சொல்லுகிறாய்?" என்றார் முதலியார்.

"என்ன அசந்தாப்பம இருக்கிறது?" என்றான் கருணாநிதி.

"நீங்கள் இருவரும் என் மீது மிக்க அன்பு வைத்தீர்கள். உங்களுக்கும் எனக்கும் ஒரு வித சம்பந்தமு மில்லை. நீங்கள் யாரோ நான் யாரோ. அவ் வன்பைப் பெறுதற்குத் தகுதி என்னிடம் ஒன்று மில்லை. நாள் ஆக ஆக எனக்கு இளமை வரவில்லை. நாளுக்கு நாள் எனக்கு வலிமை குறைகிறது நான் என்ன உழைக்கப் போகிறேன். எனக்கு வியாதி வருமானால் உங்களுக்குச் சஞ்சலமும் செலவும உண்டாம். இனிக் கூற்றுக்கு இரையாக வேண்டிய காலம். கல்

யாணம் ! நடக்கும் வீட்டில் உடனே நான் இறப்பது நன்றன்று'' என்றார்.

''அண்ணா! நாங்கள் இருவரும் உங்கள் மீது ஆசை வைத்துவிட்டோம். இனிப் பிரிதல் கூடாது'' என்றாள் அமுதவல்லி.

''ஒன்றுக்கும் உதவாத இந்த ஏழைக் கிழவன் மீதோ ஆசை?''

''அமுதவல்லியும் அப்படிப்பட்டவள் அல்லள், நானும் அப்படிப்பட்டவன் அல்லன். நாங்கள் பணத்தைப் பெரிதாக நினைப்பவர்கள் அல்லர். ஒரு காரணமுமின்றியே உங்கள் விஷயத்தில் எங்களுக்கு ஆசை பெருகிற்று'' என்றான் கருணாநிதி.

அமுதவல்லி வீட்டு வேலைகளைக் கவனித்தாள். முதலியார் கருணாநிதியை அருகில் அழைத்து இரகசியமாய், ''உள்ளக்கருத்தைத் தெரிவி. நீ அவள் காதலைப் பெற்றாய்; நீயே இந்த வீட்டிற்கு எஜமானன். நான் இரண்டாம் பேர் அறியாமல் நழுவுகிறேன்'' என்றார்.

''நீங்கள் எங்குப் போனாலும், பின்தொடர்ந்து ஓடிவந்து பிடித்து விடுவேன். நீங்கள் எங்களுடைய சொத்து, நாங்கள் உங்களை விட்டு விடப் போகிறது இல்லை'' என்றான் கருணாநிதி.

முதலியார் கண்களிலிருந்து நீர்த் துளிகள் விழுந்தன. ஒரு நிமிஷம் அவர் முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டார். முதலியார் மன நிலைமையை அறிந்த கருணாநிதியின் உள்ளம் அனலின்கண் மெழுகை ஒத்தது. அதைக் கண்டுகொள்ளாதவன் போல அமுதவல்லி இருந்த அறைக்குள் சென்றான்.

அத்தியாயம்-11

மூன்று நாட்கள் கழிந்தன நான்காம் நாள் விடிய ஐந்து நாழிகைக் கெல்லாம் படுக்கைவிட்டு எழுந்து தாம் அங்கு வரும் போது உடுத்திருந்த பழைய கிழிந்த உடைகளை அணிந்து கொண்டு ஒரு சிறிதும் சப்தம் செய்யாது தாழைத் திறந்து முதலியார் வீதிக்கு வந்தார். அங்கு நின்று உட் சட்டைப் பையிலிருந்த நோட்டை எடுத்தார். வைத்தது வைத்தபடியே இருந்தது.

"ஈசா! நான் இரண்டொரு நாட்களில் திரும்பி வரவேண்டும். நான் இறக்குமுன் மறுபடி அமைதியும் அன்பும் ஆநந்த நர்த்தனஞ் செய்யும் இவ் வில்லத்திற்கு நான் வந்து சேரும்படி அருள் புரிக. அமுதவல்லி! அன்பும் அருளும் உடைய அமுதவல்லி! நான் போய் வருகிறேன் இறைவன் இன்னருள் புரிக" என்று பிரார்த்தித்துக் கொண்டு, மணியாடிக்குச் சென்று இருப்புப்பாதை வண்டி ஏற நினைத்து வழி நடந்தார். சிறிது தூரம் சென்றதும் ஒரு வண்டியைக் கண்டார். வண்டிக்காரனை நோக்கி, அப்பா! மணியாடிக்கு வருகிறாயா? ஒரு ரூபாய் தருகிறேன்" என்றார்.

அவன், "உரிய கூலி அரை ரூபா, ஐயா! ஏறுங்க" என்றான்.

வண்டியில் ஏறினார், அவன் இருப்புப்பாதை யடிக்குக் கொண்டுவந்து விட்டான். அங்கு இறங்கி ஸ்நாநம் முடித்துச் சத்திரத்தில் உண்டு, இருப்புப்பாதை வண்டி யேறிச் சீதாபுரம் அடைந்தார்.

அமுதவல்லி வழக்கப்படி சூரியோதயத்திற்கு நித்திரை தெளிந்தெழுந்து நேரே முதலியார் அறைக்கு வந்தாள். அவர் அங்கு இல்லை. பலகையின் மேல் தன் விலாசத்திற்கு ஒரு கடிதம் இருக்கக் கண்டாள். அதை எடுத்துப் பிரித்துப் பின் வருமாறு படித்தாள்:—

எனது அருமை அமுதவல்லி !

இன்று காலை நீ என்னைக் காணாமைபற்றிக் கவலை கொள்ள வேண்டா. கருணாநிதிக்கும் உனக்கும் உபயோகப் படக் கூடிய ஒரு காரியத்தை முடிக்க நான் செல்கிறேன். கூடை முடைந்து என்ன ஆகும் ? உனக்குக் கல்யாணம் ஆனபின் இந்த வருமானம் போதாது; ஆள் ஏறினால், நீர் ஏறுமே. நீ என் மீது மிக்க அன்பு வைத்தாய். பல நன்மைகள் செய்தாய். நான் நன்றியறிதற்குப் பேரடையாளமாக ஏதேனும் ஒன்று செய்ய முயலவில்லையென்றால், குறையின்றி இறத்தல் கூடாது. இன்று சோமவாரம், வருகிற ஆதி வாரம் இங்கு வந்து சேருவேன். என் எண்ணத்தை முடிப்பதற்கு எனக்குப் போதிய தேகபலம் இருக்கிறது. ஆகையால் எனக்காக மனம் வருந்தாதே. நாய்க் குட்டியை இங்கு விட்டுச் செல்கிறேன். இறைவன் இன்னருளால் எல்லா நன்மையும் பெற்று நீ வாழ்க.

இப்படிக்கு

முருகப்பன்.

அவள் இக் கடிதத்தை மிக்க விசனத்தோடு படித்தாள். கண்களில் நீர் ஆறாய்ப் பெருகிற்று.

"அண்ணா ! கையிற் காசில்லாது எங்குத் திரிந்து என்ன செய்யப் போகிறீர்! நினைக்கும் போதே நெஞ்சு பகீரென்கிறதே ! இப்படிப்பட்ட யோசனை எப்படிப் பிறந்ததோ!

உடம்பில் வலிமை சிறிதும் இல்லையே! விருதுக்கு வேட்டை யாடுவதாய் முடியுமே!" என்று வாய் விட்டுக் கதறி, 'இதற்குள் நெடுந்தூரம் சென்றிருக்கமாட்டார்' என்று நினைத்து நாய்க்குட்டியை உடன் அழைத்துக் கொண்டு நாற்புறமும் ஓடினாள்; எங்கெங்கும் தேடினாள். நெடிது நேரம் தேடியும் பயனில்லை. ஊக்கமிழந்து நாய்க் குட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு திரும்பி வீடு சேர்ந்தாள். வீடு பொலிவழிந்திருந்தது. கலங்கினாள் அமுதம். சாப்பாடு முடித்துக் கொண்டு பகல் ஒரு மணிக்குக் கருணாநிதி வந்தான். வந்தவுடன் நடந்ததைத் தெரிவித்தாள்; கடிதத்தைக் காட்டினாள். அவன், "நமக்கு இடையூறா யிருப்பதாக நினைக்கிறார் போலும், ஆயினும் வருகிற ஆதிவாரம் வந்து சேருவதாக எழுதி இருக்கிறார். ஒருகால் வந்தாலும் வருவார். எங்குத் தான் போயிருப்பாரோ ?" என்றான்.

"கையிலொரு சல்லி இல்லை. நெடிது தூரம் போக முடியாது. நடந்து தான் போவார்."

"மணியாடிக்குத்தான் போவார். அதுவே வேலை அகப்படக்கூடிய இடம். விரைவாக நடந்துபோய் நான் பார்த்துவிட்டு வரலா மென்று நினைக்கிறேன். "

"நல்ல யோசனை."

"எப்படியாவது தேடிப் பிடித்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி முத்தம் தந்து அதிவேகமாய் நடந்து சென்றான் கருணாநிதி. அமுதவல்லி ஆவலோடு அவனை எதிர்பார்த்திருந்தாள்; பெரும்பாலும் முதலியாரை அவன் கண்டு அழைத்து வருவானென்றே நினைத்தாள். சூர்யாஸ்தமனத்திற்குக் கருணாநிதி திரும்பி வந்தான்.

"அமுதவல்லி! பாதி வழி நடந்து சென்றேன். பாதி வழி ஒருவர் தம் வண்டியில் ஏற்றிக் கொண்டார். மணியாடிக்குப் போய்த் தெருத் தெருவாய் அலைந்து விசாரித்தேன். ஒரு குறிப்பும் புலப்படவில்லை. பெரியவர் கடிதத்தில் எழுதியதை நம்பி இருக்க வேண்டும். வேறு செய்வது ஒன்றுங் காணேன்" என்றான்.

"என்னிடத்தில் என்ன பக்ஷமாயிருந்தார்! என்ன நன்றியறிவு! மனிதராய்ப் பிறந்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் செய்யவேண்டிய உபகாரத்தைச் செய்தேனே யன்றி வேறொன்றுமில்லை. அப்படி இருக்க, எனது திரண்ட ஐசுவர்யத்தை அவருக்கு வைத்தது போல அவர் நினைக்கிறார். அவர் உயர்ந்த பதவியில் இருந்தவரென்றே தெரிகிறது" என்றாள் அமுதவல்லி.

"அவரைப் பற்றிக் கவலை கொள்ளாதே. அமுதவல்லி! பெரும்பாலும் ஆதிவாரத்திற்குள் வருவாரென்றே எண்ணுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிரியா விடை கொண்டான் கருணாநிதி. அவள் தந்தை இறந்து சிலமாதங்கள் அந்த வீடு எப்படி அவளுக்குத் தவ்வெனத் தோன்றிற்றோ, அப்படியே இப்போதும் தோன்றிற்று. தாம தமியளாய் இருக்கும் வீட்டில் கருணாநிதியும் உடனிருப்பானானால், ஊரார் பழிப்பிற்கு இடமாகு மென் றெண்ணியே அவன் விடைகொண்டா னென்று தெரிந்து கொண்டாள். ஒவ்வொரு நாளும் இரவில் சீக்கிரம் வேலையை முடித்து விட்டுக் கையில் நாய்க்குட்டியை எடுத்துக் கொண்டு படுக்கை யறை சென்றாள். ஒவ்வொரு நாளும கண்ணும் கண்ணீருமாய் உறங்கினாள். இங்கு இப்படி இருக்கச் சீதாபுரம் அடைந்த முதலியார் அங்கு ஒரு சத்திரத்தில் தங்கினார்; தமக்கு வேண்டிய சவு-

காரியங்களையும் செய்து கொண்டார். கடைக்குப் போய் எழுது கருவிகளாகிய இறகு, மைக்கூடு, தாள் முதலியவை வாங்கி வந்தார். மறுநாள் காலையில் சிற்றுண்டி கொண்டதும் ஒரு பலகணியின் பக்கத்தில் நாற்காலி இட்டு உட்கார்ந்து வட்டப் பலகையின்மேல் எழுது கருவிகள் வைத்து மரணசாசனம் எழுத ஆரம்பித்தார். நியாய பரிபாஷைகள் பல அமைத்து எழுத வேண்டுமென்று அறிந்தவராகையால், சுருக்கமாகவும் தெளிவாகவும் தமது சொத்து முழுவதும் அமுதவல்லி பெயருக்கே எழுதி முடித்தார்! அன்று காலை அந்த ஊரிலுள்ள பெரிய நியாயவாதி, ஸ்ரீநிவாஸ ஐயங்கார் காரிய கிருகத்திற்குச் சென்றார். ஒரு பயல் வாயிலில் நின்றுகொண்டிருந்தான். முதலியார் அவனை நோக்கி, "அப்பா! ஐயங்கார் அவர்களைப் பார்க்கலாமோ?" என்றார்.

"ஒரு நிமிஷம் இங்கே இருங்க. இதோ, வர்றேன்" என்று சொல்லிவிட்டுப் படிக்கட்டு ஏறி மேன்மாடிக்கு ஓடிப் போய்த் திரும்பி வந்து "ஐயா! நீங்க இப்போ போங்க" என்றான். முதலியார் மேன்மாடி சென்றதும், ஐயங்கார், "நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

"வேறு விசேஷம் ஒன்றுமில்லை, ஐயா! மரணசாசனம் ஒன்று நானே எழுதிவந்திருக்கிறேன். அஃது ஒழுங்காக இருக்கிறதா என்று தாங்கள் பார்க்க வேண்டும். தங்கள் கஷ்டத்தை வைத்துக்கொள்ள மாட்டேன்" என்றார் முதலியார்.

"ஐயா, நீங்களா மரணசாசனம் எழுதினீர்கள்?"

"ஆம்."

"அப்படி ஒருவரும் செய்வதில்லையே. ஒரு நியாயவாதியைக் கொண்டன்றோ எவரும் எழுதுவிப்பார்கள்?"

"யார் எழுதினால் என்ன? நான் எழுதின சாசனத்தில் ஏதாவது குற்றமிருந்தால், நீங்கள் மாற்றி எழுதலாமே."

"நீங்கள் எழுதிய மரணசாசனத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?"

"ஆம், ஐயா!" என்று அதை எடுத்து நீட்டினார். ஐயங்கார் அதை வாங்கி வாசித்தார்.

"என்ன, ஐயா! இது? வேண்டாத விஷயங்களை எல்லாம் எழுதி இருக்கிறீர்கள். 'எனது உயிர் நற்கதி அடையவும்' என்று எழுதி இருக்கிறீர்களே; இப்படி இக்காலத்தில் ஒருவரும் எழுதுவது இல்லையே."

"அதனால் பாதகமுண்டோ? வழக்கு வில்லங்கத்திற்கு இடமுண்டோ? சாசனம் செல்லாதோ?"

"அப்படி அன்று. வீணான சொற்களை நியாயவாதிகள் விலக்கி எழுதுவது வழக்கம்."

"நான் பழைய நாள் மனிதன். அஃது இருக்க வேண்டியது முறை என்று நான் நினைக்கிறேன்."

"அப்படியானால், இருக்க. வேறு மாறுபாடுகள் ஒன்றும் செய்ய வேண்டியது இல்லை என்றே நினைக்கிறேன். இனி, நான் செய்வது என்ன?"

"தாங்கள் ஒரு சாக்ஷியும் இன்னும் யாராவது தங்களுக்குத் தெரிந்தவர்கள் ஒரு சாக்ஷியும் ஆக இருவர் கையெழுத்துப்போட வேண்டும்."

ஐயங்கார் தமது கணக்கப் பிள்ளையை அழைத்து அருகில் வைத்துக் கொண்டு முதலியாரைக் கையெழுத்துப் போடச் சொன்னார். அவர் அப்படிச் செய்தவுடன் தாமும் தமது கணக்கப்பிள்ளையும் கையெழுத்துப் போட்

டார்கள். முதலியார் அவருக்குச் சேர்வேண்டிய தொகைக்கு அதிகமாகவே செலுத்திவிட்டு விடை பெற்றுத் தாம் தங்கி இருந்த சத்திரத்தை அடைந்தார். உடனே நாற்காலியி லிருந்து பலர்க்கு வியவகார சம்பந்தமான பல கடிதங்கள் எழுதி, முடிவில் அநந்தாசாரியருக்கு ஒன்று பின் வருமாறு எழுதி முடித்தார்:—

எனது அருமை நண்பராகிய அநந்தாசாரியருக்கு, எழுதுவது: தாங்கள் நெடு நாளாய் எழுதி முடிக்கும்படி வற்புறுத்தி வந்த மரணசாசனத்தை இன்று சீதாபுரத்தில் எனது கையால் எழுதி முடித்தேன். அதை அந்த ஊர் நியாயவாதி, ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் பார்வையிட்டு நியாயத்திற்கு ஒத்தும் குற்ற மின்றியும் இருப்பதாகச் சொன்னார். நான் கையெழுத்து வைத்ததற்குச் சாக்ஷிகள் அந் நியாயவாதியும் அவர் கணக்கப் பிள்ளையுமே. அந்தச் சாசனத்தை என்னோடு வைத்திருப்பேன். நான் இறந்த பின் அதைத் தாங்கள் பார்க்க நேரும். அந்தச் சாசனத்தின்படி எனது செல்வத்திற்கு உரியவர்க்கு ஒரு கவலையும் இல்லாதபடி வியவகாரத்தை முடிப்பீர்களென நம்புகிறேன். நான் வண்ணை விட்டுப் புறப்பட்டு ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. இந்த ஒரு வருஷத்தையும் இன்பமாய்க் கழித்தேன். முடிவில் நான் தேடினதைக் கண்டேன்: இம் மண்ணுலகில் பெருநிதி படைத்தும் ஒன்றும் அநுபவித்தேனில்லை. இப்பொழுதோ ஒரு நாளும் பெறாத 'அன்பு' என்னும் வானநிதியைப் பேற்றேன்; எனக்கு மனக்குறை இல்லை. எனது செல்வத்தைப் பற்றி எனக்கு ஒரு கவலையுமில்லை.

எனது வியவகாரங்கள் எல்லாம் நடக்கிறபடியே நடக்க. உமக்கும் எனக்கும் உள்ள நட்பு நார் ஒரு காலும்

அருந்து. தங்களை நேரே கண்டு எனது ஏற்பாடுகளை எல்லாம் தெரிவிக்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு உண்டு. ஈசன் செயல் எப்படி இருக்குமோ?

இறைவன் இன்னருள் புரிக.

இப்படிக்கு

வ. முருகப்பன்.

எழுதிய கடிதங்களுக்கு விலாச மெழுதி விடுத்து அன்றிர வே இருப்புப்பாதை வண்டி ஏறி மறுநாள் மணியாடி வந்து சேர்ந்தார். அங்குச் சிறிது நேரம் தங்கி இளைப்பாறிய பின் அமுதவல்லி கிராமத்திற்குப் போகப் புறப்பட்டு வழி நடந்தார். இடைவழியில், "மனிதன் தெரிந்தாயினும் சம்ம தித்தாயினும் பூமியிற் பிறப்பது இல்லை. பிறந்த பின், இயற் கைப் பொருள்களின் அழகையும் அமைப்பையும் காண்கி ருன். இயற்கைப்பொருள்களிற் சிறுதுரும்பும வீணுக இல்லை. 'அவனன்றி யோரணுவு மசையாது' என்றபடி ஒரு சிட்டுக் குருவியாயினும் அவன் ஆணையின்றி இறவாது. உயிர்கள் எல்லாம் விர்த்தியடைய வேண்டு மென்பதே தேவதேவன் திருவுள்ளம. ஆனல், உலக வியாபாரங்களில் விர்த்தி யடைய வேண்டு மென்பது அஃது அன்று. மனிதர் நாகரிக மென்று ஒன்று கற்பித்துக் கொண்டு அந் நாகரிகத்தில் விர்த்தி யடைய முயல்வதும்; பொருள் ஈட்டுதலிற் காலங் கழிப் பதும் அவலமேயாம். நான் இளமையில் ஏழையாயிருந்தேன். பிறகு பொருள் தேட முயன்றேன்; தேடித் தேடிக் குவித் தேன். முடிவில் ஒரு நன்மையும் பெற்றே னில்லை. நான் தேடினவற்றை யெல்லாம் என்னைக் காட்டிலும் அமைந்த குணமுள்ள ஒருத்திக்கு வைத்துப் போக நினைக்கிறேன். நான் அவளிருக்குமிடம் செல்லுமுன் இறப்பாளானல்,

என் கதி யாதாகும்? என் எண்ணம் எல்லாம் வீணாகுமே" என்று நினைத்துக்கொண்டு கிராமத்தைக் கிட்டினார். கருணாநிதியும் அமுதவல்லியும் எதிரே வருகிறார்கள். அமுதவல்லி கண்டவுடன், "அண்ணா! அண்ணா இதோ வந்து விட்டார்" என்று கூவி, விரைந்தோடி வந்து, "அண்ணா! வந்து சேர்ந்தீர்களா? ஏன் இவ்விடம் விட்டுச் சென்றீர்கள்? எங்குச சென்றீர்கள்? என்ன! இப்படி இளைத்துப் போனீர்கள்! நாங்கள் இருவரும் எப்போது வரப் போகிறீர்களென்று எதிர்பார்த்து நின்றோம். நீங்கள் இன்று வருவீர்களென்று எங்களுக்கு முன்னமே தெரியும்" என்றாள். "எங்காவது வேலை அகப்படுமா என்று விசாரித்தேன். இந்த நாளில் கிழவரைப் பாதுகாப்பாரு முண்டோ? எங்கும் அகப்படவில்லை. இலாபமு மில்லை, நஷ்டமுமில்லை; போனபடியே வந்து சேர்ந்தேன். நல்ல காலமாயில்லை" என்றார் முதலியார்.

"ஆசையா யிருப்பவர்களை மோசம் செய்து போனால், காலம் எப்படி நல்ல காலமாய் இருக்கும்?"

"அமுதவல்லி! அம்மா! எனக்கு அப்படிப்பட்ட துரோக சிந்தை இல்லை, அம்மா!"

"இல்லையென்றே நினைக்கிறேன். இருந்தால், திரும்பி வருவீர்களா?"

"நீங்கள் என்னை நன்றி கொன்றவனென்று நினைத்திருப்பீர்கள். கிழவன் போனால், போகிறான். அவனால் நமக்கு ஒரு நன்மையுண்டாயிற்று, நம் இருவரையும் ஒன்று சேர்த்தானென்று பேசிக்கொண் டிருப்பீர்கள்" என்றார்.

"நீங்கள் வாராதிருப்பினும், நாங்கள் உங்களை அடிக்கடி நினைத்து வருந்தியே இருப்போம்."

"வாருங்கள். வீட்டிற்குப் போகலாம்" என்றார். மூவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். நாய்க்குட்டி வாலைக் குழைத்துக்கொண்டு முதலியாரைச் சுற்றிச் சுற்றி வந்து குதித்தது.

"மணி என்னைத் தேடிற்றோ?"

"ஆம், பிரதிதினமும் காலைமாலைகளில் தங்கள் அறைக்குட் புகுந்து பார்த்துக் காணாது அழுதது."

"ஆம், நாய் நன்றி மறப்பதன்று."

சில நாட்கள் ஒருவருக்கும் ஒரு சிந்தையுமின்றிக் கழிந்தன. திடீரென முதலியாருக்கு எழுந்திருக்கவும் தமக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்ளவும் முடியவில்லை. படுத்த படுக்கையில் இருந்தார். அமுதவல்லி செய்யாத சிகிச்சை இல்லை. எப்படி எப்படி அவருக்குச் சவுகரியம் செய்யக் கூடுமென்பதே இரவும் பகலும் அவளுக்கு யோசனை ஆயிற்று. கோடி கொடுத்தும் பெறலாகாத சிகிச்சையும் சவுகரியமும் பெற்றார் முதலியார். ஆயினும், பயன் இல்லை. இனி ஒரு கால் எழுந்து பழையபடி உலாவுவாரென்று நினைப்பதற்கு இடமில்லை. அவர் இனிப் பிழைப்பது அரிதென்று யாவரும் அறிந்தார்கள்.

ஒருநாள் அமுதவல்லி முதலியாருக்கு அருகில் வந்து உபசரணை செய்துகொண்டிருக்கும்போது, "அவர் இருந்தாற்போலிருந்து, "அம்மா! கருணாநிதிக்கும் உனக்கும் கல்யாணம் எப்போது?" என்றார்.

அவள் புன்னகை செய்து, "அண்ணா! இப்போது இல்லை. அவர் இன்னும் தமது நூலை முடிக்கவில்லை.

முடித்தபின்னும், அதை அச்சிற் பதிப்பிக்க வேண்டும்; விலைப்படுத்த வேண்டும். விற்றுப் பொருள் சேர்ந்தா லன்றி விவாகம் செய்து கொள்ளேன் என்கிறார்."

"ஏன் ?"

"தன் பொருளென்று ஒன்றும் இன்றி விவாகம் செய்யேன் என்கிறார்."

"நீ அவரை இந்த நிலையிலும் மணந்து கொள்வாயோ ?"

"எனக்கும் அப்படி மனமில்லை. என்றால் உலகில் அவருக்கு ஓர் அவமதிப்பு உண்டாவான் ஏன்?"

"உலகமதிப்பைவிடக் காதல் மிக்க தன்று?"

"மதிப்போடு கலவாத காதல் இல்லை. இருப்பின், அஃது உண்மைக் காதல் ஆகாது" என்றாள்.

முதலியார் பெருமூச்செறிந்தார்; உதடுகள் துடித்தன. "உங்கள் கல்யாணத்தை நான் இருந்து பார்க்க முடியாது" என்றார்.

"அப்படிச் சொல்ல வேண்டா. முன் இருந்ததற்கு, இப்போது சிறிது குணமன்று ?"

"அப்படியா! எனக்கு அப்படித் தோன்றவில்லை. உன்னிடம் சில காகிதங்கள் இருக்கிறதாகச் சொன்னேனே, ஞாபகம் இருக்கிறதா ?"

"ஆம், இருக்கிறது."

"நான் இறந்தபின் அந்தக் காகிதங்களைக் குறித்த விலாசத்திற்கு நீ கொண்டு போவதாக எனக்கு வாக்கு அளிக்க வேண்டும். இது தான் நீ எனக்குச் செய்ய வேண்டுவது. செய்வாயா?"

"தடையின்றிச் செய்வேன்."

"அந்தக் காகிதங்களைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரிவித்த லாகாது. கருணாநிதிக்கும் ஒன்றும் சொல்ல வேண்டா. என் கையைப் பிடித்துக் கொண்டு, 'அந்தக் காகிதச் சுருளைக் குறித்த விலாசத்திற்கு நானே கொண்டு போய்க் கொடுத்து எல்லாக் காகிதமும் சேர்ந்தன என்று விடைபெறும் வரையில் அங்குக் காத்திருப்பேன்' என்று சொல். எனக்குச் சஞ்சலம் இராது."

அமுதவல்லி முதலியாருடைய கையைப் பிடித்துக் கொண்டு மேற்கூறியவாறே சொன்னாள். முதலியார் நெட்டுயிர்த்து, "அப்பா அதுபோதும். தெய்வாநுக்கிரகத்தை நீ பெறுக" என்று எழுந்திருக்க முயன்றார்; முடியவில்லை.

"அண்ணா! உடம்பு எப்படி இருக்கிறது? சொல்லுங்கள். பக்கத்திலேயே நான் இருக்க வேண்டுமா?" என்று கவலையோடு கேட்டாள்.

"எனக்கு ஒன்றும் இல்லை. நித்திரை வேண்டும். பலஹீனந்தான், வேறு ஒன்றும் இல்லை."

"வேண்டுமானால், என்னை ஒரு குரல் கூப்பிடுங்கள். ஓடி வருகிறேன்."

"அம்மா! நீ ஒரு தெய்வ மாது. விண்ணுலகம் உண்டென்று நான் உன்னைக் கண்ட பின்னரே நம்பினேன். நீ அவ் வுலகத்திற் பிறந்த மாதே."

அமுதவல்லி கண்களில் நீர் ததும்பிற்று.

"நான் தெய்வ மாது அல்லள். ஓர் ஏழைப் பெண். என்னை நீங்கள் வீண் புகழ்ச்சி செய்கிறீர்கள்."

"அப்படியா? வேண்டுமானால், நீ அப்படி நினைத்துக் கொள். நாய்க்குட்டியை எங்கும் விடாதே. எப்போதும் வைத்துக்கொள்" என்று களைப்பினால் கண்களை மூடினார்.

இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாம் நாள் முதலியாருக்கு எல்லாம் ஒடுங்கின; ஆனால் பிரஞ்ஞை கெடவில்லை. அமுதவல்லிக்கு அதைப் பார்க்க விசனம் கரைகொள்ளவில்லை. அவள் அவரை விட்டு ஒரு க்ஷணமேனும் பிரியவில்லை. அன்றிரவெல்லாம் அவள் தலைசாய்க்கவில்லை; இமையோடு இமை சேர்க்கவில்லை. என்ன சொல்லுவாரோ, என்ன கேட்பாரோ என்று பக்கத்தில் உட்கார்ந்தபடியே இருந்தாள். முதலியார் அவள் இருப்பை அந்த நிலையிலும் அறிந்தார். மரணக் குறிகள் கண்டவுடன், அமுதவல்லி, "அண்ணா! அண்ணா! நான் யாரென்று தெரிகிறதா?" என்றாள். "என் அருமை மகளே! உன்னை மறப்பேனா, அம்மா! எனக்குத் தேர் வந்து நிற்கிறது, அம்மா! எனது உடன் பிறந்தாள் பாடுகிற பாட்டு நன்றாய்க் கேட்கிறது, அம்மா!" என்றார் முதலியார்.

அமுதவல்லி முகத்தோடு முகம் வைத்தாள்; கட்டி அணைத்தாள்; ஓடிப்போய் ஒரு மருந்து கொண்டு வந்து கொடுத்தாள். அப்போதும் பிழைக்கமாட்டாரா என்று இருந்தது. அப்போது முதலியார், "எனக்கு ஒன்றும் இல்லை. நீ என்னோடு இருக்கிறாய். எனக்கு அதுவே போதும். காகிதச் சுருள் ஞாபகம் இருக்கிறதா? உன் வாக்கைக் காப்பாற்று. மறந்து விடப் போகிறாய். ஜாக்ரதை! ஜாக்ரதை!!" என்றார்.

"இல்லை, நான் ஒருபோதும் மறவேன்" என்று தேம்பித் தேம்பிக் கூறினாள்.

முதலியாருக்கு உடம்பில் ஒரு நடுக்கம் உண்டாயிற்று; முகம் வெளுத்தது. "அம்மா! அமுதவல்லி! கையைக் கொண்டு வா" என்று அவள் கையைப் பிடித்துத் தமது மார்பின்மேல் வைத்துக்கொண்டு, "ஒப்பற்ற நிதி-வான

நிதி, - அன்பு : அதை நீ எனக்குத் தந்ததற்காகக் கடவுள் உனக்குக் கருணை புரிக. நான் போய் வருகிறேன், அம்மா" என்றார். மறுபடி ஒரு முறை உடம்பு முழுவதும் நடுங்கிற்று. "என்னை விட்டு விடாதே. பிடித்துக் கொள்; நன்றாய்ப் பிடித்துக் கொள். உனக்கு என்ன நல்ல உள்ளம்! மரணம் கொடிது, கொடிது!" என்றார். பேச்சு மூச்சு ஒன்றுமில்லை. முதலியார் இவ்வுலகை நீத்தார்.

அத்தியாயம்-12

பொழுது விடிந்தது. கிராம ஜனங்கள் எல்லாரும் அமுதவல்லி வீட்டினுள் வந்து சூழ்ந்துகொண்டார்கள். முதலியாருக்கு அழாதவர் இல்லை. குழந்தையும் அழுதது, குட்டியும் அழுதது. கருணாநிதி கேள்விப்பட்டு ஓடி வந்தான். அமுதவல்லி கண்கள் அழுது அழுது கோவைக் கனி போலச் சிவந்திருத்தலைக் கண்டான். தன் துக்கத்தை உள்ளடக்கிக் கொண்டு என்ன என்னவோ சொல்லி அவள் துக்கத்தைத் தணிக்க முயன்றான். ஒன்றும் பயன்படவில்லை.

"எனது இன்னுயி ரன்ன நண்பனே! எனது தந்தை இறந்த பின் தன்னந் தனியாயிருந்து வருந்தினேன். இந்தப் பெரியவர் வந்து சேர்ந்த பின் எனது நாட்கள் இன்பமாய்க் கழிந்தன. என்மீது என்ன பக்ஷம் வைத்திருந்தார்! என்ன அருமையாக வார்த்தை சொன்னார்!" என்று கதறினாள். கருணாநிதி, "அமுதவல்லி! நீ சொல்வது எல்லாம் உண்மையே. பெரியவருக்கு இறக்க வேண்டிய காலந்தானே. இன்னும் இருந்தால், கஷ்டப்பட வேண்டியது தான். புண்-

ணியம் செய்தவர் போய் விட்டார். சந்தோஷமாய் அவரு-க்குச் செய்ய வேண்டிய கிரியைகளெல்லாம் செய்து முடிப்பதே தகுதி'' என்றான்.

சமாதிக் கிரியைகளுக்கு வேண்டியவற்றை எல்லாம் சேகரித்த பின், அந்தக் கிரியையும் நடந்தேறியது. இரண்டு நாட்கள் கழிந்தன. அமுதவல்லிக்கு முதலியாரை மறக்க முடியவில்லை. அவருக்குத் தந்த வாக்கின்படி நடக்க வேண்டுமென்று எண்ணினாள்.

மூன்றாம் நாள் கருணாநிதி வந்தவுடன் அமுதவல்லி, "எனது அருமந்த அன்பனே! பெரியவர் என்னிடம் ஒரு காகிதச சுருளைத் தந்து அதைக் குறித்த விலாசத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்றார். அப்படியே செய்வதாக வாக்குதத்தம் செய்தேன். ஆகவே, வண்ணை வரையும் போகவேண்டும். நான்கு நாட்களில் திரும்பி வருவேன். எனக்கு விடை அளிக்க வேண்டும்'' என்றாள்.

கருணாநிதி, "அதைச் செய்ய வேண்டியதே, ஆனால் நெடுந்தூரம தனியாக எப்படிச் செல்வாய்?'' என்றான்.

"என்ன செய்வேன்! யாருக்குத் தமது மரண சமாசாரத்தைத் தெரிவிக்கிறாரோ? சொன்ன சொல் தவறுவது எப்படி?'' என்றாள்.

கருணாநிதி மணியாடி வரையும் உடன் சென்று இருப்புபபாதை வண்டியில் ஏற்றி விட்டுத் திருமபினான்.

மறுநாள் அதிகாலையில் அமுதவல்லி வண்ணை சேர்ந்து காலைக் கடன்களை முடித்துக் கட்டமுதுண்டு குறித்த விலா-சத்தை விசாரித்துக் கொண்டு, அநந்தாசாரியர் காரிய கிருகம் அடைந்து, "அழகப்பன் என்பவர் இங்கு இருக்கிறாரா?'' என்று விசாரித்தாள். ஒரு சிறுவன், "ஆம், இருக்கிறார்.

அழைத்து வருகிறேன்'' என்று சொல்லி உட் சென்று அவனை அழைத்து வந்தான். அழகப்பன் அமுதவல்லியைக் கண்டதும், "யார், அம்மா ! எங்கிருந்து வருகிறீர்கள் ? என்ன விசேஷம்?'' என்றான்.

"தங்கள் பெயர் தான் அழகப்பன் என்பதோ?"

"ஆம், அம்மா!''

"தங்களுக்கு ஒரு காகிதச் சுருள் கொண்டு வந்திருக்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்." அழகப்பன் அதை வாங்கி மேற் சுருளைப் பிரித்தான். உள் விலாசம் அநந்தாசாரியருக்கு எழுதப்பட்டிருந்தது.

"அம்மா! சற்று இருங்கள். இஃது எனக்கு அன்று. எனது எஜமானர் அநந்தாசாரியருக்குச் சேர வேண்டியது. இப்பொழுதே சேர்க்கிறேன்" என்று மேன்மாடிக்கு ஓடி அந்தச் சுருளை அநந்தாசாரியர் கையிற் கொடுத்தான். அவர் அதைப பிரித்துச சாவதானமாய்ப் படித்தார். அமுதவல்லி கால் மணி நேரம காத்திருந்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கண்ணைக் கட்டி விட்டது போல இருந்தது.

அழகப்பன் ஓடிவந்து,"அம்மா! என்னோடு வாருங்கள். எஜமானர் தனியே இருக்கிறார்; அவரைக் கண்டு பேசுவதற்கு இதுவே தருணம்" என்றான்.

அதிசயத்தோடு உடன் சென்றாள் அமுதவல்லி. அழகப்பன் அவளை அழைத்துக் கொண்டு போய் வெளுத்துப் பழுத்த கிழவரொருவர் எதிரில் விட்டான். அவரைக் கண்டதும் அவர் பெரிய பிரபு என்று அறிந்தாள். அவர் எதிரில் முதலியார் காகிதச் சுருள் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. அவர் தம் கண்ணீரால் நனைந்த மூக்குக் கண்ணாடியை

எடுத்துத் துடைத்துக் கொண்டார். கண்ணீரை அடக்க முடியாதபெண்தன்மை அவரிடம் இருந்ததாகத் தெரிந்தது.

"அம்மா! சுகமா? துக்க சமாசாரம கொண்டு வந்தீர்கள். இவ்வளவு சீக்கிரம் எனது நண்பர் இறப்பாரென்று நான் நினைக்கவில்லை. அவரை மறுபடி காண்பேனென்றே நினைத்தேன். உயிர் பிரியும்போது நீங்கள் சமீபத்தில் இருந்தீர்களா?" என்றார் அநந்தாசாரியா.

"நான் காகிதச் சுருளை இடந் தெரியாது இங்குக் கொண்டு வந்தேனென்று நினைக்கிறேன். அது தங்களுக்கு வந்த சுருள் அன்று; அழகப்பன் என்பவருக்கு எழுதியது" என்றாள் அமுதவல்லி.

"ஆம்! ஆம்! அதைப்பற்றி ஒரு தவறும் இல்லை. அம்மா! நிற்கவேண்டா; உட்காருங்கள். விஷயத்தைத் தெளிவாய்ச் சொல்லுகிறேன்" என்றார் அநந்தாசாரியர்.

மரண சாசனத்தோடு அவருக்கு ஒரு கடிதமும் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. அக் கடிதத்தில முதலியார் தாம் வண்ணையை விட்டுச சென்றது முதல் நடநத சம்பவங்களையும் அமுதவல்லியின் அன்புடைமையையும் படிபபவர் மனம் உருகும்படி வருணித்தார். முடிவில், "இதை நீர் படிக்கும்போது நான் இறந்து சமாதிக் குழியில் இருப்பேன். என் கண்கள் இனிச் சூரிய கிரணங்களைக் காணா—பயன் நோக்காது எனக்குப் பல நன்மைகளையும் செய்து காப்பாற்றிய அம் மாதரசியின் கண்களில் ஊற்றிருந் தொழுகும் கருணை வெள்ளத்தையும் காணா. இக்கடிதம வியவகாரக்கடிதமன்று. நட்புக் கடிதமென்று கொள்க. நாம் வியவகாரமென்று கூறுவது பசையில்லது; நட்பினால் உலகம் மேலான நிலைமையை யடையும். இக் கடிதம் கொண்டுவரும் எனது

குல தெய்வத்தை என் பொருட்டு எவ்விதத்தாலும் கௌரவிக்க.

இப்படிக்கு அன்பன்
வ. முருகப்பன்."

என்றெழுதப்பட் டிருந்தது.

முதலியார் தமது கடிதத்தில் கூறிய குல தெய்வம் இப்போது அநந்தாசாரியருக்கு முன் இருக்கிறாள். விஷயத்தை அவளுக்கு விளக்கிக் கூறுவது எப்படி என்று அவருக்குத் தோன்றவில்லை.

"எனது நண்பர் தாம் இன்னாரென்று உண்மையை உனக்குச் சொல்லவில்லையா, அம்மா?"

"நான் கேட்கவுமில்லை அவர் சொல்லவுமில்லை. அவர் அசக்தராய், ஏழையாய், திக்கற்றவராய் இருந்தார். அதனால் நான் கவனிக்க வேண்டியது எனது கடமை ஆயிற்று."

"அவர் இன்னாரென்று இப்போது நான் தெரிவிக்கிறேன். அவர் தாம் ராஜா முருகப்ப முதலியார்."

உடனே கருணாநிதி அவரையும் அமுதவல்லியையும் பற்றிக் கூறிய கதை அவள் ஞாபகத்திற்கு வந்தது.

"அவர் இப் பூமண்டலத்திலுள்ள மகைதசுவரியவான்களில் ஒருவர்."

"நான் நம்பவில்லை, அவர் இபபடியும் என்னை மோசம் செய்வாரா?" என்றாள் அமுதவல்லி.

அநந்தாசாரியர் அது கண்டு முதலியாருடைய ஜீவ சரித்திரத்தைத் தாம் அறிந்தபடி விரித்துக் கூறி முடித்தார்.

"எனக்கு என்ன? அவர் தந்த காகிதச் சுருளை அவர் குறித்தபடி கொண்டு வந்து சேர்த்தேன். இனி நான் செல்கிறேன்" என்றாள் அமுதவல்லி.

"அம்மா! இன்னும் உனக்கு விஷயம் விளங்கவில்லையா?" என்றார் அநந்தாசாரியர்.

"விஷயம் விளங்குகிறது. அவர் பெருஞ் செல்வரென்றும், யாராவது தம்மைப் பற்றிக் கவலை கொள்ளுகிறார்களா என்று அறிவதற்கு ஏழைபோல நடித்தாரென்றும் அறிகிறேன். நான் அவரைப் பற்றிக் கவலை கொண்டது உண்மை! உண்மையே! இன்னும் அவர் எத்தனை வருஷம் இருந்தாலும் சலியேனே" என்று வாய் விட்டுக் கதறி அழுதாள் அமுதவல்லி.

"அம்மா! அழ வேண்டா. எனக்குச் சகிக்க முடியவில்லை. நான் நியாயவாதி; உள்ளதை ஒளியாது தெரிவிக்க வேண்டியவன். அவருடைய செல்வமெல்லாம் அவர் எழுதி வைத்த மரணசாசனத்தின்படி இனி உன்னுடையதே என்று தெரிவிக்க வேண்டியது எனது கடமை. அவர் இந்த உலகின்கணுள்ள பெருஞ் செல்வர்களில் ஒருவராய் இருந்தார். இப்போது அப் பெருஞ் செல்வர்களில் நீ ஒருத்தி" என்றார் அநந்தாசாரியர்.

அமுதவல்லிக்கு முகம் வாடிற்று. "ஐயா! மறுமுறை அப்படிச் சொல்ல வேண்டா. யான் செல்வத்தைப் பெற்று வாழ முடியாது. எனக்கு விருப்பமுமில்லை. முதலியார் என்மீது என்ன பக்ஷம் வைத்திருந்தார்! இப்படி என்னைப் படுகுழியில் தள்ள நினைத்திருப்பாரென்று கொள்ள இடமில்லை. எனது சிறு வீட்டில் குறைந்த செல்வமும், நிறைந்த அன்புமம இருக்கக் கண்டவர் இப்படியும் செய்திருப்பாரோ? என்னைச் செல்வர்களில் ஒருத்தி என வேண்டா. எனக்குச் செல்வம் வைத்திருந்தால், இப்பொழுதே ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். இந்தப்

பெரிய நகரத்தின்கண் உள்ள மிடியாளர்க்கும் பிணியாளர்க்கும் பங்கிடுகிறேன். இல்லையானால், நீங்களே பங்கிட்டாலும எனக்குத் திருப்தி. என்னை விட்டு விடுங்கள். நான் இபபோது இருக்கிற நிலையில் இருப்பேன்'' என்றாள்.

"அம்மா! உனக்கும் ஒரு கடிதம் இதனுள் அடக்கம் செய்யப்பட் டிருக்கிறது. இதைப் படித்துப பார்க்க. நான் போய் மீண்டும் வருகிறேன்'' என்று அநந்தாசாரியர் வெளியே சென்றார்.

அமுதவல்லி அதை எடுத்துப் படித்தாள். முதலியார் அமுதவல்லியைப் பல படியாய் நயந்து நயந்து தமது செல்வத்தைக் கைக்கொள்ளும்படி வேண்டுகிறார். படிக்கப் படிக்க மனம் இளகிற்று. அவ்வளவு அன்போடு கூறும் வார்த்தைக்கு மாறாக நடப்பது எப்படி என்று நினைத்தாள். அக் கடித முடிவில், "எனது நியாயவாதி அன்புள்ள அநந்தாசாரியருக்கு 50,000 ரூபாயும, எனக்கு உபகாரஞ் செய்த பச்சிலை தேடி விற்றுண்ணும் இருளனுக்கு 20,000 ரூபாயும், இருளன் என்னை அழைத்துச் செல்ல ஓர் இரவு உபசரித்த சத்திரக்காரிக்கு 10,000 ரூபாயும், உன்கிராம வாசிகளுக்கும் கோயிலுக்கும் 50,000 ரூபாயும் கொடுக்க. இக் காகிதத் துண்டில் மடித்து இதனுள் வைத்திருக்கும் கருப்பண்ணன் கையுறை நாணயங்கள் விலை மதிக்கமுடியாதன; என் செல்வம் எல்லாம் அவற்றிற்கு இணை ஆகாது. அந்த நாணய முடிப்பை வாழையடி வாழையாக உனது வமிசத்தார் வைத்துப் போற்றுக. நீ கருணாநிதியை மணந்து நீடூழி வாழ்க'' என்றிருந்தது.

"ஐயா! எனக்கு மிக்க விசனமாயிருக்கிறது. செல்வத்தை எல்லாம எனக்கு எழுதி வைத்தாரே! அந்தச் செல்வத்தை நல்வழியில் தாமே உபயோகித்திருக்கலாமே! இனிப் பேசி என்? அவருடைய கட்டளையை மறுக்க அஞ்சுகிறேன். நான் செய்ய வேண்டியவற்றைச் சொல்வீரானால், அப்படியே செய்வேன். தங்களுக்கு வீண் பிரயாசம் தருகிறேன். எனக்கு ஒரு விஷயம் திருப்தியாயிருக்கிறது. உங்களுக்கும் இன்னும் சிலர்க்கும் பெருந்தொகை கொடுக்கும்படி எழுதி வைத்திருக்கின்றமையின் அதிகம் எனக்கு மிஞ்சாது" என்றாள்.

"அம்மா! பெருந்தொகையென்று சொன்னாய்? அவர் வைத்த பொருள் முழுவதும் நவகோடி ரூபாய் இருக்கும்." என்றார்.

"அப்பா! ஒருத்தருக்கா இவ்வளவு சொத்து!"

"அவர் ஒரு காசேனும அநியாயமாய்த் தேடவில்லை. அவர் பொருள் தூய்மையுடையது. நீ கைக்கொள்ளப் போகிறது நல்ல பொருள்."

"ஒரு கால் நான் வீடு போய்ச் சேருமுன் வழியில் இறந்துபோனால் என் செல்வ முழுவதும் கருணாநிதிக்குச் சேர வேண்டுமென்று மரணசாசனம் எழுத எண்ணுகிறேன்."

"அது செய்ய வேண்டியதே" என்று அநந்தாசாரியார் உடனே மரண சாசனம் ஒன்று எழுதி அமுதவல்லி கையெழுத்துப் போட்டவுடன் தாமும் தமது காரியஸ்தர் ஒருவரும் சாக்ஷிகளாகக் கையெழுத்துப் போட்டார்கள்.

"மற்றைக் காரியங்களைப் பின் கவனிக்கலாம. கடித மூலமாய் எல்லா வியவகாரங்களையும் முடித்துக் கொள்ள

லாம்" என்று அநந்தாசாரியரிடம் விடைபெற்றுக் கொண்டு அன்றிரவே இருப்புப்பாதை வண்டியேறி மறுநாள் மணியாடி சேர்ந்து, உணவு கொண்டு சிறிது நேரம் தங்கிப் புறப்பட்டு வீடு சேர்ந்தாள். சிறிது நேரத்திற் கெல்லாம் கருணாநிதி வந்தான்.

"போன காரியம் முடிந்ததா?" என்றான்.

"இன்பமாய் முடியவில்லை. நீங்கள் முற்றும் கேட்டால் விசனப்படுவீர்கள். பெரியவர் எனக்குத் தமது செல்வத்தை எழுதிவைத்துப் போயினார்" என்றாள்.

"நீ அதை விரும்பவில்லையானால், ஏழைகளுக்கு வழங்கி விடலாமே."

"நவகோடியை எப்படி உடனே வழங்குவது? வழங்குவதானால், அதற்கு ஒரு மனித ஆயுள் செல்லுமே."

"அப்படியென்றால், வழங்க முடியாது. மாளிகை, தோட்டம், துரவு, படம், புத்தகம் முதலியவை இருக்குமே."

"முதலியாரை நான் காணாதிருந்தால், ஒன்றுமில்லை."

"நான் உன்னை எப்படிக் கண்டிருப்பேன்? ஆனால், உன்னைக் கண்டு இப்படிய பிரிதலை விடக் காணாமலே இருப்பின் நலமாகுமே! செல்வம் நம்மிருவருக்கும் குறுக்கே கொன்றை மாலைபோல நிற்கிறதே! செல்வம்! பாழான செல்வம்! எனது குடியைக் கெடுத்ததே!"

"நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. பிரிவைப் பற்றி என்னவோ சொன்னீர்கள். அஃது என்ன? செல்வம் நமது காதலுக்கு என்ன இடையூறு செய்யும்?"

"இடையூறு இல்லையா? பெருஞ் செல்வி யாகிய உன்னைப் பெருமிடியாளனாகிய நானே மணந்து கொள்வேன்!"

"எனது அன்பரே! என்ன இவ்வளவு கடுமையாக வார்த்தை சொல்லுகிறீர்? பெரியவர் நம் இருவருக்குமே அவர் செலவத்தை வைத்துப் போனார்."

"இருவருக்குமா? இல்லை. அப்படிச் சொல்லாதே. உன்னை மணந்து கொண்டு வாழும் ஆசையை விட்டேன்."

"என்னை மணந்து கொள்ள முடியாதென்று சொல்லுகிறீர்?"

"ஆம, முடியாது. ஆனால். என் உயிருள்ளவரையும் உன்னை மறவேன். வேறொரு மாதை மணந்து கொள்ளவு மாட்டேன். நான் போய் வருகிறேன்" என்று சொல்லி விட்டுக் கதவைத் திறந்துகொண்டு சென்றான் கருணாநிதி.

'ஐயோ, தெய்வமே! என் கதி இப்படியுமா ஆயிற்று! நான் என் நிலைமையை எப்படிச் சகிப்பேன்!' என்று ஏங்கித் தளர்ந்து சயனத்தில் படுத்தாள் ஒன்றுந் தோன்றவில்லை; மனம் நொந்தது. 'இனி இந்த உயிரை வைத்திருப்பது கூடாது. நான் இறந்தால், சகல செல்வமும் எனது மரண சாசனப்படி கருணாநிதி யுடையதாம்' என்று துணிந்து, கருணாநிதிக்கு ஒரு கடிதம் எழுதி விளக்கெதிரில் வைத்து நாய்க்குட்டியை ஒரு நாற்காலியின் காலிற் கட்டின பின் வீட்டை விட்டுக் கடற்கரை நோக்கிச் சென்றாள். இரவு ஒன்பது மணி இருக்கும்; நிலவு வீசுகிறது. தெய்வ கதியாய்க் கருணாநிதி இராப் போசனத்தை முடித்துக் கொண்டு, இன்னும ஒரு முறையேனும் என் காதலியைக் காண்பேன் என்று நினைத்து அங்கு வந்தான். அமுதவல்லி

அங்கு இல்லை; நாய்க்குட்டி வழக்கத்திற்கு விரோதமாய் நாற்காலியின் காலிற் கட்டப்பட்டுக் குரைக்கிறது. சுற்றுச் சுற்றிப் பார்த்தான். விளக்கண்டை ஒரு கடிதம் தெரிந்தது. விரைந்து ஓடி வந்து படித்தான்.

"என் ஆருயிர்க் காதலனே! இனி நீ என்னைக் காண முடியாது. இனி இவ்வுலகில் வாழ என்னால் முடியாது. எனது செல்வத்தை எல்லாம் உனக்கு எழுதி வைத்திருக்கிறேன். வண்ணை ந்யாயவாதி, அநந்தாசாரியார் வியவகாரம் முற்றும் அறிவார். என் செல்வத்தைப் பெற்று நல்வழியில் உபயோகி. திருவருள் யாவும் இனிது முடிக்க" என்று எழுதி இருக்கக் கண்டான். இன்னபடி ஓடினானென்று அவனுக்கே தெரியாது. இராக்ஷஸ துர்க்கத்தின் மீது ஏறி உச்சியில் நின்று வெறி பிடித்தவனைப் போல நாற்புறமும் நோக்கினான். கடற்கரையில் ஒரு பெண்ணின் சிறிய உருவம் தோன்றிற்று. ஒரே ஓட்டமாய் ஓடி அவ்விடத்தைக் கிட்டினான். அப்போது அமுதவல்லி, "தெய்வமே! கருணாநிதி இனிது வாழ வேண்டும். பெரியவர் - இதோ என் முன் நிற்கிற பெரியவர் - என் மீது என்ன பக்ஷம் வைத்தார், அவர் நற்கதி பெற வேண்டும். கடலே! எனக்கு இடந்தருவாய்" என்று சொல்லி விழப் போகிறாள். கருணாநிதி அவள் பின் சென்று அரவஞ் செய்யாமல் இறுகக் கட்டிக் கொண்டு "ஈசா, என்னை வாழ்வித்தாய் இன்னும் ஒரு க்ஷணம் பொறுத்து வந்திருப்பேனானால், குடி மூழ்கிப் போய் விடும்! என் காதலியை இழந்திருப்பேனே! என் கண்மணியை மறுபடி எங்குக் காண்பேன்!" என்று கதறினான். அமுதவல்லி பரவசமாய் அவனை அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் பொழிய நின்றாள். கருணாநிதி, "என் இன்ப வாழ்வே!

நீ என்னைத் தனியே விட்டுச் செல்வாயோ ! வறுமையோ, செல்வமோ : யாதுவரினும் வருக ; உன்னைப் பிரியேன். எனது வானநிதியைக் கைவிடுவேனோ ? இவ்வுலகில் காதலையும் உன்னையுமே வேண்டுவேன்'' என்று மகிழ்ந்தான்.